# 1. வாழ்வெனும் நதி

கேசவன் ஆபீஸ் கிளம்பிக் கொண்டிருந்தான்! அலமேலு அவனுக்கான டிபன் கேரியரை நிரப்பிக் கொண்டிருந்தாள்.

கேசவனுக்கு இரட்டைக் குழந்தைகள். அதுவும் பெண்கள்! இப்படி இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் வாணி, ராணி என்றோ விமலா, கமலா என்றோ சப்தப் பொருத்தத்தோடுதான் பெயர் வைப்பார்கள். கேசவன் தன் குழந்தைகளுக்கு கீதா, ராதா என்று வைத்திருந்தான். இரண்டுபேரும் இப்போது கல்லூரியில் படிக்கிறார்கள்.

அவர்கள் ஒரு பக்கம் பாடப் புத்தகங்களோடு போராடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஆபீஸில் நடுவாந்தரமாக கிளார்க் ஆக, அக்கவுன்டன்ட் ஆக வேலை பார்ப்பவர்களுக்கெல்லாம் வாரத் தொடக்கமான திங்கட்கிழமை என்பது இயந்திரச் சார்புடைய ஒரு நாளாகும்.

மூச்சு விடுவதில் இருந்து மூச்சா போவது வரை சகலத்திலும் ஒரு அனிச்சை இருக்கும். கேசவனும் அப்படித்தான் இருந்தான்.

சட்டை பட்டனை மாற்றிப் போடுவது, பின் சரி செய்துகொள்வது, இரண்டு முறை பவுடர் போட்டுக்கொண்டு பிறகு பூதம் போல் இருப்பதாக உணர்ந்து ஈரத் துணியால் முகத்தைத் துடைத்துவிட்டுக் கொள்வது, செருப்பை மாற்றிப் போட்டுக் கொள்வது, பைக்கில் கிக்கரை உதைக்கும்போது அடிபட்டுக் கொள்வது என்கிற அவ்வளவு மிடில் கிளாஸ் தடுமாற்றங்களும் கேசவனிடமும் இருந்து வெளிப்பட்டபடியும் இருந்தன.

அப்போதுதான் அந்த போன் வந்தது!

அம்பாசமுத்திரத்தில் இருந்து கேசவனின் தம்பியான பாலாமணிதான் பேசினான்.

"ண்ணா...!"

"சொல்லுடா. நான் கேசவன்தான் பேசறேன்."

"ண்ணா இங்க பட்டு அத்தைகிட்ட ஒரே புலம்பல்..."

"என்னவாம் அவளுக்கு...?"

"யாரோ ஜோசியக்காரன் அவ இன்னும் ஆறு மாசம்தான் உயிரோட இருப்பானு சொல்லியிருக்கான். அவகிட்ட ஒரே புலம்பல்."

"ஆறு மாசம்லாம் இருப்பாளாமா?"

"ஏண்ணா, அவ என்ன இழுத்துண்டா கிடக்கறா?"

"சரி, நீ இப்ப எதுக்குக் கூப்பிட்டே? சாகக் கிடக்கற காலத்துல இவளுக்கு எதுக்கு ஜோசியமும் கீசியமும்...?"



"அதெல்லாம் நானும் கேட்டுட்டேன். அவளும் சீக்கிரம் போய்ச் சேர்ந்தா போறும். அந்தத் தேதியைத் தெரிஞ்சுக்க நினைக்கறது தப்பானு திருப்பிக் கேக்கறா..."

"இப்படி சொல்றவாதான் அடுத்தவா கழுத்தை அறுத்துண்டு இன்னும் பத்து வருஷமாவது இருப்பா. இதுகள்ளாம் அவ்வளவு சீக்கிரம் சாகாதுகள். சரி, நீ விஷயத்துக்கு வா..."

"ஒண்ணுமில்ல... தன் வாழ்நாளோட கடைசி காலத்தை பட்டு அத்தை ஸ்ரீரங்கத்துல இருக்கற உன்னோட கழிக்க ஆசைப்படறா..."

"நினைச்சேன்... நீ இப்படித்தான் எதையாவது சொல்வேன்னு. இங்க நான் ஒரு பக்கம் ஓடிண்டே இருக்கேன். காலையில ஒன்பது மணிக்குக் கிளம்பினா ராத்திரி ஒன்பதாயிட்றது வீடுவர... பசங்களும் காலேஜுக்கு போறதுகள். அலமேலுவுக்கு ரெண்டு கை போறலை. இதுல இவ வந்து படுத்துண்டா இவளுக்கு சிசுருட்சை பண்றதுக்கே நேரம் சரியா இருக்குமே..."

"இங்க எங்களுக்கும் அந்தக் கஷ்டம் இருக்கேண்ணா? இருக்கறது ஒரே அத்தை... புருஷன் பிள்ளைகள்னு யாரும் கிடையாது. பதினஞ்சு வயசுல கல்யாணமாகி பதினாறு வயசுல தாலி அறுத்தவ. நாமதானே பாத்துக்கணும்?"

"பாத்துக்காமதான் அறுபத்தஞ்சு வருஷமா இந்த பூமில அவ உசுரோட இருந்தாளாக்கும்?"

"இவ்வளவு நாள் பாத்துண்ட மாதிரியே இன்னும் கொஞ்ச நாள்ணா..."

"சரி சரி அனுப்பி வை. முடியாதுன்னா நீ விடவும் போறதில்லை. ஆமா... எதாவது முதியோர் இல்லத்துல கொண்டுபோய் விடலாம்தானே?"

"பட்டு அத்தை தன் கடைசி காலம் நம்மளோடதான் இருக்கணும்னு ஆசைப்படறா..."

“இவளுக்கு இப்படி ஒரு ஆசை.. ஆனா அனுபவிக்கப் போறது நாமதானே..?”

“கொஞ்ச நாள்ணா... பல்லக் கடிச்சுக்கோ.. போய்ச் சேர்ந்துடுவா...”

“அதையும் பாக்கறேனே.. நீயும் பாக்கத்தான் போறே. நான் ஒரு ஆறு மாசம் வெச்சுப்பேன். ஒண்ணு அவ பிராணன் போகணும் - இல்ல அவ இந்த வீட்டை விட்டுப் போயிடணும். ஞாபகம் வெச்சுக்கோ...”

வேகமாகப் பேசிவிட்டு போனை வைத்துவிட்டு திரும்பியவனை டிபன் கேரியரும் கையுமாக அனல் பார்வை பார்த்தாள் அலமேலு.

“என்ன பாக்கறே...? எல்லாம் தலையெழுத்து தாங்கித்தான் தீரணும்...” என்று அவளுக்கு பதிலளித்தவனாக ஆபீஸுக்குப் புறப்பட்டு போனான் கேசவன்.

பெருமூச்சோடு சோபாவில் விழுந்தாள் அலமேலு. ராதாவும் கீதாவும் வந்து பக்கத்தில் அமர்ந்துகொண்டு, “வாட் மம்மி..?” என்று ஆரம்பித்தனர்.

“உங்க அத்தைப் பாட்டி வரப் போறாள். ஏற்கெனவே எம்பத்தெட்டுவயசு. மகராசி உக்காந்த இடத்தவிட்டு எழுந்திருக்காம டி.வி. பாப்பா. இங்க உங்களையும் என்னையும் என்னவெல்லாம் படுத்தப் போறாளோ தெரியாது...” என்றாள்.

“பட்டுப் பாட்டியா?”

“பட்டுப் பாட்டியேதான்.. கர்லா கட்டைக்கு கைகால் முளைச்ச மாதிரியே கிண்ணுன்னு இருப்பா. நான் பண்ணிப் போட்டே ஓயப்போறேன்.”

“பட்டுப் பாட்டி, நல்ல பாட்டிம்மா. உனக்கு எவ்வளவு சமையல் டிப்ஸ் கொடுத்துருப்பா. அந்தப் பாட்டியைப் போய் தப்பா சொல்றியேம்மா...”



“என்னங்கடி.. இப்பவே நீங்க உங்க பாட்டி பக்கமா?”

“இப்ப என்ன.. நாங்க எப்பவும் பாட்டி பக்கம்தான்! அந்தப் பாட்டிதானே கோலம் போட்றதுல இருந்து பாத்திரம் தேய்க்கறது வரை எல்லாத்துக்கும் டிப்ஸ் கொடுத்துண்டு கலபமா எங்களுக்கும் பாட்டெல்லாம் சொல்லித் தருவாளே..?”

அலமேலுவுக்கு அப்போதே ஆயாசமாக இருந்தது.

❖❖❖

பட்டு அத்தையும் வந்துவிட்டாள். பாலாமணி ஒரு டாக்ஸி வைத்துக்கொண்டு வந்து விட்டு விட்டும் போய்விட்டான். ராதா, கீதா இரண்டு பேருமே போய் நன்றாக ஒட்டிக் கொண்டனர்.

பட்டுவும் இழுத்தணைத்துக் கட்டிக் கொண்டாள். தன் பொக்கைவாயால் முத்தம் இட்டாள். பின் இருவரையும் பாடச் சொல்லிக் கேட்டாள். ஸ்வரப் பிசகு ஏற்பட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி, சரி செய்துகொள்ளச் சொன்னாள்.

“இதமான வெந்நீர்ல ரெண்டு ஸ்பூன் தேன் விட்டுச் சாப்பிடணும். அப்படியே கண்டங்குழில தூங்கப் போகும் போது சந்தனத்தை அரைச்சு ஒரு பொட்டு வெச்சுக்கணும். எப்ப தோண்றதோ அப்பல்லாம் பச்சையா மிளகு நாலை வாய்ல போட்டுண்டு மென்னு விழுங்கலாம். இதெல்லாம் குரலை வளப்படுத்தும்” என்று அப்போதே ஒரு டிப்ஸ் கொடுத்தும் அசத்தினாள்.

ராதாவும் கீதாவும் அசந்து போயினர்.

“வாவ் பாட்டி... நீ ஒரு டிக்ஷ்னரி மாதிரி... மாஸ்டர் ஆஃப் ஆல் சப்ஜெக்ட்ஸ்” என்று மகிழ்ந்து ஸ்லாகித்தும் கொண்டனர். பாட்டியும் அதைக் கேட்டு மகிழ்ந்தாள்.

ஆனால், கேசவனும் அலமேலுவும் அவ்வளவாக முகம் கொடுத்தே பேசவில்லை.

"சௌக்யமா அத்தை... உனக்கென்ன? எந்த ஆபீஸுக்குப் போய் எழவெடுத்த எந்த மேனேஜருக்கு பதில் சொல்லி நீ கஷ்டப்படணும்... நன்னாத்தான் இருப்பே..." என்று கேசவனே கேள்வி கேட்டு பதிலையும் சொல்லிவிட்டான். கூடவே அவன் பேரில் தனக்கு இருக்கும் ஈடுபாடும் பாசமும் அவன் வரையில் எப்படிப்பட்டது என்பதையும் சொல்லாமல் சொல்லிவிட்டான்.

அலமேலு அதற்கு மேலாக ஒரு பழைய தலையணை, பாய் என்று குப்பைக்குப் போக வேண்டியதை அவளுக்கு ஒதுக்கினாள்.

இரவெல்லாம் பட்டு அத்தைக்கு இருமல் வந்தபோது வெந்நீர் போட்டுக் கொடுக்கக்கூடத் தோன்றவில்லை. கவனித்தபடி இருந்த இரண்டு பெண்களுக்கும் ஒரு பெண்ணின் முதுமை என்பது இவ்வளவு மோசமாகவா இருக்கும் என்கிற கேள்வி எழும்பி அவர்களையும் வருத்தப் பட வைத்துவிட்டது.

அவர்கள் அதை அம்மாவிடம் கேட்கவும் செய்தனர்.

"அம்மா, பாட்டிகிட்ட ஏம்மா இப்படி நடந்துக்கறே? பாவம்மா பாட்டி..."

"எப்படிடி நடந்துக்கறேன். அவளுக்கு நான் சாதம் போடலையா? இல்ல, அவளை நான் டி.வி. தான் பாக்க விடலையா?"

"அதைக் கொஞ்சம் அன்பா செஞ்சா என்னம்மா?"

"என்ன அன்பு... பொடலங்கா அன்பு. உங்களுக்கு அனுபவம் பத்தாது. ரொம்ப பாசம் காட்டினா வாழற ஆசைதான் அதிகமாகும். அப்புறமா அதைப் பண்ணிக் கொடு, இதைப் பண்ணிக் கொடுன்னுவா. ஏற்கெனவே இந்த வீடு கட்டின வகைல பத்து லட்ச ரூபாய்க்கு பேங்க்ல கடன் இருக்கு. மாசம் பன்னெண்டாயிரத்தை பேங்குக்குக்



கட்டியாகணும். இதுபோக எலெக்ட்ரிக் பில், டெலிபோன் பில், மளிகைக் கடை பில், பால்காரன், வெண்ணெக்காரன், பேப்பர்காரன்னு ஒரு வரிசை. இவாளுக்குப் பணத்தைக் கட்டியே தீரணும்.

நீங்க வேற... ரெண்டு பேரும் பொம்பளைங்களா பொறந்து தொலைச்சிட்டீங்க... உங்க கல்யாணச் செலவை நினைச்சுப் பாக்கவே முடியல. என்னதான் சிம்பிளா பண்ணினாலும் தலைக்குப் பத்து லட்சம் பத்து லட்சம்னு இருபது லட்ச ரூபா ஆகும். உன் அப்பா ஒருத்தர் சம்பாத்யம்... பயமும் பதற்றமும் இருக்குமா? இருக்காதா?"

"எல்லாம் சரிம்மா... பாட்டிக்குன்னு தனியாவா பண்ணப் போறே...? நாம சாப்பிடறதுல ஒரு கைப்பிடி... அதுலயும் பாட்டி ரசம் சாதம், தயிர் சாதத்துக்கு மேலே சாப்பிடறதே இல்லை."

"சோத்த விடு... நாளைக்கே உடம்புக்குன்னு வந்தா என்னத்த பண்றது? அட மண்டையைப் போட்டான்னே வை... அந்தா இந்தான்னு பத்து நாள் காரியத்துக்கும் சேர்த்து ஒரு ஐம்பதாயிரமாவது ஆகுமேடி..."

"எங்களுக்கே ஒண்ணுன்னா பண்ணித் தானேம்மா தீரணும்?"

ராதா அப்படிக் கேட்பாள் என்று அலமேலு எதிர்பார்க்கவில்லை. வாயைப் பொத்தினாள்.

"வாழ வேண்டிய பொண்ணு... இப்படியா பேசுவே?" என்றாள் அதிர்ச்சியோடு.

"அப்ப.... வயசாயிட்டா வாழத் தேவை இல்லயாம்மா?" - கீதா கேட்டு அலமேலுவை அதிர்வித்தாள்.

"ஐயோ, உங்களுக்கு நான் எப்படிச் சொல்லி புரிய வைப்பேன். இதோ பாருங்கடி.... நாமெல்லாம் பாழாப் போன மிடில் கிளாஸ்ல இருக்கோம். காசு பணம் இருக்கற வாளுக்கு நம்ம பிரச்னைகள் எதுவுமே கிடையாது. நமக்கு அப்படியில்லை..."

"இப்படி பயந்துண்டு மிடில் கிளாஸா இருக்கறதுக்கு எதுவும் இல்லாத பஞ்சப்பராரியா இருந்துட்டறதே மேல் அம்மா..."

"எல்லாம் வார்த்தைல சொல்லலாம். ஆனா வறட்டு கௌரவம் நம்மை அப்படி எல்லாம் இருக்கவிடாது."

"அப்ப நிறைய சம்பாதிக்க என்ன வழின்னு பார்ப்போம்."

"அதுக்கு சுழி வேணும்..."

அலமேலு அலுத்துக்கொண்டே அதற்கு மேல் அவர்களிடம் பேச்சை வளர்க்காமல் விலகிப் போனாள். ஆனால், அவர்களின் அவ்வளவு பேச்சும் உள்ளே இருட்டு அறையின் ஒரு மூலையாகப் பார்த்துப் படுத்திருந்த பட்டு அத்தையின் காதுகளில் விழுந்தபடிதான் இருந்தது.

அத்தைப் பாட்டி முழித்துக் கொண்டிருப்பதை ராதாவும் சீதாவும் கவனிக்க வேறு செய்தனர். மெல்ல அருகில் சென்றனர்.

"பாட்டி..."

"வாங்கோ... கொழந்தகளா வாங்கோ..."

"என்ன பாட்டி, இருமல் இப்ப எப்படி இருக்கு?"

"அது பாட்டும் இருக்கு... என் சிநேகிதி அது. என்னைவிட்டுப் பிரிய அதுக்கு இஷ்டமில்லையாம்." ரசனையோடு சொன்னாள் பட்டு அத்தை. சொல்லி விட்டுக் கொஞ்சம்போல இருமவும் செய்தாள். ராதாவுக்கும் சீதாவுக்கும் புரிந்தது.

"பாட்டி வரியா... கோயிலுக்குக் கூட்டிண்டு போய்ட்டு வரோம்."

"ஏம்மா... காலேஜ்ல ஹோம் ஒர்க்கெல்லாம் எதுவும் தரலையா?"



"அது இருக்கு பாட்டி... அதுக்காக எப்பவும் படிச்சுண்டேவா இருக்க முடியும்?"

"படிக்கணும்மா. இது படிக்கற வயசு. இப்போ படிக்காம வேற எப்படி படிக்கப் போறேன்? படிச்சாதானே பட்டம் வாங்கலாம், ஆசைப்பட்ட மாதிரி நிறையவும் சம்பாதிக்கலாம்."

"பாட்டி... அம்மா பேசிண்டு இருந்தது காதுல விழுந்துதா?" - ராதா பாட்டியின் தாடையைப் பற்றியபடி மிருதுவாகக் கேட்டாள்.

பாட்டியும் பார்வையாலேயே இமைகளை மூடித் திறந்து ஆமோதித்தாள்.

"ஸாரி பாட்டி... அம்மா பேசினத மனசுல வெச்சுக் காதே நீ..."

"பாவம் உங்கம்மா... அவ எங்க பேசினா? பணத் தேவைங்கறது பயமா மாறி பேச வைக்கறது. அவ பயம்னா பேச வெச்சுது..."

"ஏம் பாட்டி இப்படி... மிடில் கிளாஸெல்லாம் பண பயமே இல்லாம நிறைய சம்பாதிக்கவே முடியாதா?"

"யார் சொன்னா முடியாதுன்னு. அதுக்கு வெறி வேணும். அதுக்குத்தான் படிக்கச் சொன்னேன். படிச்சா மட்டும் போறாது. முதல் மார்க் வாங்கணும். எதுலயும் முதல்ல வரணும். முதல்ல வர்றவனைத்தான் இந்த உலகம் எப்பவுமே கொண்டாடும். அவன் கால்ல விழும்; அவன் சொன்னபடி எல்லாமும் கேட்கும். என் பேரக் குழந்தைகள் நீங்களும் அப்படி வரணும்."

"வருவோம் பாட்டி... கட்டாயம் வருவோம். இப்ப தான் எங்களுக்கும் ஏன் முதல்ல வரணும்கறதே புரியறது."

"பாட்டி... முதல்ல வர்றது மட்டுமில்ல நிறைய சம்பாதிச்சு உன்னை மாதிரி பாட்டிகளை சந்தோஷமா

வெச்சுக்க ஒரு முதியோர் இல்லமும் நான் கட்டப்போறேன் பாட்டி" என்றாள் ராதா.

"சந்தோஷம்... இப்படித்தான் இருக்கணும். உங்களுக்கு என்னோட லட்சியங்களோட ஆசிர்வாதங்கள்... போகட்டும், இது ஐப்பசி மாசமாச்சே... காவேரில தண்ணி எந்த அளவுக்கு இருக்கு?"

"இந்த தடவை நல்ல மழை பாட்டி. அதனால இக்கரைக்கும் அக்கரைக்குமா வெள்ளம் போறது... ஏன் பாட்டி காவேரில குளிக்கணுமா?"

"ஆமாண்டி குழந்தை... நாளைக்கு துலாக் காவேரி வேற... காவேரில குளிச்சா விசேஷம். இந்த உடம்பால படவேண்டிய பாடுகள் எல்லாமும் ஒரு முடிவுக்கு வரும்..."

"அப்ப அம்மாகிட்ட சொல்றோம். நிச்சயமா உன்னைக் கூட்டிண்டு போய்ட்டு வருவா."

"சந்தோஷம். கூட்டிண்டு போனா போறும் எனக்கு."

பாட்டியின் ஆசையை அப்படியே போய் அலமேலுவிடம் சொல்லவும் அலமேலுவும் அரை மனதாக, "நான்னா நடந்தே போய்ட்டு வந்துடுவேன். உன் பாட்டின்னா ஆட்டோ வைக்கணும். போக வர அதுக்கு ஒரு நூறு ரூபாயா..." என்று கேட்டு பெருமூச்சு விட்டாள்.

அதையும் பட்டு அத்தை கேட்டபடிதான் இருந்தாள்!

❖❖❖

மறுநாள்!

காவேரிக்குப் புறப்பட்டாகிவிட்டது.

வீட்டு வாசலில் ஆட்டோ.

பாட்டி ராதாவையும் சீதாவையும் அழைத்தாள்.

"என்ன பாட்டி...?"



"ராதா கண்ணு— உனக்கு இது. சீதாக்குட்டி உனக்கு இது—" என்று ஆளுக்கொரு கவரைத் தந்தாள் பாட்டி. கவருக்குள் ஏராளமான நூறு ரூபாய் நோட்டுகள்.

"என்ன பாட்டி இது, பணம்..?"

"நான் முதியோர் பென்ஷன் வாங்கற ஒரு கிழவி. இது என் பல வருஷ சேமிப்பு. இதுல அம்பதாயிரம் இருக்கு. இந்த அத்தப் பாட்டி உங்க படிப்புக்காகக் கொடுக்கிறேன்" என்றபோது ராதாவுக்கும் சீதாவுக்கும் ஜில்லிட்டுப் போயிற்று. அதைப் பார்த்தபடி வந்த அலமேலுவிடம் ஒருவித திக்குமுக்காடல்.

"அலமேலு, இந்தா இந்த கவர் உனக்கு... இதுல ஒரு லட்ச ரூபா இருக்கு. எங்கம்மா என் கல்யாணத்தின்போது போட்ட நகைகளை வித்து வந்த பணம். எப்ப என் பிராணன் போனாலும் என்னை யாரும் அநாதைப் பொணமா நினைச்சு ஆயாசப்பட்டுடக் கூடாதுன்னு தலைமாட்டுலயே வெச்சிருந்தேன். இது அத்தப் பாட்டி உனக்குத் தரும் ஒரு சின்னப் பரிசு."

அலமேலுவுக்கு அந்த நொடியே புரிந்துவிட்டது. தான் பேசிய பேச்சுக்களின் எதிரொலி இது என்று... சீதாவும் ராதாவும் அம்மாவை முறைத்தனர்.

அலமேலுவும் பணத்தைப் பாட்டியிடமே தர முயன்றாள்.

"இருக்கட்டும். வெச்சுக்கோ... என் பிராணன் போனதுக்குப் பின்னே நீங்க யாரும் கஷ்டப்படக் கூடாது. எனக்கும் படுக்கைல விழுந்து உங்களக் கஷ்டப்படுத்த எண்ணம் இல்லை. நான் அந்தப் பெருமாள்கிட்ட என்னை நல்லபடியா கூட்டிக்கச் சொல்லித்தான் பிரார்த்தனையே பண்றேன். சரி, காவேரிக்குப் போகலாமா?" கேட்ட வேகத்துக்கு நல்லபடியாக நடந்து சென்று ஆட்டோவிலும் அமர்ந்து கொண்டாள்.

அலமேலுவுக்கு என்னவோபோல் இருந்தது.

மௌனமாய் நடந்து சென்று ஆட்டோவில் ஏறிக்கொண்டாள். ஆட்டோ டிரைவரிடமும் பாட்டியே நூறு ரூபாயைத் தந்துவிட்டாள்.

அவளது ஒவ்வொரு செயலுமே அலமேலு வரையில் கன்னத்தில் அறைவது போலவே இருந்தது.

காவேரியும் வந்துவிட்டது!

ஆற்றில் நல்ல வெள்ளம். இக்கரைக்கும் அக்கரைக்கு மாய் தண்ணீர். அத்தைப் பாட்டிக்கு அந்த ஜல பிரவாகத்தைப் பார்க்கவும் கண்களிலும் நீர் முட்டிக் கொண்டு வந்தது. வாழ்க்கையும் ஒரு நதிதான். ஓடும் நதிக்கு கடலில் முக்தி. வாழும் உயிர்களுக்கு...?

பரவசம் குன்றாமல் இறங்கினாள்; மூழ்கினாள்!

அலமேலுவும் மூழ்கி மூழ்கி எழுந்தாள். ஒரு கட்டத்தில் பாட்டியைத் தேடியபோது பாட்டி அந்தக் கரைவெளியில் எங்கும் இல்லை. அலமேலுவுக்கு நிஜம் புரியவும் அடிவயிற்றில் இருந்து அழுகை பீறிட ஆரம் பித்தது.



## 2. நேர்மை எனப்படுவது யாதெனில்

அந்த இடத்தில் கட்டிட வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது. ஒரு காலத்தில் தென்னந்தோப்பாக இருந்தது. பார்க்கவே ரம்மியமாக இருக்கும். தென்னங் கிடுகுகள் மேல் கிளிகள் அமர்ந்திருக்கும்! கீழே அணில் கூட்டம் ரவுடிகளைப் போல சுற்றிய வண்ணமிருக்கும்.

ஒவ்வொரு மரத்திலும் கொத்துக் கொத்தாக இளநீர் காய்த்து தொங்கிக் கொண்டிருக்கும். தோப்புப் பக்கம் வந்து நின்றாலே போதும், காவல்கார

கன்னியப்பன் விறுவிறுவென மரத்தின் மேல் ஏறி நான்கு இளநீரை வெட்டி எடுத்து வந்து மிக பணிவோடு நீட்டுவான்.

அதில் ஒன்றைக் கூட முழுசாக குடிக்க முடியாது.

வயிறு நிரம்பி நெஞ்சில் எகிறு தட்டும்.

இன்று எல்லாமே பழங்கதையாய், தூக்கத்தில் கண்ட கனவு போல ஆகிவிட்டது.

தென்னை மரங்கள் திமிறலோடு வளர்ந்து நின்ற இடங்களில் எல்லாம் அபார்ட்மென்ட் கட்டிடங்கள். பசுமையான ஒரு காடு கான்க்ரீட் காடாக மாறி நிற்பதை வளர்ச்சி என்று சிலர் சொல்லும்போது வயிறு எரிகிறது.

அந்த எரிச்சலோடுதான் விஜயராகவனும் அங்கு நின்று கொண்டிருந்தார்.

அது அவர் பூர்வீகச் சொத்து! அதற்கான ஆபத்து பிள்ளைகள் வடிவில் அவர் வரையில் வந்து சேர்ந்திருந்தது. ஒன்றுக்கு மூன்று பிள்ளைகள், நல்ல வேளையாக இந்த டி.வி., லேப்டாப் யுகத்திலும் அவர்கள் நல்லபடியாக படித்து தொண்ணூற்றுக்கு மேல்தான் எல்லா சப்ஜெக்ட்களிலும் மதிப்பெண்கள் வாங்கினார்கள்.

ஆனால் இப்படி நல்ல மதிப்பெண்கள் எடுப்பது கூட இன்று ஆபத்தோடு சேர்ந்த ஒன்றுதான்! இவ்வளவு மதிப்பெண் எடுக்கும்போது நல்ல கல்லூரியில் விரும்பிய பாடம் படிக்க இடம் கிடைக்காமல் போகுமா?

கிடைத்தது!

செலவும் அதனால் கழுத்தை நெரித்தது.

நூறு ஏக்கரில் கல்லூரி, மேல் நாட்டை நினைவு படுத்தும் ஆம்பியன்ஸ். நீச்சல் குளம், டென்னிஸ் கோர்ட், ஆடிட்டோரியம் என்று ஏகத்துக்கும் ஜபர் தஸ்த்துகள். இதையெல்லாம் கல்லூரி நிர்வாகம் இலவசமாகவா தரும்?



அவ்வளவும் கழுத்தை நெரிக்கும் ஃபீஸ் என்றானது. அதெல்லாம் வேண்டாம் எனக்கு கிளாஸ்ரூமோடு கூடிய சம்மந்தம் மட்டும் போதும் என்றால் விட்டுவிடுவார்களா என்ன? விஜயராகவனின் பிள்ளைகள் இரண்டு பேரும் இந்த மாதிரி கல்லூரிகளில் தான் சேர்ந்து படித்தார்கள். அதற்காக பணம் தேவைப்பட்டபோது தென்னந்தோப்பு தான் கை கொடுத்தது. அதை விற்பதைத் தவிர வேறு வழியே தெரியவில்லை. விற்க சற்று யோசித்தபோது அந்த இடத்தை எப்படியாவது வாங்கிவிட துடித்த எஞ்ஜினியர் ராமச்சந்திரன் விஜயராகவனை பிரமாதமாக பிரெய்ன் வாஷ் செய்தார்.

“சார், சூப்பர் காலேஜ்ல இடம் கிடைச்சிருக்கு. பசங்களும் நல்லா படிக்கறாங்க. கோர்ஸை முடிக்கும் போது நிச்சயம் பிளேஸ்மென்ட்டும் கேரண்ட்டி. ஆனா அந்த காலேஜ்ல படிக்கற யாரும் இங்க இருக்கறதே யில்லை. அமெரிக்கா, ஆஸ்திரேலியான்னு பறந்துடறாங்க. அப்புறம் டாலர்ல தான் சம்பளம். அதுவும் லட்சங்கள்ள... அப்ப நீங்க இந்த மாதிரி நூறு தோப்பு வாங்கலாம் சார்...” என்றார்.

ஆனால் அவர் சொன்னதில் எல்லாம் விஜயராகவன் மயங்கி விடவில்லை. பிள்ளைகளை படிக்க வைக்க வேறு வழியும் தெரியாததால் அந்த எஞ்ஜினியரிடமே தோப்பை விற்று முடித்தார்.

பத்திரம் கையெழுத்தான பத்து நாளில் அந்த தோப்பில் இருந்த 346 தென்னை மரங்களும் கண்ட துண்டமாகி கிட்டத்தட்ட அறுபதுக்கும் மேலான ட்ரிப்புகளில் லாரிகளில் அங்கிருந்து கடத்தப்பட்டு அந்த இடமே ‘பே’ வென்று வெறிச்சோடிப் போய்விட்டது. கிளிகள் பறந்த இடம், அணில்கள் திரிந்த இடம், காற்று உலாவிய வெளி... அதன்மேல் அந்த எஞ்ஜினியர் டேப்பை பிடித்தபடி குறுக்கும் நெடுக்குமாக அளந்தபடி திரிந்து கொண்டிருந்தார்.

விஜயராகவன் வரையில் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டது போல் இருந்தது. பிள்ளைகளையே பெற்றிருக்காமல் இருந்திருக்கலாமோ? பந்தபாசம் தவறோ...? இப்படியா இயற்கையை அழித்து கல்வியை அடைவது...? அவருக்குள் சரமாரியாக கேள்விகள்.

இந்த மனமே இப்படித்தான்... இது எப்போதும் பழைமையை நேசிக்கும் அளவு புதுமைகளை விரும்புவதில்லை. புதுமை தான் வாழ்க்கை என்று எண்ணுபவர்களுக்கோ பழமையின் பரிமாணங்கள் தெரிவதுமில்லை, புரிவதுமில்லை.

விஜயராகவன் கலங்கி நின்றபோது ஆறுதல் சொன்னவர் அவர் நண்பர் கவிஞர் சக்திதாசன் தான். "விஜி... இங்க உன்னை நான் போர்க்களத்துல நின்ன அர்ஜுனனா தான் பார்க்கறேன். அவன் எதிர்ல நின்ன எதிரிகளை எதிரிகளா பாக்கல - உறவுகளா பார்த்தான். அப்ப கண்ணன் சொன்னது தான் கீதை. அதுல உச்சபட்சமான விஷயம் ஒண்ணே ஒண்ணு தான். இங்க எது உன் கடமையோ அதை முழுமனசா செய். பலனை எதிர்பார்க்காதே. அந்த பலன்களை உன் இஷ்டத்துக்கு கற்பனையும் செய்துக்காதே. உண்மையான பலனை நீ க்ளைம் பண்ண தேவையே இல்லை. அது தானா வந்து சேரும்னு கண்ணன் சொன்னதையே நான் இங்க உனக்கு சொல்லிக்கிறேன். பற்று வைக்காதே. அதுதான் இங்க நீ கலங்கி நிற்கவே காரணம்" - என்றார். சக்திதாசன் சொன்னது தான் யதார்த்தம்.

அது விஜயராகவனுக்கும் புரிந்ததால் மனதைத் தேற்றிக் கொண்டார். காலமும் ஒன்று, இரண்டு, மூன்று என்று நான்கு வருடங்கள் ஓடிவிட்டது. இடத்தை விற்று விட்டாலும் அங்கே கட்டப்படும் ஃப்ளாட்டுகளில் ஒன்றை விஜயராகவனுக்கு ரிஜிஸ்தர் செய்துதர எஞ்ஜினியர் சம்மதித்திருந்தார். அந்த ஃபிளாட்டை பார்க்கத்தான் இப்போது வந்திருக்கிறார். எஞ்ஜினியரும் உள்ளே எங்கோ இருந்தவர் அவர் வந்திருப்பதை அறிந்து அவரை தேடிக் கொண்டு வந்தார். "வணக்கம் சார்.." - என்று மதிப்பாக



தொடங்கியது பேச்சு. அப்போது வெகுவேகமாக ஒரு கணவன் மனைவி அவர் எதிரில் வந்து நின்றனர். அவர்கள் முகம் இருளடைந்து போயிருந்தது.

"என்ன பெரியசாமி.. குழந்தைக்கு இப்ப எப்படி இருக்கு உடம்பு?"

"பரவால்ல சார். ஆனா ஆபரேஷன் பண்ணியே தீரணும், இல்லேன்னா குழந்தை உயிருக்கு உத்தரவாதரம் இல்லேன்னுட்டாங்க சார்.."

"அப்ப பண்ணிடுங்க."

"என்ன சார் நீங்க. பண்ணிடுங்கன்னு ரொம்ப சுலபமாக சொல்லிட்டீங்க. கிட்டத்தட்ட அஞ்சு லட்ச ரூபா! நானோ தினக் கூலிக்காரன். ஒரு சாதாரண எலெக்ட்ரீஷியன். நான் எங்க சார் அவ்வளவு பெரிய தொகைக்கு போவேன்...?"

"புரியுது பெரியசாமி, ஆனா பணத்தை சம்பாதிச்சிடலாம். உயிர்போனா போனதுதானே? நான் ஒரு பத்தாயிரம் தரேன். என்னால அவ்வளவு தான் முடியும். நீ உன் தேவையை சொல்லி என்னைப் போல சிலரைப் போய்பாரு. எப்படியாவது பணத்தை தேத்து. கால்ல கைல விழு தப்பில்ல. குழந்தை உயிர் பெருசு இல்லையா?"

- எஞ்ஜினியரும் அந்த பெரியசாமி என்பவனும் பேசிக் கொண்டதில் விஜயராகவனுக்கு புரிய வேண்டியது புரிந்து விட்டது.

"குழந்தைக்கு என்ன வியாதி?" என்று நேராக விஷயத்தை தொட்டார்.

"ஹார்ட்ல இரண்டு ஓட்டை இருக்கு சார். அது போக லிவர்லயும் சிக்கல்."

"சரி நான் ஒரு அம்பதாயிரம் தரேன். சார் சொன்ன மாதிரி இன்னும் சிலரைப் பார். நிச்சயம் நல்லதே நடக்கும் கவலைப்படாதே" என்றார் விஜயராகவன்.

ஐம்பதாயிரம் என்று அவர் சொன்னதும் அந்த பெரியசாமி முகத்தில் ஒரு பெரும் மலர்ச்சி. அப்பிக்கிடந்த இருட்டு எழுந்து ஓடத் தயாரான மாதிரி இருந்தது.

"நான் சில பேரைச் சொல்றேன். அவங்களையும் பாரு. நிச்சயமா அவங்களும் உதவி செய்வாங்க. கேட்டா நான் அனுப்பினேன்னு சொல்லு..." என்று விஜயராகவன் தன் மனிதாபிமானத்தையும் கருணையையும் ஒன்றாகவே விஸ்தரித்துக் காட்டினார்.

அந்த பெரியசாமி சாஷ்டாங்கமாக அவர் காலிலேயே விழுந்து விட்டான். அதன்பின் எஞ்ஜினியரோடு கூடச்சென்று தனக்கான ஃப்ளாட்டை பார்த்தார். உள்ளே மரவேலைகள் எல்லாம் முடிந்த இன்றைய நவீனம் அங்குலத்துக்கு அங்குலம் தெரிந்தது.

"சந்தோஷம் ராமச்சந்திரன். வேலைப்பாடெல்லாம் ரொம்ப நல்லாயிருக்கு. அவ்வளவுதானா... இல்லை இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா?"

"கொஞ்சம் இருக்கு சார். ட்ரெய்னேஜ் கனெக்ஷன் கொடுத்தா தான் குடிவர முடியும். அப்புறம் சார்..."

- எஞ்ஜினியர் ராமச்சந்திரன் சன்னமாய் இழுத்தார்.

"என்ன சொல்லுங்க..."

"அக்ரிமென்ட் படி உங்க ஃப்ளாட்டுக்கு நான் செலவழிச்சதை விட ஒரு 25 சதவிகிதம் கூடதான் செலவாகியிருக்கு..."

"என்னடா சொல்லலையேன்னு பார்த்தேன்."

"தப்பா நினைக்காதீங்க... நான் வேணா உங்களுக்கு பில்ல காட்றேன். அப்ப தெரியும்."

"எவ்வளவு செலவாகியிருக்கு...?"

"ஒரு ஏழேகால் லட்சம் கூட ஆயிருக்கு சார்..."



"அப்ப நான் ஏழே கால் லட்சம் தந்தா தான் என்பேர்ல வீட்டை ரிஜிஸ்தர் பண்ணி தருவீங்க. அப்படி தானே?"

"அப்படி ஏன் சார் சொல்றீங்க.. நீங்க தரத்தான் போறீங்க, நானும் ரிஜிஸ்தர் பண்ணி தரத்தான் போறேன்."

"சிரிச்சுகிட்டே கழுத்தறுக்கறதுன்னு கேள்வி பட்டுருக்கேன், இப்ப உங்க கிட்ட பாக்கறேன்..."

"ஐயோ சார்.. அப்படி எல்லாம் சொல்லாதீங்க. அடுத்த வருஷம் இதே தேதி இந்த ஃபிளாட் மதிப்பு அப்படியே இரண்டு மடங்காயிடும். இன்னிக்கு நல்ல இன்வெஸ்ட்மென்ட், ஸ்ட்ராங் இன்வெஸ்ட்மென்ட்டுன்னா நிலமும் வீடும்தான் சார்..."

"உண்மைதான்... அவ்வளவு ஜனங்களுக்கும் நிழல்னு ஒண்ணு வேணுமே. பிளாட்ஃபாரத்துலயா படுத்துக்க முடியும்?"

"உங்களுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு சார்..." ராமச்சந்திரன் ஒரு மாதிரி சிரித்தார். துளிகூட புன்னகைக்குண்டான தூய்மையோ மகிழ்ச்சியோ இல்லாமல் சிலரால்தான் இப்படி எல்லாம் சிரிக்க முடியும்.

"அப்புறம் சார்... உங்க அக்ரிமெண்ட் ஒரிஜினல் கொஞ்சம் வேணும். அடுத்த வாரம் ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணும்போது எல்லா டாக்குமெண்ட்சையும் சப்மிட் பண்ணணும். ஜெராக்ஸ் எடுத்துட்டு அப்புறமா கொடுத்துட்றேன்."

"அதான் போன்லயே சொன்னீங்களே... கொண்டு வந்துருக்கேன்" என்று விஜயராகவன் தனது மாருதி காரின் டேஷ் போர்டின் மேல் இருந்த ஃபைலை எஞ்ஜினியரின் உதவியாளரை விட்டு எடுத்து வரச் செய்து கொடுத்தார். அதில் செக்புக்கும் இருந்தது. ஒரு செக்கைக் கிழித்து அந்த பெரியசாமி பெயருக்கு அக்கவுண்ட் பேயி என்று கிராஸ்

செய்யாமல் கொடுத்தார். போய் பணத்தை கையோடு வாங்கிக் கொண்டு விடலாம்.

எஞ்ஜினியர் ராமச்சந்திரன் பெயருக்கும் ஏழே கால் லட்சத்துக்கு ஒரே செக். அதை கிராஸ் செய்து கொடுத்தார். ராமச்சந்திரனும் அதை வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டு புளகாங்கிதத்தோடு சிரித்தார். விஜயராகவன் அதன்பின் அப்படியே சுற்றிவர ஆரம்பித்தார். தென்னந் தோப்புக்குள் சில மாமரங்களும், கொய்யா மரங்களும் கூட வளர்ந்திருந்தன. அந்த இடங்களில் செங்கற்களின் குவியலும் ஜல்லிகளும் கிடந்தன.

அவருக்கு லேசாக நெஞ்சை அடைத்தது.

அவை எல்லாமே அவரது முன்னோர்கள் விதைத்து வளர்ந்தவை. திரும்ப விதைக்கலாம். வளர்க்கலாம். ஆனால் காய்த்து குலுங்குவதை பார்க்க ஆயுள் இருக்க வேண்டுமே? இதெல்லாமே போனால் வராத விஷயங்கள்...

அவரிடம் ஒரு தப்பு செய்துவிட்ட உணர்ச்சி.

எஞ்ஜினியர் அதை புரிந்து கொண்டது போல பேச்சை மாற்றத் தொடங்கினார்.

“என்ன சார் பார்க்கறீங்க... மரமெல்லாம் போச்சேன்னா? அதான் பசங்க படிச்சு முடிச்சு நான் சொன்ன மாதிரியே அமெரிக்காவுக்கே வேலைக்கும் போய்ட்டாங்களே... அவங்க சம்பாரிக்க தொடங்கிட்டா இந்த மாதிரி பலதோப்பை வாங்கலாம் சார். வாங்கலாம் என்ன வாங்கப் போறீங்க” என்றார்.

விஜயராகவன் அதைக் கேட்டு ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தார். அதில் ஏராளமான அர்த்தம்!

**ஒ**ரு வாரம் சென்று விட்ட நிலை! விஜயராகவனைப் பார்த்து அவரது ஒரிஜினலை எல்லாம் கொடுத்து விட்டு



ரிஜிஸ்ட்ரேஷனுக்கும் நாள் குறிப்பதற்காக புறப்பட இருந்த ராமச்சந்திரனுக்கு ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. அது விஜயராகவன் ஹார்ட் அட்டாக்கில் இறந்து விட்ட தகவலை சொல்லியது!

ஒரு வினாடி சர்வாங்கமும் பதறிப் போனது.

ஒரு பத்து நிமிடம் தேவைப்பட்டது. அடுத்தடுத்த செயல்களில் தெளிவாக ஈடுபடுவதற்கு.

கைவசம் உள்ள பத்திரத்தோடு ஒரு மாலையை வாங்கிக் கொண்டு அவர் வீட்டிற்கு போனபோது அக்கம் பக்கத்தவர்கள்தான் அங்கே இருந்தனர். விஜயராகவன் மனைவியை இழந்தவர் வேறு... பிள்ளைகள் அமெரிக்காவுக்குள் இப்போதுதான் கால் வைத்திருக்கிறார்கள். செய்தியறிந்து திரும்பி வர எப்படியும் மூன்று நாளாவது ஆகும்.

விஜயராகவன் வசிக்கும் தெருவில் ஒரு கோயில் இருப்பதால் அங்கே பூஜைகள் நின்று போகும். எனவே பிணத்தை வைத்துக் கொண்டிருக்கவும் முடியாத நிலை.

சில தூரத்து சொந்தங்களுடன் விஜயராகவனின் அண்ணன் மகன் முன் நிற்க, காரியங்கள் தொடங்கின. சிறிது காலமாகவே அண்ணன் மகனோடு பேச்சு வார்த்தை இல்லை. எனவே அவரது சமாச்சாரங்கள் எதுவுமே தெரியாது. ஆனால் தோப்பை விற்றது அவருக்கு பிடிக்காத ஒரு விஷயம். அதுதான் அவர் உயிர்போகக் காரணம் என்று பேசிக்கொண்டார்கள். எஞ்ஜினியரும் கவனித்தபடியே இருந்தார். எல்லா ஒரிஜினல் டாக்குமெண்ட்டுகளும் எஞ்ஜினியரின் கையில் ஃபைலில் இருந்தது. அதைப்பற்றி கேட்பாரே இல்லை.

பிள்ளைகளோ அமெரிக்காவில்... அவர்களுக்கும் இந்த ஃப்ளாட்டை தருவது பற்றியெல்லாம் எதுவும் தெரியாது.

அப்படியே மென்னு விழுங்கினால் முடிந்தது கதை!

அதன் மதிப்பு என்பது லட்சம்! விஜயராகவன் மரண பரிசாக தந்துவிட்டு போய்விட்டதுபோல் தோன்றியது. உள்ளே புத்திக்குள் விழுங்கும் ஆசை தோன்றிய பின்பு விஜயராகவன் முகத்தைப் பார்க்க அவரால் முடியவில்லை.

எதற்கு பார்த்துக் கொண்டு? அது சில மணி நேரங்களில் சாம்பலாகி அதற்குபின் ஏதோ ஒரு நீர் நிலையில் கரையப் போகிறது. இவ்வளவுதான் மனித வாழ்க்கை.

இருக்கும்வரை சந்தோஷமாக வாழ என்ன உண்டோ அதை எல்லாம் செய்து கொண்டுவிட வேண்டும். எஞ்ஜினியருக்குள் விசித்திர ஞானோதயம். சைலண்ட்டாக கிளம்பிவிட்டார்!

கிளம்பும்போது எதிரில் அந்த பெரியசாமி வந்தபடி இருந்தான். அவன் கண்கள் கலங்கி இருந்தன. நேராக விஜயராகவன் சடலத்தின் முன்சென்று நின்றான். அவர் கொடுத்திருந்த செக்கை அப்படியே அவர் மார்பு மேல் வைத்துவிட்டு,

“சாமி... நீங்க உதவிசெய்தும் புண்ணியமில்ல சாமி, என் மக போய்ட்டா. பணத்தை திருப்பித் தர்ரதுதான் நியாயம்னு திரும்பி வந்தா, நீங்களும் போயிட்டீங்களே சாமி...”

- என்று பொங்கிப் பொங்கி அழுதான். எஞ்ஜினியருக்கு கருக்கென்றது. அடுத்து அவரிடம் வந்தவன்,

“சார் இந்தாங்க நீங்க தந்த பணம்” - என்று பணமாக அவரிடம் தந்தான். ஆனால் எஞ்ஜினியர் ராமச்சந்திரனுக்கு அவன் முகத்தில் காரி உமிழ்ந்த மாதிரி இருந்தது.

“சார் இதை நான் மருத்துவம் பார்க்க செலவழிச்சிட்டதா சொன்னா நீங்க ஒண்ணும் திரும்ப கேட்க போறதில்ல. ஆனா நாளபின்ன என் மகள் மாதிரி யாருக்காவது உதவி தேவைப்படும்போது உங்களுக்கு உதவறதுக்கு மனசு வராது. உதவறதால பிரயோஜனமில்லன்னு தோணும். எப்ப செஞ்ச பாவமோ எங்க புள்ள



எங்களுக்கு இல்லாம போய்ட்டா. அவ பேரால, இந்த பாவத்தை வேற செய்யணுமா சார்?

“படுத்தா நெஞ்சில குத்த உணர்ச்சி இல்லாம தூங்கணும் சார், நியாயமா நடந்துகிட்டா தானே சார் அந்த தூக்கமும் வரும்?”

- அவன் யதார்த்தமாகத் தான் பேசினான். ஆனால் ராமச்சந்திரன் வரையில் பொளேர் பொளேர் என்று பின்மண்டையில் அடித்து, ஒரு ஆசிரியரானவர் மாணவனுக்கு புரியவைக்க முயற்சிப்பது போல் இருந்தது.

ஃபைலைத் திறந்து டாக்குமெண்ட்டுகளை எடுத்து விஜயராகவனின் மேல் வைக்க தயாரானார்! நியாயம் எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத செயலல்லவா?

## 3. ஒரு அலகிலா விளையாட்டு

வீட்டு வாசலில் வந்து நின்றிருந்த காருக்குள் இருந்து உதிர்ந்து கொண்டிருந்தான் கோவிந்து எனப்படும் கோவிந்தன். (இப்போது கோவிந்த்!)

டிக்கி திறக்கப்பட்டு, பெரிது பெரிதாக சூட்கேஸ்களும் இறங்கின. அமெரிக்காவில் இருந்து வருபவர்கள் பின் என்ன ஒரு ப்ரீஃப்கேசுடனா வருவார்கள்?

அவன் அம்மா சூடாமணி, பிள்ளையைப் படபடக்கும் விழிகளோடு பார்த்தாள். அவளுக்கே உண்டான பாசக் குரலோடு, "வாப்பா கோவிந்து... வா... வா..." என்று முகம் முழுக்க புன்னகையானாள்.



அவன் இப்போது அவனது கோவிந்துவே இல்லை. அமெரிக்காவில் பலருக்கும் அவன் மிஸ்டர் கோவ்! ரெக்கார்டுகளில் ஆராவமுதன் கோவிந்த்!

கன்னாபின்னாவென்று வளர்ந்து விட்ட தலை முடியை ஒரு சம்மர் கட்டில் நறுக்கென்று வழிக்குக் கொண்டு வருகிற மாதிரி இன்று பலர் தங்கள் பெயர்களையும் பண்ணிக் கொண்டுள்ளனர். பாதி நியூமராலஜி உபயம் - மீது நவீன எண்ணம்.

கோவிந்த் வரையில் நவீன எண்ணம்தான் காரணம். இந்த நியூமராலஜி, புரோனாலஜி, நேமாலஜி என்று ஆரம்பித்தால் அவனுக்குப் பற்றிக் கொண்டுவிடும். கடவுளையே அவன் இன்னும் பரிசீலனையில்தான் வைத்திருக்கிறான்.

எப்படியோ இரண்டு வருடங்களுக்கு முன்னால் காலேஜில் எம்.டெக்., முடிக்கும் முன்பே பிளேஸ்மென்டாகி அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் ஒரு ஐ.டி. நிறுவனத்தில் வேலை கிடைத்து ஒரே ஓட்டமாக ஓடிப் போனவன்தான்... இப்போதுதான் வந்திருக்கிறான்.

சூடாமணி ஹாலுக்குள்ளேயே ஷூவோடு வந்து அமர்ந்து விட்டவனைப் பார்த்து சற்று அதிர்ச்சியை முகத்தில் காட்டினாள். அப்போது அவள் கையில் திருஷ்டி சுற்ற ஆரத்தித் தட்டு வேறு இருந்தது.

"என்ன கோந்து இது ஆத்துக்குள்ளயே ஷூவோட?" என்று ஆரம்பித்தாள்.

"நீ என்ன கைல வெச்சிண்டிருக்கே?"

"ஆரத்திடா."

"இதெல்லாம் எதுக்கு?"

"திருஷ்டி கழிக்கத்தான்..."

“அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லவே இல்லன்னா கேக்கவா போறே - சரி நீ உன் வேலையை முடி. இந்த ஷூவுக்காக கவலைப்படாதே. இப்ப கழட்டிட்றேன்” என்றான்.

- பின் சூடாமணியோடு அவன் மன்னி வத்சலாவும் சேர்ந்து கொண்டு அவன் முன் ஆரத்தித் தட்டைச் சுற்றினாள். அதைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்தான்.

“கோவிந்தா... நீ துளிக் கூட பெருக்கலை. இளைக்கவும் இல்லை. அப்படியே இருக்கே...” என்றார் அண்ணா சுந்தரம்.

“டெய்லி ஏரோபிக்ஸ், ஸ்விம்மிங், சைக்கிளிங்னு ஐ ஹேவ் ஸ்பெண்ட் டு ஹவர்ஸ்!” - என்று பதில் கூறிச் சிரித்தான். ஒரு கை ஷூவை கழற்றத் தொடங்கியிருந்தது.

எதனாலோ ஒரு காதில் மட்டும் ஒரு வளையம் போட்டிருந்தான். அது அவன் அப்பா வரையில் கொஞ்சம் உறுத்தத் தொடங்கிவிட்டது.

“அது என்னப்பா ஒரு காதுல மட்டும் வளையம் இன்னொண்ணு எங்க? குளிக்கும்போது பாத்ரூம்ல விழுந்து காணாமப் போச்சா?”- என்று ஒரு பதிலோடு கூடிய கேள்வியைக் கேட்டார்.

“எக்ஸாட்லிப்பா... அப்படியேதான்...” என்றவன், அண்ணா சுந்தரத்திடம் “ஒரு ரிங்தான் இப்ப ஃபேஷன். அப்பாட்ட எதுக்கு அதையெல்லாம் சொல்லிண்டு...” என்று கண்ணடித்தான். அவர் அதை ரசித்தார். அப்படியே “பூணல் போட்டுண்டுருக்கியா இல்லை...? என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

“என்னண்ணா கேள்வி இது? பூணலோட நான் அங்க ஸ்விம் பண்ணேன்னு வை; அப்புறம் என்னை ஒரு ஹைடெக்காவே யாரும் நினைக்க மாட்டா. இங்க இருந்தவரை முதுகு அரிச்சா சொறிஞ்சிக்க சௌகர்யமா இருந்தது. இண்டியா ஹாட் கண்ட்ரி வேற - ஒழிஞ்ச போகட்டும். ஒரு யூசேஜ் இருக்குன்னு விட்டுட்டேன். அங்க



போயும் இதைப் போட்டுண்டு சுத்த நான் என்ன கேபியா?”

“கேபின்னா?”

“கேனப்பித்துக்குளியோட ஷார்ட் வெர்ஷன். ஆமா நீ.. ஃபேஸ்புக் பாக்கறதே இல்லையா?”

“எங்க...? கம்ப்யூட்டரை ஆன் பண்ணி ஒரு மெயில் அனுப்பறதுக்குள்ளேயே திண்டாடிப் போய் எக்ஸிபிஷன்ல தொலைஞ்ச குழந்தை மாதிரி ஆயிடறார்...” என்கிற எதிர்பாராத பதில் அவன் மன்னி வத்சலாவிடம் இருந்து வந்தது. அதைக் கேட்டு கோவிந்த் என்கிற கோந்து என்று அழைக்கப்படுகிற கோவிந்தன் சிரி சிரி என்று சிரிக்க தொடங்கினான்.

எப்படியோ களைகட்டத் தொடங்கிவிட்டது அந்த வீடு. மன்னி வத்சலாவும் காப்பி தரும் போதும் போகும் போதும் வரும் போதும் அவனைப் பார்த்துப் பார்த்து மாய்ந்து போனாள். பின் அவளுக்கான பெட்ரூமுக்குள் ஒதுங்கி இன்றைய உலோகக் காதும் வாயுமான டச் ஸ்க்ரீன் செல்ஃபோன் வழியாக கும்பகோணத்திலுள்ள அவளது அண்ணாவான ஸ்ரீவத்சனைப் பிடித்தாள்.

“ண்ணா.. என் கொழுந்தன் வந்துட்டான். அப்புடியே இருக்கான். நினைத்தாலே இனிக்கும் கமல்ஹாசன் திரும்ப வந்திருக்கற மாதிரியே இருக்கு. நம்ம ப்ரியாவுக்கு பக்கா மேட்சிங். நல்லவேளை எந்த வெள்ளக்காரியோடையும் வந்து இறங்கலை. எம் மாமியார் வயித்துல நெருப்பைக் கட்டிண்டு இருந்தா.

இப்பத்தான் ஃப்ரீயா மூச்சு விட்றா. நீ ப்ரியாவோட உடனே புறப்பட்டு வா. கொஞ்சம் அவ நெருக்கமா பழக ஆரம்பிச்சாக்கா அப்புறமா நான் பாத்துண்டுடுவேன். உனக்கும் உன் பொண்ணு அமெரிக்காவுல வாக்கப்படப் போற கனவு பலிக்கும்.

உன் பக்கத்து வீட்டுக்காரி கொட்டமும் அடங்கும். ஆமா அவ பொண்ணு அமெரிக்காவுல இருந்து பிரசவத் துக்கு வந்திருந்தாளே குழந்தை பொறந்துடுத்தா?"

"அட நீ ஒருத்தி- அவ போன வாரமே அமெரிக்கா திரும்பிப் போயிட்டா. அங்க குழந்தை பொறந்தா அமெரிக்கன் சிடிசனாமே? பாழாப்போன இந்த பாரத தேசத்துல பொறந்து எல்லாத்துக்கும் க்யூவுல நின்னு, லஞ்சம் கொடுத்துக் கஷ்டப்படக் கூடாதாம். என்ன பீத்து பீத்தறா தெரியுமோ?"

"சரி, நீ உடனே புறப்பட்டு வா... அடுத்த வருஷம் இதே மாதிரி நீயும் பீத்திக்கலாம்" என்று பேசி முடித்தவளாய் ஒரு பெருமூச்சு விட்டாள்.

அடுத்தடுத்து செல்ஃபோன் வழியாகவே அவள் பெரிய தங்கை (ஸ்ரீரங்கம்) சின்னத் தங்கை (கோவை) அவள் அப்பா அம்மா (எர்ணாகுளம்) அவள் அத்தை (மும்பை) அவள் தோழிகள் ஷாலினி, காஞ்சனா (சேலம், வேலூர்) என்று மொத்த நகரங்களுக்கும் அதிகபட்சமாய் அரைமணிக்குள் பேசி செல்ஃபோன் ஸ்க்ரீன் மேல் காது வியர்வை பூத்திருந்ததை சேலை முந்தியால் துடைத்துக் கொண்டாள்.

"இந்த செல்ஃபோனோட பெரிய இம்சை. வியர்வை இறங்கினாலே வேலை செய்யாது. சர்வீஸ்னு போனா ஐநூறு ஆயிரம்னு தீட்டிடுவானுங்க..." - என்று முணுமுணுக்க வேறு செய்தாள். இன்றைய மிகப் பெரிய விஞ்ஞான அதிசயமே அவள் வரையில் இம்சை என்று ஆனதை எதோடு சேர்ப்பது என்று தெரியவில்லை. இம்சை அவளுக்கா - அதற்கா?

முதன் முதலில் தொலைபேசியை கண்டுபிடித்த கிரகாம் பெல்லின் ஆத்மா என்று இருந்து அது இப்போது நமது டெலிஃபோனின் பரிணாம வளர்ச்சியான செல் ஃபோன் படும் பாட்டை வானில் இருந்து பார்த்தபடி



இருந்தால் ரத்தக் கண்ணீர் விடக்கூடும்? (ஆத்மாவுக்கு ஏது உடம்பு?)

❖❖❖

அக்கம்பக்கமெல்லாம் வந்து கோவிந்தைப் பார்த்து நலம் விசாரித்து விட்டுப் போய்க் கொண்டிருந்தனர். ஆளுக்குத் தகுந்த மாதிரி பேனா, கால்குலேட்டர், சென்ட் பாட்டில் என்று அவர்களுக்குத் தந்து அசத்திக் கொண்டிருந்தான் கோவிந்த்.

சூடாமணிக்கு பார்க்கப் பார்க்க பெருமிதமாய் இருந்தது. 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' என்பது அரசாங்கத்தின் ஸ்லோகன். 'வீட்டுக்கொரு பிள்ளை அமெரிக்காவில்' என்பதே இன்று நம் வீடுகளின் ஸ்லோகன்.

சூடாமணி அந்த ஸ்லோகனை மெய்யாக்கி விட்டாள். இதற்காக அவள் எத்தனை தெய்வங்களை வேண்டிக் கொண்டிருப்பாள் என்று அவளுக்குத்தான் தெரியும். வேண்டுதல் என்ற உடனேயே திருப்பதியும், கோவிந்துக்கு முடி இறக்குவதாய் வேண்டிக் கொண்டதும் தான் நினைவுக்கு வந்தது. மெல்ல கணவரிடம் ஆரம்பித்தாள்.

"ஏன்னா எப்ப திருப்பதிக்குப் போகப் போறோம்....? கோந்துக்கு முடி இறக்கற நேர்த்தி ஞாபகம் இருக்கு தானே?" என்று கேட்டாள். அது கோவிந்தின் காதுகளில் விழவும் அவனிடம் மிரட்சி.

"யம்மா என்ன இது திருப்பதி மொட்டைன்னுண்டு..."

"ஆமாண்டா... உனக்கு அமெரிக்காவுல வேலை கிடைச்சா வந்து முடி இறக்கறதா பிரார்த்தனை பண்ணிண்டேன்..."

"அது சரி.. என்னாலல்லாம் மொட்டை போட்டுக்க முடியாது. தெரிஞ்சுக்கோ. அப்புறமா நான் ஏர்போர்ட்ல பாஸ் போர்ட்டை வெச்சுண்டு அவாகிட்ட திண்டாடணும். அது மட்டுமில்ல, எனக்கு இதுல எல்லாம் கொஞ்சமும் இஷ்டமில்லை. இந்த மொட்டை போட்டுக்கறது - காது குத்திக்கறதெல்லாம் படுபயங்கர ஃபூலிஷ்ஷான விஷயங்கள். உங்களுக்கும் என்னைப் பத்தித் தெரியும். டோண்ட் கம்ப்பல் மீ.."

- என்றான் படபடவென்று. சூடாமணி முகம் சூம்பிப் போய்விட்டது.

"டேய் இது பெருமாள் விஷயம்டா.. இப்படியெல்லாம் பேசாதே.." என்றாள் படபடப்பாய்!

"என்ன பெருமாள் விஷயம்? உன் பெருமாள் எப்ப எனக்கு தலைமுடி வேணும்னு கேட்டார்.. நான் தெரியாமத்தான் கேக்கறேன். இருக்காரோ இல்லையோ பெருமாள்ங்கறவருக்கு தேங்கா பழம் பொங்கல், சுண்டல்னு படைக்கறது சரி. தலைமுடியைப் போய் யாராவது கொடுப்பாளா?

யார் மேலயாவது கோபம் வந்தா 'போடா மகரே'ன்னுதான் திட்டுவோம். இதைப் போய்க் கொடுக்கறேன்னு பிரார்த்தனை பண்ணிண்டேன்னு சொல்றியே.. உனக்கே அபத்தமா தெரியலை?"

- அவனிடம் ஆரம்பமாகி விட்டது பகுத்தறிவு வாதம். பதிலுக்கு எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவனுக்கொரு பதில் சொல்ல யாருக்கும் தெரியவில்லை. இருந்தும் அவன் அப்பா சற்று தொண்டையைச் செருமிக் கொண்டு பேசத் தொடங்கினார்.

"கோந்தா.. முடிகொடுக்கற தாத்பர்யம் பத்தி எனக்கு தெரிஞ்சதைச் சொல்றேன் கேட்டுக்கோ. தலைமுடியைதான்னு பெருமாள் கேக்கலை கேக்கவும் மாட்டார். நாமதான் பிரியப்பட்டுக் கொடுக்கறோம். அதுக்கு



அர்த்தம் என்னன்னா நாம நம்ம அழகை தியாகம் பண்ணி அவருக்கு நன்றி செலுத்தறோம். மொட்டைத் தலையோட நம்மைப் பாக்கறவாளுக்கும் நம்ம பிரார்த்தனையும் நன்றியும் தெரியவரும். இது பக்தில அகந்தை இல்லாத ஒரு உயர்ந்த பண்பு" என்றார். கேட்க நன்றாகத்தான் இருந்தது. ஆனால், பெருமாள் என்கிற ஒருவரே இருக்க வாய்ப்பில்லை என்று எண்ணிக் கொண்டிருப்பவன் இதை எப்படி ஏற்பான்?

"சாரிப்பா... பெருமாள், சிவன், அல்லா, ஜீஸஸ் க்ரைஸ்ட்டுன்னு எல்லாமே மனுஷாளோட கற்பனைங்கறதுதான் என் அபிப்ராயம். நெஜமாலுமே பெருமாள் இருந்தா நம்ப கும்ப கோணத்துல பள்ளிக்கூடத்துல தீயில கருகிச் செத்துப் போச்சுங்களே சின்னக் குழந்தைகள்... அப்பவே வந்துருப்பார்... அவாளைக் கருக்க விட்டு சாகடிச்சுக் கூட்டிக்க வேண்டிய அவசியமென்னன்னு கேட்டுண்டா பதிலே கிடைக்க மாட்டேங்கறது. அங்கங்க சுனாமி, பூகம்பம்னு பூமி வேற நடுங்கிண்டே இருக்கு. இதுக்கெல்லாமும் அவர் கோபம்னு அர்த்தம் பண்ணிக்க வேண்டியிருக்கு. ஆனா இதுக்கெல்லாம் விஞ்ஞான பூர்வமா சரியான காரணகாரியங்கள் இருக்கு.

இந்தப் பூமி சூரியன்ல இருந்து தெறிச்சு விழுந்த ஒரு துண்டுப் பகுதி. குளிர்ந்து போய் நிலமும் சமுத்திரமுமா இருக்கு. இதுக்குப் பின்னாலே லாட் ஆஃப் ஜியாமெட்ரிக்கல் ரீசன்ஸ் இருக்கு. மனுஷ உயிர்களைத் தவிர எல்லா உயிர்களும் அது அதோட சுபாவப்படி வாழ்ந்துட்டு செத்துப் போயிட்றது.

மனுஷன்தான் சிக்ஸ்த் சென்சால நிறையவே நல்லதையும் கண்டுபிடிச்சிருக்கான். ஆன்மிகம் பத்தின்னு கொஞ்சம் டுபாக்கூராவும் இருக்கான்," என ஒரு பிரசங்கமே செய்தான். சூடாமணி அழவே ஆரம்பித்து விட்டாள். ஆனால் மன்னி வத்சலாவுக்கு அவன் மிகவும் மேதைமையோடு பேசுவது போல்தான் இருந்தது. தன் அண்ணன் மகளை மனத்தில் வைத்துக் கொண்டு,

"பிரில்லியண்டா இருக்கு உன் பேச்சு..." என்று வழிந்தான். ஆனால் அண்ணா சுந்தரத்துக்கோ கோபம்தான் வந்தது.

"என்ன பிரில்லியண்ட்டா இருக்கு? இவன்தான் கொடுமையா நாத்திகம் பேசறான்னா நீ அதைப் பாராட்டியா? சூரியன்ல இருந்து தெறிச்சு இந்தப் பூமி விழுந்ததை இவன் பார்த்தானா?

அப்படித் தெறிச்சு விழுந்தது விழுந்துண்டே இருக்க வேண்டியதுதானே? எதனால ஒரு ஆக்சிஸ்ல நின்னு அழகா ஒரு குறிப்பிட்ட ஸ்பீட்ல சுத்திண்டு இருக்கு? யார் அதை நிக்காம சுத்த வைக்கறா? இரவு பகல்னு சூரிய சந்திரர்களை பக்காவா செட் பண்ணினது யார்? இந்தப் பூமிக்கு மேல மட்டும் புவிஈர்ப்பு சக்தி, ஆக்ஸிஜன் கொண்ட காத்துன்னு வீசறதெல்லாம் எப்படி?" என்று கோபக் கனலோடு எதிர் கேள்விகள் கேட்டார் சுந்தரம்.

"நீங்க கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில் இருக்கு சொல்லவா?" - சளைக்காமல் நிமிர முயன்றான் கோவிந்த்.

"என்ன பதில் - புடலங்கா பதில். அத்த கண்டு பிடிச்சேன். இத்த கண்டுபிடிச்சேன்கறாளே இந்த விஞ்ஞானிகள். சுயமா ஒரு அரிசியைக் கண்டுபிடிக்க முடியுமா? புதுசா ஒரு தாவர விதை... அவ்வளவு ஏன்? ஒரு முடி நரைக்கறதைத் தடுக்க வழி இருக்கா? ஹேர்டை இருக்கு - போட்டுக்கோன்னு சொல்லாதே..."

"ஐயோ இதெல்லாம் பேத்தல். இந்த பக்திங்கறதே ஒரு ஃபோபியா. இந்த விஷயத்துல நான் ஒரு சுய சிந்தனையாளன். கடைசியா உங்களுக்கு ஒரு பதில். அந்தப் பெருமாள் இருக்கறது நிஜம்னா அவரே வந்து என் தலைமுடியை கட் பண்ணி எடுத்துண்டு போகட்டும். நானும் அவரைப் பார்த்த மாதிரி இருக்கும். இத்தோட இந்தப் பேச்சை விடுங்கோ.

சாரிம்மா. இனிமே என்னைக் கேட்காம எனக்காக இப்படி எல்லாம் முட்டாள்தனமா பிரார்த்தனை பண்ணிக் காதே..."



- கோவிந்த் அழுத்தமாய் தன் முடிவைக் கூறி விட்டான். சூடாமணிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நேராக திருப்பதி பெருமாள் படத்தின் முன் சென்று நின்றாள்.

"என் பிள்ளை நன்னா படிச்சு அமெரிக்காவுல கைநிறைய சம்பாதிக்கறதுக்காக நான் சந்தோஷப்படுவேனா இல்லை இப்படி பயபக்தி இல்லாம பேசறதுக்காக வருத்தப்படுவேனா - எனக்கே தெரியலியே.

நீ இருக்கறது நிஜம்னா நீதான் அவனுக்கு உன்னைப் புரிய வைக்கணும். புரிய வெச்சு உன் தலைமுடியைக் கேட்டு வாங்கிக்கோ. எனக்கு வேற வழி தெரியலை..." என்று பொங்கிப் பொங்கி அழுதாள்.

ஒரு மாதம் ஓடி விட்டது. அவன் லீவும் முடியப் போகிறது. மன்னி வத்சலாவும் அவள் விருப்பப்படியே அண்ணன் மகள் ப்ரியாவை வரவழைத்து அவனுக்குப் பிடித்த மாதிரி நாகரிகமாய் நடக்க வைத்து கல்யாணத்துக்கும் சம்மதம் வாங்கிவிட்டாள். அதைத் தொடர்ந்து நிச்சயதார்த்தமும் முடிந்து விட்டது. அந்தத் தலைமுடி பிரார்த்தனை விஷயம் அப்படியே சுருண்டு அடங்கி விட்டது. சூடாமணி கூட அதை இப்போது பெரிதாக நினைக்கவில்லை. உறுத்தல் இல்லாமல் இருப்பதற்காக ஒரு பத்தாயிரம் உண்டியலில் போடுவதாகப் பதில் வேண்டுதல் செய்து கொண்டு விட்டதும் காரணமாக இருக்கலாம்.

எப்படியோ... கோவிந்தும் வந்த ஜோரைப் போலவே திரும்பியும் செல்லத் தயாரானான். குடும்பமே ஏர்போர்ட்டுக்குப் போய் டாடா காட்டி வழி அனுப்பியும் வைத்தது.

காரில் திரும்பும் போது அவன் அண்ணா சுந்தரம் கூட இந்த பக்தி சமாச்சாரமெல்லாம் ஒருவித ஃபோபியா தானோ? என்று தமக்குள் கேட்டுக் கொண்டார்!

❖❖❖

ஆறு மாதம் ஓடிவிட்டது!

கல்யாணத்துக்காக கோவிந்த் திரும்பி வரப் போகிறான். ரெஜிஸ்தர் ஆபீசில் சிம்பிளாக முடித்துக் கொண்டு ரிசப்ஷனை ஸ்டார் ஹோட்டலில் வைத்துக் கொள்ளலாம் என்று முன்பு சொல்லிவிட்டுப் போயிருந்தான். இவர்களிடமும் அதற்குச் சம்மதமான ஒரு மனநிலைதான். ஆனால் சூடாமணி மட்டும் எனக்காகவாவது மணையில் அமர்ந்து ஹோமம் வளர்த்துதான் அவன் தாலி கட்ட வேண்டும் என்று சற்றுப் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தான்.

"உன் பிள்ளை வரட்டும். உன் விருப்பத்தைச் சொல்லு சரின்னா ஆட்சேபனை இல்லை. அநாவசியமா எமோஷனல் பிளாக்மெயில் மட்டும் பண்ணாதே..." என்றார் கணவர் ஆராவமுதன். சொல்லிக் கொண்டிருக்கும்போதே வீட்டு வாசலில் கார் வந்து நின்று அவனும் உதிர்ந்தான்.

அவனைப் பார்த்த மாத்திரத்தில் அனைவருக்கும் அதிர்ச்சி. காரணம் அவன் மொட்டைத் தலையோடு இருந்ததுதான்!

"கோந்தா என்ன இது?" - என்று தலையைப் பார்த்து விழிகளை விரித்தாள் சூடாமணி.

"இனிமே கோவிந்தான்னு முழுப் பேரை சொல்லும்மா. கடைசில நீ ஜெயிச்சுட்டே. உன் பெருமாளும் வந்து தலைமுடியைக் கேட்டுக் கூட வாங்கிக்கலை. எடுத்துண்டு போன பிறகுதான் எனக்கே தெரியவே வந்தது!" - என்று புதிர் போட்டவன் அவ்வளவு பேரையும் டென்ஷனில் ஆழ்த்திவிட்டுக் குளித்து முடித்து ரிலாக்ஸாகி வந்தான். ஆச்சர்யப்படும்படியாக ஸ்ரீசூரணத்தையும் கையில் குழைத்து தரித்துக் கொண்டிருந்தான்!

"டேய் என்னடா நடந்தது... பெருமாள் வந்தார்னு சொன்னியே எப்படி?" - சூடாமணி கெஞ்சினாள். அவனும் சற்று நெகிழ்ந்தபடியே சொல்லத் தொடங்கினான்.



"அமெரிக்காவுல ஒரு ஹாலிடே அன்னிக்கு ஃப்ரெண்ட்ஸோட டூர் போனேன். வழில எதிர்பாராத விதமா கார் டயர் வெடிச்சு ஆக்ஸிடெண்ட் ஆயிடுத்து. நான் தூக்கி எறியப்பட்டு விழுந்ததுதான் தெரியும். தலைல பயங்கர காயம். ஆனால் அந்த நிலையிலும் ஒரு கனவு. நீ என்னைக் கட்டாயப்படுத்தி திருப்பதி கூட்டிண்டு போய் எனக்கு முடி எடுக்கறே. ஆஸ்பத்திரில கண்திறந்தா என் தலைலயும் ஒரு முடி கூட இல்லை. கட்டுப் போட்டிருந்தது. அப்புறம்தான் தெரிஞ்சது. ஆக்ஸிடெண்ட் ஆகி ரோட்டுல கிடந்த என்னைக் காப்பாத்தினது தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன்கற ஒரு டாக்டர்! அவரே தலைக்காயத்துக்கு மருந்து போட முடியையும் வெட்டிட்டார். அப்ப என் ஷர்ட் பாக்கெட்ல இந்த இன்டர்நெட் யுகத்துலயும் நீ எழுதியிருந்த லெட்டர் இருந்தது. அதுல நீ என் தலைமுடியை திருப்பதிக்குச் சேர்க்காம இருக்கறதுக்காக வருத்தப்பட்டுப் பதிலுக்கு பத்தாயிரம் காணிக்கை செலுத்தப் போறதா எழுதியிருந்ததையும் அவர் படிச்சிருக்கார்.

ஒரு ஆச்சர்யம் என்னன்னா அவர் திருப்பதிக்குப் போறதுக்காகப் புறப்பட்டு வர்றச்சேதான் எனக்கு ஆக்ஸிடெண்ட் ஆகியிருந்தது. என்னை ஆஸ்பத்திரில ஐ.சி.யு.வில அட்மிட் பண்ணிட்டு காயம் காரணமா நீக்கப்பட்ட என் தலைமுடியோடு அவர் திருப்பதிக்குப் போய்ச் சேர்ந்துட்டார்.

அவர் வந்து எல்லா விஷயத்தையும் சொன்ன பிறகுதான் எனக்கே தெரியவந்தது. இதுல ஒரு முக்கியமான விஷயம். என் கூட வந்த நண்பர்களுக்கும் பயங்கர படுகாயம். அவங்கள்லாம் நடமாடவே இன்னும் ஆறு மாசம் ஆகலாம். ஆனால், நான் மட்டும் தலைக் காயத்தோட தப்பிச்சுட்டேன். உடம்புல ஒரு ஸ்க்ராச் கூட கிடையாது! இந்த விபத்துங்கறது ஒரு தற்செயலான விஷயமா இருக்கலாம். ஆனா அங்க ஒரு தமிழர் டாக்டர் அவர் பேரும்

ஸ்ரீனிவாசன்கறதுல தொடங்கி, அவர் திருப்பதிக்குப் போக இருந்தவர்ங்கறது வரை எல்லாமே தற்செயலா இருக்க வாய்ப்பு இல்லை. உன் லெட்டர் பாக்கெட்ல இருந்தது கூட அவருக்கு உணர்த்தன்னாலும் அது அன்னிக்கு என் பாக்கெட்ல இருந்ததும் தற்செயலில்லை.

பிக்னிக் புறப்படறச்சே ஃப்ரீயா இருக்கட்டும்னு அந்தச் சட்டையைப் போட்டுண்டேன். அதுலதான் உன் லெட்டரை வெச்சிருந்தேன். இப்படி வரிசையா உன் பிரார்த்தனைக்கும் என் கோரிக்கைக்கும் சாதகமான விஷயங்கள்.

ஒண்ணுன்னா தற்செயல் - வரிசையான்னா அது மிஸ்டரி தானே?"

அவன் கேட்க, சூடாமணி புல்லரிப்போடு எழுந்து பூஜை அறை நோக்கி ஓடினாள். இடையில், "அப்ப நீ பெருமாள் இருக்கார்னு இப்ப நம்பறியா?" என்று வியப்பான உணர்வோடு கேட்டார் சுந்தரம்.

"நான் ஆமான்னு உடனேயே திருப்பதி மலை வாழும் வெங்கடேசான்னு பாட்டுப் பாட தயாரா இல்லை. ஆனா ஒண்ணு, உங்க பக்தி, அந்தப் பெருமாள், அப்புறம் இந்தப் பிரார்த்தனை வேண்டுதலுக்குப் பின்னால் நம்ப அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம் இருக்கற மாதிரிதான் தோண்றது.

எனக்கான அனுபவம் இங்க நடந்திருந்தா கூட இப்படி நான் யோசிச்சிருக்க மாட்டேன். அமெரிக்காவுல எனக்கு நடந்தது நிச்சயம் கோ இன்சிடென்ஸ் இல்லை. ஸோ... பெருமாளுக்குப் பின்னால ஏதோ இருக்கு. நாத்திகம் பேசிண்டு அதைப் புரிஞ்சுக்க முடியாது. கடலோட ஆழம் தெரியணும்னா அதுல இறங்கிப் பார்க்கற மாதிரி பெருமாளையும் நம்பி இறங்கினாதான் அந்த ஏதோவை தெரிஞ்சிக்க முடியும்னு தோண்றது.

நான் நாத்திகம் பேசியிருக்கலாம். ஆனால், நான் உண்மையானவன். அதனாலதான் நான் விரும்பின மாதிரியே தன்னை எனக்கு உணர்த்த பெருமாள் வந்திருக்



கார். உணர்த்தவும் தொடங்கிவிட்டார். நிச்சயமா ஒருநாள் அவரை நான் பூரணமாகவே புரிஞ்சு தரிசனம் செய்வேன்னு நம்பறேன். என்னா, நான் எதைச் செய்தாலும் அதை முழுசா ஈடுபாட்டோட செய்வேன்னுதான் உங்களுக்கே தெரியுமே?" என்றான்.

என்ன சொல்ல.... எதைச் சொல்ல...? 'அலகிலா விளையாட்டுடையான்' என்று பாடியதெல்லாம் இப்படியெல்லாமும் நடக்கக்கூடும் என்பதை உத்தேசித்துத் தானோ?

## 4. நான் இருக்கிறேன்!

பண்டரிபுரம்!

சந்திரபாகா நதியில் இதமான ஓட்டம். அந்த நதிநீரில் மூழ்கித் திளைத்தபடி இருந்தார் ரங்கராஜ்!

உடன் அவரது சகதர்மிணி சாந்தா தேவி. அவள் நீராடி முடித்திருந்தாள். கரையோரமாய் தலை துவட்டியபடி நிற்கும் 'அவள் காதுகளில் விட்டலனாகிய அந்த பாண்டுரங்கனின் ஆலயத்து நகாராவின் சப்தமும், 'விட்டலா.. விட்டலா.... பாண்டுரங்க விட்டலா... பண்டரிநாதா விட்டலா...' என்று பக்தர் கூட்டம் எழுப்பும் கோஷமும் விழுந்தபடியே இருந்தது. "பண்டரிபுரம் செல்ல வேண்டும் - அந்த பாண்டுரங்கனின்



திருவடிகளில் தன் சிரசை வைத்து வணங்க வேண்டும்" - பிறவி எடுத்த பயனை அடைந்து விட்ட நிலையில் அதன் பிறகு வாழ்வில் எது நடந்தாலும் கவலையில்லை என்பதுதான் ரங்கராஜுக்கும் சாந்தா தேவிக்கும் நோக்கம்.

அதற்காகத்தான் இருவரும் வந்திருக்கின்றனர்.

விட்டல் தரிசனத்துக்கு முன் நதிநீரில் மூழ்கி எழுவது என்பது தானே பாரதப் பண்பாடு. அதிலும் சந்திர பாகா தினமும் அந்த பாண்டுரங்கனின் நித்ய அபிஷேகத்துக்கு தன்னையே தந்து மகிழும் பண்டரிபுரத்து கங்கை.

அதில் மூழ்கிடக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே...?

ரங்கராஜுக்கு எவ்வளவு குளித்தும் ஆவல் தீரவில்லை. அந்த ஜலத்தாரைக்குள்ளேயே கிடக்கலாம் போல் போலிருந்தது.

"நீராடியது போதும்... புறப்படுங்கள்" - என்று துரிதப்படுத்தினாள் சாந்தாதேவி. அவள் தலைமுடி முழுவதுமாக காய்ந்து காற்றில் அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஆற்றில் குளித்தபடி இருந்த ரங்கராஜ் கரைமேல் தெரிந்த மனைவியைப் பார்த்தபோது அவள் ஒரு பரிபூரணமான அழகோடு கோயில் சிலைபோலத்தான் தெரிந்தாள்.

இடுப்பளவு நீரில் நின்றபடி சாந்தாதேவி மேல் வைத்த விழிகளை அகற்றாமல் அப்படியே வெறித்தார். அவளும் அதை கவனித்தாள்.

"என்ன பார்வை இது?" - என்று கைகளை ஆட்டிக் கேட்டாள். அப்படிக் கேட்ட விதம் அபிநயம் பிடித்தது போல் இருந்தது. அரைமனதாய் ஆற்று நீரைவிட்டு வெளியேறியவர் நெருக்கமாய் தன் ஆசை மனைவியை திரும்பவும் கண்களால் விழுங்கத் தொடங்கினார்.

"என்ன இது- இப்பதான் கல்யாணம் ஆனது போல பார்த்துக் கொண்டு. நமக்குக் கல்யாணமாகி பத்து வருஷம் ஓடிப்போச்சு தெரியும் தானே?"

"இருக்கலாம் சாந்தா.. ஆனா நீ அப்படியே தான் இருக்கே. உன்கிட்ட எந்த மாற்றமும் இல்லை. சில முகங்களுக்கு மனசை குளிர்விக்கக்கூடிய சக்தி உண்டு. அப்படி ஒரு முகம் தான் உன் முகம்.."

- ரங்கராஜின் பேச்சு சாந்தாதேவியை சந்து சிலிர்க்கச் செய்தது. மெல்ல கண்களிரண்டும் கலங்கத் தொடங்கின.

"ஏய் நீ எதுக்கு கண் கலங்கறே?"

"என்மேலே இவ்வளவு அன்போட இருக்குற உங்களுக்கு ஒரு வாரிசு பெற்றுத்தர வக்கில்லாதவளா ஆயிட்டேனே..

"அது ஒரு முடிஞ்சு போன விஷயம்.. இந்த குழந்தை விஷயத்தை நீ பேசவே கூடாதுன்னு உன்கிட்ட நான் சத்தியம் கூட வாங்கியிருக்கேன்... ஆனாலும் நீ அதை அப்பப்ப மீறி இப்படிப் பேசறே.."

"நான் சத்தியம் பண்ணலியே... நான் பண்ணினது அசத்தியம்னு எனக்கு தானே தெரியும்?"

"வேண்டாம்.. இந்த விஷயம் எதுல போய் நிற்கும்னு எனக்குத் தெரியும். நாம இப்ப விட்டல் பூமிக்கு வந்துருக்கோம். இது பூலோக வைகுண்டம். இங்க ஒருத்தர் வந்துட்டா அவருக்கு அப்புறமா கிரகங்களோட தொல்லை இருக்காது. எவ்வளவு பாவம் செய்திருந்தாலும் அதெல்லாம் இதோ இந்த சந்திர பாகாவுல அமுக்கோட அமுக்கா கலந்து போயாச்சு. நாம இப்ப புனித மாயிட்டோம். இந்த புனிதத்தை சில பேச்சுகளால களங்கப்படுத்திக்காம நேரா சன்னதிக்கு போவோம்.



வைஷ்ணவத்துல மிக உயர்ந்த தர்மமாய் சொல்லப் படுவது சரணாகதி. அந்த சரணாகதி புரிய தேவை அந்த நாராயணன் திருவடி. அந்த திருவடியை சுலபமா பிடிக்க ஒரு வழிதான் இந்த பண்டரிபுரம்.

இங்க வரணும்கறது உன் வாழ்நாள் கனவு. எனக்கும் உன்னை கூட்டிவர இவ்வளவு வருஷம் ஆச்சு. மொத்தத் துல நாம ரொம்ப பிரயாசைப்பட்டு வந்துருக்கோம். இதுக்காக நீ ஒரு மண்டலம் விரதம் இருந்துருக்கே. உன்னால நானும் விரதம் இருந்தேன் பாரு.. என் ஊளைச் சதைல அஞ்சு கிலோவை காணலை."

- சொல்லிவிட்டு சிரித்தார் ரங்கராஜ். கிட்டதட்ட அவர்கள் வாழ்க்கைச் சுருக்கமாகவே அது இருந்தது தான் ஆச்சரியம்.

ஓரமாக இருந்தது சுமந்து வந்திருந்த சூட்கேசும் மற்ற பொருட்களும்,

அதோடு புறப்பட்டனர்!

❖❖❖

**ச**ன்னிதியில் சரியான கூட்டம்... இந்த வார்த்தைகள் கூட தவறு... சன்னிதியே தெரியாதபடி கூட்டம்... இந்த வார்த்தைகளும் கூட தவறு... கூட்டத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை எனலாமா?

அதுதான் சரி என்று தோன்றுகிறது.

கூட்டத்திடம் கோஷம்.

"ஜெய் விட்டல்... ஜெய் ஜெய் விட்டல்..." - என்கிற நாம கோஷம் அந்த வெளி எங்கும் பரவிக் கொண்டே இருந்தது.

அது உயிரின் ஓசை!

மண்ணில் வந்து விழுந்து மாயைக்குள் சிக்கிக் கொண்டுவிட்ட உயிர்களுக்கு மாயா விடுதலை வேண்டும். அது விடுதலைக்கான கோஷமும் கூட... அதைச் சொன்னாலே விடுதலை கிடைக்கும்.

இல்லாவிட்டால் கடைத்தேறவே முடியாதே?

அந்தக் கூட்டத்தின் வரிசையில் கடையப்படுவது போல் சிக்கியிருந்தனர் ரங்கராஜும் - சாந்தா தேவியும். வரிசை மெல்லத்தான் நகர்ந்து கொண்டிருந்தது. அந்த இடைவெளியில் சாந்தாதேவிக்குள் மெல்ல நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

ரங்கராஜிக்கு ஒரு வாரிசு இல்லை என்பதில் அவரை விட அதிக வருத்தம் அவருடைய மூத்த சகோதரி காஞ்சனாவுக்குத்தான்.

சாந்தாதேவிக்கு கருப்பையில் ஏராளமான கோளாறுகள். அத்துடன் அந்த வயதுக்கு அது எவ்வளவு வளர்ச்சி கண்டிருக்க வேண்டுமோ அதை காணவில்லை. எனவே இந்த ஜென்மத்தில் பிள்ளைப்பேறு என்பது குதிரைக் கொம்பு என்பது காஞ்சனாவுக்கும் தெரியும். முதலில் அவருக்கு ஏன் இரண்டாவதாக ஒரு திருமணம் செய்யக் கூடாது என்பது அவர் கேள்வி. ரங்கராஜ் அம்மட்டில் நான் ஒரு ராமன் - கிருஷ்ணனில்லை என்று அழுத்தமாகப் பேசி காஞ்சனாவின் வாயையும் அடைத்துவிட்டார். அன்று காஞ்சனா பேசியது இப்போதும் சாந்தாதேவி காதுக்குள்ளேயே இருக்கிறது.

'இப்படி ஒரு மலடியோட கடைசிவரை புத்திரப்பேறு இல்லாம இருந்து கடைசில புற்று நரகத்துக்கு போகணும்கறது தான் இவன் விதிபோல இருக்கு...' - என்று சொன்ன அந்த வார்த்தைகள் சாந்தா தேவியை உலுக்கிவிட்டன.

பிள்ளைப்பேறு இல்லை என்றால் புற்று நரகமா? என்று கோயில் பட்டர் ஒருவரிடம் கேட்க அவரும் 'அப்படித்தானம்மா நம்முடைய சாஸ்திரங்கள் சொல்கின்றன' என்று கூறிவிட்டார்.



'ஐயோ—

இந்த ஜென்மத்தில் இவருக்கு பிள்ளையைத்தான் தரமுடியவில்லை.

இதற்கு பிறகு புற்று நரகம் வேறா...?' என்று விக்கித்துப் போனவளுக்குள் இறுதியாக ஒரு முடிவும் தோன்றியது.

அதை செயல்படுத்தத்தான் பண்டரிபுரத்துக்கும் வந்திருக்கிறாள்.

காரணமில்லாமல் காரியமில்லை - இதுதான் பிரபஞ்சத்தின் ஆணிவேர் சித்தாந்தம். தனக்கு இப்படி ஒருநிலை ஏற்படவும் ஒரு காரணம் இருக்க வேண்டும். அதன் பாதிப்பை தன் கணவரும் ஏன் சுமக்க வேண்டும்?

அது தன்னோடு போகட்டும்...

எப்பேர்ப்பட்ட பாவங்களையும் போக்குபவைதான் க்ஷேத்திரங்கள். உலகில் அவை உருவாகக் காரணமே மனித வாழ்வை ரட்சிக்க வேண்டும் என்பதற்காகத்தான். தனக்கும் ரட்சணை கிடைக்கட்டும்.

தன் கர்மங்களின் நிமித்தம் காலைக் கட்டிக் கொண்டு அழ விட்டலிடம் மட்டும்தான் அனுமதியிருக்கிறது. வேறு எங்கும் கருவறை என்பது ஒரு பக்தன் தீண்டக்கூடாத புனிதமாகவே பாதுகாக்கப்படுகிறது. காசியில் விஸ்வநாதனைத் தீண்டலாம் தான். ஆனால் அந்த லிங்க உருவில் சிரசைத் தொடத்தான் வாய்ப்பு. திருவடி அல்லவா பக்தனுக்கு தேவை?

அதனால் எல்லா வகையிலும் உசிதம் பண்டரிபுரம் தான் என்று புறப்பட்டு வந்துவிட்டாள். தான் எண்ணியது எவ்வளவு சரி என்பதையும் வந்த நொடியில் இருந்து உணர்ந்தபடி உள்ளாள்.

நாம கோஷம் வெளியெங்கும் பால் பொங்கி வழிந்தாற் போல வழிந்தபடியே உள்ளது. உடம்புக்கு ஜலம் கருவி என்றால் சித்தத்துக்கு சத்தம் தான் சரியான கருவி.

அந்த சத்தத்திலும் 'ஜெய் ஜெய் விட்டலா... பாண்டுரங்க விட்டலா.. பண்டரிநாதா விட்டலா..' என்கிற சத்தம் உயிரை ஊடுருவிக் குடைவதாகவே இருக்கிறது.

இந்த சித்த சக்தியோடு விட்டலனின் திருவடியில் விழ வேண்டும்.

அவனிடம் ஒரே ஒரு கோரிக்கைதான்.

'நான் இந்த பண்டரிபுரத்திலேயே என் வாழ்வை முடித்துக் கொள்கிறேன். உனது சந்திரபாகா நதி தீரத்தில் மூழ்கிக் குளிக்கும் சாக்கில் அப்படியே உள்ளடங்கிப்போய் விட வேண்டும் என் தேகம். ஆறு கொண்டு போனதாய் கருதி என் கணவரும் எனக்கான காரியங்களை முடித்து விட்டுச் சென்று பிள்ளைப் பேறுள்ள இன்னொரு பெண்ணை மணந்து அவர் வாழ்வாவது இன்புறட்டும். நான் உயிரோடு இருக்கும் வரை அவர் இன்னொரு பெண்ணை நிச்சயம் தீண்டமாட்டார். இப்படி ஒரு பதி புருஷனுக்கு நான் வழிவிடுவது தானே சரி? என் வரையில் சதி செய்யும் விதியை நான் உன்னை வணங்கி உன் ஆற்றில் மூழ்கி வெற்றி கொள்ள விரும்புகிறேன் - எனக்கு அனுக்ரகம் புரிவாய்' - என்று அவள் மனது வேண்டிக் கொண்டே வரிசையில் நின்று கொண்டிருந்தது.

கூட்டம் கரைந்து அந்த பண்டரிநாதனும் அவர்கள் கண்களில் விழுந்து தன் கால்களையும் அவள் பற்றிக் கொள்வதற்காக கொடுத்தான்.

பொங்கி வந்த கண்ணீரோடு அந்தக் கால்களையும் நனைத்தாள் சாந்தாதேவி. குழந்தைக்கான கண்ணீர் தான் அது என்பது ரங்கராஜு-க்கும் புரியாமல் இல்லை. அவரிடமும் பிரார்த்தனை 'எங்கள் பிரச்சினை இந்த ஜென்மத்தில் தீராது என்பது தெரிந்துவிட்டது. ஒவ்வொரு நாளும் பிள்ளை பிள்ளை என்று உருகிச் சாவதற்கு ஒரேயடியாக செத்து விடுவது தான் என் முடிவு. தரிசனம் முடிந்த கையோடு சந்திரபாகாவில் திரும்ப நீராடச் சென்று முதலில் நான் என் கதையை முடித்துக் கொள்வேன்



- என் மனைவியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் - அவன் என்னை பின் தொடர்ந்து வந்து சேர்வான் - இந்த பிறப்பில் தான் எங்களுக்கு பிள்ளை பெற கர்மம் இடம் தரவில்லை. உன் திருவடிகளைத் தொட்ட புண்ணியத்தால் அடுத்த பிறப்பிலாவது எங்களுக்கு பிள்ளைவரம் கொடு. அந்த பிறப்பிலும் என் சாந்தாவே எனக்கு மனைவியாக வரவேண்டும். இது தான் என் பிரார்த்தனை...'

- என்று ரங்கராஜு-ம் விட்டலனின் திருவடிகளைக் கண்ணீரால் கழுவினார்.

❖❖❖

**ச**ந்திரபாகா நதி தீரம்!

ரங்கராஜு-ம் காந்தாதேவியும் திரும்ப கரைக்கு வந்திருந்தனர்.

“எனக்கு தான் இந்த ஆத்துல குளிக்கற ஆசைன்னா உனக்கும் அதே ஆசை...” - என்ற ரங்கராஜ் ஆற்றங்கரையில் அசாத்யமான கூட்டத்தைப் பார்க்கவும் இங்கே நாம் ஆசைப்பட்டது போல நடந்து கொள்ள முடியாது என்பது உணர்ந்தவராக “சாந்தா .... நாம் கொஞ்சம் தள்ளிப் போய் குளிப்போமா?” - என்று கேட்க, அதே எண்ணத்தில் இருந்த சாந்தா தேவியிடமும் மறுப்பில்லை.

இருவரும் கரையோரமாகவே நடந்தனர். அவ் வேளையில் வெகு ஆச்சரியமாய், ஒரு பெரிய கர்ம மூட்டையை விட்டலனின் காலடியிலே இறக்கி வைத்து விட்டதுபோல ஒரு லேசான மனநிலை. புத்தம் புதிதாக பிறப்பெடுத்து விட்டது போலவும் இருந்தது. அவனை வணங்குவதற்கு முன் மனதில் இருந்த இறுக்கமும், பிள்ளையில்லையே என்கிற துக்கமும், இடுப்பில் இருந்த பண முடிச்சு இருளில் தவறி விழுந்து விட்டது போல அவர்களை விட்டு விலகியிருந்தது.

'எதற்கு சாக வேண்டும் - தற்கொலை கூட பாவத்தோடு சேர்ந்தது தானே... இறப்புக்கு பின் பிசாசாக அலைய நேரிடும் என்று தானே நமது சாத்திரங்கள் கூறுகின்றன?' - என்று கேள்வியும் பதிலுமாய் இருவருக்குள்ளேயுமே ஒரு சேர எண்ணங்கள்!

'இப்போது தானே விட்டலன் திருவடியைப் பிடித்துள்ளோம் என்றால் இனி விடிந்து தானே தீரவேண்டும். அந்த நம்பிக்கையே இல்லாமல் மரணத்தை நோக்கிச் செல்வது எந்த வகையில் சரி?'

- இப்படியும் கேள்விகளின் எழும்புதல்கள்...

மௌனமாகவே இருவரும் நடந்தனர். விட்டல் நாமம் மெல்லத் தேய்ந்து வெகுதூரம் வரை ஆற்றோரமாகவே வந்தாகிவிட்டது. அப்போது எங்கிருந்தோ ஒரு குழந்தையின் அழுகுரல்! அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஒரு சேர எழும்பியது. சப்தம் வந்த திசையை வைத்து வேகமாக சென்றபோது ஆற்றோரமாக உள்ள ஆளரவமற்ற ஒரு மரத்தடியில் ஒரு பிஞ்சுக் குழந்தை. அது தான் அழுதபடி இருந்தது. சுற்றி ஒருவர் என்றால் ஒருவர் இல்லை.

குழந்தை கிடந்த இடத்தில் ஒரு கடிதம்! எடுத்துப் படித்த போது அதில் ஒரு செய்தி. சாந்தாதேவி குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

'நான் ஒரு பெரும்பாவி! பொல்லாத கணவனால் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகிவிட்டவள் - கணவனும் இப்போது உயிரோடு இல்லை. என்னையும் காலம் சீக்கிரம் அழைத்துக் கொண்டு விடும்.

என்பிள்ளை என்னிடம் வளர்ந்து இதுவும் அந்த நோய்க்கு ஆளாவதை நான் விரும்பவில்லை. பிள்ளையை அனாதை இல்லத் தொட்டில்களில் போடவும் மனமில்லை. இந்த பண்டரிபுரத்தில் அந்த பாண்டுரங்கன் காலடியாக கருதி சந்திரபாகா நதிக்கரையில் என் வாரிசை விட்டுச் செல்கிறேன். இது இனி என் வாரிசு இல்லை - அந்த



பாண்டுரங்கன் வாரிசு. அவனே இவனுக்கு ஒரு சரியான தாய் தந்தையை கண்களில் காட்டட்டும். காட்டுவான். காட்டினாலே அவன் கடவுள்! வருகிறேன்...'

- கடிதத்தைப் படித்த ரங்கராஜ் மௌனமாக அதை சாந்தாதேவி கையில் கொடுத்துவிட்டு குழந்தையை வாங்கிக்கொண்டு கோயில் நோக்கி நடக்க ஆரம்பித்தார். படித்தபடியே நடந்த சாந்தாதேவியும் அந்தக் கடிதத்தை மார்போடு அணைத்தவளாக 'என் பாண்டுரங்கனை இப்படி கொடுங்க...' என்று கேட்டு வாங்கிக் கொண்டாள். இருவரிடமும் பிரமிப்பின் அழுத்தம்.

குழந்தையிடம் அழுகை அடங்கி விட்டிருந்தது. அவனிடம் மட்டும் தானா?

# 5. பெரிய மனிதர்

கல்யாணப் பத்திரிகை அச்சாகி வந்திருந்தது. அந்த வீட்டின் முதல் சந்தோஷமான விஷயம்! அதிலும் ரங்கநாதன் தலையெடுத்துச் செய்யும் முதல் விசேஷம்... அச்சகத்தில் இருந்து வாங்கி வந்திருந்த கல்யாணப் பத்திரிகையை மனைவி ஜானகி கையில் ரங்கநாதன் கொடுத்த மறுநிமிடமே அவள் அதைக் கொண்டு போய் பூஜை அறையில் வைத்தாள்.

வைத்த வேகத்தில் விளக்கேற்றி முடித்து விழுந்தும் வணங்கினாள். ரங்கநாதன் ஹால் சோபாவில் சாய்ந்து அமர்ந்துவிட்டார். அவர் முகத்தில் அசதியும் களைப்பும் அப்பட்டமாகத் தெரிந்தன.



கல்யாண வேலை என்றால் சும்மாவா? சில நிமிடங்களில் காபியோடு அவர் எதிரில் வந்து நின்றாள் ஜானகி. அவரும் வாங்கி ஒரு வாய் பருகினார். அற்புதம் என்கிற தமிழ் வார்த்தைக்கு அர்த்தம் தெரிகிறாற் போல் இருந்தது. அன்றாட வாழ்வில் சில விஷயங்கள் அலுப்பதே இல்லை. அதில் பெண்டாட்டி கையால் களைத்த நிலையில் குடிக்கும் காபியும் அடக்கம்.

"ஆமா... கேட்டரிங்காரருக்கு அட்வான்ஸ் கொடுக்கணும்னு சொல்லிட்டிருந்தீங்களே... கொடுத்தாச்சா?"

"இல்ல ஜானகி... வர்ற வழியில பேங்க்குக்குப் போக நினைச்சேன். பிரஸ்லயே லேட்டாயிடிச்சு..."

"போன் பண்ணா வீட்டுக்கே வந்து செக்கை வாங்கிட்டுப் போகப்போறாரு... போன் பண்ணட்டுமா?"

"அவசரப்படாதே... ஒவ்வொண்ணா செய்வோம். முதல்ல குலதெய்வம் கோயிலுக்குப் போய் பத்திரிகையை வைக்கணும்" என்று ரங்கநாதன் சொல்லிக் கொண்டிருந்த போது போன் அலறியது.

ஜானகி எடுத்து அதற்குக் காதைக் கொடுத்தாள்.

மறுபக்கம் அவள் அண்ணன் ராமச்சந்திரன் டெல்லியில் இருந்து பேசினார்.

"ஜானா...!"

"அண்ணா... சௌக்யமா இருக்கியா?"

"சௌக்யம்மா... மாப்ளை எப்படி இருக்கார். அப்புறம் கல்யாணப் பொண்ணு கல்யாணி எப்படி இருக்கா"

"எல்லாரும் சௌக்யம்ண்ணா... அங்க எல்லாரும் எப்படி இருக்காங்க...?"

"எங்க சௌக்யத்துக்கு என்னம்மா... எல்லாரும் நல்லா இருக்கோம். பை தபை நான் எதுக்கு போன் பண்ணேன்னு சொல்லிடறேன். கல்யாணியோட கல்யாணம் வர தை பத்தாம் தேதிதானே?"

"ஆமா... ஏன்னா மறந்து போய்ட்டியா?"

"மறக்கலை உறுதிப்படுத்திக்கறேன். இப்பவே டிக்கட் ரிசர்வ் பண்ணாதானே அப்ப பிரச்னையில்லாம வந்துட்டுப் போகமுடியும்?"

"நீ ரொம்ப உஷார்ணா..."

"இருந்தாகணும்மா... காலம் அப்படி? நம்ம சிறு பிராயம் மாதிரியா? நினைச்சா பஸ் ஸ்டாண்டுக்குப் போய், பஸ்ஸைப் பிடிச்சு கிளம்பிப் போனோம்னு இருக்க..."

- அண்ணன், தங்கை இருவரும் ட்ராக் மாறிப் பேசிக் கொள்வதை சற்று கேலிப்புன்னகையுடன் பார்த்த ரங்கநாதனுக்கு அப்போதே அந்த வீட்டுக்குள் கல்யாணக்களை வந்துவிட்டதுபோல் இருந்தது.

ஒரே மகள்தான் கல்யாணி!

படித்து முடித்துவிட்டு சும்மா இருக்கப் பிடிக்காமல் வேலைக்கும் போகிறாள். கைநிறைய சம்பாதிக்கிறாள். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் படிப்பு, வேலை, சம்பளம் என்று எல்லாமே அபரிமிதமாகவே கிடைத்து விடுகின்றன. அவ்வளவுக்கவ்வளவு புஷ்டியாகப் பிள்ளை பெறுவது, அதை ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பது என்பதெல்லாம்தான் பெரிய விஷயங்களாகி விட்டன. தன் மகள் வரையில் அப்படி எல்லாம் எந்த சிரமமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பது தான் ரங்கநாதனின் விருப்பம்.

அதனால்தான் கல்யாணத்தைக் காலம் தாழ்த்த விரும்பவில்லை. கல்யாணிகூட இன்னும் சில வருடங்கள் போகட்டும் என்றுதான் சொன்னாள். ஆனால் ரங்கநாதனோ தன் உடம்பில் தெம்பிருக்கும்போதே கல்யாணத்தைச் செய்து மணக் கோலத்தில் பார்த்துவிட ஆசைப்பட்டார்.

மாப்பிள்ளை ரவி அமெரிக்காவில் வேலையில் இருக்கிறான்! கல்யாணம் முடிந்ததும் கல்யாணி அமெரிக்கா



சென்றாக வேண்டும். அவள் வரையில் அப்பா - அம்மாவைப் பிரிகிறோம் என்கிற வருத்தம் மட்டும்தான்.

ஒன்றை இழக்காமல் எப்படி ஒன்றைப் பெற முடியும்?

ரங்கநாதன் கல்யாணியைத் தயார்ப்படுத்தி விட்டார். நிச்சயதார்த்தத்தின்போதே அது விஷயமாக ஒரே அழுகை.

அப்போதே மாப்பிள்ளை ரவியிடம் தனியாகப் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தில் "கல்யாணத்துக்குப் பிறகு எங்க அப்பா அம்மாவை என்கூட வெச்சுக்க ஆசைப் படறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?" என்று கேட்டு அவனிடமும் சம்மதம் வாங்கி விட்டாள். அதை ரங்கநாதனிடம் கூறவும், அவரிடம் ஒரே பூரிப்பு. ஆனாலும் அவர்களோடு செல்வது தொடக்கத்தில் அத்தனை மரியாதையாக இருக்காது என்று தனக்குத்தானே தீர்மானித்துக் கொண்டார்.

"ரிடையர் ஆன பிறகு நானும் உன் அம்மாவும் அங்க உன்கூடதான் வந்து இருக்கப்போறோம். இப்ப அதுவா விஷயம்?" என்று சமாளித்து விட்டார்.

எல்லாவற்றையும் நினைக்க நினைக்க மனதுக்கு இதமாக இருக்கிறது. கல்யாணச் செலவுக்குக் கையைக் கடித்தால் என்ன செய்வது என்று ஆபீசில் ஸ்பெஷல் லோன் போட்டு அதுவும் சேங்ஷன் ஆகிவிட்டது.

சரியாகத் திட்டமிட்டுச் செலவழிக்க வேண்டும். எல்லாவற்றையும் மறக்காமல் எழுதியும் வைத்துக் கொள்ளவேண்டும். ரங்கநாதன் மனது திட்டமிட்டு கணக்குப் போட்டபடி இருக்க, அண்ணனிடம் பேசி முடித்த சந்தோஷத்தோடு முன்வந்தாள் ஜானகி.

"என்னங்க... என் அண்ணன் இன்னிக்கே. ரிசர்வ் பண்ணப் போறாராம். அதான் கூப்பிட்டு கல்யாண தேதியை உறுதிப்படுத்திக்கிட்டார்."

"அதான் கேட்டேனே... ஆமாம். அதுக்காக இப்படியா இந்தியப் பொருளாதாரத்துல இருந்து நேத்துப் பிழிஞ்ச வடாம் வரை பேசவே... உன் அண்ணனுக்கு எப்படியும் எஸ்டீடி பில் ஒரு இருநூறு முந்நூறு ரூபா பழுத்திருக்கும்..."

"சும்மா இருங்க... கல்யாணம்கற சாக்குல ஒருத்தரோட ஒருத்தர் சந்தோஷமா பேசிக்கறோம். இதுல போய் குத்தம் சொல்லிக்கிட்டு..." - செல்லமாக ஒரு அதட்டலோடு காபி டம்ளரை எடுத்துக் கொண்டு சமையல் கட்டுப்பக்கம் செல்லத் தொடங்கினாள் ஜானகி.

அப்போது வாசற்புறம் ஒரு கார் வந்து நின்றது.

காரில் இருந்து மாப்பிள்ளை ரவியின் அப்பா கல்யாணசுந்தரம்தான் வந்தபடி இருந்தார்!

'அட, சம்பந்தி வராரே... என்ன திடுதிப்னு...?' ரங்கநாதனிடம் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

பெரும் வரவேற்புக்கு நடுவில் ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்தார் கல்யாணசுந்தரம்.

"நீங்க இப்படி போன்கூட பண்ணாம வந்துருக்கறது எங்களுக்கு ஒரு பெரிய சர்ப்ரைஸ்... காபி சாப்பிடலாம்தானே?" - நைச்சியமாகக் கேட்டார் ரங்கநாதன்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஆமாம் கல்யாண ஏற்பாடெல்லாம் எந்த அளவுல இருக்கு?" அவரின் ஆரம்பமே ஒருமாதிரி இருந்தது. குரலில் ஒரு சின்ன எள்ளல்.

"இப்பதான் கல்யாணப் பத்திரிகை அச்சாகி வந்துருக்கு. குலதெய்வம் கோயிலுக்குப் போய்ட்டு எல்லாருக்கும் அனுப்பத் தொடங்கிடுவேன். ஏன் சம்பந்தி?"

"சம்மந்தியா... இன்னும் கல்யாணமே நடந்து முடியல. அதுக்குள்ள உறவா?" அவர் பேச்சு அதிர்ச்சியை சற்று அதிகப்படுத்தியது.



"நீங்க பேசறதே வித்யாசமா இருக்கே..."

"அதெல்லாம் இருக்கட்டும்... யாருக்கும் பத்திரிகை வைக்கலதானே?"

"அதான் சொன்னேனே... முதல்ல குலதெய்வத்துக்கு வச்சுட்டு அப்புறமா..."

"போகட்டும். உங்ககிட்ட நான் ஒரு விஷயத்தைச் சொல்லத்தான் நேர்லயே வந்துருக்கேன்..."

"சொல்லுங்க..."

"நான் சொன்னதுக்குப் பிறகு என்மேல வருத்தமெல்லாம் படக்கூடாது. பட்டாலும் எனக்குக் கவலையில்லை."

அவருடைய பீடிகை ரங்கநாதனிடமும் ஜானகியிடமும் அதுவரை நிலவிக் கொண்டிருந்த கல்யாண சந்தோஷத்தை எல்லாம் கிட்டத்தட்ட சாம்பலாக்கி விட்டது.

வெளிறிய முகத்தோடு அவரையே பார்த்தனர்.

"என் பிள்ளை ரவி அமெரிக்காவுல நல்ல வேலைல கை நிறைய சம்பாதிக்கறான்னு தெரியும்தானே?"

"ஆமா... இப்ப அதுக்கென்ன?"

"உங்களுக்கு அது மட்டும்தான் தெரியும்... தெரியாத இன்னொரு விஷயமும் இருக்கு..."

"இப்படி புதிர் போட்டுப் பேசினா எப்படி... சட்டுன்னு விஷயத்துக்கு வாங்க..." - ரங்கநாதனிடம் பி.பி. கூடத் தொடங்கியது.

"வரேன்யா... அதான் எதையும் மறைக்கறதில்லங்கற முடிவுக்கு வந்துட்டேனே... அப்புறம் என்ன பயம்?"

"மறைக்கறதில்லேன்னா?" ரங்கநாதனுக்கு விழிகள் அகண்டு விரிந்தன. ஜானகிக்கு ஹார்ட் பீட் எகிற ஆரம்பித்தது.

"என் பையனுக்கு ஏற்கனவே கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கு. அந்தப் பொண்ணு ஒரு வெள்ளைக்காரி. எங்களுக்கு வெள்ளக்கார மருமகளைப் பிடிக்காம ஜாதி இனத்துக்குள்ள உங்க பொண்ண தேர்ந்தெடுத்தோம். இங்க கல்யாணம் நடந்து உங்க பொண்ணு அமெரிக்கா போகும்போது அவ என் மகன் வேண்டாம்னு விவாகரத்து பண்ணிடுவா. அவ அப்படிப் பண்ணணும்கறதுதான் எங்க எண்ணம். இதை முன்னாலேயே சொல்லத்தான் வந்தேன். அப்புறமா அங்க போய் என் மகனோட நிலையப் பார்த்து ஐயோ அம்மான்னு அலறக் கூடாது இல்லியா?"

அவர் எந்தக் குற்ற உணர்வும் இன்றி ஏதோ நாடகத்தில் வசனம் பேசுகிறவர் போல பேசவும், ரங்கநாதனுக்கு நெஞ்சை அடைத்தது. உச்சியில் இருந்து பாதம் வரையில் ரத்த ஓட்டமும் வெந்நீராகிப் போனதுபோல் இருந்தது. அது அப்படியே குரலில் வெடிக்கவும் தொடங்கியது.

"எழுந்திருய்யா முதல்ல..." - ஓங்கலான அவர் குரல் கேட்டு அவரும் சற்றுத் தடுமாறினார். இருந்தும் சுதாரித்தார்.

"என்ன ஓய்... நான் சம்பந்திங்கறது மறந்து போச்சா?" என்றார்.

"மண்ணாங்கட்டி... சம்பந்தியாம் சம்பந்தி. ஏய்யா, உங்க தனிப்பட்ட விருப்பத்துக்கு என் மகள் வாழ்க்கை தான் கிடைச்சதா? எவ்வளவு தைரியம் இருந்திருந்தா கல்யாணம் ஆன ஒரு பையனுக்கு நீ இங்க என் பொண்ண பாத்துருப்பே?"

சிலுப்பிக் கொண்டு கேட்கவும் கல்யாணசுந்தரம் என்கிற அந்த மனிதரிடம் ஒரு கெஞ்சலான சிரிப்பு.

"என்னய்யா சிரிக்கறே... இங்க என் வயிறு எரியுதுய்யா..."



"இதோ பாருங்க... நான் உண்மையச் சொன்னதுக்காக சந்தோஷப்படணும். அதை விட்டுட்டு இப்படி எல்லாம் பேசக்கூடாது.

நிச்சயமாகிட்டாலே பாதிக் கல்யாணம் முடிஞ்ச மாதிரி. இதுல பத்திரிகை எல்லாம் வேற அடிச்சாச்சுன்னு சொல்றீங்க. மரியாதையா பேசுங்க."

அவர் அதிராமல் சொன்ன மறு நொடியே பூஜை அறைக்குள் நுழைந்து அந்தக் கல்யாணப் பத்திரிகையை எடுத்து வந்து அவர் எதிரிலேயே சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டார் ரங்கநாதன்.

போட்ட வேகத்தில், "எனக்கு இருக்கறது ஒரு பொண்ணு. அவளைக் கிணத்துல தள்ள நான் தயாரா இல்லை. இந்தக் கல்யாணமும் இனி நடக்காது. ஏதோ இந்த மட்டுல என் பொண்ணு கழுத்துல தாலி ஏறுறதுக்கு முந்தி வந்து உண்மையைச் சொன்னியே... அந்த மட்டுல சந்தோஷம்.

அந்த ஒரு விஷயத்துக்காக உன் மகன் மேல போலீஸ் புகார் கொடுக்காம விட்றேன். எழுந்திருய்யா... திரும்பிப் பாக்காம ஓடு." - ரங்கநாதன் கை வாசல் பக்கம் காட்டியது. அவரும் ஒரு மாதிரி பார்த்தவராக, "இதுதான் உங்க கடைசி முடிவா?" என்று கேட்டார்.

"ஆமாய்யா... இன்னும் என்ன பேச்சு கிளம்பு?"

"நாளைக்கு இந்தக் கல்யாணம் ஏன் நின்னு போச்சுன்னு ஊர்ல கேட்டா என்ன சொல்வே?"

"ஒரே வரிதான். என் பொண்ணுக்கு எங்களப் பிரிஞ்சு அமெரிக்கா போக இஷ்டமில்லை. அதனால இந்த ப்ரபோசல் ட்ராப்புன்னு .சொல்லிட்டுப் போறேன். இதுவா இப்ப விஷயம்?"

"அப்ப இதுவரை பண்ண ஏற்பாடெல்லாம்...?"

"ஒரு ஏற்பாடும் பண்ணல. இனிதான் தொடங்கணும். நல்லவேளை என் பெண்ணோட ஜாதக பலம், அவ உன் பையன் மாதிரி ஒரு ஏமாத்துக்காரன்கிட்ட சிக்காம காப்பாத்திடுச்சு. அந்த வகைல உனக்கும் கோடி புண்ணியம். நல்லவேளை. உண்மையைச் சொன்னியே... புறப்படு... புறப்படு..."

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே எழுந்தார் கல்யாணசுந்தரம். ஒரு மாதிரி நிதானம் இல்லாமல் நடந்து காரிலும் ஏறிக்கொள்ள, காரும் புறப்பட்டது.

ரங்கநாதனுக்கு ஒரு புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தது. ஜானகி குனிந்து அந்தக் கிழிந்த கல்யாணப் பத்திரிகைகளைக் கையில் எடுத்தாள். எடுக்கும்போதே கண்களில் நீர் திரண்டு வந்தது.

"அழாத ஜானகி... நம்ப பொண்ணுக்கு நல்லதுதான் நடந்துருக்கு..."

"இருந்தாலும் இப்படி முதல் பத்திரிகையைக் கிழிச்சுப் போடும்படி ஆயிடுச்சுங்களே...?"

"அதுசரி. அவர் பேச்சு கேட்டு சம்மதிச்சிருந்தா கல்யாணி வாழ்க்கைல்ல கிழிஞ்சு போயிருக்கும்?"

"உண்மைதாங்க... இதை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துடுவோம். ஆமா, கல்யாணி கேட்டா என்னங்க சொல்ல?"

"அந்த கிழவன் இப்ப சொன்னதை அப்படியே சொன்னா போச்சு. நம்ம முடிவுக்காக நம்மகள் இதை ஏத்துக்கிடுவா. வேற என்ன சொல்லுவா?" - ரங்கநாதன் சற்றுப் பெருமிதப்பட்டபடியே கேட்டார். அவளும் ஆமோதித்தாள்!

❖❖❖



ஓடும் காருக்குள் கல்யாணசுந்தரம்! செல்போனில் சோகமாக அவர் மனைவியிடம் பேசத் தொடங்கியிருந்தார்.

"யம்மாடி... கல்யாணத்தை நிறுத்திட்டேன். ரொம்ப கஷ்டப்பட்டு எப்படியோ வில்லன் மாதிரி பேசி, அந்த ரங்கநாதன் கையாலயே கல்யாணப் பத்திரிகையைக் கிழிச்சுப் போடும் படியும் பண்ணிட்டேன்.

நீ தயாரா இரு... நான் ஒரு அரை மணி நேரத்துல வந்துடுவேன் ஃப்ளைட்ல டிக்கட் கன்ஃபர்ம் ஆயாச்சு!" என்றவர் அப்படியே பொலபொலவென்று அழ ஆரம்பித்துவிட்டார்.

"அவங்களுக்கு நம்ம பையன் ஆக்சிடண்ட்டுல செத்துப்போனது எந்த வகைலயும் தெரியாதுதானே?" - விம்மிய குரலில் அவர் மனைவியிடம் இருந்து கேள்வி.

"தெரியக் கூடாதுன்னுதானேம்மா வெள்ளைக்கார மனைவி குழந்தைன்னுல்லாம் பொய்யச் சொன்னேன். பையனதான் விதி விபத்துங்கற பேர்ல கொண்டு போயிடுச்சே?

இந்தப் பொண்ணை எதுக்கு கூட சேர்ந்து பலி கொடுக்கணும்? அப்றம் ஊரும் உலகமும் இவளை ராசி இல்லாதவனு மென்னு துப்பவா? இவளாவது ஆயுசுள்ள ஒரு பையன கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கட்டுமே...?"

கேட்டபடியே விசும்பி விசும்பி அழுதார் அந்தப் பெரிய மனிதர். மறுபுறம் எந்த பதிலுமில்லை.

வெளியே மழை பெய்வதற்கான அறிகுறிகள்! எதனால் மழை பெய்கிறது என்பது காரை ஓட்டியபடி இருந்த அந்த டிரைவருக்கு மட்டும் தெரிந்து அவன் கண்களும் கலங்கிவிட்டிருந்தன!

## 6. தமிழன்

ஸ்ரீ நகர்!

பஸ்ஸிலிருந்து சந்தானமும் ஜெகதீசனும் இறங்கியது தான் தாமதம். ஒரு கூட்டமே வந்து இருவரையும் சூழ்ந்து கொண்டது.

இருவருக்கும் நல்ல தமிழ் நெற்றி. பார்த்த மாத்திரத்தில் டூரிஸ்ட்கள் என்பது தெரிந்து விட்டதாலோ என்னவோ ஆளுக்கு ஆள் பீறாய்த் தொடங்கி விட்டார்கள். வாட்டசாட்டமான உயரம், தொளதொளவென்ற பைஜாமா ஜிப்பா - நல்ல கூர்மையான நாசி... காஷ்மீரிகள் என்றால் சும்மாவா...? வெள்ளை வெளுக்க பரங்கிப் பழமாய்த் தெரிந்த அவர்களில் ஒருவன் அதிசயமாய் தமிழ் பேசினான்.



"சார்... நாங்க கவர்மெண்ட் அப்ருவ்ட் கைட்ஸ். அக்காமடேஷன், சைட் சீயிங், சாப்பாடு எல்லாத்தையும் அரேஞ்ச் பண்ணித்தரேன். எந்த பயமும் வேண்டாம். என் கூட வாங்க..." என்று சந்தானத்தின் ஒரு கையைப் பிடித்தே இழுத்தான். அதையே ஆங்கிலத்தில் ஒருவன் பேசி சந்தானத்தின் இன்னொரு கையைப் பிடித்து இழுத்தான்.

அந்த இருவரையும் ஒரு ஆறடி உயரமுள்ள ஒருவன் காஷ்மீரியில் திட்டியபடியே தள்ளிவிட்டு சந்தானத்தையும், ஜெகதீசனையும் அருகில் நிற்கும் தனது டாச்சிக்குள் பிடித்து தள்ளியவனாக

"அவங்கள நம்பாதே... ஃப்ராடுப்பசங்க... நான் தான் ஒரிஜினல் கைடு" என்று அதற்கான ஜே.கே. கவர்மென்டின் அடையாள அட்டையை எடுத்துக் காட்டினான்.

இருவருக்கும் தலையைச் சுற்றியது.

சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரர் வந்தார். இருவரும் அவனிடம் இருந்து விடுபட்டு அந்த போலீஸ்காரரிடம் சென்றனர். அவர் "டூரிஸ்ட்டா" என்று கேட்டுவிட்டு ஆச்சரியமாகப் பார்த்தார்.

"ஆமாம் சார்... காஷ்மீரை சினிமாவுலதான் பாத்துருக்கோம். நேர்ல பார்க்க வந்தா ஆளுக்கு ஆள் பிடுங்கி எடுக்கறாங்க..." என்றனர் இருவரும்.

"கவலப்படாதீங்க. என் கூட வாங்க. நான் ஒரு கைடை காட்றேன். அவர் உங்களுக்கு காஷ்மீரை சுத்திக்காட்டுவார்" என்றபடியே நடந்தார். இருவரும் சூட்கேசும் கையுமாக அவரைப்பின் தொடர்ந்தனர்.

இருவரையும் பாய்ச்சலோடு வளைக்கப் பார்த்த கைடுகள் மூர்க்கமாக முறைத்தனர்.

பக்கத்தில் தான் இருந்தது போலீஸ் ஸ்டேஷன். அவர் உள்ளே செல்லவும் இருவரும் பின் தொடர்ந்தனர். ஏதோ கைதாகி உள்ளே செல்கிற மாதிரி இருந்தது.

தொடக்கமே தப்பாக இருப்பது போலவும் பிரச... தட்டியது. ஆனால் போலீஸ்காரர் அவர்களை அதிக... பயப்படவிடவில்லை. நாற்காலிகளைக் காட்டி உட்கார... சொன்னார். இருவரும் தயங்கியபடி உட்கார்ந்தனர்.

"தமிழ்நாடா?" - விசாரிப்பு ஆரம்பமாயிற்று.

"ஆமாம் சார்..."

"தைரியமா ஊரைச் சுத்தி பார்க்க வந்துருக்கீங்களே... குட்..."

"தேங்க்யூ சார்..."

"பயப்படாதீங்க. உங்களை மாதிரி நிறைய பே... வரணும். அப்பதான் காஷ்மீர் உருப்படும். தீவிரவாதி... களுக்கு பயந்துகிட்டு யாரும் வர்றதேயில்லை"

"எங்களுக்கும் பயம் தான். ஒரு அசட்டு தைரியத்து... வந்துருக்கோம். பிரச்சனை ஒண்ணும் இல்லையே சார்."

"நத்திங்... எங்கேயும் தனியா போகாதீங்க. இருட்றது... குள்ள தங்கியிருக்கற இடத்துக்கு வந்துடுங்க. குறிப்பா... மிலிட்ரி ஆட்கள்கிட்ட நெருங்காதீங்க. தீவிரவாதிகளுக்கு... பப்ளிக் எதிரி இல்லை. மிலிட்ரி தான் எதிரி..."

"நல்லது சார்... கைட் யாரோ இருக்கறதா சொ... ன்னீங்களே..."

"இருங்க... வந்துடுவார்... என் தம்பி தான்!"

- போலீஸ்காரரின் கரிசனத்துக்கு அப்பொழுது தான் அர்த்தம் புரிந்தது.

அவரது தம்பியும் வந்தார். அஜ்மல்கான் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"வாங்க போகலாம். முதல்ல படகு வீடு ஒண்ணுல உங்களை தங்க வைக்கறேன். அற்புதமா இருக்கும். குளிச்சு முடியுங்க. அப்புறமா என் டாச்சியிலேயே ஊரை சுத்தி



காட்டறேன். ஒரு நாளைக்கு சாப்பாடு, தங்கற செலவு, சுத்திப்பாக்கற செலவு எல்லாத்துக்கும் ஆயிரம் ரூபா தந்தா போதும்..."

"அய்யோ ஆயிரமா... கட்டுப்படியாகாது சார்..."

"இது ரொம்ப சீப். நீங்க தமிழ்நாட்டுக்கு போய் இன்னும் நாலு பேரை அனுப்பி வைக்கணும். இதே ஃபாரீன்காரரா இருந்தா அஞ்சாயிரம் வாடகை"

"இருக்கலாம். கொஞ்சம் குறைச்சுக்குங்களேன்..."

"சரி... தொள்ளாயிரம் தாங்க"

"அப்புறமா பேச்சு மாறமாட்டீங்களே..."

"நிச்சயமா மாட்டேன். நீங்க வருஷா வருஷம் வரணும். வாங்க போலாம்."

அழகாக ஆங்கிலத்தில் பேசி அழைத்துக் கொண்டு போனார். அந்த போலீஸ்கார புரோக்கர் முகத்தில் வெற்றிப் புன்னகை.

❖❖❖

சினிமாவில் பார்த்த காஷ்மீர் தால் ஏரி நேரில் கூவத்தை விட மோசமாக இருந்தது. அவ்வளவு அழுக்கு. பாசிகள் வேறு. நாற்றம் மூக்கையடைத்தது. அதில் ஒரு சிறிய போட்டில் இருவரும் ஏறி பயணித்தனர்.

"இந்த ஏரி முப்பத்தாறு மைல் சுற்றளவு கொண்டது. டிசம்பர் ஜனவரில அப்படியே பனிக்கட்டியாயிடும். பசங்க இதுமேல கிரிக்கெட் விளையாடுவாங்க..."

- அஜ்மல்கான் விளக்கியபடியே வரிசையாக தண்ணீர் மேல் அமைக்கப்பட்டிருந்த படகு வீடு ஒன்றின் முன் போட்டை நிறுத்தினார்.

பார்க்க அத்தனை அழகாக இருந்தது.

அவ்வளவும் படாக் மரத்தால் செய்யப்பட்டதாம். முப்பது லட்ச ரூபாய் மதிப்பாம்... சொல்லிக் கொண்டே உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே ஃபைவ் ஸ்டார் ஹோட்டலின் அறைபோல இருந்தது. சோபா, கட்டில், புக் ஷெல்ப், டைனிங் டேபிள் என்று அங்குலத்துக்கு அங்குலம் சொகுசான விஷயங்கள்.

சந்தானமும் ஜெகதீசனும் பரவசமானார்கள்.

"டேய் தொள்ளாயிரம் இந்த போட்ஹவுசுக்கே தரலாம்டா..." என்றான் சந்தானம்.

சிறிது நேரத்தில் பீங்கான் கிண்ணத்தில் டீ வந்தது குடித்தனர். குங்குமப்பூ வாசம் மூக்கில் ஏறியது.

"வாவ்! காஷ்மீர் காஷ்மீர் தான்!" என்றான் ஜெகதீசன். அதன் பின் குளித்து முடித்து ஊர் சுற்றிப் பார்க்க கிளம்பினார்கள்.

எங்கு பார்த்தாலும் போலீஸ் காவல்!

ஜனங்களை விட போலீஸ் அதிகமாக இருப்பது போல ஒரு உணர்வு.

"இந்த தீவிரவாதிகளால எங்களுக்கு பொழப்பே போச்சு. டூரிசம் தான் இங்க மெயின் பிசினஸ்" - என்றான் கைட் அஜ்மல்தான்.

"அவங்களை உங்க கவர்மென்ட்டால அடக்க முடியலையா...?"

"எங்க... நாங்கல்லாம் இந்தியா பக்கம்தான். ஒரு அஞ்சு பர்சன்ட் பேர் பண்ற கலாட்டாவால எங்க பொழப்பு போச்சு. மொத்தம் 1800 போட் ஹவுஸ் இருக்கு ஆனா ஐம்பதுல கூட டூரிஸ்ட்டுங்க இல்ல. மிச்சம் எல்லாம் காலியாதான் கிடக்கு..." - என்று மூக்கைச் சிந்தினான்.

அப்படியே கடை வீதி, ஹஜ்ரஜ்பால் மசூதி, ரகுநாத் மந்திர், ஷாலிமர் கார்டன் என்று ஒரு ரவுண்டும் வந்து முடித்தார்கள்.

❖❖❖



இரவு நேரம்!

படகு வீட்டில் ஹாயாக அமர்ந்து கொண்டிருந்த போது சல்சல்லென்று சிறு படகுகளில் கலைப்பொருட்களை விற்கும் வியாபாரிகள் வந்து சந்தானத்தையும் ஜெகதீசனையும் சூழ்ந்து கொண்டனர்.

ஒரு வியாபாரி குங்குமப்பூவை எடுத்து நீட்டினான். ஒருவன் கத்தி கபடா என்று கலைப்பொருட்களை எடுத்துப் போட்டான். இன்னொருவன் ஸ்வெட்டர், டி ஷர்ட் என்று எடுத்துப் போட்டான்.

கூசாமல் ஆயிரம் இரண்டாயிரம் என்று விலை சொன்னார்கள். ஐய்யோடா என்று அலறவும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி இறுதியாக நூறு இருநூறுக்கு வந்து தலையில் கட்டி விட்டுத்தான் போனார்கள்.

"டேய் பயங்கர சீப் இல்ல..."

"ஆமாண்டா... சும்மா சொல்லக்கூடாது. எல்லாம் நல்ல க்வாலிட்டி ஐட்டம்ஸ்"

- சந்தோஷத்தில் இருவரும் உருகிப் போனார்கள்.

மறுநாள்!

சந்தானம் தனியே ஜம்முவில் இருந்து மதுரை செல்ல டிக்கெட் ரிசர்வேஷன் செய்து வர கிளம்பிச் சென்றான்.

ஜெகதீசன் மட்டும் போட் ஹவுசில்!

அவனைக் குறி வைத்து ஒரு புடவை வியாபாரி வந்து இறங்கினார்.

"காஷ்மீர் சில்க் ஐட்டம் சார்... எல்லாம் சூப்பர் சரக்கு. போனா வராது. பிடியுங்க..." - என்றார்.

ஆசை ஜெகதீசனை விடவில்லை.

பர்ஸைப் பார்த்தான். ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரை இருந்தது. அக்கா, தங்கை, அம்மா என்று எல்லார் முகமும் நிழலாடியது. காதலி கனகாவும் கண்ணடித்தாள் மனக்குள்.

ஆளுக்கொரு புடவை என்று அள்ளினான்.

மொத்தப் பணமும் காலி.

அதனால் என்ன.. சந்தானத்திடம் தான் இருக்கிறதே?

புடவை வியாபாரி நகரவும் சந்தானம் வரவும் சரியாக இருந்தது.

வந்தவனும் சும்மா வரவில்லை. அவன் கையிலும் ஒரு புடவை மூட்டை!

"என்னடா இது...?"

"புடவைங்கடா... ரொம்ப சீப். அதான் ஒரு அள்ளு அள்ளிட்டேன்"

"இங்க நானும் வாங்கியிருக்கேண்டா..."

"அப்படியா... போகட்டும் ஊருக்கு திரும்ப பைசா இருக்குல்ல..."

"உன்கிட்ட இருக்குன்னு நான் பாக்கெட்டை காலி பண்ணிட்டேண்டா..."

"அடப்பாவி... நானும் உன்னை நம்பி என் பர்ஸை காலிப் பண்ணிட்டேன்"

"என்னடா இப்படி பண்ணிட்டே... இப்ப இந்த படகு வீட்டுக்கு பணம் தரணுமேடா?"

- ஜெகதீசன் புலம்ப சந்தானமும்' தலையில் கை வைத்துக் கொள்ள இருவருக்குமே உடம்பில் மெலிதான நடுக்கம்!

❖❖❖



புதிய அந்த படகு வீட்டுக்குள் ஒரு தமிழ்நாட்டுத் தம்பதி நுழைந்து கொண்டிருந்தது. நுழைந்த பத்தாவது நிமிடம் ஒரு சிறு படகு தங்கள் வசம் உள்ள கலைப் பொருட்கள் மற்றும் புடவைகளுடன் அவர்களை ஆக்ர மித்தது.

"சார்.. அவ்வளவும் டெட் சீப் சார்! போனா வராது சார். பாருங்க சார். அசந்துடுவீங்க..." என்றான் ஒருவன்.

"சார்.. இதைப் பாருங்க சார். இதெல்லாம் அக்மார்க் காஷ்மீர் சரக்கு சார்..." என்றான் இன்னொருவன்.

"நல்லா தமிழ் பேசறீங்களே... தமிழ்நாடா நீங்க..." - அவரும் கேட்டார்.

"இல்ல சார்... நாங்க காஷ்மீரி... தமிழ் நல்லா பேசுவோம்" - என்றவனைப் பார்த்து சிரித்தவர்

"உங்க பேரென்ன?" என்று கேட்டார்.

"என் பேர் சந்தானம். இவன் பேர் ஜெகதீசன்..."

-வாய்தவறி அவனும் உண்மையைச் சொல்ல அவர் சிரித்தார்.

ஆனால் அவர்கள் இருவர் முகத்திலும் அசடு வழிந்தது.

# 7. ஜெயிக்க முடியாது

சந்திரசேகரின் கார் கப்பல் கணக்காக கிளம்பிவிட்டது. மாசம் முன்னூறு கோடிக்கு ஏற்றுமதி செய்யும் தமிழ்நாட்டின் முதல் பத்து தொழிலதிபர்களில் ஒருவர் சந்திரசேகர். ஒவ்வொரு நிமிடமும் அவர் வரையில் கிட்டத்தட்ட பல லட்ச ரூபாய்க்கு சமம். எனவே பொறுப்போடு காரை செலுத்திக் கொண்டிருந்தான் அவரது டிரைவர் ராமசாமி.

எங்கே வேகமாகப் போக வேண்டும், எப்படிப் போகவேண்டும் என்பதெல்லாம் இருபது வருஷத்தில் அவன் கற்று வைத்திருக்கும் நுட்பமான விஷயங்கள்.



சந்திரசேகர் மாதிரி கோடீஸ்வர தொழிலதிபர்களுடன் பழகுவது என்பது நெருப்புடன் பழகுகிற மாதிரி. இத்தனை நாளில் சந்திரசேகரை வைத்து ராமசாமி தெரிந்து வைத்திருக்கும் விஷயங்கள் எவ்வளவோ. அதில் முக்கியமானது, எந்த ஒரு தொழிலதிபரும் அவர் பிடியில் அவரே இல்லை என்பதுதான். உருவத்தில் மட்டும்தான் அவர்கள் மனிதர்கள். மற்றபடி இருபத்திநாலு மணி நேரமும் ஏற்றுமதி இறக்குமதி, அங்கே மீட்டிங், இங்கே கான்ஃபரன்ஸ் என்று கரன்சி நோட்டுக்கான கவலையில் அகப்பட்டு விட்டவர்கள்தான் அவர்கள் என்பது ராமசாமியின் தீர்மானம்.

எப்பொழுதாவது சந்திரசேகரையும் ஒரு இயல்பான மனிதனாகவே பார்த்திருக்கிறான் ராமசாமி. அதில் ஒரு குறிப்பிடும்படியான தருணம், அடிக்கடி ஒரு ரயில்வேகேட் அருகே வெள்ளரிப் பிஞ்சு விற்கும் ஒரு கிழவி மூலம் கிட்டும்.

அன்றைக்கு காரில் போகும் போதும் கிட்டியது.

அவன் எதிர்பார்த்தது போலவே ரயில்வேகேட் போடப்பட்டு விட்டிருந்தது. காரும் கேட்டுக்கு முன் உள்ள புளியமர நிழலில் ஒதுங்கி நின்றது. சந்திரசேகரும் பர்சில் இருந்து ஒரு ஐம்பது ரூபாய் தாளை எடுத்துவிட்டார்.

ராமசாமி எதிர்பார்த்த மாதிரியே வெள்ளரிப் பிஞ்சு விற்கும் ஒரு கிழவி காரைப் பார்த்துவிட்டு ஓடிவந்தாள். காரின் கண்ணாடி சர்ரென்று இறங்க, சிரித்த முகத்துடன் அவளிடம் வெள்ளரிப் பிஞ்சை வாங்கிக்கொண்டு ஐம்பது ரூபாயை நீட்டினார் சந்திரசேகர்.

அவள் தந்த வெள்ளரிப் பிஞ்சுக்கு விலை இரண்டு ரூபாய்தான். அது கூட அதிகம். வழக்கம்போல அவள் மீதி சில்லரைக்கு தன் மடியைத் துழாவவும், சந்திரசேகர் தேவையில்லை என்று கையை உயர்த்தி தடுத்துவிடுவார்.

அடுத்த நொடி கண்ணாடி மேலேறும். அதில் கிழவி முகம்தான் தெரியும்.

சந்திரசேகர் இப்படி ஒரு இரக்கத்தை வேறு யாரிடமும் காட்டி ராமசாமி பார்த்ததே இல்லை. அவருக்கு எல்லாமே கணக்குதான். ராமசாமிக்கு தெரிந்து உணர்வு ரீதியாக அவர் நெருங்கும் ஒரே விஷயம் கூட இது மட்டும்தான்.

ஒவ்வொரு முறையும் இரண்டு ரூபாய் வெள்ளரிக்கு இப்படி ஐம்பது ரூபாய் தருவது எதனால் என்று கேட்கத் தோன்றும். ஆனால் அடக்கிக் கொள்வான்.

இன்று கேட்டுவிடுவது என்று முடிவு செய்து விட்டான்.

அதை அவனது பாணியில் கேட்கவும் செய்தான்.

"அந்த வெள்ளரிப் பிஞ்சு வாங்க விலை ஐம்பது நயாபைசா கூட கிடையாது சார்" என்றான் மெல்லிய குரலில்.

ரயில் இன்னும் கடந்திருக்கவில்லை.

"தெரியும் ராமசாமி. ஆனா அந்த அம்மாவைப் பார்க்கும்போது எனக்கு காலமாகிவிட்ட எங்கம்மாவைப் பார்க்கிற ஒரு திருப்தி... இரண்டு பேருக்கும் ஒரே ஜாடை"

- சந்திரசேகர் இப்படி அதிக வார்த்தைகள் பயன் படுத்திப் பேசியதும் அப்பொழுதுதான்.

ராமசாமிக்கு ஜிலீர் என்றது. அடுத்த நொடி இப்படி தாய்மை தொடர்பான ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் கூட மிகக் குறைவு என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது.

❖❖❖

**அ**ன்று ரயில்வேகேட் அருகே கார் நிற்கவும் வழக்கம் போல கிழவி ஓடிவந்தாள். கார் கண்ணாடி இறங்கியது. ராமசாமிதான் தெரிந்தான். உள்ளே சந்திரசேகர் இல்லை. கிழவி முகத்தில் ஏமாற்றம்.



"என்ன பாக்கறே... உன் மகன் இன்னிக்கு வரலை" என்றான் ராமசாமி. கிழவிக்கு கொஞ்சம் திக்கென்றது.

"நீ பாக்கறதுக்கு என் முதலாளியோட அம்மா மாதிரி, அவங்க ஜாடையிலேயே இருக்கியாம். அதான் உன்னைப் பார்த்துட்டா அவருக்கு ஒரு கரிசனம். இப்ப முதலாளிக்கு மஞ்சகாமாலை.. அதனால, பங்களாவுல பத்து நாள் ஒய்வுல இருக்காரு. எப்படியும் அவர் இப்படி கார்ல வர ஒரு மாசம் ஆகலாம்..." என்று அவன் சொல்ல வும் கிழவி முகம் இருண்டுவிட்டது.

❖❖❖

**கொ**டைக்கானல் பங்களா!

கிழவியை உள்ளே விடமுடியாது என்று செக்யூரிட்டி கார்டு தகராறு செய்வது, உள்ளே சந்திரசேகர் காதில் விழுந்தது. எட்டிப் பார்த்தார். கிழவியை பார்க்கவும் சிலீர்!

உள்ளே விடச் சொன்னார்.

கிழவியும் ஒரு பெரிய துணிப்பையுடன் உள்ளே நுழைந்தாள். அதில் ஒரு மண்கலயத்தில் ஆட்டுப்பால், கீழாநெல்லிச்சாறு!

"சாமி உனக்கு காமாலையாமே...? காமாலைக்கு இங்கிலீஷ் மருந்தெல்லாம் ஒத்துக்காது. ஆட்டுப்பாலும், கீழாநெல்லிச்சாறும்... இது எங்க ஊர் வைத்தியம். சாப்பிடு ராசா. இரண்டு நாள்தான் கணக்கு. நான் உன்னை ரயில்வே கேட்டாண்ட பாக்கணும்... பாக்கணும் என்ன பார்ப்பேன்... இன்னிக்கு காலையிலதான் உன் டிரைவர் விசயத்த சொன்னான். உடனேயே மருந்து வாங்கிட்டு என் ஆட்டுல ஒண்ண வித்து, பணத்தை வாங்கிக்கிட்டு ஒரு வாடகைக் கார் பிடிச்சு ஓடிவர்றேன்... என்ன பாக்கறே... முதல்ல மருந்த குடி..."

- கிழவி கலயத்தை கையில் பிடித்தபடி நீட்டினாள்.

"இல்லம்மா... டாக்டர் வரட்டும், அவர் பார்த்துக்குவார். உங்களுக்கு எதுக்கு சிரமம்? எதுக்கு ஆட்டை வித்தெல்லாம் பணம் வாங்கிட்டு இப்படி ஓடி வரணும். திஸ் ஈஸ் டூ மச்"

"என்ன சாமி... என்னை உன் தாயா நினைக்கறே நீ. எந்த தாய் மகனுக்கு காமாலைன்னும்போது எனக்கென்னன்னு இருப்பா?"

- அவருக்கு அவள் துடிப்புக்கு காரணம் விளங்கி விட்டது.

"யார் ராமசாமி சொன்னானா?" - என்று கேட்டவர், ஒரு ஐந்தாயிரம் ரூபாய் கட்டுடன் வந்தார். கிழவிமுன் நீட்டினார்.

"நான் எதையும் சும்மா வாங்கிக்க மாட்டேன், வாங்கிக்கவும் கூடாது..." என்றார்.

"இதெல்லாம் உன் காசுதான் சாமி. எத்தனை ஐம்பது ரூவா நோட்டைத் தந்திருப்ப நீ. மவன்கிட்டையே காசு வாங்கின பாவியா ஆக, நான் என்ன ஈரமில்லாதவளா..!"

- கிழவி கேட்க, சந்திரசேகருக்கு உச்சந்தலை நிலை வாசல்படியில் தட்டியது போல் இருந்தது.

முதல்முறையாக அவருக்கு ஒரு உண்மை உறைத்தது.

உலக வர்த்தகத்தில் எவ்வளவு கோடிகள் வேண்டுமானால் ஜெயிக்கலாம், ஆனால் தாய்மையை மட்டும் ஜெயிக்கவே முடியாது.



## 8. காதல் கயிறு

அசோக் அதிர்ந்து போனான்! குனிந்து, குனிந்து அவனது கைபேசியின் திரையில் குறுஞ் செய்தியைப் பார்த்தபடியும் இருந்தான்.

"ஸாரி அசோக்... உன்னை என்னால் மணக்க முடியாது. எனக்கு ஏற்றவன் பிரபாகர்தான்! ஒப்பந்தத்தை மதித்து விலகிவிடு. எங்களையும் நிம்மதியாய் இருக்க விடு. இனி நான் அனுஜா பிரபாகர்"

- என்கிற அந்த செய்தி அவன் இதயத்தை மசாலாவில் தோய்த்து எடுத்த மாமிசத்துண்டாய் பொரித்துக் கொண்டு இருந்தது.

அலுவலகத்தில் வேலையே பார்க்க முடியவில்லை!

விடுப்பு போட்டுவிட்டு 'பாரு'க்குப் போய் கொஞ்சம் தண்ணி போட்டால்தான் மனதை 'பேலன்ஸ்' பண்ண முடியும் என்று தோன்றியது.

புறப்பட்டுவிட்டான்.

அலுவலகத்தில் விடுப்புக்கு காரணம் கேட்டபோது, 'நான் செத்துட்டேன் சார்... அதான் லீவு போடுறேன்' என்று சொன்னதில் அவனது கோபம் புரிந்துவிட்டது.

அவருக்கும் தெரியும். அனுஜாவும், அவனும் கணவன் மனைவி போல ஒத்திகை வாழ்க்கை வாழ்ந்தது!

ஜில்லென்ற ஊர்தான் பெங்களூர். ஆனால், 'ஐ.டி. கம்பெனி'களின் உபயத்தில் மேற்கத்திய வாழ்க்கை முறை மிக சகஜமாகிவிட்டதில், அதிகம் அனலடித்துக் கிடக்கிறது.

எவ்வளவு வாடகை என்றாலும் இவர்களால் தர முடிவதால் நல்ல, நல்ல பங்களாக்களிலேயே மாடி 'போர்ஷன்'கள் கிடைக்கின்றன. பெண்களெல்லாம் நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் சம்பாதிப்பதால் இந்த பெண் பார்க்கும் சடங்குகளும் அப்பட்டமாக மாறிவிட்டது.

காப்பி கொண்டு வந்து கொடுத்துவிட்டு பாடுவது, ஆடுவது எல்லாம் ஹைதர் கால சம்பிரதாயம்.

'பழகுவோம்... மனதுக்குப் பிடித்தால் கல்யாணம் - இல்லாவிட்டால் 'டாட்டா' என்பதுதான் இப்போதைய கல்யாண வாழ்க்கை சித்தாந்தம்.

அப்படிச் சொல்லித்தான் அனுஜா, அசோக்குடன் பழகி வந்தாள். எல்லாம் சரியாகத்தான் போய்க்கொண்டு இருந்தது.

அசோக்கிடம் சில பிரத்தியேக தன்மைகள் உண்டு. வீட்டில் இருக்கும்போது உள்ளாடை போடமாட்டான்.



அவன் வரையில் அது ஒரு சிறை. அதேபோல பல் துலக்காமல் காப்பி குடிப்பான். அது அவனுக்கான சுதந்திரம். இந்த 'குட்மார்னிங்' சொல்வது- 'சவுக்கியமா?' என்று கேட்பது எல்லாம் செயற்கையானவை - ஒரு சின்ன சிரிப்பு போதும் என்பான்.

ஆனால், இதை எல்லாம் அனுஜாவுக்காக மாற்றிக் கொண்டான். ஆனாலும், அவனது வியர்வை நாற்றம், முகத்தை மூடிக்கொண்டு தூங்குவது என்று சில விஷயங்களை அகற்றிவிட முடியவில்லை. அது அவளை உறுத்திற்று. தூங்கப் போகும்போதுகூட குளித்துவிட்டு வர வேண்டும் அவளுக்கு-

அடுத்து அனுஜா எம்.பி.ஏ. படிக்க முனைந்ததை அவன் ஊக்கப்படுத்தவில்லை. அவள் படித்து முடித்தால், அலுவலகத்தில் பதவி உயர்வு வாங்கிவிடுவாள். 'யூனிட் எம்டி.' ஒரு ஜொள்ளு ரகம். அவரிடம் சிரித்துப் பேசியே 'யூனிட் ஹெட்' டாகக்கூட ஆகிவிட அவளுக்கு வாய்ப்பு அதிகம்.

இந்தப் பதவி இன்னும் இருபது ஆண்டானாலும் அசோக்குக்கு கிடையாது என்றுதான் கூற வேண்டும். அதனால் அனுஜா படிக்க நினைத்தபோது, "வேண்டாம் டார்லிங்... நீ என் குடும்ப மகாராணியா 'ஹாயா' வீட்ல இருக்கணும். நான் உன்னை சந்தோஷமா வெச்சுக்கணும். அதான் என் லட்சியம்" என்று அவன் கூறியதை அவளும் புரிந்துகொண்டாள்.

'அப்ப நான் அடுப்படியில கிடக்கணும். வாழ்க்கையில மேல மட்டும் போயிடக்கூடாது... அப்படித்தானே?' என்று திருப்பிக்கேட்டு, அவனது ஆணாதிக்கத்தை உடைத்தாள். பார்த்துக்கொண்டே இருந்த பிரபாகர், இங்கேதான் அவள் வரையில் 'சிக்சர்' அடித்து விட்டான்.

"அனும்மா... நீ படி - எவ்வளவு மேல போகணுமோ அவ்வளவு மேல போ. ஒரு குடும்பத்துல எப்பவும் பொம்பளதான் சமைக்கணுமா? அவதான் கடைக்கு போய்

சாமான் வாங்கிட்டு வர்றது - 'கரண்ட் பில்' கட்ட வரிசையில நின்னு கஷ்டப்படுறதா?

இதை உடைக்க விரும்பறேன். நான் வீட்டை பார்த்துக்கிறேன். நீ படி. உன் மாதிரி புதுமைப் பெண்கள் சேலையை துவைச்சுப் போடுறேன். காலகாலமா உங்களை அதாவது உங்க இனத்தை அடிமையாவே வெச்சிருந்த துக்கு சின்ன பரிகாரத்தை என் வரைல தேடுறேன்" என்று அவன் கொடுத்த விரிவுரை நன்றாகவே வேலை செய்தது.

அனுஜாவும் தீர்மானமாய் அசோக்குக்கு 'எஸ்.எம்.எஸ்.' கொடுத்துவிட்டாள்!

அதிக மது அடித்தும் போதையே இல்லை. எதிரிலேயே அனுஜா அமர்ந்து அவனைப் பார்த்து மூக்கின் மேல் விரல் வைத்து பழிப்பது போல பிரமை தட்டியது. அப்போது பார்த்து பிரபாகரிடம் இருந்தும் அழைப்பு வந்தது.

"என்ன.... 'எஸ்.எம்.எஸ்.' வந்துச்சா?"

"........."

"என்ன பேச முடியலியா? நீயெல்லாம் சந்தடி சாக்குல 'ஐ.டி. கம்பெனி'க்குள்ள நுழைஞ்சிட்டவன். ஆனா, ஒரு துணிக்கடை 'கிளார்க்'கோட தரம்தான் உன்னது. அனு மாதிரியான பெண்கள் எல்லாம் குதிரைங்க மாதிரி. நான் ஒரு நல்ல 'ஜாக்கி'. உன்னை மாதிரி 'ஜோக்கர்' இல்லை.

கவலையேபடாதே.... உனக்குன்னு ஒரு அம்புஜமோ- பங்கஜமோ கிடைக்காமலா போயிடப் போறா?"

- என்று கேட்டு உசுப்பேற்றியதில், குடித்துக்கொண்டு இருந்த கண்ணாடி தம்ளர் கைநழுவியது. உடைந்து சிதறியது.

"ஸாரி சார். நீங்க புறப்படுங்க...." என்றார் 'பேரர்'.



தள்ளாடியபடியே கிளம்பினான். எப்படியோ ஆட்டோ பிடித்து, வீடு வந்து சேர்ந்தான். மனக் கசகசப்பு குறையவே இல்லை.

முகம் கழுவச் சென்றபோது, அனுஜாவின் 'டூத் பிரஷில்' இருந்து அவளது பிரத்தியேக ரக பொருட்கள் கண்ணில்பட்டு எரிச்சல் மூட்டின.

எல்லாவற்றையும் எடுத்துச் சென்றவள், இவைகளை மறந்து விட்டிருக்கக்கூடும்!

அவைகளைப் பார்க்க பார்க்க ஆத்திரம்தான் வந்தது.

ஆனால், முன் அறையில் இருக்கும் குபேரர் சிலை முன்னால் சில ஆயிரம் ரூபாய்களோடு ஒரு குறிப்பு இருந்து- அவனை கலங்கடித்துவிட்டது.

'நீ எனக்கு செய்த செலவை, கணக்குப் போட்டு வட்டியோடு இங்கே வைத்துள்ளேன். உன்னிடம் கடன்பட நான் விரும்பவில்லை' என்று எழுதி அதிலும் அனுஜா பிரபாகர் என்றே கையெழுத்து போட்டிருந்தாள்.

அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அவனால்....

'லேப்-டாப்'பை திறந்தான். மின்னஞ்சலுக்குள் நுழைந்தான். நிறுவன உயர் அதிகாரிக்கு, தனது ராஜினாமாவை கடிதமாய் தட்டி முடித்து, அனுப்பியும் வைத்தான்.

அப்படியே அண்ணாந்து விட்டத்தைப் பார்த்தான்.

'தொங்கிவிடுவது மேல்' என்று தோன்றியது.

அனுஜா கிடைக்காததுகூட வருத்தமில்லை. தன்னை ஒரு ஆணாக - மனிதனாக அவளும் சரி, அந்த பிரபாகரும் சரி... உணராததும் - ஊசி போல குத்திப் பேசியதும் ரணமாக்கி இருந்தது அவன் மனதை. அதோடு நரித் தனமாக பேசி பிரபாகர் அவளைத் தட்டிக்கொண்டு போனதும், அந்த சாதுரியம் தன்னிடம் இல்லாமல் போய்விட்டதும் மனதைப் பிசைந்துகொண்டே இருந்தது.

இந்த மாதிரி தருணங்களில் மனதை அடக்கி, அதை வேறுவிதமாய் செலுத்த நிறையவே திராணி வேண்டும். அடிப்படையிலேயே தாழ்வு மனப்பான்மை மிகுந்த அசோக்கிடம் 'அது' இல்லாததால், தூக்கில் தொங்கிவிட மனது தயாராகிவிட்டது.

அதற்கான ஆயுதத்தைத் தேடியபோது, மொட்டை மாடியில் துணி காயப் போட பயன்படுத்தும் கயிறுதான் நினைவில் வந்தது. அதை எடுத்து வருவதற்காக மேலே சென்றவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

அதை வீட்டுக்காரரின் மகள் கீர்த்தனா அவிழ்த்துக் கொண்டு இருந்தாள். அவள் முகத்தில் அழுத சுவடுகள். 'உங்களக்கு எதுக்கு கயிறு?' என்று கேட்பதற்குள், துப்பட்டாவில் மறைத்துக்கொண்டு வேகமாக அங்கிருந்து விலகிவிட்டாள்.

அசோக் மனசுக்குள் ஒரு எச்சரிக்கை பறவை அலறியது. வேகமாய் அவளைப் பின்தொடர்ந்தான். அவள் கீழே இறங்கி, தரைத் தளத்தில் உள்ள அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாழ்போட்டாள். அதில் ஒரு வேகம்... அவசரம்!

அசோக் வந்து பார்ப்பதற்குள் உள்ளே போய் விட்டாள். கீழே வீட்டில் அவள் அப்பா-அம்மா என்று யாரும் இல்லாததை 'போர்ட்டிகோ'வில் கார் இல்லாதது ஊர்ஜிதம் செய்தது.

அசோக்கை பரபரப்பு தொற்றிக்கொண்டது.

பின்பக்க கொல்லைப்புற கதவு, நினைவுக்கு வந்தது.

பக்கவாட்டு வழியாக சென்றான்.

நல்ல வேளை... அது திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்தான். அவன் பயந்தது சரிதான்!

கீர்த்தனா, மின்விசிறியில் கயிறை மாட்டி தொங்க தயாராகிக்கொண்டு இருந்தாள்.



"ஐயோ..." அலறியபடியே ஓடிப் போய் தாங்கிப் பிடித்து விடுவித்தான்.

"என்ன இது பைத்தியக்காரத்தனம்?" - என்றும் கேட்டான். அவனது தற்கொலை எண்ணம் எல்லாமே அவனைவிட்டு எங்கோ போய்விட்டிருந்தது.

அவள் விசும்பி, விசும்பி அழுதபடியே தனது காதல் தோல்வியைச் சொல்லி அழுதாள்.

"அந்த துரோகி என்னை ஏமாத்திட்டு, இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிக்கிறான். கேட்டா... நான் அதிகம் படிக்கலையாம். வேலைக்கும் போகலையாம். ஏன் இது, காதலிக்கும்போது அவனுக்கு தெரியலையா?"

- வெட்டி வெட்டி அழுதபடி கேட்டாள்.

"கீர்த்தனா... வேலைக்கெல்லாம் போக வேண்டாம்னு சொல்லி, நான் என் அனுவை இழந்தேன். நீ போகாததால் உன் காதலை இழந்திருக்கே! நானும் தற்கொலை பண்ணிக்கிற எண்ணத்துலதான் கயிறுக்காக மாடிக்கு வந்தேன். இது என் வாழ்க்கையை முடிச்சு வைக்கப் போகுதுன்னு நினைச்சா, உன்னோடு சேர்த்து வெச்சிருக்கு.

'அல்ஜிப்ரா' கணக்குப்படி 'மைனசும்', 'மைனசும்' 'பிளஸ்'ன்னு உனக்கும் தெரியும். இங்க எப்படி?" - மிக நேராக ஜிலேபி எல்லாம் சுற்றாமல் கேட்டுவிட்டான்.

அவளிடம் லேசான திகைப்பு. சிறிது நேரம் மவுனமாய் வெறித்தவள்,

"எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்க அசோக்" என்றாள்.

"தாராளமா அவகாசம் எடுத்துக்க. எனக்கென்னவோ அவங்க எதிர்ல, நாம வாழ ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிற மாதிரி தெரியுது. யோசி" என்றபடி மின்விசிறி கயிற்றை அவிழ்த்தான்.

"பிளீஸ்... எங்க அப்பா-அம்மாவுக்கு இது தெரிய வேண்டாம்" என்றாள் அவள்.

ஆமோதிப்போடு மவுனமாக கிளம்பினான்.

"அதை மாடியிலேயே கட்டிடுங்க" என்றவன், "அது தூக்குக் கயிறோ காலன் கயிறோ இல்ல... நம்ம ரெண்டு பேரையும் வாழ்க்கையில் சேர்த்துவிட்ட காதல் கயிறு" என்றபடி சிரித்தாள்.

அவன் முகத்திலும் மலர்ச்சி!



# 9. தாய்க்கோழி

மேஜை மேல் கிடந்த கைபேசி 'இது ஒரு பொன் மாலைப் பொழுது...' என்கிற வைர முத்துவின் பாடல் வரிகளை கசிய விடவும், ஓடிவந்து எடுத்தாள் ராதா.

திரையில் செல்வன் என்கிற அவள் கணவன் பெயர் தெரியவும், "நினைச் சேன்... அவராத்தான் இருக்கணும்னு..." என்றபடியே காதைக் கொடுத்தாள்.

"என்ன ராதா, எப்ப கிளம்பப் போறே?" - டெல்லியிலிருந்து நலமா என்றுகூட கேட்காமல் அவளது வரு கையைக் குறிவைத்து அவன் கேள்வி கேட்டது அவளை சற்று சீறச் செய்தது.

"ஏங்க, 'எப்படி இருக்கே'னு ஒரு வார்த்தை கேட்டுட்டு அப்புறமா 'எப்ப கிளம்பப் போறே'னு கேட்கக்கூடாதா? நான் என்ன இங்க சீராடறதுக்கா வந்துருக்கேன்? அப்பா கால் ஒடிஞ்சு போய் படுத்திருக்காருங்க..."

"இதையே எத்தனை தடவை சொல்வே? நீ கிளம்பி இன்னியோட 24 நாட்களாச்சு. இங்க நான் நாக்கு செத்துப்போய் கிடக்கறேன். என்னையும் கொஞ்சம் யோசிடி..."

"என்னத்த யோசிக்கறது...? அதான் கல்யாணமாகி ஏழு வருஷங்களா யோசிச்சுகிட்டே இருக்கேனே..."

"இழுக்காம வேகமா புறப்பட்டு வர்ற வழிய பார். அப்புறம் ப்ரியா எப்படி இருக்கா?"

"ஏங்க, என் 'அப்பா எப்படி இருக்கார்'னு ஒரு வார்த்தை கேட்க மாட்டீங்களா? உங்க ரத்தம்கறதால உங்க மகளைப்பத்தி மட்டும்தான் கேப்பீங்களா?"

"சரி கேக்கறேன். என் அருமை மாமனார் எப்படி இருக்கர்?"

"இதுக்கு நீங்க கேக்காமலே இருந்திருக்கலாம். அப்பா பாத்ரூம்ல இருக்கார். அவரை பக்குவமா படுக்கை கொண்டுகிட்டு வந்து படுக்க வைக்கணும். நீங்க போனை வைங்க. அப்புறமா கூப்பிடறேன்..."

ராதா பேச்சை கத்தரித்துவிட்டு பாத்ரூம் நோக்கி நடந்தாள். அங்கு சுந்தரம் மாவுக்கட்டு போட்ட காலுக்கு மேல் பாலிதீன் கவரை கொச கொச என்று சுற்றிக் கொண்டு உடம்பின் அரை பாகம் மட்டுமே நனையும்படி பெயருக்கு குளித்துக்கொண்டிருந்தார்.

ராதாவுக்கு கண்ணீர் முட்டியது. அடக்கியபடி நுழைந்தாள். நன்றாக முதுகுக்கு சோப்பு போட்டு அவருக்கு ஒத்தாசை புரியத் தொடங்கினாள்.



"யாரும்மா போன்ல? மாப்ளயா...? பாவம் நீ இல்லாம ரொம்ப கஷ்டப்படறார் போல இருக்கு..."

"ஆமா, பெரிய கஷ்டம்! இங்க நீங்க இருக்கற இருப்பே தெரியாம பேசறாருப்பா. 'எப்ப கிளம்பி வரே... எப்ப கிளம்பி வரே'னு எப்பப் பார் ஒரே பல்லவி..."

"நீ என்னம்மா சொன்னே?"

"நான் எதுவும் சொல்லல. உங்க கால் சரியாகாம நான் போகக் போறதில்ல. அது ஆறு மாசமானாலும் சரி..."

"என்னம்மா நீ... எனக்காக மாப்ளயை தவிக்க விடாதம்மா. நீ இவ்வளவு நாள் பண்ணதே பெருசு. கிளம்பும்மா..."

"சும்மா இருங்கப்பா. நீங்க அவருக்கு மேல இருக்கீங்க... டெல்லில வந்து எங்ககூட இருங்கன்னா கேக்கறீங்களா?"

"வரலாம்மா... வந்தா, உபயோகமா இருக்கணும். இப்படி ஒரு நோயாளியா வந்து பாராமல்லாம் இருக்கக் கூடாது. உனக்கு சொன்னா புரியாது. நீ புறப்படற வழிய பார்..."

ஒரு கையால் டவலை எடுத்தபடியே சுந்தரத்தை வெறித்தாள் ராதா. அந்த வெறிப்பில் ஆயிரம் கேள்விகள்.

"என்னம்மா, அப்படி பாக்கறே?"

"இல்ல, நான் போய்ட்டா இங்க உங்கள யாருப்பா பார்த்துப்பாங்க? அம்மான்னு ஒருத்தி இருந்தா, அவ இருக்காங்கற தைரியத்துல போகலாம். அவங்களதான் நான் பொறக்கும்போதே விழுங்கிட்டனே?"

"அநாவசியமா கவலைப்படாத. இங்க தாம்பரம் பக்கத்துல ஒரு முதியோர் இல்லம் இருக்கு. என் சிநேகிதன் வரதராஜன் இப்ப அங்கதான் இருக்கான். நல்லா

பாத்துக்கறாங்களாம். மாசம் நாலாயிரம்தான்... ஏ.சி ரூம் வேணும்னா கூட ஒரு ஆயிரம். மூணு வேளை சாப்பாடு, தியானம், பஜனைன்னு அமக்களமா இருக்காம்மா..."

சுந்தரம் ஒரு செயற்கையான உற்சாகத்தோடு பேசுவது அவளுக்கு புரிந்தது.

"சும்மா இருங்கப்பா... நான் உயிரோட இருக்கறவரை உங்கள முதியோர் இல்லத்துக்கெல்லாம் அனுப்ப மாட்டேன்..."

அவள் குரலில் உறுதி தெரிந்தது. அப்போது ஒரு பந்தை தூக்கிப் போட்டபடியே அவளது மூன்று வயது மகள் ப்ரியா ஓடிவந்தாள்.

"தாத்தா..." என்று அவரது ஈர மார்பின்மேல் விழுந்தாள். அவரும் அப்படியே அணைத்துக் கொண்டார். "ஐய்யோ ஜில்லுன்னு இருக்கு..." என்றாள் ப்ரியாவும் தன் மழலைக்குரலில். அவர் முத்தமிடவும் கூச்சம் தாளாமல் குலுங்கிக் குலுங்கி சிரித்தாள்.

'அந்த அநாதை இல்லத்தில் இதெல்லாம் கிடைக்குமா?' கேள்வியோடு விலகிப்போய் சமைக்க ஆரம்பித்தாள் ராதா.

இரவு ஒன்பது மணி இருக்கும். திரும்பவும் அழைத்தான் செல்வன்.

"என்ன டிக்கட் ரிசர்வ் பண்ணிட்டியா?"

"இல்ல..."

"இல்லையா...? போன் பண்ணிக்கிட்டே இருக்கர நான் என்ன கிறுக்கனா?"

"தெரியாது..."

"ராதா..! நீ என் பொறுமையை சோதிக்கறே..."

"நீங்க என் பாசத்தையே இல்ல சோதிக்கிறீங்க?"



"முடிவா என்ன சொல்றே?"

"அப்பா நம்மகூட டெல்லிக்கு வரமாட்டார். நான் கட்டாயப்படுத்தி கூட்டிக்கிட்டு வந்தாலும் நீங்க அவரை மரியாதையா பாக்கமாட்டீங்க. அவருக்கு இப்ப ஒரு துணை ரொம்ப அவசியம்..."

"எதுக்கு இப்படி ஜிலேபி பிளியறே? வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு ஒரு பதிலை சொல்லு"

"என்னால இப்போதைக்கு வரமுடியாது. வேணும்னா நீங்க சென்னைக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டு வாங்க. அதுதான் சரியான தீர்வு..."

"உன் அப்பாவுக்காக நான் டிரான்ஸ்பர் வாங்கணுமா? நல்லா இருக்குடி உன் நியாயம்...? நான் தப்பு பண்ணிட்டேன்டி. பெண்ண மட்டுமே பெத்துட்ட மாமனார்களைப் பத்தி நான் கல்யாணத்துக்கு முந்தியே யோசிக்க தவறிட்டேன்..."

"யோசிச்சா என்ன செய்திருப்பீங்க?"

"என்ன... உன்ன திரும்பிக்கூட பார்த்திருக்க மாட்டேன்!"

"இப்பகூட நீங்க அப்படி இருக்க விரும்பினா இருந்துக்கலாம்..."

"என்னடி, 'ஒரு குழந்தையை பெத்துட்டோம். இவன் அவ்வளவு தூரம்லாம் போக மாட்டான்'கற எண்ணத்துல பேசறியா?"

"நிச்சயமா இல்ல. என் அப்பாவை உங்க அப்பாவா நினைச்சு இந்த இக்கட்டான தருணத்துல அவருக்கு பக்கபலமா இருக்கறதபத்தி யோசிக்காத உங்ககூட நான் வாழறதவிட, வாழாம போறது எவ்வளவோ மேல். இங்க இவரை முதியோர் இல்லத்துலயும், அநாதை விடுதிலயும் சேர்த்துட்டு நான் மட்டும் வாழ்ந்து எதை கண்டுடப் போறேன்?"

"அப்போ...?"

"டைவர்ஸ் பேப்பரை அனுப்பி வைங்க. கையெழுத்து போட்டு அனுப்பி வைக்கறேன். ஜீவனாம்சமெல்லாம் கேக்கமாட்டேன். பயப்படவேண்டாம்..."

"ஓஹோ பெரிய புரட்சிப் பெண்மணின்னு நினைப்போ?!"

"நான் எப்படி நினைச்சுகிட்டா உங்களுக்கு என்ன?"

போனை துண்டித்தாள். கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. துடைத்து விட்டு எழுந்தாள். கட்டிலில் சுந்தரம் படுத்திருக்க, அவர் மார்புமேல் ப்ரியா அப்படியே சரிந்த நிலையில் தூங்கியிருந்தாள்.

அந்தக் காட்சியை பார்க்கவே ஆனந்தமாக இருந்தது.

குழந்தையை மெல்ல அவர் உணராதபடி தொட்டுத் தூக்கியவளாக பெட்ரூம் நோக்கி சென்றாள். அவள் விலகிய நொடி மளுக்கென்று கண் விழித்த சுந்தரம், தனது தலையணை அடியிலிருந்த செல்போனை எடுத்து செல்வனை அழைத்தார்.

"மாப்ள... ராதாகூட நீங்க பேசிக்கிட்டிருந்ததை எல்லாம் நான் கேட்டுக்கிட்டுதான்..."

"ஓஹோ... அவ ரவுண்டு முடிஞ்சு போச்சு. இப்ப உங்க ரவுண்டு ஆரம்பமா?"

"இல்ல மாப்ள. என் ரவுண்டு இப்ப முடியப் போகுது. ராதாவுக்கு அம்மாவோட அன்பு கிடைக்கலை. அப்பாவோட அரவணைப்புல மட்டும்தான் வாழ்ந்தா. இப்ப என் பேத்திக்கும் அதேமாதிரியான ஒரு நிலமை வந்துடக் கூடாது. அப்பா இல்லாம, அம்மா மட்டும்தாங்கற ஒரு துரதிர்ஷ்டமான நிலை வேண்டாம்னு நினைக்கறேன். அதனால் நான் கிளம்பிட்டேன் மாப்ள. ஆமா... ஆழ்ந்த தூக்கத்துக்கு டாக்டர் கொடுத்த காம்போஸ்ல ஒரு முப்பது மாத்திரைகளை இப்பதான் விழுங்கி முடிச்சேன்.



காலைல ராதா என்னை எழுப்ப வர்றப்ப நான் இந்த உலகத்த விட்டே போயிட்டேன்னு புரிஞ்சிப்பா. நீங்க இப்பவே கிளம்பினா சரியா இருக்கும். நான் என் காரியத்துக்கு உங்கள கூப்பிடலை மாப்ள... வந்து உங்க பொண்டாட்டி புள்ளையை கூட்டிக்கிட்டுப் போங்க. அதுக்காகத்தான் கூப்பிடறேன். எனக்காக அவளை மன்னிச்சிடுங்க. போயிட்டு வரேன் மாப்ள..."

சுந்தரம் போனை துண்டிக்கவும், அவரது கண்கள் செருகவும் சரியாக இருந்தது.

அந்தப்பக்கத்தில் செல்வனுக்கு பின் பிடரி மேலே யாரோ மாறிமாறி அடிப்பதுபோல் இருந்தது.



## 10. குப்பைகள்

வீடு கூட்டத் தொடங்கியிருந் தாள் சாரதா!

நல்ல பெரிய வீடு... ஐம்பது வருடங் களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்த வீடு. அந்த நாளில் புள்ளிவைத்த மொசைக் தரைதான் பிரபலம்... எனவே வீடு முழுக் கவும் ஒன்றுபோல மொசைக் தரைதான்! அதைப் பார்க்கும் போதெல்லாம் சாரதாவுக்கு கோபம் வரும்.

இன்று மார்பிள்ஸ், டைல்ஸ் என்று காலம் எங்கேயோ போய்விட்டது. சாரதாவின் உறவினர்கள், சினேகிதர்கள் என்று இன்று உள்ள அத்தனை பேர் வீடுகளிலும் மார்பிள் தரைதான்! அதைப் பராமரிப்பது கூட வெகுசுலபம் என்று அவர்கள் சொல்லும்போது



சாரதாவுக்குள் மண்டை உச்சியில் ஒரு காபி டம்ளரின் சூடு அளவுக்கு சூடு ஏறும்.

சாரதாவின் கணவன் விஸ்வநாதனுக்கு பேங்க்கில் தான் உத்யோகம். முப்பது வருட சர்வீஸ் முடியப் போகிறது. இப்போது தான் தக்கி முக்கி ஒரு கிளைக்கு மேனேஜர் ஆகியிருக்கிறான்.

தனது குட்டையும் கோபத்தையும் விஸ்வநாதனிடம் தான் காட்டுவாள்.

“இந்த மொசைக் தரையை இடிச்சு தள்ளிட்டு ராஜஸ்தான் மார்பிளைப் போடுங்கன்னு நான் எத்தனை தடவை சொல்லியிருப்பேன். உங்களுக்கே கண்றாவியா இல்லை? கேட்டா அப்பா கட்டின வீடு... மாத்தக் கூடாதுன்னு சென்டிமென்ட் பேச வேண்டியது. அந்த கிழமும் தானும் மாறாம நம்பளையும் மாறவிடமாட்டேங்குது” என்பாள். விஸ்வநாதன் பதிலுக்கு அசமந்தமாக ஒரு பார்வை மட்டும் பார்ப்பார். ஆனால், அவர்கள் பிள்ளை வாசு அப்படி எல்லாம் பார்க்கமாட்டான். அதிர்வாகவே பேசுவான்.

“நீ என்னம்மா தரையை மாத்துங்கறே... இந்த வீடே இப்ப ஒரு பழைய பிஸ்கட் டப்பாம்மா! மொத்தமா வீட்டையே இடிச்சுட்டு அழகா ஒரு அபார்ட்மென்ட் கட்டினா ஒரு வீட்டுக்கு ஒன்பது வீடு கட்டலாம், வாடகையும் வரும்...” என்று ஒரு ஆசைக்கனவையும் கண்ணில் காட்டுவான்.

“அப்புறம் என்னடா நீயாவது அதைப் பண்ணு. எந்த ஒரு நல்லது கெட்டதுக்கும் யாரையும் கூப்பிட முடியலை. வர்றவங்க முதல்ல கேக்கற கேள்வியே இந்த வீட்லயா இன்னும் இருக்கேங்கறது தான்... அதுலயும் லேடீஸ் கிளப் செக்ரட்ரி மைதிலி சாரநாத்துக்கு இந்த வீட்டுக்குள்ள வந்தாலே முகம் மாறிடும். நான் என்னமோ ஜெயிலுக் குள்ள இருக்கற மாதிரியே என்னைப் பார்ப்பா...” என்பாள்.

அதெல்லாமே விளக்குமாற்றை எடுத்து கூட்டத் தொடங்கவும் நினைவுக்குள் வருகின்றன. இரண்டு நாட்களாகவே வேலைக்காரி தாயம்மாள் வேறு வேலைக்கு வரவில்லை. மாசம் முப்பது நாளில் எப்படியும் ஒருவாரம் பத்துநாள் தாயம்மாள் மட்டம் போட்டு விடுகிறாள்.

'திருவள்ளூருக்கு அப்பால கன்னிகைப்பேர்ல என்மச்சாண்டார் மவ வயசுக்கு வந்துட்டா - என்னை இன்னா பண்ணச் சொல்றே. நான் தான் இல்லாத்துக்கும் போவணும். நாளைக்கு நல்லது கெட்டதுன்னா மனுசங்க வேணுமில்ல?..."

- என்று அவளுக்கென்று லீவுக்காக அகப்படும் காரணங்களில் அப்படி ஒரு அழுத்தமுமிருக்கும்.

'அதெல்லாம் எனக்கு தெரியாது... ஒழுங்கா வரதா இருந்தா வா - இல்லாட்டி அப்படியே போயிடு...' என்று சொல்லும் தைரியமெல்லாம் ஒரு பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரையில் இருந்தது. இப்போது அப்படிச் சொன்னால் தாயம்மாளும் டாடா காட்டி விட்டு போய்க் கொண்டே இருப்பாள். அதன் பிறகு ஒரு சீதம்மாவையும், அங்கம்மாவையும் தான் தேட வேண்டும்.

எனவே தலையெழுத்தே என்று வேலைக்காரி வராத நாளில் சாரதாவே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. இதில் அந்த வீட்டில் இரண்டு கிழடுகள் வேறு! விஸ்வநாதனின் அப்பாவான ராமரத்னமும் அம்மாவான ஜானகியும்தான் அந்தக் கிழடுகள்.

ராமரத்னத்துக்கு தொண்ணூறு வயதாகிறது. ஜானகிக்கு எண்பத்தைந்து வயது... சதாபிஷேகம் எல்லாம் செய்தாகிவிட்டது. முதுமைக்கே உண்டான தள்ளாமை, ஜலதோஷம், கண்பார்வை மங்கல் - 'இவை மூன்றும்தான் அவரது வியாதிகள்.

நான்காவதாக ஒரு மனோவியாதியில் இப்போது அவர்கள் இருவருமே சிக்கியுள்ளனர். அதுதான் மரணம் குறித்த மனப்பதட்டம்.



'தங்களுக்கு மரணம் எப்போது வரும்? அப்படி வந்தால் யாருக்கு முதலில் வரும்?' - இதுதான் அவர்களின் இன்றைய பிரதான கேள்வியே...

அவர்களின் இந்தப் பதட்டத்தை சாரதாவும் உணர்ந்திருந்தாள். யாராக இருந்தாலும் முதுமை அவர்களை ஒரு ஆட்டு ஆட்டி விடுகிறது. எய்ட்ஸ், பிளட் கான்சரை விட கொடிய வியாதி முதுமை தான் என்பது ராமரத்னத்தின் கருத்து! அதனால் அன்றாடம் ஏற்படும் பாதிப்புகளும் கொஞ்ச நஞ்சமல்ல. சாரதாவோ வேலைக்காரியோ வீட்டை கூட்டியபடி வரும்போது அவர்கள் படுத்திருக்கும் கட்டில் பக்கமும் வந்து தானே தீரும்?

கட்டிலுக்கு கீழே மாத்திரை எடுத்த காலி உறைகள், ஆரஞ்சு பழத்தோல் என்று குப்பைக்கு பஞ்சமிருக்காது. கூடவே அந்த இடத்தில் ஒரு கசட்டு நாற்றம் இருக்கும். வருடக்கணக்காய் துவைத்திராத பெட்ஸ்ப்ரெட் மற்றும் தலையணைகளின் உபயம் அது.

இதெல்லாம் தாயம்மாளை அந்த இடத்தில் ஓட வைத்துவிடும். கிழடுகள் உள்ள அறை என்றாலே அங்கே பெரிதாக வெளிச்சமும் இல்லாதபடி அவர்களைப் போட்டு விடுவதுதானே இன்றைய வழக்கம்?

ராமரத்னமும் ஜானகியும் கூட இருளில் தான் கிடந்தார்கள். கூட்டிக் கொண்டே வந்த சாரதா அறை விளக்கைப் போட்டாள். எல்லா இடங்களிலும் ட்யூப் லைட் அங்கே மட்டும் குண்டு கோலி பல்ப்.

வெளிச்சம் படவும் புரண்டு படுத்த ராமரத்னமும் எழுந்து அமர்ந்தார். தரையில் விளக்குமாறு படும் சப்தம் லேசாக காதில் விழவும் தாயம்மாள் தான் வந்திருப்பதாக நினைத்துக்கொண்டு, "தாயம்மா... கட்டிலுக்கு அடியில எல்லாம் நீ சரியா கூட்டமாட்டேங்கறே. பாத்துக்கூட்டு" என்றார்.

"இன்னிக்கு நான்தான் தாயம்மா. மகாராணியார் வேலைக்கு வரலை..." - என்ற ஒரு வேகமான பதில் சாரதாவிடம்.

"ஓ சாரதாவா...? நான் அவதானோன்னு நினைச்சேன்..." என்றார் அவரும். அப்படி அவர் சொல்லும்போது குரலில் ஒரு கரகரப்பு.. தொண்டை முழுக்க சளி இருக்கும் போது சப்தம் எழும்பினால் அது அப்படித்தான் இருக்கும்.

சாரதாவும் அதை காதில் வாங்கியபடியே அவரது கட்டிலுக்கு கீழே குருட்டாம் போக்காக விளக்குமாற்றை இப்படியும் அப்படியும் வீசினாள்.

கன்னாபின்னாவென்று குப்பைகள் சரசரவென்று வெளிப்பட்டன. பலநாள் குப்பைகள். அதில் ஒரு கிருஷ்ணா ஸ்வீட்ஸின் மிக்சர் பொட்டல காகிதமும் இருந்தது. பத்து பதினைந்து நாளுக்கு முன் வந்த உறவினர் ஒருவர் வரும் போது வாங்கி வந்தது. மிக்சர் பொட்டலமோ இல்லை எதுவோ காகிதம் என்றால் கசக்கி அதை பந்து உருண்டையாக்கிவிடும் நம் கற்கால வழக்கத்திடம் மட்டும் மாற்றமில்லை.

அந்த வகையில் நிறைய காகிதப் பந்துகள். சாரதா வரையில் அந்தக் குப்பைகள் கூட பெரிதாக பாதிக்கவில்லை. தாயம்மாள் அந்த அறையை கூட்டாமலே ஒப்பேத்தியதுதான் சுர்ரென்று தாக்கியது.

"தட்டுவாணி... தட்டுவாணி... ஒண்ணாம் தேதி சம்பளத்தை முப்பதாம் தேதியே கேட்டு வாங்கிக்க தெரியறது. ஆனா பாக்கற வேலையை ஒழுங்கா பாக்கணும்கற துப்பு மட்டும் சுத்தமா கிடையாது..." என்று வாய்விட்டு முணுமுணுத்தாள்.

"நானும் சொல்லாத நாளில்ல சாரதா... அவ கேக்கவே மாட்டேங்கறா. நீயும் அவ இல்லாதப்ப தான் கத்தறே.. இருக்கும் போது அவளை தடவிக்கொடுக்கற மாதிரிதானே பேசறே?"

"என்ன.. இதான் சந்தர்ப்பம்னு குத்திக் காட்றீங்களா? இன்னிக்கு கைவீசிகிட்டு போய் ஒரு கார் வாங்கிட்டு



வந்துடலாம். ஆனால் ஒரு வேலைக்காரி கிடைக்கறது எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா?"

"அது சரி... அதுக்காக வாசல்ல விடவேண்டிய செருப்பை தூக்கி இடுப்புலயா வெச்சுக்குவாங்க..."

"உங்களுக்கு சொன்னால்லாம் புரியாது... நீங்களே குப்பைகள் தானே? என்னால அள்ளிப்போட முடியலியே..."

சாரதா முணுமுணுப்போடு கண்ணுக்கு பட்ட குப்பைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு லைட்டையும் அணைத்து விட்டு வெளியேறிவிட்டாள்.

ராமரத்தினத்தின் காதிரண்டும் அவள் தங்களை குப்பைகள் என்று சொன்னதை மட்டும் தெளிவாகக் கேட்டு அவர்களுக்குள் விசாரமும் பொங்க ஆரம்பித்தது.

"நீங்க வாயை வெச்சுண்டு சும்மாவே இருக்க மாட்டீங்களா, பாருங்க.. அவ எப்படி பேசிட்டு போறா.." என்று ஜானகியிடம் இருந்து கணவன் நிமித்தம் ஒரு ஆவேசம் வெளிப்படத் தொடங்கியது.

"நான் அப்படி என்ன தப்பா பேசிட்டேன் ஜானகி, நடக்கறது தானே சொன்னேன்...."

"அப்ப நம்மளை அவ குப்பைன்னு சொன்னதுக்கும் பதில் சொல்லியிருக்கணும். யாரைப் பாத்து குப்பைன்னு சொன்னேன்னு கேக்கற தைரியம் இருக்கா..."

"குப்பையாதானே ஜானகி இப்ப கிடக்கறோம். அது ஒரு உண்மைதானே?"

"இதையும் சொல்லுங்க அதையும் சொல்லுங்க... உங்கள திருத்தவே முடியாது. அந்தக் காலத்துல தாசில்தாரா இருந்தப்ப பண்ணுன அதிகாரம் இப்பவும் உங்கள விட்டுப் போகல..."

"தப்பா சொல்றியே ஜானகி... இப்ப அதிகாரமா பேசறது நீதான்."

"இது அதிகாரம் இல்ல... ஆவேசம். இவ நான் பாத்த வந்தவ. பெண்பார்க்க போனப்ப குனிஞ்சதலைநிமிராம இவ நின்னதெல்லாம் வேஷம். புலி பதுங்கறது பாயறதுக் குன்னு அப்ப எனக்கும் தெரியாம போயிடிச்சு."

"மெல்லப் பேசு.. இன்னும் காலம்பற காபி வரலை. நீ கண்டத பேசி அதுக்கு உலை வெச்சுடாதே..."

"இவ கையால காபி ஒண்ணுதான் குறைச்சல்..."

"ஜானகி வாயை மூடு, அவ காதுல விழுந்துடப் போகுது. ஏற்கனவே இந்த வீட்டை இடிச்சு கட்ட விடாம பையனை நான் தான் தடுத்துகிட்டு இருக்கேன்னு சாரதா வுக்கு என் மேல கோபம்..."

"அதுசரி... ஒருநாள் அஞ்சு நிமிஷம் காபிதரத்துக்கு லேட்டானாலும் நான் ஹோட்டல்ல போய் குடிச்சுக்க றேன்னு வீரமா எழுந்து போவீங்களே... இப்ப அதெல்லாம் எங்க போச்சு?"

-ஜானகியின் கேள்வி அவர் நெஞ்சில் இடித்தது.

மளுக்கென்று கண்கள் கலங்கிட மௌனமானார். அவரிடம் இருந்து விசும்பும் சப்தம் மட்டும் கேட்டது. இருளில் அவரை ஜானகியாலும் தெளிவாக பார்க்க முடியவில்லை.

"என்ன அழுவறீங்களா?"

"......................................"

"உங்களதான். நான் ஏதோ ஆத்திரத்துல பேசிட் டேன். நீங்க அழுவக் கூடாது. நாம ஒரு தப்பும் பண்ணல உழைச்சுதான் சம்பாதிச்சீங்க. பிள்ளைங்கள படிக்க வெச்சு கல்யாணம் பண்ணிக்கொடுத்து பேரன் பேத்தியையும் பாத்தாச்சு... இப்ப இப்படி கெடக்கறது தலைஎழுத்தி அழுவற மாதிரி தப்பை எல்லாம் நாம பண்ணலை..."



"அப்படின்னு நீ சொல்றே– ஆனா கண்ணும் காதும் போய் கைகால்ல சக்தியும் போய் இன்னும் உசுரோட இருக்கோமே...? எனக்கே தெரியாம நான் பெரிய தப்பு பண்ணிட்டேன்னு தான் தோணுது. இல்லாட்டி கையா லாகாத முதுமை கிட்ட சிக்குவேனா? எல்லாம் நல்லா இருக்கும்போதே போயிருந்தா எவ்வளவு நல்லாயிருந்து ருக்கும். ரிடயர் ஆகி கிளம்பறப்ப என்னை எல்லாரும் சார் ஒரு தங்கம் - அப்பழுக்கே இல்லாதவர்னு தானே சொன் னாங்க. ஆனா பாழாப்போன இந்த முதுமை நம்ம மருமக வாயாலேயே நம்மள குப்பைன்னு சொல்ல வெச் சிருச்சே...?"

- அவரிடம் விசும்பல் தொடர்ந்தது.

"இதுக்கெல்லாம் ஒரே தீர்வு போய்ச் சேர்றது ஒண்ணுதான். எந்த மகராசி நீ நூறுவருஷம் ஆயுசோட இருக்கணும்னு வாழ்த்தினாளோ தெரியல. இனி நம்ம விரோதியை கூட நாம அப்படி வாழ்த்திடக் கூடாதுங்க. எல்லாம் நல்லாருக்கும் போதே போயிடுங்க, இருந்து படுக்கைல விழுந்து போகமாட்டாம கிடக்காதேன்னு தான் வாழ்த்தணும்..."

- இருவரும் பேசிக் கொள்வது சாரதாவின் காதில் விழுந்ததோ என்னவோ வேகமாக வந்து அறைக்கதவை படார் என்று சாத்தி மூடினாள்.

அறை முழுக்க கும்மிருட்டாகிவிட்டது. ஏற்கனவே மனம் கொள்ளாத இருட்டு! ராமரத்தினத்துக் கு நெஞ்சு கரித்தது. ஜானகிக்கும்...

"ஜானகி?"

"என்னங்க.."

"எனக்கொரு உபகாரம் பண்ணுவியா?"

"உபகாரமா... என்னாலையா?"

"புரியுது... உனக்கும் எனக்குமே பிறர் உபகாரம் பண்ணாதான்னு இருக்கும்போது நாம நமக்கு எப்படி பண்ணிக்க முடியும்னு தானே கேக்கறே?"

"நீங்க விஷயத்துக்கு வாங்க.. நான் என்ன பண்ணனும்?"

"நம்ம இரண்டு பேர்ல யார் முந்தி யார் பிந்தின்னு அப்பப்ப பேசிக்குவோமே ஞாபகம் இருக்கா?"

"நீங்களே முந்திப் போங்க.. நான் முந்திகிட்டா இங்க உங்ககூட பேசறதுக்கு கூட ஆள் இருக்காதுன்னு தான் தெரியுங்களே..."

"நிஜமா சொல்றேன் ஜானகி - இப்படி நீ சொன்னதுக்காகவே நான் அன்னிக்கு பூரா உன்னை நினைச்சு அழுதேன் தெரியுமா? உன்னை போய் பல தருணங்கள் நான் தப்பா பேசிட்டதை எல்லாமும் நினைச்சு பார்த்தேன். வாடாமல்லி கலர்ல ஒரு மைசூர் சில்க் புடவையை நீயும் கேட்டுக்கிட்டே இருப்பே. இப்ப மட்டும் நடக்க முடிஞ்சா என் தலையை அடகு வெச்சாவது அதை நான் உனக்கு வாங்கிக் கொடுத்துடுவேன்..."

அவர் பேச்சோடு கூடி திரும்பவும் விசும்பினார். "அழாதீங்க.. இப்ப நீங்க பேசற பேச்சே நூறு புடவை வாங்கிக் கொடுத்த மாதிரி இருக்கு.... நீங்க ஏதோ உதவின்னு கேட்டீங்களே....?"

"அது...அது..."

"சும்மா கேளுங்க..."

"உன் இஷ்டப்படியே நான் முன்னாடியே போயிட்றேன். இந்த அழுக்குத் தலையணையை கொஞ்சம் முகத்துல வெச்சு அமுக்கி என்னை அனுப்பி வெச்சுட்றியா?"

- அவர் சொல்லி முடிக்கவும் ஜானகியிடம் பதிலுக்கு பேச்சே இல்லை.



"ஜானகி..."

"................"

"அம்மாடி.. என்ன எதுவும் பேசமாட்டேங்கிற?"

"................"

"ஐயோ எதையாவது பேசு... உனக்கு இது கஷ்டமா தான் இருக்கும். 70 வருஷ தாம்பத்யம் நம்ம தாம்பத்யம். சோறு போட்ட கையால என்னை கொல்லச் சொல்றேன், தப்புதான். ஆனா இந்த உசுர் போக மாட்டேங்குதம்மா. வேலைக்காரிக்கு இருக்கற மரியாதை கூட நமக்கு இல்லையே. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே பாரமா கிடக்க...?"

- அவர் பேசிக் கொண்டு போனார். ஆனால் பதில் தான் இல்லை. அவரை அது மிகவே பாதிக்க தொடங்கியது.

"ஜானகி... ஜானகி..." - என்று படுக்கையில் இருந்து எழ முயற்சி செய்தார். பக்கத்து ஸ்டூல், அதன் மேல் இருந்த கண்ணாடி டம்ளர், வாரப்பத்திரிகை என்று எல்லாம் கீழே விழுந்து உருண்டன.

அவர் கைகள் நாலாபுறமும் எல்லா திசையுமாய் மேலும் கீழுமாய் ஒரு துழாவலை தொடங்கிற்று.

"ஜானகி... இப்படி நீ மௌனமா இருந்து என்னை சித்ரவதை பண்ணாதே.. நீ இப்படி இருந்தா நான் இப்பவே செத்துடுவேன். என் மனசு ரொம்பவே படபடக்குது. வேணும்னா நாம ரெண்டுபேரும் சேர்ந்து செத்துப் போவோம். அதுக்கு என்ன வழின்னு யோசிப்போம். காலாவதியான மாத்திரை மருந்து நிறைய இருக்கு. அதை விழுங்குனா கூட செத்துப் போயிடலாம்..."

- என்று அவர் பேசிக்கொண்டே போனார். ஒரு வழியாக அவர் துழாவலில் ஜானகியும் அகப்பட்டாள். ஆனால் ஜில்லிட்டு விட்டிருந்தாள்.

"ஐயோ ஜானகி... என்னாச்சு உனக்கு? போய்ட்டியா... என்னை விட்டுட்டு போய்ட்டியா? என் வார்த்தையால உன்னை கொன்னுட்டேனா... ஜானகி... ஜானகி..." - அவர் பதைபதைப்பின் உச்சிக்கே போகத் தொடங்கினார்.

ஒரு கட்டத்தில் அதுவும் மெல்ல அடங்கியது. அதன்பின் நிசப்தம்!

❖❖❖

நெடுநேரம் கழித்து கதவை திறந்தாள் சாரதா. இரண்டு கிழட்டுப் பிணங்களையும் பார்த்து அதிர்ந்தாள். குப்பையோடு குப்பையாக கிடந்தார்கள். தான் பேசிய பேச்சுக்கு இருக்கும் சக்தியே அப்போது தான் அவளுக்கு புரிந்தது. கொஞ்சம் போல படபடப்பாகவும் இருந்தது. அதன்பின் ஊருக்காக அழ ஆரம்பித்தாள். எல்லா காரியங்களும் வரிசையாக நடைபெறவும் ஆரம்பித்தன.

துக்கமில்லாமல் அழுவது என்பது காலில்லாமல் ஓடுற மாதிரி ஒரு கஷ்டமான காரியமாகவே அவளுக்கு தோன்றியது.

ஒரு வழியாக அந்த மனிதக் குப்பைகளை அள்ளிப் போட்டு பதினைந்து நாட்கள் ஓடிவிட்டது.

அந்த அறை மிக சுத்தமாக இருந்தது.

சாரதாவும் கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தாள். அங்கும் இங்குமாய் நரைமுடிகள். அவளுக்கு சுருக்கென்றது.

பின்னாலேயே அவள் மகன் பாத்ரூமில் குளித்த நிலையில் தலை ஈரம் காய்வதற்குள் வாரிக் கொள்வதற்காக கண்ணாடி முன் வந்தான்.

சாரதா தடையாக தெரிந்தாள்.



"ஒதுங்கும்மா... எவ்வளவு நேரம் தலை சீவுவே...? அழகிப் போட்டிக்கா போகப் போறே - வீட்லதானே இருக்கே" - என்று கேட்டபடியே தலையை சரித்து வாரிக் கொள்ளத் தொடங்கினான்.

அவளுக்கும் வலிக்க ஆரம்பித்தது. முதுமையா கொக்கா? மாமனார், மாமியார் நினைவும் வந்தது. குற்றஉணர்வு பிராண்ட ஆரம்பித்தது. எதிரிகள் வெளியே இருந்துதான் பழி வாங்கவேண்டுமா என்ன?



# 11. பொசசிவ் பூதம்

அனந்தநாராயணனின் செல் போன் சிணுங்கியது.

அனந்து குறும்புக்காரன். அவன் மனைவி மஞ்சுளா ஒருநாள் சற்று கிறக்கமாக பேசியதை அப்படியே ரெக்கார்ட் செய்து அதையே தன் செல்போன் அழைப்பொலியாகவும் செய்திருந்தான்.

“என்னங்க... இப்படிப் பாருங்க.. கூப்டுக்கிட்டே இருக்கேன்ல? ஆனாலும், நீங்க மோசம்ங்க... கூப்ட்டா என்னன்னு கேக்க மாட்டீங்களா?”

மஞ்சுளாவின் கிறக்க குரல் ஒலித்தும் அனந்து வரவில்லை. பாத்ரூமில் இருந்தான். மஞ்சுளாவே வந்து போனைக் கையால் எடுத்து திரையில்



பார்த்தாள். ‘வில்லி’ என்கிற எழுத்து தெரிந்த கணத்தில் கண்களில் தீப்பிடித்தது.

‘கழுத.. காலைலயே கூப்பிட ஆரம்பிச்சுட்டாளே..’ என்று திட்டிக்கொண்டே சுரத்தில்லாமல் “ஹலோ..” என்றாள்.

“யாரு மஞ்சம்மாவா?”

“மஞ்சம்மாவா? நான் மஞ்சுளா பேசறேன்..”

“யெஸ்.. நானும் உங்களத்தான் கேட்டேன் மஞ்சு. அனந்து உங்களை மஞ்சம்மான்னுதானே கூப்பிடுவார்?”

“அவர் கூப்ட்டா, நீங்களுமா கூப்பிடணும். எனக்கு 32 வயசுதான் ஆகுது. அதுக்குள்ள என்னை அம்மா ஆக்கினா எப்படி?”

“இதை அப்படியே அனந்துகிட்ட கேளுங்க.. ஆமா, அனந்து என்ன பண்றார்?”

“குளிச்சுட்டிருக்கார்..”

“என்ன தைரியம்! என்கிட்ட மார்னிங் ‘ரெங்கநாதன் ஸ்ட்ரீட் வந்துரு.. ஷாப்பிங் போவோம்’னு சொல்லிட்டு இன்னுமா ரெடியாகலை...?”

“ஷாப்பிங்கா...?”

“ஆமா! நான் கொஞ்சம் பர்ச்சேஸ் பண்ணனும்னு சொல்லியிருந்தேன். சரி, உங்களுக்கு ஏதுவும் வேணுமா?”

“வேணாம்.. தேங்க்ஸ்!”

“ஒரு ஸாரி மட்டும் வாங்கி அனந்துகிட்ட கொடுத்து விட்டுமா? பொங்கலுக்கு நிறைய நியூ கலெக்ஷன்ஸ் வந்துருக்கும்...”

“வேணாம்..” - கொஞ்சம் எரிச்சலோடு மஞ்சுளா சொல்லி முடிக்கவும், பாத்ரூமிலிருந்து ஷாம்பூ மணத்தோடு தலைதுவட்டிக் கொண்டே அனந்து வரவும் சரியாக இருந்தது.

"யார் போன்ல... கொண்டா இப்படி?" என்று அவளிடமிருந்து போனைப் பிடுங்கி திரையைப் பார்த்தபடியே..

"ஹாய் லில்லி! ரெடியாகிட்டேன். ஒரு 20 நிமிஷத்துல அங்க இருப்பேன். வந்துரு.." என்றபடியே அவசரமாய் போனை கட் பண்ணி மஞ்சுளாவிடமே கொடுத்துவிட்டு டிரஸ்ஸிங் ரூமுக்குத் தாவினான்.

'இது என்ன புதுசா ஷாப்பிங்... அதுவும் ஒரு பொம்பளகூட....' - மனதுக்குள் நினைத்துக்கொண்டே கிச்சனுக்கு சென்றாள் மஞ்சுளா. 'என் புருஷன்கூட ஷாப்பிங் போறதே தப்பு. அதுவும் அதிகாரமா, அனந்து இன்னும் கிளம்பலையான்னு கேக்கறா.. இந்த மனுஷனும் ஒரு வார்த்தைகூட நம்மகிட்ட சொல்லலியே..' வேலை ஓடிக்கொண்டே இருந்தாலும் அவள் மனது அமைதியாய் இல்லை.

லில்லியை அவளுக்குத் தெரியும். அனந்துவின் அலுவலகத்தில் வேலை பார்ப்பவள். ஓரிருமுறை சந்தித்திருக்கிறாள். 'என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்' என்று அனந்துகூட அடிக்கடி சொல்வான். பெஸ்ட் ஃப்ரெண்ட்டாவே இருக்கட்டும்.. அதுக்காக?

அதே தி.நகருக்கு நாம் எத்தனை தடவை ஷாப்பிங்குக்கு கூப்பிட்டிருப்போம். ஒரு தடவையாவது வந்திருப்பாரா? கேட்டால், 'டைம் இல்லை... டைம் இல்லை..' இப்போது மட்டும் எப்படி வந்தது டைம்?

கோபத்தோடு "டிபன் ரெடி!" என்றாள், அனந்துவிடம் சென்று.

"ஸாரி... மஞ்சம்மா! ஏற்கெனவே லேட்டாயிடுச்சு. அப்புறம் எங்கயாவது சாப்டுக்கறேன். நீ சாப்பிடு" என்றான் சாக்ஸை மாட்டிக்கொண்டே..

"ம்... என்னமோ பண்ணுங்க. சரி, அழகா எனக்கு மஞ்சுளான்னு எங்கப்பம்மா பேர் வெச்சிருக்கும்போது



அது என்ன மஞ்சம்மா.. பேரே எனக்கு அறுபது எழுபது வயசை கொடுக்குது.."

"என் வொய்ஃபை நான் ஆசையா அப்படித்தான் கூப்பிடுவேன். உனக்கு அதுல என்ன கஷ்டம்? ஓ.கே.. டைம் ஆயிருச்சு.. கிளம்பறேன்."

வாசலின் முன்புறமிருந்த இரும்புக்குதிரையான யமஹாவை கிளப்பி 'விர்ர்ரும்' என்று சத்தத்தோடு பார்வையில் இருந்து மறைந்துபோனான்.

மஞ்சுளாவிடம் நூற்றிநாலு டிகிரிக்கு வெப்ப அலை!

❖ ❖ ❖

மறுநாள் மதியம்... திடீரென்று ஆபீசிலிருந்த அனந்துவிடமிருந்து போன்.

"வர்ற சனி, ஞாயிறு கன்னியாகுமரி போறோம்.. ட்ரெயின்ல டிக்கட் புக் பண்ணிட்டேன்.." என்றான்.

"என்ன திடீர்னு இவ்வளவு கரிசனம்? 'ஆபீஸ்ல ஒரு பெரிய ப்ராப்ளம்'னு ஹனிமூன்லருந்துகூட பாதில அவசரமா கூட்டிட்டு வந்த மகராசனாச்சே நீங்க?"

"எல்லாத்துலயும் உன் ஆதங்கத்தைக் காட்டாதே மஞ்சு. என் டைம் அப்படி. கன்னியாகுமரியில எங்க ஆபீஸ் ஃப்ரண்ட் ஒருத்தருக்கு கல்யாணம். லவ் மேரேஜ்.. அவசியம் வந்தே ஆகணும்னு சொல்லிட்டாங்க. மிஸ் பண்ண முடியாது. நாம்தான் ஸ்பெஷல் கெஸ்ட்... போறோம்.."

"சரி.. சரி.. இதுக்காவது என்னைக் கூட்டிக்கிட்டு போகணும்னு தோணிச்சே." - பேசிவிட்டு போனை வைக்கவும் மனது இனித்தது மஞ்சுளாவுக்கு.

கன்னியாகுமரி அவளுக்கு மிகவும் பிடித்த ஊர். இங்கேதான் சூரியன் உதிப்பதையும், அஸ்தமிப்பதையும்

ஒரு புள்ளியில் நின்று பார்க்கமுடியும். பசுமையான சூழ்... மலையாளம் கலந்த தமிழ், குளுமையான தன்மை... நினைக்க நினைக்க பரவசமாக இருந்தது.

அப்போதே தோழி பத்மினிக்கு போன் செய்து கன்னியாகுமரி போகப் போவதை சொல்ல ஆரம்பித்தாள்.

அதில் ஏராளமாக அவளது ஆசை மெருகுகள்.

“ஹனுமூனுக்கு அப்புறம் நீ இப்பதான் உன் புருஷ...னோட வெளியே கிளம்பறேன்னு நினைக்கிறேன். ஆல் த... பெஸ்ட்! கன்னியாகுமரில மலையாள வொயிட் கலர் முண்டு சாரீஸ் ரொம்ப ஃபேமஸ். வாங்கிட்டு வா. அப்... படியே நேந்தரம்பழம் சிப்ஸ் எல்லாமும் கிடைக்கும். வலம்புரி சங்கு கிடைச்சா விட்றாதே. அது பூஜை அறை... இருந்தா நம்ம பீரோவுல எப்பவும் துட்டு இருக்குமாம்.”

“ஷ்யூர்! ஷ்யூர்! அவருக்கு எப்படியும் ஒரு ட்வெண்டி... டு ட்வெண்டி ஃபைவ் தவுஸண்ட் வெடி வைக்காம விட்... போறதில்ல..”

மஞ்சுளா பொங்கிப் பிரகாசமானாள்.

திரும்பவும் தொலைபேசியிடம் அழைப்பு.

“நான் பத்மினிதான் பேசறேன். உன்கிட்ட ஒன்னு... சொல்லணும்னு.. முன்ன நீ பேசும்போது சொல்ல... தயக்கமா இருந்தது. இப்ப சொல்லிடறது தான் நல்லதுனு... படுது. சொல்லிடட்டுமா?”

பத்மினி மஞ்சுளாவின் அடிவயிற்றுக்குள் ஒரு பட்டாசை வைத்துவிட்டு, ‘பற்ற வைக்கட்டுமா?’ என்று கேட்கிறமாதிரி கேட்டாள்.

“என்ன பத்து...?”

“நான் சொல்றதைக் கேட்டு நீ ஷாக் ஆகாதே..”

“பத்து... ப்ளீஸ் என்னன்னு முதல்ல சொல்லு.”



“லாஸ்ட் வீக் உன் ஹஸ்பண்டோட ஒரு பொண்ணை தியேட்டர்ல பார்த்தேன். யார் அது?”

“ஓ! அதுவா? அவ வில்லியா இருக்கும்... எனக்கு நல்லாத் தெரியும் அவ அவரோட ஆபீஸ் ஃப்ரெண்ட்.”

“வில்லியா இருந்தா சரி. கள்ளியா மாறிடப் போறா! பீ கேர்ஃபுல்.”

“சேச்சே.. எம்புருஷன் ஒன்னும் அப்படியெல்லாம் கிடையாது.”

“இப்படித்தான் நம்ம ரமாபிரபா சொல்லிக்கிட்டிருந்தா. இப்ப டைவர்ஸ் கேஸ் கோர்ட்ல நடந்துட்டு இருக்கு. நீ என் பெஸ்ட் ஃப்ரெண்ட் ஆச்சேனு வார்ன் பண்ணினேன். அப்புறம் உன் இஷ்டம்..”

அவள் போனை வைத்தாள். கூடவே மஞ்சுளா மனதில் நிறைய நெருப்பையும் வைத்துவிட்டாள்.

❖❖❖

இரவு நேரம்.

படுக்கையில் பக்கத்தில் அனந்த நாராயணன். உம்மென்று மஞ்சுளா!

“ஏன் ஒரு மாதிரி இருக்கே.. ஊருக்குப் போக ரெடியாயிட்டியா?”

“உம்..”

“அப்படியே திருவனந்தபுரம் போறமாதிரிகூட இருக்கலாம். அதுக்கு தகுந்தமாதிரி டிரெஸ் எடுத்துக்கோ..’

அவன் சொல்லும் போதே அவன் செல்பேசியில் ‘என்னங்க இப்படிப் பாருங்க. கூப்டுகிட்டே இருக்கேன்ல...’ எனும் மஞ்சுவின் வாய்ஸ்.

மஞ்சுவே எழுந்து போய் எடுத்தாள். திரையில் மின்... மனதில் கொஞ்சம்போல பகீர்! வெறுப்பு குன்றாதபடி போனை நீட்டினாள்.

"சொல்லுடா..." ஆரம்பமே அனந்துவிடம் அதகளம். 'டா'வா.. அவ்வளவு வாஞ்சையா! அனந்து தொடர்ந்து பேசியபடி எழுந்து வெளியே போனான். மஞ்சுளை வைத்துக்கொண்டு பேசப் பிரியமில்லாதவன்போல நடந்து கொண்டான்.

அவளுக்குள் ரத்தத்தில் வெந்நீர் கலப்பதுபோல இருந்தது. இதயப் பரப்பிலும் சற்று அதிகமான திமுதிமு.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் கழித்து படுக்க வந்தான். மஞ்சுளா வெறித்தாள்.

'ஸாரி! மஞ்சும்மா... ரொம்ப நேரம் பேசிட்டேன். வில்லிகிட்ட மட்டும் எனக்கு கன்ட்ரோலே இல்ல" என்றபடி அறை ஏ.சியை அணைத்தான். போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு ரெட்டைச்சுழி கொம்பு போல சுருண்டு கொண்டான்.

மஞ்சுளாவுக்கோ பத்மினியின் குரல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

'வில்லியா இருந்தா சரி. கள்ளியா மாறிடப் போறா! பீ கேர்ஃபுல்.'

**அ**ரை மனதாகத்தான் அவனோடு புறப்பட்டாள். ரயிலில் முதல்வகுப்பு எடுத்திருந்தான். அது எப்போதுமே அவள் விரும்பிச் செல்வது... ஆனால், வழக்கமான உற்சாகம் அன்று அவளிடம் இல்லை.

"ஹனிமூனுக்குப் பிறகு வெளியே கிளம்பியிருக்கோம். கொஞ்சம் சந்தோஷமா வரலாம்ல..." என்று அனந்துவும் சீண்டிப் பார்த்தான்.

மேல்பர்த்திலிருந்த வயதான மனிதர் ஒருமாதிரி பார்க்க.. அவளும் பார்த்துவிட்டு, "எனக்கு தூக்கம் வருது.



படுக்கறேன்.." என்று பர்த்திலிருந்து அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்தாள். அவனே கம்பளியை எடுத்துப்போர்த்தி கரிசனம் காட்டினான். 'எனக்குக் குளிரலைங்க' என்று விலக்கிவிட்டுக் கொண்டாள்! தோளைக் குலுக்கிக் கொண்டு வந்து படுத்தான் அனந்து.

❖ ❖ ❖

**க**ல்யாண மண்டபம்.

கால்டாக்ஸியில் இருந்து இருவரும் உதிர்ந்தனர். முகப்பில் ஒரு பக்கத்தில் 'வில்லி - வெட்ஸ் சார்லஸ்' என்கிற எழுத்துக்கள். பார்த்த மாத்திரத்தில் மஞ்சுளாவிடம் ஒரு பரபரப்பு - பதட்டம்.

"உள்ளே சென்றவுடன் பொக்கேயைப் பெற்றுக் கொண்டு, ஹாய் அனந்து.. ஹாய் மஞ்சம்மா!" என்றாள், அதே உற்சாகத்துடன் வில்லி.

எப்படி ரியாக்ட் பண்ணுவது என்று தெரியாமல் பாதி உதடுகளில் சிரித்தாள் மஞ்சுளா.

"என்ன மேடம் மூட்-அவுட்டா இருக்காங்களா? வர்ற வழில எதுவும் டிஸ்யூம்.. டிஸ்யூமா?" என்றாள், மணப் பெண் என்ற எந்த மனத்தடையும் இல்லாமல்.

"அவ இயல்பாவே அப்படித்தான் இருப்பா. மேரேஜ் ஷாப்பிங்னு மூணு மணி நேரம் கடை கடையா என்னை அலைய விட்டியே... அதனால நான்தான் மூட்-அவுட்டா இருக்கேன்.." என்று சிரித்த அனந்தவுடன் சிரிப்பில் சேர்ந்து கொண்டாள் வில்லி. அர்த்தம் புரிந்தோ புரியாமலோ மணமகனும் சிரிக்க, மஞ்சுளா கண்ணீரோடு சிரித்தாள்.

அனந்துவை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

'எல்லாமே நமக்குள்ளேயே முடிவு பண்ணிக் கொண்டோமே, அவரிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்தால் நாம் இவ்வளவு பெரிய மன உளைச்சலுக்குள் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டிருக்க வேண்டாமே.. ம்.. என் புருஷன் எனக்கு மட்டும்தான்' என்று இறுக்கம் தளர்ந்து இலவம்பஞ்சாக மனசு மிதப்பதுபோல இருந்தது அவளுக்கு.



## 12. ஒரு அகலிகை ஒரு இந்திரன்

அருணுக்கு மிக ஆச்சர்யமாக இருந்தது. செல்போன் திரையில் அவளது எண்கள்! போன வாரம்தான் பெண் பார்க்கப் போயிருந்தான். அப்போதே அவளது எண்களை வாங்கி தன் செல்போனில் 'வுட் பி' என்கிற பெயரில் பதிவும் செய்து கொண்டிருந்தான்.

இப்போது அவளிடமிருந்தே அழைப்பு...!

குளிக்கப் போயிருந்த தருணத்தில் அழைத்திருக்கிறாள். அதனால் உடனே பேச முடியாது போய் விட்டது. அதனால் என்ன...? இதோ.. இப்பொழுதில் பேசிவிட்டால் போயிற்று.

அவளை அழைக்க அருணுடைய கட்டை விரல் தயாரானது. முகத்திலும் டார்ச் அடித்ததுபோல ஒளி! அவனே அவளை அழைத்துப் பேச வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவள் அழைக்கும்பொழுது அவள் தயக்கமின்றிப் பேசும் சூழல் இருக்க வேண்டுமே!

அவள் ஒரு விளம்பர நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவள். அங்கே அவள்தான் க்ரியேடிவ் ஹெட். பெண் பார்க்கும் படலத்தின்போதே அவளுக்கு ஏகப்பட்ட போன் அழைப்புகள். அவள் தந்தை கூட "எம்மா.. இந்த நல்ல நேரத்துல கொஞ்சம் அந்த உலோகக் காது வாலை பொத்தித்தான் வையேன்" என்று கூறிட, "இல்லப்பா.. ஒரு பெரிய அசைன்மென்ட்! மும்பை ஆர்டர். அப்போ என் செல் 'ஸ்விட்ச் ஆஃப்'ல இருந்தா சென்டிமென்ட்டா அவர் வேற ஏஜென்சிக்குப் போயிடலாம்.." என்று தன் பொறுப்பு சார்ந்த ஒரு பதிலைத்தான் கூறியிருந்தாள். அது அவனுக்குப் பிடித்திருந்தது. செல்போனை 'உலோகக் காதுவாய்' என்று தனக்குத் தெரிந்த விதத்தில் மொழி பெயர்ப்பு செய்து, ஜாலியாகப் பேசிய அவள் அப்பாவை யும் அவனுக்கு அப்போதே மிகப் பிடித்து விட்டிருந்தது.

எல்லாமாகச் சேர்ந்து திருமணத்துக்கு முன்பே அவளோடு நிறையப் பேச வேண்டும் என்கிற அவனது விருப்பத்தைத் தள்ளித் தள்ளிப் போட்டபடி இருந்தது. இதோ... இப்போது அவளே அழைத்திருக்கிறாள்.

அவன் அவளை அழைக்கவும் அவளும் அவனுக்குக் குரலால் புகத் தொடங்கினான்.

"ஹாய் அனிதா.. ஐ'ம் அருண்! ஸாரி.. நீ என்னைக் கூப்பிட்டப்போ நான் பாத்ரூம்ல இருந்தேன்!"

"தட்'ஸ் ஓ.கே.. எப்படி இருக்கீங்க அருண்?"

"ஃபைன் உன்கூடப் பேசணும்னு நினைப்பேன். அந்த சமயம் நீ ரொம்ப பிஸியா இருப்பியோனு தள்ளிப் போட்ருவேன்.."



"அஃப்கோர்ஸ்.. நான் ஜாப்ல இருக்கறவரை பிஸியா தான் இருப்பேன். இந்த வேலை அந்த மாதிரி, வேர் ஆர் யூ நௌ?"

"நான் வீட்லதான் இருக்கேன்.. ஏன் அனிதா வுட் யூ லைக் டு கம்?"

"ஐ வான்ட் டு மீட் யூ அருண்.. ஏதாவது ஹோட்டல்.. இல்லேன்னா பீச்ல.."

"ஏன்.. நீ வீட்டுக்கே வரலாமே?"

"அது.."

"ஆ.. கல்யாணப் பொண்ணா வாசப்படியில படி நிறைய நெல் இருக்க அதைத் தட்டி விட்டுக்கிட்டு.. என் மனைவியாதான் என் வீட்டுக்குள்ள நுழையணும்னு ஏதாவது தீர்மானத்துல இருக்கியா?"

"எல்லாத்தையும் நேர்ல சொல்றேனே.."

"ஓ.கே. பீச்ல லைட் ஹவுஸ்கிட்ட வெயிட் பண்றேன். டொயோட்டா ரெட் கலர் கார்.."

"ஐ நோ.. அன்னிக்கு நீங்க பெண் பார்க்க வந்தப்பவே மாடில இருந்து நான் பார்த்தேன். ரியல் வீல் கிட்ட லெஃப்ட் ஸைட்ல யாரோ ஹிட் பண்ணி நசுங்கிக்கூட இருந்தது."

"வாவ், வாட் எ பாய்ன்ட் ஆஃப் வ்யூ! எல்லாத்துலையும் நீ ரொம்ப ஷார்ப்பாவே தெரியறே.."

"அவசரப்பட்டு காம்ப்ளிமென்ட்ஸை வேஸ்ட் பண்ணிடாதீங்க அருண். நேர்ல பேசுவோம். நம்ப அறிமுகம் கல்யாணத்துக்கு ஒரு ஆரம்பம் மட்டும்தான். இன்னும் நிச்சயதார்த்தம் இருக்கு. கல்யாணம் இருக்கு... எவ்வளவோ இருக்கு..?"

"எவ்வளவோன்னா.. வாட் டு யூ மீன்?"

“நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கறதைச் சொ
னேன். பயந்துட்டீங்களா?”

“ஓ! அதுவா? ரைட் அனி.. அட் வாட் டைம்?”

“ஈவ்னிங் எக்ஸாக்ட் ஃபைவ் தர்ட்டிக்கு..”

“டன்.. பை!”

அவன் அந்த உலோகக் காதுவாயை அணைத்தான் முகத்தில் ஒரு மெலிதான மாற்றம் உருவாகத் தொடங்கி இருந்தது.

‘காம்ப்ளிமெண்ட்ஸை வேஸ்ட் பண்ணிடாதீங்க’ என்று அவள் கூறியதில் கொஞ்சம் நெகடிவ் தெரிந்தது. ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க வேண்டாமா? என்று கேட்டதில் ஒரு தீர்மானம் ஒளிந்திருப்பது தெரிந்தது. பெண் பார்க்கும் படலத்தை அவள் ஒரு அறிமுகம் என்று மட்டும் கூறியதில் கல்யாணம் பற்றி எல்லாம் அவள் நினைத்தே பார்க்கவில்லை என்கிற மாதிரியும் அவனுக்கு தோன்றியது.

இந்தத் தோன்றல்கள் அவனுக்குள் ஒரு சின்ன சுனாமியைக் கூட உருவாக்கிவிட்டது. அப்படியே சோபாவில் அமர்ந்து விட்டான்.

மாதம் ஒண்ணே கால் லட்ச ரூபாய் சம்பாதிக்கும் ஒரு ஹெச்.ஆர். பிரிவின் வைஸ் ப்ரசிடெண்ட் அவன்! பணியாற்றும் நிறுவனமே அவனுக்கு வீடு, கார் என்று சகலத்தையும் வாரி வழங்கியிருக்கிறது.

“அருண்... நான் ரிடயர் ஆகும்போது எனக்குக் கிடைச்ச தொகையை நீ ஆறு மாச சம்பளத்துல வாங்கிட்டேங்கறத நினைச்சா இது உன் புத்திசாலித்தனத்துக்கு கிடைச்ச அங்கீகாரமா.. இல்ல, நாங்கள்லாம் முட்டாள்களாவே இருந்துட்டோமான்னு தெரியலை..’ என்றார் அவன் அப்பா ஒருமுறை!



அப்படி ஒரு உயரம்!

ஆளும் பார்க்க நல்ல வாட்டசாட்டம்.

எங்கேயோ எப்பொழுதோ டைரக்டர் மணிரத்னம் அவனைப் பார்த்து விட்டு, “என் படத்துல ஒரு நல்ல கேரக்டர் இருக்கு.. பண்றீங்களா?” என்று கூடக் கேட்டிருக்கிறார்.

இவன் சிரித்தபடியே மறுத்து விட்டான்.

நிறைய பெண்கள் இவனை நோக்கி படையெடுத்தனர்.

வெகு நாட்களாகத் திருமணமே ஆகியிராத ஒரு நடிகையின் ஜாதகம் கூட பரிசீலனைக்கு வந்தது. அருண் அப்பாதான் “நாங்க பணம் காசை விட நல்ல குடும்பப் பாங்கைப் பெருசா நினைக்கறோம்..” என்று கூறி அதைத் தவிர்த்து விட்டார்.

ஒரு மாதிரி டல் மூடில் அமர்ந்து விட்டிருந்த அருணை அப்போதும் பார்த்த அப்பா, “என்னப்பா.. ஆஃபீஸ்ல ஏதாவது குழப்பமா.. எனி லேபர் ப்ராப்ளம்?” என்று ஆரம்பித்தார்.

“அதெல்லாம் இல்லப்பா!” என்று அவரை சமாளித்தான். “வர்ற நாலாம் தேதி நாள் நல்லாயிருக்காம்.. நிச்சயதார்த்தத்தை அப்ப வச்சுக்கலாம்தானே?”

- அவர் கேட்டார்.

“நாலாம் தேதி... நாலாம் தேதி...” - அவன் திரும்பத் திரும்பச் சொல்வதற்குப் பின்னாலே ஒருவிதத் தயக்கம் இருந்தது. அனிதாவிடம் பேசிய பிறகு இந்தத் தேதி பற்றி எல்லாம் உறுதிக்கு வரலாம் என்று தோன்றியது.

“நாலாம் தேதிக்கு என்ன... இன்னும் கொஞ்சம் முன்னாடி இருந்தா பரவாயில்லைனு நினைக்கிறியா?”

“நோ.. நோ.. நான் பேசிட்டு சொல்றேன்பா..”

"பேசிட்டா.. யார்கூட? அதான் நானும் அந்தப் பெண்ணோட அப்பாவும் பேசோ பேசுனு பேசிட் டோமே.. அவர் இப்பவே உங்களுக்கு கல்யாணம் ஆகிட்ட மாதிரியே பேசறார்ப்பா!"

"அது.. அது வந்துப்பா.."

"எதுக்கு ஹார்மோனியம் வாசிக்கறே..? உனக்கு அனிதாவை பிடிச்சிருக்குதானே?"

"அதுல என்னப்பா சந்தேகம்?"

"அப்புறம் என் தயங்கறே?"

"தயக்கம் எனக்கு இல்லப்பா. அனிதாவுக்கு என்னை எந்த அளவுக்குப் பிடிச்சிருக்குன்னு தெரிஞ்சுக்க வேண் டாமா?"

"ஓ.. நீ அப்படி வர்றியா? அதாவது கல்யாணத்துக்கு முந்தி ஒரு ஒத்திகை வாழ்க்கை வாழ்ந்து பாக்கற மாதிரி. அதான் இப்ப.. ஃபாரீன்லல்லாம் தாலி கட்டிக்காமலே குடும்பம் நடத்தறாங்களே.. அந்த மாதிரியா?"

"ஐயோ அப்பா... அந்த மாதிரி எல்லாம் இல்லை. நீங்க ரொம்ப ஓவரா கற்பனை பண்றீங்க!"

"அப்ப நான் சொல்றதக் கேள்... உங்கம்மாவை நான் நல்லாப் பார்த்ததே மணவறைல.. என் பக்கத்துல உக் காரும்போதுதான். கல்யாணத்துக்குப் பிறகுதான் நாங்க ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கவே ஆரம்பிச்சோம்.

இன்ஃபாக்ட் இன்னிவரை உங்கம்மாவை என்னால ஒரு ஐம்பது பர்சன்ட்தான் புரிஞ்சுக்க முடிஞ்சிருக்கு. இதுவே அதிகம்னு தோணுது.

ஒரு அஞ்சாறு சந்திப்பு, பீச், சினிமா தியேட்டர்னு சுத்தறது இதுல எல்லாம் நீ அவளை அட்ராக்ட் பண்ண எல்லாப் பொய்யும் சொல்வே.. பாட்டில் பாட்டிலா, சென்ட் அடிச்சுக்கிட்டுப் போய், நான் ஒரு கந்தர்வனாக்



கும்னு அவளை மயக்கப் பார்ப்பே. அவளும் உன்கிட்ட இதே ரேஞ்சலதான் பழகுவா! அதுல நீ அம்மா பிள்ளையா, அக்கா தங்கைகள் மேல அதிகம் பாசம் உள்ளவனான்னுல் லாம் ஆழம் பார்ப்பா.

எந்த ஒரு பொண்ணுக்கும் கட்டிக்கப் போறவன் ஒரு பெரிய விஷயமே கிடையாது. மாமியார், நாத்தனார்கள் தான். இன்ஃபாக்ட், மாமனார் நானெல்லாம் ஒரு துரும்பு லெவல்தான். இதுதான் இந்தக் கால யதார்த்தம்.

அந்த வகைல அந்தப் பெண்ணுக்கு இந்த வீட்ல எந்த சிக்கலுக்கும் இடம் இல்லை. உன் அக்கா ஒரு அமெரிக்க வாசி. சென்னை உஷ்ணத்துக்கு பயந்துக்கிட்டே பாசம் கூட பெருசில்லன்னு அமெரிக்கால கிடக்கறவ. அவ வழியிலயே இப்ப உங்கம்மாவும் போய்ட்டா. இங்க நான் மட்டும்தான்! நல்ல காபி போட்டே என்னை பொட்லம் கட்டிடலாம். புரிஞ்சுதா?"

அவர் ஒரு முடிவோடு, அதே சமயம் அர்த்த புஷ்டி யோடு பேசியதை எல்லாம் ரசித்தவன், "சரிப்பா. உங்க இஷ்டப்படியே நாலாம் தேதியே வெச்சுக்குங்கப்பா. அனிதாவை நான் ஆஃப்டர் மேரேஜ் புரிஞ்சுக்கப் பார்க்கறேன். அவகிட்டேயும் இப்ப நீங்க பேசினத எல்லாம் அப்படியே சொல்றேன்" என்று கூறி சிரித்தான்.

❖❖❖

கடற்கரை!

காற்றிடம் டிஸ்கோ.

கூட்டமும் நிறைய. உலகின் அந்த இரண்டாம் பெரிய கடற்கரையில் அமர்ந்து, அப்பா சொன்னதை எல்லாம் அப்படியே சொல்லி முடித்திருந்தான். அருண்.

ஏனோ அதைக் கேட்ட பிறகும் அவள் காய்ந்து விட்ட ஒரு காரைப் பூச்சு போல மிக இறுக்கமாகவே இருந்தாள்.

"என்ன அனிதா... ஏன் எதுவும் பேசாம ரொம்
நெர்வஸாவே இருக்கே?"

"...."

"காலையில உன் கூட போன்ல பேசும்போதே நான்
ஒரு வித்யாசத்தை ஃபீல் பண்ணேன். உனக்குள்ள சம்திங்
ஏதோ ஒரு தயக்கம்.. இல்லேன்னா குழப்பம் இருக்குன்னு
தோணுது."

"...."

"அப்படி இல்லைனா நீ யாரையாவது லவ்
பண்ணிக்கிட்டிருக்கணும். உன் காதலுக்கு எதிரா உன்
பேரன்ட்ஸ் உன்னைக் கட்டிப் போட்டு என்னை உனக்கு
மாப்பிள்ளையாக்க முயற்சி செய்திருக்கணும். ஆம் ஐ
ரைட்?"

அவன் கேட்ட நொடி அவள் நிமிர்ந்தாள். கண்களில்
கண்ணீரின் திரட்சி! அவனுக்கும் அடிவயிற்றில் அமிலம்
கொப்பளிக்க ஆரம்பித்தது.

"அனி... கமான்... நான் கடைசியா கேட்டதுதான்
சரின்னு நினைக்கறேன். யார் அது? சும்மா சொல்.. இந்த
நாலாம் தேதி உனக்கும் அந்த நபருக்கும் நானே கல்யாணம்
பண்ணி வைக்கறேன்." அவன் பேசியதைக் கேட்டு மெல்ல
அவள் நிமிர்ந்தாள். கண்ணீரைத் துடைத்து விட்டுக்
கொண்டாள்.

"வெரி ஸாரி மிஸ்டர் அருண். எனக்கு இனிமேதான்
கல்யாணம் நடக்கணும்னு இல்லை. நான் கல்யாணம்
ஆகிட்ட ஒரு பெண்!" அவனுக்கு நிஜமாகவே தலையில்
இடி விழுந்தால் எப்படி இருக்கும் என்று அப்போதுதான்
புரிந்தது.

அவள் தொடர்ந்தாள்.. "எனக்குக் கல்யாணம் மட்டும்
ஆகலை. நான் ஒரு விதவையாவும் ஆயாச்சு!" அவன்
வரையில் இடியோடு கூடி ஆகாயமே பல துண்டுகளாகி
தலையில் விழுந்த மாதிரி இருந்தது.



"இந்த நிஜம் எதுவம் என் குடும்பத்துக்குத் தெரியாது.
ஒரு பார்ட்டில தவறுதலா எனக்கு மதுவைக் கொடுத்து,
நான் மயங்கிட்ட சமயத்துல என்னை ஒரு பிசினஸ் மேன்
கெடுத்துட்டான். மயக்கம் தெளிஞ்சு எழுந்த நான், தமிழ்
சினிமா கதாநாயகி மாதிரி அவன்கிட்டப் போய் அழலை.
போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுத்து அவனை உள்ளே
தள்ளத்தான் முயற்சி செய்தேன்.

அவனோ கால்ல விழுந்து கதறினான். தாலி கட்டி
என்னைத் தன் மனைவியா ஏத்துக்கறேன்னு சொன்னான்.
அதே மாதிரியும் செய்தான். நடந்துட்ட தவறுக்காக
நிஜமாவே ரொம்ப வருத்தப்பட்டான். இது எல்லாமே
போன வாரம்தான் நடந்தது. என் வீட்டுக்கு வந்து
நடந்ததைச் சொல்லி என் அப்பா கால்ல விழுந்து
மன்னிப்பு கேட்கவும் தயாராயிட்டான். என் வீட்ல
ஒப்புதல் கிடைச்ச மறுநொடி அவங்க வீட்டுக்குத் தகவல்
தெரியப்படுத்தறதுதான் அவன் எண்ணம்.

அவன் அடிப்படையில ரொம்ப நல்லவன்ங்கறது
எனக்குத் தெரியும். பல வருஷப் பழக்கம். ஆனா சத்தியமா
காதலெல்லாம் கிடையாது. ஒரு பார்ட்டியும், அதுல
ஏற்பட்ட போதையும் இப்படி ஒரு பெரிய தவறுக்குக்
காரணம் ஆயிடுச்சு. நான் அவனோடதான் பாம்பேல
இருந்து ஊருக்கு வந்தேன். அவன் ஹோட்டல்ல ரூம்
போட்டுத் தங்கிட்டு, என் வீட்டுக்கு பின்னால வர்றதா
சொன்னான். நானும் தயக்கத்தோட போய் என் வீட்ல
அவனுக்காகக் காத்திருந்தேன். ஆனா அவன் வரலை.
மாறா அவன் வந்த டாக்ஸி ஆக்ஸிடென்ட் ஆகி, அவன்
ஸ்பாட் அவுட்டுங்கற தகவல்தான் வந்தது."

அவள் சொல்லி முடித்தபோது அவள் கண்கள்
கண்ணீரால் நிறைந்திருந்தன. அதற்கு மேல் வார்த்தைகள்
வர முடியாதபடி ஒரு விம்மலும் வெளிப்பட்டு வெடித்தது.

அப்படியே அருகில் இருந்த நியூஸ் பேப்பரை எடுத்து
அந்த ஆக்சிடென்ட் நியூஸையும் காட்டினாள். ஐந்து

நிமிடம் வரை அழுது விட்டு, பின் மெல்ல அதைக் குறைத்துக் கொண்டவளாய்..

"இது எதுவும் என் குடும்பத்துக்குத் தெரியாது. அதனாலதான், அவங்க உங்களை என் வீட்டுக்கு அழைச்சப்போ நான் தடுக்கலை. அங்கேயே அப்பவே பேச அன்றைய சூழ்நிலையும் இடம் தரலை. இதை நான் அப்படியே விழுங்கி ஜீரணம் பண்ணிட்டு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்தான். ஏன்னா, எனக்கு ஏற்பட்டது ஒரு விபத்து. ஆனாலும் நான் உண்மையை எப்பவும் ரொம்பப் பெருசா நினைக்கறவ. பொய்ல சின்னப் பொய், பெரிய பொய்னுல்லாம் கிடையாதுங்கறதும் என்னோட உறுதியான கருத்து. அதான் உங்களை இப்ப சந்திச்சு எல்லாத்தையும் சொல்லியிருக்கேன்.

ஒரு விதவையை கல்யாணம் பண்ணிக்கற தர்ம சங்கடத்தை உங்களுக்கு நான் தர விரும்பலை. உங்களுக்கு மட்டுமில்லை.. என்னை கட்டிக்கறேன்னு வரப்போறே எல்லாருக்குமே இதுதான் என் பதில். அப்பா அம்மாகிட்ட இந்த உண்மையப் பகிர்ந்துக்கலாம்னா ரெண்டு பேருமே பைபாஸ் சர்ஜரி பண்ணிக்கிட்ட ஹார்ட் பேஷன்ட்ஸ்..!

அவள் தொடர்ந்து கண்ணீர் சிந்தினாள். அவனுக்கு அப்போதுதான் அவளை ரொம்பவும் பிடிக்க ஆரம்பித்தது. இரண்டடி இடைவெளி விட்டு நின்று கொண்டிருந்தவன், அவளை நெருங்கி அமர்ந்து கண்ணீரைத் துடைத்து விட்டான். பின் "டோன்ட் ஒர்ரி... அனி. நீ சொன்ன மாதிரி, நடந்தது ஒரு விபத்து. உன் வாழ்க்கையில விபத்து ஒரு தடவை நடந்து முடிஞ்சாச்சு. என்னால இன்னொரு தடவையும் அது நடக்கக் கூடாது. உண்மையான உன்னை நான் உன் வீட்ல பார்த்ததை விட இப்ப அதிகம் நேசிக்றேன். உன் வாழ்க்கையை விட்டே அந்த போன வாரத்தை தயவுசெய்து தூக்கிப் போட்டுடு. உன்னை நான் இப்ப சத்ய தேவதையா பார்க்கறேன்.

உன்கிட்ட நானும் ஒரு உண்மையைச் சொல்றேன். சத்தியமா, இதை உன்கிட்ட எந்த நாளும் சொல்லக்கூடா



...நான் நினைச்சுக்கிட்டிருந்தேன். உன் உண்மை ...யும் தாக்கி என் மனசுக்குள்ளேயும் இப்ப மாற்றங் ...! அமெரிக்காவுல நான் படிச்சுக்கிட்டிருந்தப்போ ...தேபோல ஒரு பார்ட்டில நான் ஒரு பெண்கிட்ட என்னை இழந்துருக்கேன். இந்த வயசுல இதெல்லாம் ...து எனக்கு நானே ஆறுதலும் சொல்லிகிட்டேன். ஆனா, உன் முன்னால என்னால ஒளிய முடியல அனிதா!" என்ற அருண் அப்படியே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

அவள் அவன் தாடையைத் தொட்டு உயர்த்தி நேருக்கு நேர் பார்த்து, "ராமர் - அகலிகை கதை எனக்குப் புரியுது. என்னால ஒரு ராமனை நிச்சயமா ஏத்துக்க முடியாது! ஆனா, இந்த அகலிகைக்கு ஏத்தவன் இந்திரன் தான்!" என்றாள்.

அவன் புரிந்தும் புரியாமலும் தயங்கினான்... கூடவே மிகவும் கூச்சமாகவும் உணர்ந்தான்.

"கூடவே, மைனஸ் இன்ட்டு மைனஸ் ப்ளஸ்ங்கற அல்ஜிப்ராவும் இப்பதான் எனக்கு நல்லாப் புரியுது" என்று அவள் சொல்லவும்தான் அவனுக்கு உயிரே வந்தது.

## 13. வினைகள் விடுவதில்லை

அந்த கார் வெகுவேகமாக சென்றபடி இருந்தது. புதிய கார்... கிட்டதட்ட ஏழு லட்சம் வரை ஆகிவிட்டது. ஒரு கார் வாங்க வேண்டும் என்பது, சந்தோஷின் நெடுநாள் கனவுகளில் ஒன்று. இன்று, அது அவன் வரையில் பாங்கில் கடன் கிட்டியதால் சாத்திய மாகியது.

ஏழு லட்ச ரூபாய்க்கு, அவன் கையில் இருந்து கொடுத்தது ஐம்ப தாயிரம் ரூபாய் தான். மிச்சமுள்ள ஆறரை லட்சமும் கடன். இந்திய அர சுக்குத் தான் எப்போதோ, அமெரிக்கா புத்தி வந்து விட்டதே! எனவே, தாராளமாக கடன் கிடைத்து விட்டது.



ஓட்டிப்பார்க்க ரோடு இருக்கிறதோ, இல்லையோ, கார் விற்பனைக்கு வந்து விட்டது. பிளாட்பார ஓரமாய் காய்கறி வியாபாரிகள் கூறு கட்டி விற்பதைப் பார்த்திருக்கிறான். இன்று அவர்களுக்கு போட்டியாக கார்கள் வந்து நிற்கவும் அரண்டு போனான் சந்தோஷ். அவன் கண்களில் கார் ஆசை வழிவதை கார் விற்க வந்த கம்பெனிக்காரனும் கவனித்து விட்டதன் விளைவு... சந்தோஷை ஒரே அமுக்காக அமுக்கி, காரைத் தலையில் கட்டி விட்டனர்.

அப்படி வாங்கிய காரும் சிட்டாகப் பறந்து கொண்டிருந்தது. ஊருக்குள் தான் ஓட்ட முடியவில்லை. அப்படி ஒரு ட்ராபிக்! மதுரையில் இருந்து திருச்சிக்கு போக வேண்டிய ஒரு அவசியம் வரவும், கார் தானாக முன்னால் வந்து நின்றது.

'என்னை எதற்காக வாங்கியிருக்கிறாய்... அனுபவிக்க வேண்டாமா?' என்று, அது கேட்பது போல் தோன்றியது. சரி என்று ஏறி உட்காரவும், பெட்ரோல் கணக்கு புத்தியில் தோன்றி, கிட்டத்தட்ட இருநூறு கிலோ மீட்டருக்கும் மேல் - அந்த வகையில் பதினைந்து லிட்டருக்கு குறைவின்றி பெட்ரோல் செலவாகும். அதன் விலை இன்றைய கணக்குப் படி தொள்ளாயிரம் ரூபாய். அப்புறமாய் டோல்கேட் கொள்ளை வேறு எல்லாமாய் சேர்த்து ஆயிரம் ரூபாயைத் தாண்டி விடும் என்றது கணக்கு. பஸ்ஸில் வந்தால் நூறை தாண்டாது.

துல்லியமாக பத்து மடங்கு கூடுதல் செலவு. இருந்தும் ஆசை ஜெயித்து, காரைக் கிளப்பி விட்டான்.

அந்த கார்தான் சிட்டாக பறந்து கொண்டிருந்தது. சினிமாவில் ஹீரோக்கள் ஸ்டைலாக கார் ஓட்டிப் பார்த்திருக்கிறான். இன்று, தன்னையே ஒரு ஹீரோவாக உருவகப்படுத்திக் கொண்டு எப்.எம்., ரேடியோவை வேறு தட்டி விட்டான்.

'நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை...' என்று, அதுவும் அவன் சந்தோஷத்துக்கு சுருதி கூட்டியது. தற்காலிகமாய்

கார், கடன், மாதாந்திர செலவு, காரை நிறுத்த ஒரு போர்டிகோ கூட இல்லாத நிலையில் தெருவில், வீட்டு வாசலிலேயே சுவற்றை ஒட்டி நிறுத்தியிருப்பது போன்ற சகல கசகசப்பான நினைப்புகளையும் ஓரம் கட்டி விட்டு அந்தப் பாட்டோடு தன்னை இணைத்துக் கொண்டான் சந்தோஷ்!

சாலை துப்புரவாய், ஆளரவமின்றி இருந்தது. மனித ஜென்மம் எடுத்திருப்பதே இப்படி பாட்டுப் பாடியபடி கார் ஓட்டத்தான், என்றெல்லாம் தோன்றியது. அப்போது தான்அந்த கொடூரமான காட்சியும் கண்ணில் பட்டது.

சாலை ஓரமாய் ஒரு மரத்தில், கார் ஒன்று மோதி நின்றிருக்க, வெளியே ஒருவர் விழுந்து கிடந்தார். அவருக்கு பக்கமாய் ஒரு பிரீப் கேஸ்... அது கீழே விழுந்த வேகத்தில் திறந்து கொண்டு விட, அதிலிருந்து ஏராளமான ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் விழுந்து, அந்த மனிதரைச் சுற்றி இறைந்து கிடந்தது.

காரை ஓரம் கட்டி நிறுத்தி விட்டு, அவரை நோக்கி ஓடினான் சந்தோஷ். அவர் கிடந்த விதத்தை விட, ரூபாய் கட்டுகளும், பிரீப்கேசும் தான் அதிகம் அவன் கவனத்தை ஈர்த்திருந்தது.

சுற்று முற்றும் பார்த்தான், ஒருவரும் இல்லை. அவர் அருகில் சென்று தொட்டுப் பார்த்தவனுக்கு பகீர் என்றது. அவர் உயிர் போயிட்டிருந்தது.

'அடக்கொடுமையே...' என்றபடியே பணக்கட்டை எல்லாம் திரட்டி பிரீப் கேசுக்குள் போட்டு மூடினான். அவர் கழுத்தில் ஒரு மைனர் செயின் தெரிந்தது. அதையும் உருவிக் கொண்டான். விரல் மோதிரத்தையும் விடவில்லை. அப்படியே திரும்பித் திரும்பி பார்த்தபடி, ஓடிச்சென்று தன் காருக்குள் ஏறிக் கொண்டவன் காரை வேகமாக கிளப்பினான். காரும் சாலையில் திரும்பவும் வேகமாகி விட்டது.



ஐந்து நிமிட பயணத்துக்குள் எவ்வளவு பெரிய மாற்றம்.

எப்.எம்.மில், 'ராமன் ஆண்டாலும், ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலை இல்லை...' எனும் பாடல். சந்தோஷுக்கு கொஞ்சம் உறுத்தியிருக்க வேண்டும்; பாட்டை தடை செய்தான். பக்கத்து சீட்டில் கிடந்த அந்த பிரீப்கேஸையும் ஒரு பார்வை பார்த்தான். மிக புத்திசாலித்தனமாக நடந்து விட்டது போலவும் தோன்றியது.

வேறு யார் பார்த்திருந்தாலும் அள்ளிக் கொண்டிருப்பர் என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டான். அந்த நபர் தான் செத்து விட்டாரே... இனி, அவருக்கு எதுக்கு காசும், பணமும், என்று தன் செயலுக்கு நியாயமும் கற்பித்துக் கொண்டான்.

முதல் கார் பயணமே இப்படி ஒரு பெரும் லாபத்தில் முடியும், என்பதை அவன் எண்ணிப் பார்த்திருக்கவில்லை.

ராசியான கார்தான்.

ஓட்டியபடியே குனிந்து ஸ்டியரிங்குக்கு முத்தம் ஒன்றும் தந்தான். பின், ஒரு ஓரமாய் காரை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு, அந்த பெட்டியை திறந்து எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று எண்ணத் தொடங்கினான். மிகச்சரியாக ஐந்து லட்ச ரூபாய் இருந்தது. தங்கச் சங்கிலியும், மோதிரமும் எப்படியும் ஒரு லட்ச ரூபாய் வரை போகும். கிட்டத்தட்ட கார் கடனை, காரே திரும்பத் தந்துவிட்டதாக அவனுக்குத் தோன்றியது.

உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை ஒரே பரபரப்பாகி விட்டது. காருக்குள் இறந்தவரின் விசிட்டிங் கார்ட் இருந்தது. பெயர் சந்திரசேகரன் என்பதும், அவர் ஒரு ரியல் எஸ்டேட்காரர் என்பதும் அந்த கார்டில் இருந்து தெரிய வந்தது.

முகவரியும் மதுரைக்காரர்தான் என்றது. அதை அப்படியே கிழித்து போட்டுவிட்டு, தன் கார்டை அந்த கார்டு இருந்த இடத்தில் வைத்தான் சந்தோஷ்! மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ் என்று அது, அவன் உத்யோகக் குறிப்போடு அந்த பெட்டியில் உட்கார்ந்து கொண்டது. ஒரு வேளை போலீஸ் வந்து சோதித்தாலும் என்னோட பெட்டி என்றால், நம்பித் தான் தீர வேண்டும். அந்த இறந்து போன நபரும் வேறு எதுவும் வைத்திருக்கவில்லை.

மிகவும் வசதியாக போய்விட்டது. மனம் முழுக்க ஒரு சந்தோஷம். ஆனாலும், நடுநடுவே மனசாட்சி விழித்துக் கொண்டு, உயிருள்ளவன்கிட்ட திருடினால் கூட பரவாயில்லை... போயும் போயும் பிணத்துக்கிட்ட திருடியிருக்கியே....' என்று கேள்வி கேட்டு உறுத்தியது.

அப்போதெல்லாம் எப்.எம்.,மில் பாட்டை சவுண்டாக வைத்து, தன்னைத் தானே சரி செய்து கொண்டான்.

திருச்சி வந்த வேலை முடிந்தது. பிரீப்கேஸை தப்பித் தவறிக் கூட கீழே வைக்காமல், கையிலேயே வைத்து தான் சுற்றினான். வேலை முடியவும் புறப்பட்டு விட்டான்.

விபத்து நடந்த இடத்தை கடக்கும்போது மட்டும் மிகவும் உறுத்தலாக இருந்தது. முதல் நாள் விபத்து நடந்த தடயமே இல்லை. போலீஸ் வந்து உடம்பை எடுத்து போய் எல்லா சம்பிரதாயங்களும் முடிந்து விட்டிருந்தன.

அப்பாடா என்றிருந்தது.

❖❖❖

ஆறு மாதம் ஓடிவிட்டது.

விபத்து நடந்த இடத்தில் கிடைத்த பணத்தில் கார் கடன் முழுவதையும் அடைத்து விட்டான். கார் வந்த நேரமோ என்னவோ, மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ் ஆக



இருந்தவன், பதவி உயர்வு பெற்று ஏரியா மேனேஜர் ஆகிவிட்டான்; சம்பளமும் கூடிவிட்டது. கூடவே அவனது எண்ணங்களிலும் நிறைய மாற்றங்கள்.

'நல்லது செய்தால் தான், நல்லது நடக்கும்...' என்று யார் சொன்னது? எப்போதும் புத்திசாலித்தனம் தான் ஜெயிக்கிறது.

மற்ற விஷயங்கள் மனதின் மாய்மாலங்கள்!

அவன் இப்படித்தான் தனக்குள் கூறிக் கொண்டான். அவ்வப்போது அந்த கார் விபத்துக் காட்சியும் அப்போது கிடைத்த பணமும் நினைவுக்கு வரும். வந்த வேகத்தில் அவனே முயன்று அதை அழித்து விடுவான்.

அவன் வண்டியும் ஏறுமுகமாகவே ஓடிக்கொண்டிருந்தது. மனைவிக்கு நிறைய நகை நட்டெல்லாம் வாங்கித் தந்தான். தன் கம்பெனி தரும் சாம்பிள் மருந்துகளை எல்லாம் தெரிந்த மெடிக்கல் ஷாப்களில் பாதி விலைக்கு விற்று காசு பார்க்கத் துவங்கிவிட்டான்.

பணம் குவிய ஆரம்பித்து விட்டது. அவன் மனைவி பிருந்தாவும், எங்கே போனாலும் அந்த ராசிக்காரில் தான் போகிறாள், வருகிறாள். அவன் அந்தக் காரை தொடுவதே இல்லை. அவனுக்கு தான் கம்பெனியே காரை தந்து விட்டதே! எப்போதும் வெளியூர் பயணம் வேறு, மனைவியோடு மொபைல் போனில் பேசிக் கொள்ளத் தான் முடிகிறது.

இப்போதுகூட திருச்சியில் ஒரு திருமணம், பிருந்தா அவனுக்கு போன் செய்து திருமணத்துக்கு இருவருமே சேர்ந்து போய் வர வேண்டும் என்றாள்.

"முடியாது பிருந்தா.. இந்த மாசம் பிசினஸே இல்லை. எதையாவது பண்ணி நான் ஒரு கோடி ரூபாய் வியாபாரத்தை கம்பெனிக்கு காட்டியாகணும். எனக்கும் சேர்த்து நீயே போய்ட்டு வா" என்று கூறிவிட்டதில் அவளுக்கும் வருத்தம்.

"சரிங்க... நான் நம்ம கார்லையே போறேன்," என்று அந்த ராசிக்காரில் தான் திருச்சிக்கு புறப்பட்டான். கல்யாணத்துக்கு என்பதால் இருக்கும் அவ்வளவு நகைகளையும் எடுத்து அணிந்து கொண்டாள். பல கல்யாணங்களுக்கு செல்வது என்பதே, தங்களின் செல்வாக்கை காட்டத் தானே?

அதிலும் பிருந்தா புது பணக்காரி வேறு...

பீத்தல் பெருமை எல்லாம் கூடித் தான் இருக்கும். மைசூர் சில்க் புடவை கட்டிக் கொண்டு அவள் காரில் ஏறியபோது, பக்கத்து வீட்டுக்கார பெண்மணிக்கு நெஞ்சை குத்தி கண்ணைக் காட்டியது.

கார் கிளம்பி விட்டது.

சந்தோஷ் தன் சகாக்களோடு மீட்டிங்கில் இருந்தான். அப்போது தான் அவனுக்கு அந்த அழைப்பு வந்தது.

"மிஸ்டர் சந்தோஷ் TN58 0002 கார் உங்க கார் தானே?"

"ஆமாம்... என்ன சார் விஷயம்?"

"வெரி சாரி மிஸ்டர் சந்தோஷ்... உங்க கார் திருச்சி போற வழியில் ஆக்சிடென்ட் ஆயிடுச்சு... உங்க மனைவி ஸ்பாட் அவுட்! கார் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரை வெச்சு, உங்க போன் நம்பரை கண்டுபிடிச்சோம். நீங்க கொஞ்சம் வேகமாக வர முடியுமா?"

"எ... எ... எந்த இடத்துல சார்... மென்று விழுங்கிய படியே கேட்டான்.

"கொட்டாம்பட்டிக்கு ஐந்தாவது கிலோ மீட்டர்ல... நீங்க வாங்க... நாங்க அங்க தான் இருக்கோம்."

போலீஸ் குரல் அடங்கியது. சந்தோஷ் வரையில் உடம்பில் உயிர் இருந்தும், இல்லாமல் போய்விட்டது.

விஷயமறிந்த அவனது சகாக்களே காரில் அவனை



தூக்கி போட்டுக் கொண்டு பறந்தனர்.

விபத்து நடந்த இடத்தை அடைந்தபோது சந்தோஷுக்குப் பி.பி. எகிறியது.

சில மாதங்களுக்கு முன் அவன் பணத்தையும், நகையையும் கொள்ளை அடித்த அதே இடம், அதே மரம்! அன்று பார்த்த அந்த மனிதரைப் போலவே பிருந்தா பிணமாகிக் கிடந்தாள்.

அவள் கழுத்தில், காதில், ஒரு நகை கூட இல்லை.

"வெரி சாரி மிஸ்டர் சந்தோஷ்."

"உங்க மனைவி நகைகளை யாரோ திருடியிருக்காங்க. நாங்க வந்து பாக்கறவரை உங்க மனைவிக்கு உயிர் இருந்தது. ஆனா, பேச முடியல. உயிர் பிரியவும் தான் உங்களுக்கு போன் செய்தோம்," என்றார் ஒரு போலீஸ்காரர்.

"என்ன மனுஷ வாழ்க்கை... எப்ப என்ன நடக்கும்ன்னு சொல்ல முடியலீங்களே..." என்றார் யாரோ ஒருவர்.

"அந்த திருடங்க மனசு வெச்சிருந்தா உங்க மனைவியை காப்பாத்தியிருக்கலாம். பாவிப் பசங்க... நகை மேல இருந்த ஆசைல உயிரைப் பெருசா மதிக்கல," என்றார் இன்னொருவர். சந்தோஷுக்கு அழக்கூட சக்தி இல்லை. ஸ்தம்பித்து நின்றுவிட்டான். வினைகள் விடுவதில்லை என்பதற்கு அவனுக்கு இன்று ஒரு சாட்சி தனியே தேவை இல்லை.

# 14. தாய்ப்பால்

ஒரு தினுசான சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் சகுந்தலா. வாசலில் மோட்டார் சைக்கிளில் ஸ்ரீதர் தெரிந்தான். கூடவே அவனது சினேகிதன் ராம்.

"வாப்பா ஸ்ரீதர்... ராம் நீயும்தான்!" - வரவேற்றாள் சகுந்தலா. ஸ்ரீதர் ஒரு சகஜ சிரிப்புடன் சோபாவின் மேல் அமர்ந்து ஷூவை கழட்டத் தொடங்கினான். ராமுவும் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

ஸ்ரீதர், சகுந்தலாவுக்கு ஒரே பிள்ளை.

ஐ.ஐ.டி.யில் எம்.டெக்கெல்லாம் படித்தவன். அந்தப் படிப்புக்கெல்லாம் சேலத்தில் நல்ல வேலை இல்லை!



கர்னாடகாவில் தும்கூருக்குப் பக்கத்தில் ஒரு நிறுவனத்தில் முப்பதாயிரம் சம்பளத்தில் வேலை பார்க்கிறான். மூன்று மாதங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஊருக்கு வந்திருக்கிறான்.

"என்ன ஆண்ட்டி... பய மூணு மாசம் கழிச்சு வந்துருக்கான். உங்க கிட்ட பெருசா ஒரு எக்ஸைட்மென்ட்டும் இல்லியே..." - ஆரம்பித்தான் ராமு.

"என்ன பண்ணணும்ங்கறே. முதல்ல இந்த காபியை குடிங்க..." - என்று காபி தம்ளரை நீட்டினாள்.

"ஏண்டா... நீயும் கேஷுவலா வந்து நிக்கறே. ஆமா... உங்கம்மா அப்பாவுக்கு எதுவும் வாங்கிட்டு வரலியா?"

"தும்கூர்ல புளிதான் ஃபேமஸ். அதைச் சுமந்துகிட்டு வரச் சொல்றியா?"

"ஏன் பக்கத்துலதானே பெங்களூர், மைசூர்லாம் இருக்கு. அங்கல்லாம் போய் வாங்கிட்டு வரலாமே?"

ராமின் மடக்கல் வேலை செய்தது. ஸ்ரீதர் மௌனமானான். காபியை சூப்பினான். அதில் சர்க்கரைக் குறையை உணர்ந்தவன் அப்படியே வைத்தான்.

"ஏம்ப்பா?"

"வழக்கம்போல் சர்க்கரை போட மறந்துட்டேன். வேற என்ன?" - இறுக்கமான குரலில் சொன்னாள். தாய் மகனிடம் பேசுவது போலவே இல்லை. ராமுவும் கவனித்தான். பேச்சை மாற்ற விரும்பினான்.

"ஆமாம், என்னடா திடீர்னு கிளம்பி வந்துருக்கே?"

"என்னமோ தோணிச்சு... அதான் ஒரு நாலுநாள் லீவு போட்டுட்டு ரயில் ஏறிட்டேன். சரி சரி... நீ போய் உன் வேலையை முடிச்சுட்டு வா. நானும் குளிச்சிட்டு ரெடியா இருக்கேன். நல்ல சினிமாவா எதுக்காவது போகலாம்."

ஸ்ரீதர் மெல்ல கலகலப்புக்கு மாறி எழுந்து நின்
சோம்பலெல்லாம் முறித்தான். ராமுவும் தன் தெ
மெட்டை தூக்கி தண்ணிக்குடம் போல இடுப்பி
வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான்.

சகுந்தலா மட்டும் அவனையே வெறித்துக் கொ
டிருந்தாள்.

"என்னம்மா... எதுக்கு அப்படி வெறிக்கறே?"

"வெறிக்காம... பொங்கலுக்கு வான்னப்போ வரலை. உன் அப்பா பொறந்த நாளைக்கு வான்னப்போ வரலை. இப்ப ஒரு காரணமும் இல்லாம திடுதிப்புன்னு வந்து நிக்கறியேப்பா..."

- சகுந்தலா அமட்டலாகப் பேசி வருந்தினாள். அப்பொழுது அவன் ஒரு இன்லண்ட் லெட்டரை எடுத்து அவள் எதிரில் நீட்டினான்.

"என்ன இது?"

"படி...."

அவளும் படிக்கத் தொடங்கினாள்.

'அன்புள்ள ஸ்ரீதர் கண்ணுக்கு!

சின்னம்மிணி ஆசிர்வாதத்துடன் எழுதிக் கொள்வது, என்ன கண்ணு... இப்படி போனா போன இடம்னு போய் உட்கார்ந்துக்கிட்டே....? இங்க உன் அம்மாவும் அப்பாவும் நீ நல்லா சாப்பிடுறியா, தூங்கறியான்னுல்லாம் எவ்வளவு கவலைப்படறாங்க தெரியுமா? அவங்கள பார்க்கவே பரிதாபமா இருக்கு கண்ணு. என்னையும் அந்த லிஸ்ட்ல சேர்த்துக்க கண்ணு. எனக்கு நீ கண்ணுலயே இருக்கே.

ஒரு பொண்ணு பெரிய மனுஷியாகற நேரம் நல்ல நேரமா இருக்கணும் கண்ணு. நான் திரண்ட நேரமே சரியில்லை. அதான் புருஷன் புள்ளைன்னு யாரும் எனக்குத் தங்கலை.



ஏதோ உன் அம்மா அப்பா தயவுல உங்க வீட்ல வேலைக்காரியா காலத்தை ஓட்டிட்டேன். உன் பாசம்தான் இந்த உலகத்துல எனக்கு வஞ்சனையில்லாம கிடைச்ச ஒரே விஷயம். இப்ப மூணு மாசமா அதுக்கும்கூட தட்டுப்பாடு. இப்ப கேக்கறேன். ஒருவாட்டி வந்துட்டுப் போ ராசா... வந்து உன் கையால ஒரு டம்ளர் பால் கொடு. உன்னை டக்காரனா வைக்க இந்த அம்மிணிக்குப் பிரியமில்லை.

இப்படிக்கு

சின்னம்மிணி

- கடிதத்தைப் படித்து முடித்த சகுந்தலா சற்றே வெளிறிய முகத்துடன் நிமிர்ந்தாள்.

"அம்மிணிம்மா இப்ப எங்க...? நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு. எட்டிக்கூட பார்க்கலையே. மார்க்கெட்டுக்கு அனுப்பியிருக்கியா?"

- சட்டையைக் கழட்டி ஹேங்கரில் மாட்டியபடியே கேட்டான்.

சகுந்தலா மென்று விழுங்கியவளாக "அவ விஷயம் முடிஞ்சு போச்சுப்பா!" என்றாள் திக்கித்திணறி. அவனுக்கு சுரீர் என்றது.

"என்னம்மா சொல்றே?"

"நேத்து காலம்பற நெஞ்சுவலி அதிகமாயிடிச்சு. உன் அப்பா டாக்டர் கிட்ட கூட்டிக்கிட்டு போனார். வழியிலேயே மூச்சு நின்னு போச்சாம்...!"

"மைகாட்... அப்புறம்?"

"நல்லவிதமா அவளை அடக்கம் பண்ணிட்டு வந்தார்...."

அப்படியே அயர்ந்துபோனவன், அறைக்குப்போய் கதவை இறுக மூடி தாழிட்டுக் கொண்டான்.

சகுந்தலா நடுவில் குளிக்க, சாப்பிட என்று கதவைத் தட்டித் தட்டிப் பார்த்து அலுத்து விட்டாள். கணவனுக்கு போன் செய்து தகவலைக் கூறவும், லஞ்ச் பிரேக்கில் அவர் தன் ஸ்கூட்டரில் பறந்து வந்தார். அவரும் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தார். ஸ்ரீதருக்கு ஏனோ எழுந்திருக்கவே பிடிக்கவில்லை. ஆனால் அப்பா - அம்மா பேசிக் கொள்வது நன்றாகவே காதில் விழுந்தது.

“இதத்தான் சகுந்தலா தாய்ப்பாசம்ங்கறது. தாய் ஆடாவிட்டாலும் சதையாடும்னு சொல்றதுக்கெல்லாம் அர்த்தம் இதுதான்.

உன்னால கொடுக்க முடியாத தாய்ப்பாலை அவ கொடுத்துக் கொடுத்து வளர்த்தா பாரு. இது அதால வந்த பாதிப்புடி.

நான் வேண்டாம் வேண்டாம்னு சொன்னேன். இல்ல குழந்தை சவலையாயிடும்னு நீதான் கேக்கல. அவளும் என்னவோ தன்பிள்ளைக்குக் கொடுக்கற மாதிரி கொடுத்தா கொடுத்தா... அப்படிக் கொடுத்தா, இப்ப பார்! அது படுத்தற பாட்ட...”

- அப்பா சொன்னதைக் கேட்ட நொடி ஸ்ரீதருக்கு உச்சிமண்டையில் ஒரு மின்னல் வெட்டியது போல இருந்தது. கடிதத்தில் சின்னம்மிணி எழுதியிருந்த வரிகளுக்கு இப்போது அர்த்தம் புரிந்தது.

- ஆவேசமாக கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். ஓடிப்போய் அப்பாவை கட்டிக் கொண்டவன் “அப்பா ரொம்ப தேங்க்ஸ்ப்பா... இப்பவாவது இந்த உண்மையைச் சொன்னீங்களே” என்றவன் ஓடிப்போய் ஃபிரிட்ஜைத் திறந்தான். பால் பாக்கெட்டுகளை அள்ளி வெளியே எடுத்தவன் ஒரு செம்பில் அதை நிரப்பிக் கொண்டான். அப்படியே திரும்பி அப்பாவைப் பார்த்தான். அவருக்குப் புரிந்துவிட்டது.

“எங்கப்பா... சுடுகாட்டுக்கா...?”



“ஆமாம்ப்பா...” அவன் குரல் கூட உடைந்து போனது.

“இந்தப் பால் கம்மிப்பா. போற வழியில ஒரு குடமே வாங்கிப்போம். புறப்படு!” என்றார் அவர் அமைதியாக.

- இருவரும் புறப்பட்டனர்.

“இருங்க நானும் வரன்..” - சகுந்தலாவும் சேர்ந்து கொண்டாள். எல்லாப் பாலையும் அங்கே தாய்ப்பால் வென்றுவிட்டதைப் பார்க்க முடிந்தது.

## 15. உயிர்மொய்

அபீஸில் வேலையே ஓடவில்லை கங்காதரனுக்கு. அடிக்கொரு தடவை தன் டேபிள் மேல் உள்ள தொலைபேசியைப் பார்ப்பதும் இழுத்து மூச்சு விடுவதுமாகவே இருந்தான். நல்லவேளை... அவன் எதிர்பார்த்தது போலவே அவன் மனைவி காந்தா அவனை அழைத்துப் பேசினாள்.

"இப்ப ரொம்ப நல்லா இருக்காங்க... பாட்டு கூட கேக்கறாங்க!" என்று சொல்லிவிட்டு அவள் முடித்துக் கொண்டாள். கங்காதரனுக்கு அதைக் கேட்டு அழுகையே வரும்போல கூடத் தோன்றியது.

பார்த்துக் கொண்டே இருந்த நண்பன் பலராமன் அருகில் வந்தான்.



"என்ன கங்கா... உன் மக கல்யாணத்துக்கு இன்னும் பத்துப் பதினைஞ்சு நாள் கூட இல்ல போலிருக்கே?"

"உம்."

"அந்த டென்ஷனா?"

"இல்லப்பா... இது என் அத்தையால வந்துருக்கிற டென்ஷன். தொண்ணூறு வயசாகுது. ஒரு மாசமா படுத்த படுக்கையா இருக்காங்க. சாப்பாடே சுத்தமா கிடையாது. உயிர் எப்ப வேணா பிரியலாம். ஆனா எங்க மகள் கல்யாணத்துக்கு முந்தியோ இல்ல அன்னிக்கோ மண்டையப் போட்டு கல்யாணத்தை ஒரு வழி பண்ணிடுவாளோங்கற கவலைப்பா..."

ஒரு கல்யாணத்துக்கு எத்தனையோ விதமாய் இடைஞ்சல்கள். அந்தப் பாட்டி இடைஞ்சல் பலராமனுக்கே பெரிய பரிதாபத்துக்குரியதாய்த் தோன்றியது.

கங்காதரனின் அத்தை பெரிய நாயகியும் பாவம். பதினாறு வயதில் கல்யாணம்... பதினெட்டு வயதில் விதவை! 72 வருஷமாய் அவள் வாழ்ந்ததெல்லாம் பிறந்துவிட்ட காரணம் ஒன்றிற்காகவே... இப்போது சாவதிலும் கூட அவள் வரையில் இழுபறி...!

கங்காதரன் மகள் திவ்யாவும்கூட பாவம்தான். சரியான செவ்வாய் தோஷ ஜாதகம். 361 ஜாதகம் பார்த்து ஒரு வரன்தான் கூடி வந்திருக்கிறது.

ஆனால் என்ன புண்ணியம்?

அவள் வரையில் அத்தைப் பாட்டி ரூபத்தில் விதி வேலை காட்டும் போலத் தெரிகிறது.

எங்கே கல்யாணத்துக்கு முதல் நாளோ இல்லை அதற்கும் முதல் நாளோ மண்டையைப் போட்டு விடுவாளோ என்கிற அச்சம் அவளைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தக் குடும்பத்துக்கும் நல்ல காரியத்துக்கும் [illegible] எப்போதுமே சிக்கல்தான். ஒரு நல்லதுக்கு நா[illegible] குறிக்கும்போதுதான் யாருக்காவது விபத்து நடக்கும் தூரத்து உறவுகளில் ஒன்று அதற்காகவே காத்திருந்த[illegible] போல உயிரைவிட்டு அந்த நல்ல காரியத்தை தள்ளி[illegible] போட வைக்கும்.

காந்தாவுக்கும் கங்காதரனுக்குமே அப்படித்தான் கல்யாணமாயிற்று... இப்போது அது மகள் வரையிலும் கூட தொடர்கிறது.

இதனால் கூடிக் கூடி பேசிக் கொள்கிறார்கள்.

அந்தப் பேச்சில் டாக்டரை கூப்பிட்டு கொஞ்சம் காசைக் கொடுத்து ஏடா கூடமாய் ஒரு ஊசியைப் போட்டு கிட்டத்தட்ட கருணைக் கொலை செய்தால் என்ன என்பதுதான் கேள்வியே...!

அவ்வப்போது டெலிபோன் மூலம் ஆபீஸில் இருக்கும் கங்காதரனையும் கூப்பிட்டு "அப்படியே தான் இருக்கு... நாலு ஸ்பூன் பால் உள்ள போச்சு. அஞ்சாவது ஸ்பூன் வழிஞ்சிடுச்சு. சரி ஒரு முடிவுக்கு வந்தாச்சுன்னு நினைச்சேன். பார்த்தா கண்ணை நல்லா முழிச்சுப் பாக்கறாங்க. ஹூம் என்ன உடம்போ?" என்று காந்தாவும் அலுத்துக் கொண்டாள்.

டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்து விட்டு ஒரு வறட்டு சிரிப்புச் சிரித்தார். அறைக்கு வெளியே வந்து சூழ்ந்து கொண்ட சொந்தங்களின் முன்னால், "தொண்ணூறு வயசு பாடின்னாலே எங்களுக்கே குழப்பம்தான். உடம்புல எந்த பாகத்துலயும் தெம்பு கிடையாது. ஆக்ஸிஜன் இன்டேக்கும் கம்மி... ஆனாலும் சிலர் மூணு நாலு வருஷம்லாம் உயிரோட இருப்பாங்க" - என்று அவர்களை எல்லாம் போட்டுக் கலக்கினார்.

"டாக்டர்! கல்யாணம் நல்லபடியா நடந்து முடியணும். அதுவரை ஆஸ்பத்திரியில செயற்கை சுவாசம்



[illegible] நாட்களை கடத்த முடியாதா?" - கங்கா[illegible] [illegible]தான் கேட்டான்.

"எதுக்கு... சுவாசம் இப்ப பிரச்னை இல்லையே? [illegible]போட மெட்ட பாலிசத்துல அப்பப்ப கொஞ்சம் [illegible]ப்பு. அதுக்குக் காரணம் முதுமை. மற்றபடி இவங் [illegible]க்கு எந்த நோயும் இல்லையே...?"

"ஐயோ டாக்டர்... புலி வருது கதையா பய[illegible]முறுத்திக்கிட்டுல்ல இருக்காங்க. என் பெண்ணுக்கு படாத பாடுபட்டு மாப்ளை பாத்திருக்கேன் தெரியுமா?"

"அதுக்கு என்ன பண்ண முடியும் மிஸ்டர் கங்காதர்? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இதைப் புரிஞ்சுக்க முடியாத அளவு மோசமானவங்களா என்ன...? கல்யாணத்தை தள்ளிப் போட்டா போச்சு."

"இல்ல டாக்டர். ஒரு தடவை தட்டினா தட்டிகிட்டே போகும். நாளைக்கு என் மக வாழப் போற வீட்ல சின்னதா ஒரு சிக்கல்னாலும் இந்தத் தள்ளிப்போன காரணத்தைச் சொல்லிப் பேசி என் மக வாழ்க்கைய நாசமாக்கிடுவாங்க..."

"இதெல்லாமே அநாவசியமான பயங்கள்..."

"நியாயமான பயம் டாக்டர். இந்த விஷயத்துல என் குடும்பத்துக்கு ஒரு சாபமே உண்டு. அது உங்களுக்குத் தெரியாது."

"சரி.. அதுக்கு நான் என்ன பண்ண முடியும். இன் ஃபாக்ட் ஸ்லீப்பிங் டோஸை கொஞ்சம் ஹெவியா கொடுத்தாலேகூட அவங்க கதை முடிஞ்சிடலாம். ஆனா நான் அதை ஒரு பெரிய பாவமா நினைக்கிறேன். நான் போற உயிரை மீட்க மட்டுமே எதையும் செய்வேன்..."

- டாக்டர் நாசூக்காக மறுத்து விட்டு கிளம்பி விட்டார். தனி அறைக்குள் திவ்யா அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் மனதுக்குள் பெரிய நாயகியைப் போட்டு சபிக்க ஆரம்பித்து விட்டனர்.

"கெழட்டு முண்டம்... இதுவும் வாழலை. வாழ
போற ஒண்ணையும் வாழ விடாம இப்படி இழுத்துகிட்டு
இருக்கே..."

"கங்கா யோசிக்காதடா... அவ வாழ்ந்து முடிச்ச[illegible]
உன் பொண்ணு வாழ வேண்டியவ. கல்யாண காரியங்கள்
இவளால அப்படியப்படியே நிக்குது பார். அந்த டாக்டர்
சொன்ன ஸ்லீப்பிங் டோஸை உன் கையாலேயே போட்டு
விடுடா. அப்படியே தூக்கத்துலயே போய்ச் சேரட்டும்"
- கங்காதரனின் மாமா அழுத்தமாகவே தூண்டி
விட்டார்.

இன்றைக்கு பெரியநாயகி கதை முடிந்தாலும் மூன்று
நாள்தான் துக்கமும் தீட்டும்... அப்புறமாய் நெருடலே
இல்லாமல் கல்யாண காரியங்களில் இறங்கிவிடலாம்.

"சரி மாமா... நீங்க போய் ஐயரை வரச் சொல்லுங்க.
சங்கு ஊதி, கறுப்பு வண்டின்னு எல்லாத்துக்கும் சொல்லி
டுங்க. நான் வரேன்!"

- சற்று ஆவேச தொனியோடு கங்காதரனும்
ஸ்லீப்பிங் டோஸ் மற்றும் இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ஜ் சகிதம்
அறைக்குள் போய் கதவையும் தாழிட்டுக் கொண்டான்.
அதைப் பார்த்த திவ்யாவுக்கு இதய பாகம் முழுக்கவே
உறைந்து போனமாதிரி இருந்தது.

தன் கல்யாணத்துக்காக அப்பா ஒரு கொலைகார
னாக கூட ஆகவேண்டியிருக்கிறதே...!

அழுகை பீறிட்டது. ஓடிப்போய் கங்காதரனைத்
தடுத்து 'அந்த உயிர் போகும் போது போகட்டும்.
எனக்காக நீ கொலைகாரனாகாதே' என்று சொல்லவும்
அவள் மனது துடித்தது.

அதை செயல்படுத்தவும் விரும்பி வேகமாக அறைக்
கதவை நெருங்கியவள் ஆவேசமாக தட்டுவதற்காக கையை
ஓங்கும் முன், கதவு திறந்து கொண்டது.



அப்பால் கங்காதரன்.

"அப்பா..."

"உன் அத்தைப்பாட்டி உன்னைப் பாக்கணும்கறா."

"என்னையா?"

"ஆமாம்... சீக்கிரம் போ..."

அவர் தூண்ட, அவளும் உள்ளே போனாள்.
படுக்கையில் வலிந்து முயன்று அமர்ந்த நிலையில் இருந்
தாள் பெரிய நாயகி.

திவ்யாவைப் பார்க்க முடியாமல் பார்த்தாள்.

"பாட்டி..." திவ்யாவும் லேசான கேவலுடன் முன்
சென்று நின்றாள். பெரிய நாயகியும் உட்காரச் சொல்லி
ஜாடை காட்டினாள். பக்கத்தில் சிரிஞ்ஜும் மருந்து
பாட்டிலும் தாறுமாறாகக் கிடந்தன.

"திவ்யாம்மா... பாட்டி புறப்பட்டுட்டேன். இனி உன்
கல்யாணம் நல்லபடியா நடக்கும். எல்லார் வருத்தமும்
எனக்குப் புரியுது. பாவம் உன் அப்பன்! அவனை கொலை
காரனாக்க நான் விரும்பலை. தொண்ணூறு வயசுல இந்தக்
கெழவிக்கு தற்கொலையாலதான் முடிவுங்கறது விதி.
போகட்டும்... எல்லாம் என்னோட போகட்டும். உன் கிட்ட
இருந்து எல்லாம் நல்லபடியா தொடங்கட்டும். உன்
கல்யாணத்துக்கு இந்தப் பாட்டியோட மொய் என்ன
தெரியுமா? என் உசுர்தான்..."

அந்தக் கடைசி வார்த்தையோடு பெரிய நாயகியின்
தலை தொங்கிப் போனது. "பாட்டீ...!" - திவ்யாவின் பதில்
அழுகையில் அந்த வீடே நடுங்கியது.



## 16. கருத்தம்மா

முத்துப்பட்டி கண்மாய்க் கரை ஓரம் பூதாகரமாக வளர்ந்திருந்தது அந்த ஆலமரம்! விழுதுகள் தரையைத் தொட்டு, அவையும் மரத்தைத் தாங்கத் தயாராகி விட்டிருந்தன. நிழலில் அங்கங்கே சிமெண்டு பெஞ்சுகள்... பல பெஞ்சுகளில் சாய்மான முதுகுப் பகுதி உடைந்து போய் தாங்கள் கவனிப்பாரற்றுப் போய்விட்டதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

எப்பொழுதும் ஊர்ப்பிள்ளைகள் ஓடிப்பிடித்து விளையாடியபடி இருக்க, சிமெண்டு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு பெருசுகளும் அரசியல் முதல் அன்றாடப்பாடுவரை பேசிக் கொண்டிருந்த காலமெல்லாம் போயே போய் விட்டதாகத்தான் தோன்றியது.



ஒரு அனாதை போல தனித்து விடப்பட்டுவிட்ட அந்த மரத்துக் கீழேயும் ஒதுங்குவதற்கு இடம் தேடி ஒரு குடும்பம் வந்தது தான் வேடிக்கை.

காளிமுத்துவும் அவன் மனைவி கருத்தம்மாவும் அவர்களின் கைக்குழந்தையான செல்லப்பாண்டியும் தான் அவர்கள்!

காளிமுத்துவுக்கு பாத்திரங்களுக்கு கலாய் பூசுவது தான் தொழில்... ஒரு ஊருக்குப் போனால் குறைந்தது மூன்று மாதம்!

மூன்று வருஷத்துக்கு ஒரு முறை என்று முறை வைத்துக் கொண்டு ஊர் ஊராக அவனும் செல்வதால் ஊர்க்காரர்களுக்கும் அவன் ஒன்றும் புதியவனில்லை. அப்படித்தான் முத்துப்பட்டி கண்மாய்க் கரை ஆல மரத்துக்குக் கீழேயும் வந்து டேரா போட்டான்.

கண்மாய்க் கரை மேல் 'டுர்ர்ர்' என்று ஒரு எம்-80 ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தான் பஞ்சாயத்து போர்டு வைஸ்பிரசிடென்ட் அருணாசலம். டென்ட் எழும்புவதை வைத்து வண்டியை அவர்களை நோக்கித் திருப்பினான். காளிமுத்து கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஐயா, கும்புட்றேங்க..."

"ஓ... ஈயம் பூசற காளியப்பனா?"

"காளிமுத்துங்க..."

"இது உன் சம்சாரம் வெள்ளையம்மாதானே?"

"ஐய்ய... மாத்தி மாத்தி சொல்றீங்களே... இது பேர் கருத்தம்மா..."

"ஆங், கருத்தம்மா..." என்ற அருணாசலத்தின் பார்வை, கருத்தம்மா பக்கம் திரும்பியது. பால் ஊறிப் பருத்த அவளது மார்புகளில் ஒரு வழிச்சல். திமுதிமு என்றும் ஒரு முட்டல்... அருணாசலம் ஒரு கள்ளப்பார்வை

ஸ்பெஷலிஸ்ட்! அது புரிந்தோ என்னவோ கருத்தம்மா தன் சேலை முந்தியைப் பரவலாக இழுத்து விட்டுக் கொண் டாள். அவனும் நாசூக்காகப் பார்வையை விலக்கிக் கொண்டு காளி முத்துவிடம் ஊன்ற ஆரம்பித்தான்.

"மழைக் காலமா இருக்குதே... இந்த டென்ட் தாங்குமா?"

"தாங்கித்தானுங்களே ஆவணும்!"

"கவலைப்படாத... எதாவது பிரச்சனைன்னா ஊருக் குள்ள எனக்கொரு வீடு கெடக்குது. காலியாதான் இருக்கு அங்க வந்து இருந்துக்க."

"ரொம்ப சந்தோசங்க..."

"சரி சரி... தொழிலப் பாரு. வேற எதாச்சும் ஒத்தாசை தேவைப்பட்டா கருத்தம்மாளை அனுப்பு. செய்யறேன்..." என்ற அருணாசலத்தின் ப்பார்வை திரும்பவும் அவள் மார்பைத் தான் அளந்தது. அவளுக்குக் கூசியது. பக்கத்தில் ஒரு சாக்கு கிடந்தது. எடுத்து போர்த்திக்கொள்ளக்கூட அவள் மனது துடித்தது. இருந்தும் அவனைத் தவிர்த்து விட்டு, கூட்டிய குப்பைகளை அதே சாக்கில் அள்ளித் தூரச் சென்று கொட்டுவதற்காகப் போனாள்.

போன இடத்தில் புதருக்குள் அந்தக் காட்சியைக் கண்டாள். தெருநாய் ஒன்று அங்கே நான்கு குட்டிகளைப் போட்டிருந்தது. குட்டிகள் அந்த நாய் மடியை முட்டி முட்டி பால் குடித்துக் கொண்டிருந்தன.

கருத்தம்மாவுக்கு ஜிலீர் என்றது. அவளும் தாய்மைக் குள் மார்பு வழிய பாலைச் சுமந்து கொண்டிருப்பதால் அந்த தாய்நாயின் பரவசத்தை அவளால் நொடிக்குள் கற்பனை செய்து பார்க்கவும் முடிந்தது. குப்பையைக் கூடக் கொட்டத் தோன்றாமல் நின்று விட்டாள்.

"ஏ புள்ள... அங்க என்னத்த பாத்து கிட்டிருக்கே... வா இப்படி..." - காளி முத்து அவள் பரவசத்தைக் கலைத்து அருகில் அழைத்தான்.



"நீ கூட்டிப் பெருக்கி அடுப்புக்குக் குழி போட்டு வை. நான் நாலு தெரு போய் ஒரு சவுண்டு கொடுத்துட்டு வந்துட்றேன்..." என்றவன் ஓங்கியை ஒரு தினுசாக ஏற்றிக் கட்டிக் கொண்டு டென்ட்டை ஒட்டிப் படுத்த நிலையில் கிடந்த சைக்கிளை எடுத்து, கழன்று கிடந்த அதன் செயினையும் சரியாகப் பொருத்திக்கொண்டு, ஏறி மிதிக்கத் தொடங்கினான். அங்கேயே ராகமான அவனது குரலும் 'பண்ட பாத்ரத்துக்கு ஈயம் பூசறதேய்ய்..!' என்று ஆரம்பமாகிவிட்டது.

கருத்தம்மா அங்கும் இங்கும் கிடந்த செங்கற்களைப் பொறுக்கி எடுத்து வந்து ஆலஞ்சிறாய்களை வைத்தே அடுப்பு மூட்டி சமைப்பது என்கிற முடிவுக்கு வந்து விட்டாள்.

புதரிலிருந்த நாயும் அதன் குட்டிகளும் வெளியே வந்து விளையாடத் தொடங்கின. கருத்தம்மா அதை ரசித்தாள். அவை அவளை அன்னியமாக நினைக்காமல் அவள் டென்ட்டுக்குள் நுழைவதும், மரத்தைச் சுற்றி வருவதுமாக, கள்ளம் கபடமற்ற விளையாட்டு அங்கே நிகழ ஆரம்பித்துவிட்டது.

பொங்கி முடித்த சோற்றில். சில கவளங்களை குட்டிக்கும் போட்டாள் கருத்தம்மா. அவற்றுக்கு ஏனோ அது பிடிக்கவில்லை. உடனே அவள் அதை அப்படியே தாய் நாய்க்கு வைத்தாள். வைத்த வேகத்தில் அவ்வளவு சோற்றையும் விழுங்கி விட்டது. அவ்வளவு பசி!

அவளுக்கும் புரிந்தது... நான்கு குட்டிகளுக்கல்லவா அது பால் தர வேண்டும்?

❖❖❖

ஒரு வாரம் ஓடிவிட்டது! காளிமுத்து சரியாக பாத்திரங்கள் கிடைக்காத விரக்தியில் இருந்தான். ஊர் முழுக்கச் சுற்றி முடித்துவிட்டு மரத்தடிக்கு வரும்போதே அவன் போதையோடு வந்தது தான் - கொடுமை!

எவ்வளவுதான் உடம்பு வலி என்றாலும் அவன் குடித்து அவள் பார்த்ததில்லை. அவனது புதுப்பழக்கம் அவள் மனதில் அமிலத்தையே சுரக்கச் செய்து விட்டிருந்தது.

ஒருநாள் ஊருக்குள் மளிகை வாங்கப் போகும்போது கடைக்காரர் மூலமாக அவன் போதைக்குக் காரணம் தெரியவந்தது. "என்னம்மிணி... உன் புருஷன் தெனம் தண்ணிய போட்டுட்டு வர்றானாக்கும்? எல்லாம் இந்த வைஸ்பிரசிடெண்ட்டு அருணாசலம் பயலோட வேலை பாத்து... சரியான பொம்பள பொறுக்கிப்பய... காரணம் இல்லாம இப்படி தண்ணிய வாங்கித் தரமாட்டான்." என்றார் அவர்.

கருத்தம்மாவுக்கு பிடரியில் யாரோ கந்தகத்தை கொளுத்தியதுபோல இருந்தது. ஆலமரத்தடிக்கு வந்தவளிடம் அதே நினைவு... காளிமுத்து வந்தவுடன் முதல் காரியமாக இந்த ஊரைவிட்டே கிளம்பிவிட வேண்டும் என்கிற ஒரு வெறி தணல் அடுப்புக்குள் கரித்துண்டு பழுப்பதுபோல் அவளுக்குள் பழுக்க ஆரம்பித்துவிட்டிருந்தது.

இரவு... ஊரடங்கிய நிலையில் காளிமுத்துவும் தன் ஓட்டைச் சைக்கிளில் அதுபோட்ட சப்தத்துடன் வந்து சேர்ந்தான். வந்தவன் சைக்கிளை பொத்தென்று போட்டு விட்டு வந்து கட்டிலில் விழுந்தான்.

ஆலமர விழுது ஒன்றில் லாந்தர் கட்டப்பட்டு லேசான வெளிச்சம். கருத்தம்மா அவனருகே வந்து பார்த்துவிட்டு கண்ணீரோடு அப்படியே கட்டிலை ஒட்டி அமர்ந்து விட்டாள். அப்படியே அயர்ந்துவிட்டவளை நாயின் குரைப்பு சப்தம்தான் எழுப்பி விட்டது. ஒரு உருவம் இருட்டுக்குள் அடர்வாக அசைந்து அவளை நோக்கி வருவதும் தெரிந்தது.

"யாரு?" - அவள் கேட்கும் முன் அந்த உருவம் அவள் வாயைப் பொத்த முயன்று, படுக்கையில் தள்ளியது.



ஆனால், அதுவரை குரைத்துக் கொண்டிருந்த நாய் அந்த உருவத்தின் மேல் பாய்ந்து கடித்துக் குதறவும், அந்த உருவம் வந்த வேகத்தில் திரும்பி ஓடத் தொடங்கியது.

கருத்தம்மா அப்படியே நொறுங்கிப் போய்விட்டாள்!

விடிந்தது!

காளிமுத்துவின் முகத்துக்கு மேலேயே சூரியனின் கதிர் ஒன்று பொசுக்குவது போலத் தாக்கியும் அவன் கண்களைத் திறக்கவில்லை. ஒரு குடம் தண்ணீரை அவன் முகத்தில் கொட்டவும்தான் கண்விழித்தான். விழித்த வேகத்தில், "அறிவு இருக்குதா புள்ள... என்னா பழக்கம் இது?" என்று சீறிவிழுந்தான். அப்போதுதான் அவள் முகத்தில் சில இடங்களில் நகக்கீறல்களைப் பார்த்தான். கருத்தம்மா டென்ட்டை ஒட்டி அவ்வளவு சாமான்களையும் மூட்டை கட்டி வைத்திருப்பதையும் பார்த்தான்.

"புள்ள... என்னாச்சு?"

"..........."

"உன்னத்தான் புள்ள... வாயத்திறந்து பேசு..."

"நான் என்னயே தொலைக்க இருந்தேன்யா..."

அவள் ராத்திரி நடந்ததைக் கூறி முடித்தாள். அவனும் அதைக் கேட்டு சற்று மிரளத்தான் செய்தான்.

"சரி... நான் இப்பவே வைஸ்பிரசிடென்ட் ஐயாகிட்ட சொல்றேன். நீ கவலப்படாதே... நாம அவரோட வீட்டுக்கே குடி போய்டலாம்..."

"பைத்தியக்கார கோட்டிக் கிறுக்கா... இது அந்தாள் வேலைதான். ராத்திரி வந்தது அந்த நாயேதான். கெடுக்க வந்தவன்கிட்டயே நாயம் கேக்கப்போறியா நீ?"

"அவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா?"

"அதான் உனக்கு தினம் தண்ணி வாங்கி ஊத்திவிட்டு அனுப்பறானா?"

“வாய மூடு... அவரப்பத்தி தப்பால்லாம் பேசாதே.” பேச்சோடு போய் தரையில் கிடந்த சைக்கிளைத் தூக்கி நிறுத்தியவன் அதில் ஏறிப் போயே போய்விட்டான்.

**ம**திய நேரம்... காலையில் போன காளிமுத்து வரவே யில்லை. கவலையோடு கருத்தம்மா ஊருக்குள் நுழைந் தாள். தெருத்தெருவாக அலைந்தவள் மாரியம்மன் கோயில் அருகே வந்தபோது குபீர் என்றது.

காளிமுத்து கோயில் மதில் சுவரை ஒட்டி தலைகுப்புற விழுந்து கிடந்தான். அப்படியொரு போதை! யாரோ அவள் நெஞ்சில் மண்ணைக் குழைத்து மிதிப்பது போல இருந்தது. கோயிலுக்கு வெளியே பூக்கடை போட்டிருந்த கிழவிக்கும் காளிமுத்துவின் மனைவிதான் கருத்தம்மா என்பது தெரிந்திருந்தது.

“வா தாயி... பாத்தியா உன் புருசன் லட்சணத்தை! கள்ளச்சாராயம் குடிச்சாகூட பரவால்ல... உன் புருசன் குடிச்சிருக்கிறது கலக்கமுட்டிங்கற மோசமான சரக்கு. இதை ஒருத்தன் குடிக்க ஆரம்பிச்சிட்டா தா... உன்ற இருக்காளே மாரியாத்தா... இவளால கூட காப்பாத்த முடியாது...” - கிழவி சொன்னது அவளை நெருப்புக் குழிக்குள்ளேயே பிடித்துத் தள்ளி விட்டதுபோல இருந் தது.

“சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... அந்த அருணாசலம் பயதான் கலக்கமுட்டிய தயார் பண்ணி விக்கறவன். கொள்ள குடும்பங்களை இதாலேயே அழிச் சிருக்கான். உன் புருசன் கண்ணு முழிச்சி பாக்கறதுக்குள்ள அவனை எப்படியாவது தூக்கிகிட்டு இந்த ஊரைவிட்டே ஓடிப்போயிடு. இல்லாட்டி நீ இவனை மீட்கவே முடி யாது!” - கிழவி ஒருவித குமுறலோடு முணுமுணுத்தாள்.

கருத்தம்மா ஆலமரத்தடியை நெருங்கியபோது அவளுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. குட்டி நாய்களுக்கு நடுவே தாய்நாய் செத்துக் கிடந்தது. அருணாசலம்தான் விஷம் கலந்த பிரியாணியை அதற்குப்



போட்டு அதன் கதையை முடித்திருந்தான். குட்டி நாய்கள் தாயின் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து கூச்சல் இடுவதில் அவள் இதயமே அவிந்து போயிற்று. பேசாமல் போய் டெண்ட் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

நள்ளிரவில் திருடனைப் போல அருணாசலம் திரும்ப வந்தான். இருளில் டார்ச் லைட்டை அடித்து அவன் அவளைத் தேடினான். கட்டிலில் அவள் படுத்திருப்பதைப் பார்த்து மெல்ல நெருங்கினான். பூனை போல நெருங்கி யவன் குனிந்தபோது இடுப்புக்குக் கீழே முன்புறமாக விசுக்கென்று ஒரு உதை. ஒரே உதைதான். ஆனால் ஆவேசமான உதை!

கத்தக்கூட திராணியற்று அப்படியே சுருண்டு விழுந்து விட்டான்!

❖❖❖

**வி**டிந்தது!

அருணாசலத்தைச் சுற்றி ஒரே கூட்டம். உயிர் இருக்கிற மாதிரிதான் தெரிந்தது. ஆனால், மரத் தடியில்தான் கருத்தாம்மாவோ அவளது பொருட்களோ எதுவுமில்லை.

“இங்க இருந்த பொண்ணு ஒரு வண்டில அம்புட்டை யும் அள்ளிப் போட்டுகிட்டு போய்கிட்டிருந்துச்சு. அவ புருஷனும் வண்டிக்குள்ள கிடந்தான். வெவரமான பொண்ணுதான்... நம்மாளு பாடுதான் போவப்போவ தெரியும் போல...” என்றார் ஒரு ஊர்க்காரர். அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்தார்.

அந்த நாய்க்குட்டிகளையும் காணவில்லை. அங்கே தாய் நாயின் சமாதி இருந்தது. அதன் முன்னே ஒரு அகல் விளக்கு எரிந்து முடித்திருந்தது.

## 17. என்னை வென்றேன்

விமானம் புறப்படத் தயாராக இருந்தது. காக்பிட்டுக்குள் இருந்து பைலட்கூட சற்றுக் குழறலான ஆங்கிலத்தில் பேசினார். அப்போதுதான் சிவகுமாருக்கு அருகிலிருந்த காலி சீட்டில் வந்து அமர்ந்தார் அந்த மாபெரும் நடிகர்!

மொத்த விமானமே திரும்பித் திரும்பிப் பார்த்தது.

பணிப்பெண்கள் அந்த நடிகரைத் தேடித்தேடி வந்து விஷ் செய்தனர். அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த சிவகுமாரைக் கூட சிலர், 'கொடுத்து வைத்தவன்' என்பது போலப் பார்த்தனர்.



சிவகுமாரும் அந்த நடிகரைப் பார்த்தான். அவர் அவனைப் பார்த்து, 'ஹலோ' என்றார்.

அவர் ஒருவரைப் பார்த்து ஹலோ சொல்வதும், லாட்டரியில் லட்ச ரூபாய் பரிசு விழுவதும் கிட்டத்தட்ட ஒன்று என்பதுதான் பலர் கருத்து.

ஆனால், சிவகுமார் அவருக்கு ஒரு பதில் ஹலோ கூட சொல்லவில்லை. மாறாக ஜன்னல் வழியாக விமான நிலைய ஓடுதளத்தைப் பார்த்தான். அதில் ஒரு தனியார் நிறுவன விமானம் குடியரசு தின அணிவகுப்பில் மெதுவாகச் செல்வதுபோல் நகர்ந்தபடி இருந்தது. பின்னாலேயே நூறு மீட்டர் தொலைவில் இன்னொரு விமானம்.

சென்னை விமான நிலையம் மெல்ல கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட் போல மாற ஆரம்பித்து விட்டதாக அவனுக்குள் ஒரு எண்ணம்.

அவன் தன்னைப் பொருட்படுத்தாதபடி அமர்ந்திருப்பது அந்த மகா நடிகரை சற்று நிரடியதோ என்னவோ? கன்னத்தில் கைவைத்தபடி ஒரு சாய்வுப் பார்வையாக அவனையே பார்க்கத் தொடங்கிவிட்டார். இடை இடையே பணிப்பெண்கள், பயணிகள் சிலர் தந்ததாகக் கூறி ஆட்டோகிராப் நோட்டை கொண்டு வந்து தந்து, 'எக்ஸ்க்யூஸ் மீ சார்' என்று தங்களின் செயற்கைச் சாயம் பூசிய உதட்டைத் திறந்துகொண்டு சிரித்தனர்.

அவரும் மறவாமல் தனது பாணிப்படி, 'தமிழ் வாழ்க, தாயை மறவாதே' என்று எழுதி ஒரு வளை கோட்டை கையெழுத்தாகப் போட்டுக் கொடுத்தார். சிவகுமார் மட்டும் திரும்பவே இல்லை! விமானம் பெரிதாக சப்தம் எழுப்பியபடி நகரத் தொடங்கியது. அந்த நடிகர் சீட் பெல்ட் போட மறந்திருந்தார். உடனே ஒரு பணிப்பெண் ஓடிவந்து அவருக்கு அவள் கையாலேயே போட்டு விட்டாள்.

அப்போது அவள் கை அந்த மகா நடிகரின் மேனி மேல் அங்கும் இங்குமாகப் பட்டது. அவள் வரையில்

அமுதத்துளிகளே மேலே பட்டது போல இருந்திருக்க வேண்டும்.

சிவகுமாரும் அதைக் கவனித்தான்... அவனுக்குள் சற்றே பின்னோக்கிய நினைவுகள்!

❖❖❖

அன்றைக்கு பொதுத் தேர்வு. சிவகுமாருக்கு சவால் விடும் கணிதப் பரீட்சை. அன்றைக்குத்தான் அந்த மகா நடிகர் இரு வேடங்களில் நடித்த படமும் ரிலீஸ்..

கணிதத்தை மகா நடிகர் வென்று விட்டார். சிவகுமார் தியேட்டர் வாசலில் இருந்தான். அவன் முன்னால் அவருடைய எண்பதடி உயர கட் அவுட்! அதன் தலை பாகத்தில் ஒரு விடலை நின்று கொண்டு, ஒரு குடம் நிறைய பாலை கவிழ்த்துக் கொண்டிருந்தான். கீழே அனேக விடலைகள் அதைப் பார்த்து கை தட்டிக் கொண்டிருந்தனர். ஒருவன் தொண்டை கிழிய விசில் அடித்தான். இன்னொருவனோ போட்டிருந்த சட்டையைக் கழற்றி தலைக்கு மேலே விறுவிறுவென்று சுழற்றி, தனது வேகத்தைக் காண்பித்தபடி இருந்தான்.

'கும்தலக்கடி கும்மாவா... தலைவன்னா சும்மாவா?' என்று அதிரடி கோஷம். அதைத் தொடர்ந்து 'விஷ்க்... விஷ்க்...' என்று சீரான விசில் சப்தம். சிலபேர் கைகளில் பாடப் புத்தகங்கள். சிலர் கைகளில் கூடவே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

இந்தியாவைப் பொருத்தவரை IAS, IPS எல்லாம் சும்மா...! விஞ்ஞானி, புலவன், விளையாட்டு வீரன் என்று எல்லோருமே ஒரு சினிமா நடிகனுக்கு பின்னால்தான் என்கிறாற்போல இருந்தது.

அந்த பொதுத்தேர்வில் சிவகுமாரும் தோற்றுப் போனான். இவனைப் போன்றவர்களுக்காகத்தானே



அடுத்த இரு மாதங்களிலேயே பரீட்சை வைக்கிறது அரசாங்கம். அதில் எழுதித்தான் தேறினான்.

அப்படியும் பெரிதாக மதிப்பெண் இல்லை. எஞ்ஜினியரிங் கல்லூரி பக்கமெல்லாம் திரும்பிக்கூட பார்க்க முடியவில்லை. போனால் போகிறது என்று ஐடிஐ-யில் மெஷினிஸ்ட் கிரைண்டர் படிப்புக்கு இடம் கிடைத்தது. அதைத் தொடர்ந்து ஒரு தொழிற்சாலையில் 2000 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. மூன்று ஷிப்ட் உத்தியோகம் ஊரே தூங்கும்போது - அவ்வளவு ஏன் - தெரு நாய் கூட தூங்கிவிடும்... சிவகுமாரால் தூங்க முடியாது. பகலிலும் தூங்க வழி இல்லை. அவன் தங்கி இருந்த மாடி அறை வீட்டுக்கு நேர் எதிரே ஒரு டீக்கடை— அந்த கடைக்காரருக்கு அவரது ரேடியோ பாடியபடியே இருக்க வேண்டும். அது ஒரு நான் ஸ்டாப் நான்சென்ஸ்.

மொத்தத்தில் சிவகுமாரை சினிமா துரத்தித் துரத்தி வேட்டையாடியது. எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாகத் தான் புரிந்தது. அவன் மிக நேசித்த அந்த மகா நடிகர் படத்துக்கு படம் கோடிகளில்தான் சம்பளம் வாங்கினார். அவனுக்கோ இரண்டாயிரத்தைத் தரண்டமுடியவில்லை.

சிவகுமாருக்கு அவனது பிறந்தநாள்கூட என்று எனத் தெரியாது. ஆனால், அந்த மகா நடிகர் பிறந்த நாள் தெரியும்! ஒரு முறை அவர் பிறந்த நாளைக் கொண்டாட வேலைக்கு லீவு போட்டுவிட்டு சென்னைக்குப் போய் அந்த நடிகர் வீட்டு முன்னால் நாய்போல காத்துக் கிடந்து கடைசியாக அவர் டாட்டா காட்டி தரிசனம் தந்திட, அதை பார்த்துவிட்டு வரும் வழியில் பஸ் விபத்து ஏற்பட்டு, மணிக்கட்டு எலும்பு முறிந்து, ஒரு மாசம் வரை வேலைக்கு வர முடியாதபடி மெடிக்கல் லீவு போட்டதில், அந்த வருஷத்திய கன்ஃபர்மேஷன் மேலும் ஒரு வருஷம் தள்ளிப் போய் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது.

❖❖❖

இன்று சிவகுமார் தானே ஒரு மினி இண்டஸ்ட்ரி நடத்தும் குட்டி தொழிலதிபர். இப்போதுகூட ஜியானா வுக்கு போய் ஒரு மெஷின் வாங்கத்தான் விமானம் ஏறியுள்ளான். பக்கத்திலேயே அவனது உயிருக்குயிரான மகா நடிகரே வந்து உட்காரவும் அவனுக்கு பகீர் என்றாகிவிட்டது.

பழைய மயக்கங்களும் அதனால் ஏற்பட்ட சறுக்கல்களும் ஞாபகத்தில் வந்தபடியே இருக்கின்றன. பல்லைக் கடித்தபடி விண்டோ வழியே வெளியே பார்த்தான். தப்பித்தவறிக் கூட திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், மகா நடிகருக்குத்தான் பல்லிடுக்குத் தேங்காய் துணுக்காக அவன் செயல் நெருடிக் கொண்டே இருந்தது.

தன்னைப் பார்த்தாலே காலில் விழுந்துவிடும் இளைஞர் கூட்டத்தில் தன்னையும் தெரியாதபடி ஒருவனா?

சிறிது நேரத்திலேயே மினி டிபன் வந்தது.

அதைக்கூட கடிவாளக் குதிரை கொள்ளு தின்பது போலத்தான் தின்றான்.

அதற்குமேல் மகா நடிகருக்கே பொறுக்கவில்லை. "சார் எங்க போறீங்க?" - பேச்சு கொடுக்க ஆரம்பித்தார். அவனும் நிமிராமலே பதில் கூறினான்.

"டெல்லி..."

"ஐ.சி... சார் என்ன பண்றீங்க...?"

"நான் ஒரு மினி இண்டஸ்ட்ரி நடத்தறேன்..."

"ஓ... வெரிகுட்... என் படங்கள்லாம் பாக்கறதுண்டா?"

"சாரி... நான் சினிமாவை நினைக்கக்கூட விரும்பல..."

"விரும்பலையா... நேரம் இல்லையா...?"

"ரெண்டும்தான்..."



"என் லைஃப்ல முதல்தடவையா உங்களப் போல ஒருத்தரை பாக்கறேன்..."

அதற்குமேல் அவனும் எதுவும் கூறவில்லை. பயணமும் முடிந்தது. டெல்லி விமான நிலையத்தில் அவர் விடைபெறும்போது, "உங்களை என்னால் மறக்கவே முடியாது..." என்றார்.

சிவகுமாரோ நெஞ்சை சற்று நிமிர்த்திக் கொண்டான். நடையிலும் ஒரு கம்பீரம் தெரிந்தது. பழைய பிழைகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக்கொண்டு விட்டது போல இருந்தது.

ஒரு பயணி மெனக்கெட்டு அவனருகே வந்து, "சார் உங்ககூட பேசிக்கிட்டே வந்தார்... கொடுத்து வெச்சவர் சார் நீங்க..." என்றார்.

"ஆமா... அவர் யாரு?" - சிவகுமார் வெடுக்கென்று திருப்பிக் கேட்டான்.

"அட என்ன சார் நீங்க... அவர் யார்னு உங்களுக்குத் தெரியலை...?"

"தெரியல... தெரிஞ்சுக்க விரும்பல... தலைக்கு மேல வேலை சார். அவர் அவர் வேலைய பாக்கட்டும், நாம நம்ம வேலைய பார்ப்போம் சார்..."

அவருக்கு ஏன் அவனிடம் பேசினோம் என்றுகூட இருந்தது. "ரொம்ப மோசம் சார் நீங்க...!" என்று ஒரு வேகமான கமெண்ட் அவரிடம்.

அவனுக்கோ அப்போதுதான் அவனைப் பிடிக்கத் தொடங்கியிருந்தது.

## 18. வதம்

வழக்கம்போல பத்து மணிக்கே பரபரப்பாக தொடங்கி விட்டது, அந்த அலுவலகத்தின் செயல்பாடுகள்! ஜெர்மானிய ரோஸ்வுட் பலகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்த குட்டிக் குட்டி அறைகளில் இருக்கும் கம்ப்யூட்டர்களில் எல்லாம் மெயில்கள் பிரிக்கப்பட்டு பார்க்கப்படவும் தொடங்கின.

அங்கே ஒரு சராசரி பட்டதாரி இல்லை. எல்லோருமே போஸ்ட் கிராஜுவேட்கள். படிக்கும்போதே லட்சங்களில் சம்பளக் கனவு கண்டவர்கள்.

ஒருவர் கூட புடவையில் இல்லை. அனேகர் ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்



தனர். கர்ப்பப்பை சூடேறி பிள்ளைப் பேற்றின்போது அது சவலைப் பிள்ளையாக உருவாகிப் பிறக்கும் ஆபத்து அதனால் இருப்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை.

மிகச் சரியாக 11 மணி இருக்கும்போது அந்தச் செய்தி வந்தது. அந்த இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த சீனியர் மேனேஜர்களில் ஒருவனான சதீஷ் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டதாக...

கேபின் விட்டு கேபின் பெண்கள் கூடிப் பேசத் தொடங்கினர்.

“ஈஸ் இட் ட்ரு ரம்யா...?”

“சாவு விஷயத்துல யாராவது பொய் சொல்வாங்களாப்பா?”

“என்னால நம்பவே முடியலடி... ஆமா அவன் எதனால தற்கொலை செய்துகிட்டானாம்...?”

“தெரியலியே... அவன் தற்கொலை செய்துகிட்டான்கறதையே நம்ப முடியலியே!”

“அவன் தற்கொலை செய்திருந்தாலும் சரி... இல்லை யாராவது கொலை செய்திருந்தாலும் சரி, என் மனசுக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?” என்று மார்பைத் தழைத்து பெருமூச்சுவிட்டாள் நிகிதா.

“இன்னிக்கு ஆபீஸுக்கு வரும்போதே அவன் பயம் தான் எனக்கு! வாவ்... தப்பிச்சுட்டேன்...” என்றாள் பாத்திமா.

யாரும் சதீஷின் தற்கொலைக்கு வருத்தப்பட்டது போலவே தெரியவில்லை. இருந்தாலும் நோட்டீஸ் போர்டில் அவனது சைனீஷ் மீசையுடன் கூடிய போட்டாவை போட்டு ஓரமாக சம்பிரதாய அஞ்சலிச் செய்தியையும் பதிவு செய்திருந்தனர்.

மாலை நான்கு மணிக்கு இறுதி அஞ்சலி செலுத்த அனைவரையும் அனுமதிப்பதாகவும் ஒரு வரிச் செய்தி அதில் காணப்பட்டது.

"ஏய் நீ போகப் போறியாப்பா?"

"ஆமா அவன் வீடு எங்க இருக்கு... சுந்தரம் காலனியிலதானா?"

"ஆமாம்... இண்டிபெண்டன்ட் ஹவுஸ்."

"ஓ... நீ போயிருக்கியோ?"

"இல்ல... இல்ல... அந்தப் பக்கம் போனப்ப அவன் யாரோடோ உள்ள நுழைஞ்சிகிட்டிருந்ததைப் பார்த்தேன்..."

"ஏன் இல்ல இல்லன்னு பதறறே... போனாத்தான் என்ன இப்ப?"

"போதும்டி... வீணா ஒரு தடவை போய்ட்டு வந்துட்டு ஒரு மாசம் வேலைக்கே வரலை..."

இப்படி பல மாதிரி பேச்சுக்கள் கேபினுக்கு கேபின் ஒலித்தபடி இருந்தது.

செண்பகக் குழல்வாய்மொழி மட்டும் எதுவும் பேசாமல் வேலையில் மும்முரமாக இருந்தாள். அதை அனுஜாவும் கவனித்தாள்... மெல்ல அவளருகே சென்றாள்.

"என்ன செண்பக்..."

அவளும் திரும்பினாள்.

"ஓ! நீ வழக்கம் போல இன்னிக்கும் 'சேரி'யா...! அதுவும் நூல் புடவை..."

"வந்த விஷயத்தை சொல் அனுஜா..."

"நோட்டீஸ் போர்ட் பார்த்தியா?"

"என்ன விஷயம்?"



"சீனியர் மேனேஜர் அந்த காட்டு ஓணான் சதீஷ் தற்கொலை செய்துகிட்டானாம்..."

"ஓ..."

"உனக்கு அதிர்ச்சியா இல்லையா?"

"இல்ல..."

"என்னத்த சொல்றது... ஆபீஸே இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஒரு மனுஷனோட சாவு எல்லாருக்கும் சந்தோஷத்த தருதுன்னா அவன் எவ்வளவு மோசமா இருக்கணும்?"

"அதுக்கு நாமளும் இடம் கொடுக்கக்கூடாது இல்லையா?"

செண்பகக் குழல்வாய்மொழி வெடுக்கென்று அப்படி திருப்பிக் கேட்பாள் என்று அனுஜா எதிர்பார்க்கவில்லை.

"நீ என்ன சொல்றே செண்பக்..."

"வேலையை சரியா பாக்காம அவன் கிட்ட வழிஞ்சதச் சொல்றேன். அவன் காபி சாப்பிட கூப்பிட்டான், சினிமாக்கு கூப்பிட்டான்னு போனதைச் சொல்றேன்..."

"இப்ப உனக்கு ஒரு விஷயம் தெரியுமா, யார் யார் அவன்கூட சுத்தினாளுகளோ அவளுகதான் ரொம்ப ஃப்ரீயா ஃபீல் பண்றாங்க..."

"பாத்து... அடுத்து இன்னொரு சதீஷோ ரமேஷோ துண்டுத் தாடி, ஸ்டாம்ப் சைஸ் ஸ்பெக்ஸ்னு வந்து அடுத்த ரவுண்டைத் தொடங்கிடப் போறாங்க..."

"உனக்கு ரொம்ப தைரியம் செண்பக்... அந்த ஓணான் கிட்ட நீதான் கடைசி வரை முரண்டு பிடிச்சுகிட்டிருந்தே. அவன் ரூமுக்கு நீ தனியா போனதேயில்லைல்ல...?"

"அதனால தான இந்த வருஷ பிரமோஷன் எனக்கு கட் ஆகியிருக்கு... அது மட்டுமா; நான் ஒரு 'இல்லிட்ரேட்,

பட்டிக்காடு, கம்ப்யூட்டரை அஞ்சரைப் பெட்டி மாதிரி நினைக்கறவள்'னுல்லாம் என்னைப் பத்தி கம்ப்ளைண்டும் டாப் மேனேஜ்மென்ட்டுக்கு போயிருக்கு?"

"விடு... தொல்லை ஒழிஞ்சது - ஆமா இவன் எதனால தற்கொலை செய்துகிட்டிருப்பான்?"

"யாருக்குத் தெரியும்... ஒரு வேளை டைவர்ஸ் கேட்டு கோர்ட்டுக்கு போயிருக்கறவன் மனைவியால இருக்கலாம்."

"அட ஆமால்ல... எனக்கு அவனுக்கு ஒரு பெண்டாட்டி இருக்கறதே மறந்து போச்சு..." என்றபடி விலகிப் போன அனுஜா அதையே ஒவ்வொரு கேபின் பெண்களிடமும் பகிர்ந்து கொண்டாள். மாலைக்குள் அந்தச் செய்திக்கு ஒரு பக்கா ஷேப் கிடைத்துவிட்டது.

'சதீஷ் வைஃப் சாரதா சதீஷை போன்ல போட்டு பிச்சு எடுத்துட்டா போல இருக்கு. அதோட சாரதா அவ மாமா பையனையே மறுமணம் செய்துக்கப் போறதாவும் சொல்லியிருக்கா. அதுலதான் ஆள் அப்செட்!' - இப்படி ஒரு வடிவம் ஏற்பட்டுவிட்டிருந்தது.

❖❖❖

ஆறு மாதங்கள் சென்றுவிட்டன. செண்பகக் குழல்வாய்மொழிக்கு அன்றுதான் திருமணம். முதல் இரவு!

கணவன் ஒரு ராணுவ மேஜர்!

பார்க்க கிண்ணென்று இருந்தான். நிறைய பேசணும் செண்பகம்" என்று அவனே பேச்சைத் தொடங்கினான்.

"நானும்தான்..."

"அப்ப நீயே முதல்ல பேசு..."

"உங்களை நான் ஏன் தேர்வு செய்தேன்னு முதல்ல சொல்லிட்டேன்..."



"சொல்லு சொல்லு..."

"நீங்க போர்க்களத்துல எதிரிகள சுட்டுக் கொன்னுருக்கீங்களா? சுத்தி வளைக்காம நேரா பதில் சொல்லுங்க!"

"கார்கில் போரில் கொன்னுருக்கேன்பா..."

"அது நாட்டுக்காக செய்த கொலைதானே?"

"சந்தேகமென்ன... அதேதான்..."

"நானும் ஒரு கொலை செய்துருக்கேன்..."

செண்பகக்குழல்வாய்மொழி சொன்னதைக் கேட்டு அதிர்ந்தார் மேஜர்!

"என்ன செண்பகம்... ஜோக் அடிக்கிறியா?"

"இல்லைங்க... இந்த செல்போன்ல இருக்கற போட்டோக்களை பாருங்களேன்."

ஒரு செல்போனை எடுத்து அவனைப் பார்க்க வைத்தாள். வரிசையாக பல பெண்கள்! அரை, முக்கால், கால் நிர்வாணங்களில். அவ்வளவு பெண்களும் மயக்கத்தில் இருப்பது பளிச்சென்று தெரிந்தது. அதில் செண்பகக் குழல்வாய் வாய்மொழி படமும் இருந்தது.

"செண்பகம் இது நீயா"

"ஆமாம்... பெங்களூர்ல ஆபீஸ்ல என் கூட வேலை பாக்கற பெண்கள்தான் இவங்கல்லாம். சதீஷ்னு எங்க மேலதிகாரிதான் இதை எடுத்தவன். ஒவ்வொருத்தரையும் ஏதேதோ காரணம் சொல்லி வீட்டுக்கு வர வைச்சு, சிரிச்சுப் பேசி, கூல்டிரிங்ஸ்ல மயக்க மருந்தை கலந்து கொடுத்து, அவங்கள நிர்வாணமாக்கி இப்படி படம் பிடிச்சிருக்கான். அப்புறம் இதை காட்டியே பல தடவை அனுபவிக்கவும் செய்துருக்கான்.

ஆபீஸ்லயே என்கிட்ட தவறா நடந்துக்க அவ முயற்சி செய்தான். ஆனா நான் இடம் கொடுக்கல பெரும்பாலும் அவன் அறைக்கே போக மாட்டேன் அவனுக்குப் படியாததால என்னைப் பத்தி தப்புத் தப்பா ரிப்போர்ட் பண்ணான். இதனால என் ப்ரமோஷனும் பாதிக்கப்பட்டது.

என்னால ஒரு அளவுக்கு மேல பொறுக்க முடியல. ஆவேசத்தோட நான் ஒரு நாள் அவன் வீட்டுக்கே நியாயம் கேட்கப் போனேன். மயக்க ஸ்ப்ரேவால என்னையும் விழ வெச்சு இப்படி படம் எடுத்துட்டான்.

நானும் தீர்மானமா ஒரு முடிவுக்கு வந்தேன். வைரத்தை வைரத்தால அறுக்கறதுன்னு... அவன் வலைல விழற மாதிரி நடிச்சேன்... அவன் குடிச்ச பால்ல விஷத்த கலந்து கொடுத்துட்டு இந்த செல்போனையும் எடுத்து கிட்டு வந்துட்டேன். எனக்குள்ள ஒரு வதம் செய்த சந்தோஷம். அவன் மனைவிகூட அவன் பெரிய சண்டை போட்ட நிலையில இருந்ததால அந்தக் கொலை கொஞ்சம் கூட சந்தேகத்துக்கு இடம் தரலை. ஆறு மாசமும் ஓடிப்போச்சு.

சட்டபூர்வமா அவனை எதிர்கொண்டிருக்கலாம். அப்போது சாட்சியா இந்த நிர்வாணப் படங்கள் எல்லோ ராலயும் பார்க்கப்பட்டு, இந்த இழிவு பதிவாகும். வதம்தான் சரியான தீர்வு. இதை உங்களைப்போல ஒரு மிலிட்டெரி மேனால நல்லவிதமா புரிஞ்சுக்க முடியும். என் உயிர்லயும் வாழ்க்கைலயும் சரிபாதியா இணைப் போகிற உங்ககிட்ட உண்மையாவும் நேர்மையாவும் இருக்கணும்கற காரணத்தால இதை எல்லாம் சொல்லிட்டேன். என்னை ஒரு கொலைகாரியாவோ, இல்லை வேறு விதமாவோ பாக்கறது இனி உங்க விருப்பம். ஒருபடி மேல போய் என்னை சட்டத்தின் முன்னாலகூட நிறுத்தலாம். எனக்கு ஆட்சேபணையில்லை."



செண்பகக்குழல்வாய்மொழி பேசி முடிக்கவும் மேஜரிடம் ஒருவித ஸ்தம்பிப்பு. முதல் இரவுக் கட்டிலில் இருந்து எழுந்து நின்ற மேஜர் தன் பட்டு வேட்டியை ரோகக் கட்டிக் கொண்டு விரைப்பாக நின்று அவளுக்கு ஒரு சல்யூட் அடித்தார்.

## 19. மல்லிகாவின் மனசு

பரபரப்பாக இருந்த அந்த ஆஸ்பத்திரியின் ஐ.சி.யு.வில் இருந்து வெளியேறத் தொடங்கியது தமிழறிஞர் ஞானசுந்தரத்தின் உடல்.

“நீங்க எடுத்துக்கிட்டுப் போயிடலாம். இன்னும் ஒரு மூணு நாளைக்குள்ள முழுத்துடிப்பும் அடங்கிவிடும். இவர் விருப்பப்படி இவரோட உயிர் இவரோட வீட்டுல பிரியறதுக்கான ஒரு வாய்ப்பை காலம் கொடுத்துருக்கு. அதை ஏன் நீங்க இழக்கணும்?” - என்று கேட்டு, ஆஸ்பத்திரி நிர்வாகம் உடம்பை ஆம்புலன்ஸில் ஏற்றி விட்டது. அவரது இதயப் பகுதியில் அவ்வளவு காம்ப்ளிகேஷன்ஸ்!



உடம்பின் அருகே சோகமாய் ஏறி அமர்ந்து கொண்டாள் ஞானசுந்தரத்தின் ஒரே மகளான மல்லிகா. ஆம்புலன்ஸும் புறப்பட்டது. ஒரு வெள்ளைத் துணிக் கட்டாய் கிடந்த ஞானசுந்தரத்தின் முகத்தையே உற்றுப் பார்த்தாள் மல்லிகா.

இப்போதுதான் அறுபது வயதைத் தொட்டிருக்கிறார். ஆனால் நாற்பத்தைந்து முதல் ஐம்பது வயதுதான் சொல்லத் தோன்றும். காரணம், சித்தயோக வாழ்க்கை முறை!

அதிகாலை கண்விழிப்பு - ஒரு நாளைக்கு ஐந்து லிட்டருக்குக் குறையாதபடி நீர் அருந்துதல் - ஒரு நிமிட கால தாமதமும் இன்றி உணவு உண்ணும் காலமுறை - இதுபோக பிராணாயாமம், பத்மாசனம், தனுராசனம் என்னும் யோக முறைகள் ஞானசுந்தரத்தை ஒரு இளைஞனாகத்தான் வைத்திருந்தன.

தன் தந்தை சித்த யோகத்துக்கு ஒரு உதாரணமாக திகழப் போகிறார் என்றுதான் நம்பினாள் மல்லிகா. ஞானசுந்தரமும் பல சித்தர் பெருமக்கள் பற்றி நிறையவே மேடையில் பேசியிருக்கிறார்.

‘அதன்படி சித்த புருஷர்கள் அழிவே இல்லாதவர்கள். பல நூறு வருஷங்கள் எல்லாம் அவர்கள் உடம்பை வெற்றி கொண்டு வாழ்ந்தவர்கள். அவர்களில் அல்லமர் என்று ஒரு சித்தர். இவரை கத்தியாலும் வாளாலும் எவ்வளவு வெட்டினாலும் சில நொடிகளில் வெட்டுப்பட்ட இடம் குணமாகி ஒட்டிக் கொண்டு விடுமாம். அந்த அளவு உடம்பின் மேல் அல்லமர் ஆதிக்கம் செலுத்துபவராக இருந்தார்” என்று ஞானசுந்தரம் பேசி மல்லிகாவும் கேட்டிருக்கிறாள்.

அதெல்லாம் ஆம்புலன்ஸில் அவளுக்குள் ஞாபகத்தில் வந்தது. அந்த அல்லம சித்தர் இப்போது வந்து அப்பாவை குணப்படுத்தினால் எப்படி இருக்கும் என்றும் தோன்றியது.

அப்பா சித்தர்கள் பற்றிப் பேசிய எதையும் நடந்து முடிந்த ஒன்றாகவோ இல்லை, கற்பனையான ஒரு விஷய மாகவோ எண்ணிப் பேசியதேயில்லை.

பல சமயம் அவர் அத்திரி மலைக்குப் போய் அகத்தியரை தரிசித்து விட்டும் வந்திருக்கிறார். மல்லிகா கேட்பாள்,

“அப்பா அந்த அகத்தியரை அவ்வளவுதூரம் மலைக்குப் போய் தரிசிக்கணுமா? இங்க வீட்டுல அவர் படத்தை வழிபட்டா போதாதா?” என்று. ஆனால் ஞானசுந்தரம் கேட்கமாட்டார்.

“தரிசிக்கறது மட்டும் நோக்கமில்லை மல்லிகா. ஒரு தடவையாவது சாமிகிட்ட பேசிடணும்” என்பார்.

“பேசறதா - அது எப்படிப்பா சாத்தியம்?” - என்று கேட்டால், “சாத்தியம்தாம்மா… நம்ம சித்த வைத்தியர் வெங்கடாசலம் பேசியிருக்காரே!” என்பார்.

அந்தப் பேச்சு ஆம்புலன்ஸுக்குள் மல்லிகாவுக்கும் ஞாபகத்துக்கு வந்தது. உடனேயே போன் போட்டாள். அவரும் லைனில் வந்தார்.

“வணக்கம் வைத்தியரே நான் மல்லிகா பேசறேன்…”

“எந்த மல்லிகாம்மா… எங்க இருந்து பேசறீங்க?”

“தமிழ் வாத்தியார் ஞானசுந்தரத்தோட பெண்ணுங்க நான். என் பெயர்தான் மல்லிகா…”

“ஓ… ஐயா மகளா! ஐயாவுக்கு ரத்தக்கொதிப்பு ஏற்பட்டு ரொம்ப சீரியஸ்னு கேள்விப்பட்டேனம்மா?”

“ஆமாங்க வைத்தியரே… ஆஸ்பத்திரியில அப்பாவைக் காப்பாத்த முடியாதுன்னு சொல்லிட்டாங்க. வீட்டுக்கு எடுத்துக்கிட்டு போய்க்கிட்டிருக்கோம். இப்பக்கூட ஆம்புலன்ஸுக்குள்ள இருந்துதான் பேசறேன். அப்பா அடிக்கடி உங்களைப் பத்தி பேசுவார். நீங்க அகத்தியரை எல்லாம் தரிசனம் பண்ணியவராம்ல…?”



“ஆமாம்மா… அது இந்த வைத்தியன் செய்த புண்ணி யம்னு தான் சொல்லணும்.”

“வைத்தியரே…”

“என்னம்மா சும்மா சொல்லு…”

“நீங்க தரிசனம் பண்ணியிருக்கீங்கன்னா அகத்தியர் இப்பவும் நடமாடிக்கிட்டிருக்கார்னு தானே அர்த்தம்?”

“அதுல என்னம்மா சந்தேகம் - அவங்களுக்கெல்லாம் உடம்பு வேணா அழியலாம். ஆனா ஆத்மா அழியவே அழியாது.”

“அப்ப அகத்தியர் சாமி வந்தா அப்பாவை இப்ப காப்பாத்த முடியும்தானே?”

- மல்லிகாவின் கேள்வி அந்தப் பக்கமாய் வைத்தியரை ஒரு வினாடி திகைக்க வைத்து விட்டது.

“வைத்தியரே…”

“உம்.”

“என்ன பதிலையே காணோம். நான் எதாவது தப்பா கேட்டுட்டேனா?”

“தப்பா… தப்பால்லாம் கேக்கலம்மா - ஆனா அகத்தியர் சாமியை அப்படி சுலபமால்லாம் பாத்துட முடியாது.”

“என்ன செய்யணும் அதுக்கு?”

“உனக்கு சொன்னா புரியாது. நான் 108 தடவை அத்திரி மலைக்குப் போய் அவர் சிலைக்கு பாலாபிஷேகம் பண்ணினவன். அதுவும் 108 பௌர்ணமிக்கு… அதாவது ஒன்பது வருஷம்! அதனாலதான் எனக்கே தரிசனம் கிடைச்சது…”

“அப்ப நானும் அப்படிப் பண்றேன்.. நீங்க சொன்ன மாதிரியே நான் அகத்தியரை பிரார்த்தனை பண்ணிக்கப் போறேன். ஒண்ணு அவர் வரணும்; இல்லாட்டி அவர் யாராவது ஒரு சித்தரை அனுப்பி மருந்து தந்து அப்பாவைக் காப்பாத்தணும். அப்பதான் சித்தர்கள் பத்தி இருக்கற விஷயங்கள் எல்லாமே உண்மை. இல்லேன்னா அவ்வளவும் பொய்னுதான் நான் சொல்வேன். ஏன்னா என் அப்பா சாகற வயசு இல்லை இது. அவர் உயிரோட இருந்தா எவ்வளவோ சாதிப்பார். அவர் பேச வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. அவர் அதுக்காகவாவது இன்னும் பல வருஷங்கள் உயிரோட இருக்கணும் வைத்தியரே...”

- மல்லிகா தீர்மானமாகவும் வெகு தீர்க்கமாகவும் பேசினாள். மறுபக்கம் வைத்தியரிடம் எதனாலோ பேச்சே இல்லை. மல்லிகாவோ ஓடும் ஆம்புலன்ஸுக்குள் கைகளை கூப்பிக் கொண்டு ‘ஓம் அகத்தீஸ்வராய நம..’ என்று உருக ஆரம்பித்து விட்டாள்.

‘இறவா வாழ்வு வாழும் அகத்தியரே... அப்பாவைக் காப்பாத்த வருவீரா’ என்று விடாமல் முண்டி மோதிய படியே தொடர்ந்தாள்...

❖❖❖

**வை**த்தியர் பெருமூச்சோடு வந்து மூங்கில் நாற்காலியில் உட்கார்ந்தார். எதிரில் அவர் மகன் அவன்தான் அவரது அடுத்த வாரிசு. ஏதோ ஒரு மூலிகை வேரை தண்ணீரில் கழுவியபடியே வைத்தியரைப் பார்த்துக் கேட்டான்.

“யாருப்பா அது போன்ல...?”

“நம்ம தமிழ்ப்பண்டிதர் ஞானசுந்தரம் பொண்ணு.”



“போனவாரம் ரத்தக்கொதிப்பு வந்துட்டதா கேள்விப்பட்டோமே அவர் பொண்ணா?”

“ஆமாம்ப்பா.. விவரம் புரியாம பேசறா..”

“அப்படி என்னத்த பேசினா - உங்கள வந்து அவரை எழுப்பி உட்கார வைக்கச் சொன்னாளா?”

“அப்படிச் சொல்லி இருந்தாதான் பரவாயில்லையே நானும் முடியுதான்னு பாக்க புறப்பட்டுருப்பேனே..?”

“வேற என்னப்பா பிரச்னை?”

“அகத்தியர் சுவாமி வந்து குணப்படுத்தணுமாம். இதை நான் எங்க போய்ச் சொல்ல?”

“விவரமில்லாத பொண்ணோ - சின்ன வயசோ?”

“அட நீ வேற... காலேஜுக்கு போற பொண்ணுப்பா.”

“அதுவா இப்படி கூறுவாறு இல்லாம பேசுது?”

“என்னத்தச் சொல்ல... அப்பா மேல இருக்கற பாசத்துல அதுக்கு புத்தி வேலை செய்யல போல இருக்கு. ஆனா அவருக்கு பொறப்புலயே இதயத்துல கோளாறுங்கறது அதுக்குத் தெரியாது.”

“சரி, அதை எதுக்கு உங்ககிட்ட சொல்லணும்?”

“நீ ஒரு விவரம் கெட்டவன். நான் அந்த ஞானசுந்தரம் என்னை பெருசா மதிச்சு நடக்கணுமேங்கற நப்பாசைல அகத்தியர் தரிசனம் எனக்குக் கிடைச்சிச்சு, சாமியும் பேசினார்னு ஒரு வட்டம் சொல்லியிருந்தேன். அதை அந்த ஆளும் நம்பிட்டான்! இந்தப் பொண்ணுகிட்டயும் சொல்லியிருப்பான் போல இருக்கு. இது அதை வெச்சு ‘அகத்தியர் இப்பவும் இருக்காரா.. கூப்ட்டா வருவாரா’ன்னு ஆரம்பிச்சிடிச்சு... இல்லாதவரை வெச்சு நான் பொழப்பு

நடத்திக்கிட்டிருக்கேன்னு உண்மைய சொல்லமுடியுமா என்ன?"

❖❖❖

ஒருவாரம் கழிந்த நிலையில் ஒரு நாள் மல்லிகாவே வைத்தியரைப் பார்க்கவந்தாள். அவள் கையில் ஏராளமான பழங்கள்! பெரிதாய் மாலையும் ஒன்று! வைத்தியரும் அவளை வெகு ஆச்சரியமாய் பார்த்தார். அவளோ மாலையைப் போட்டுவிட்டு பொதேல் என்று சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்தாள்.

"ஐயோ என்னம்மா இது... எழுந்திரி... எழுந்திரி..."

- அவளும் எழுந்திருந்தாள். கண்கள் பனித்திருந்தது.

"என்னம்மா... நான் என்ன பண்ணிட்டேன்னு எனக்கு இப்படி மாலையெல்லாம் போடுறே?"

"என்ன வைத்தியரே அப்படிச் சொல்லிட்டீங்க. உங்க வைத்தியத்தால அப்பா எழுந்து உட்காந்துட்டார். மிஷன் ஆஸ்பத்திரி டாக்டர் எல்லாம் அப்படியே ஸ்தம்பிச்சுப் போயிட்டாங்க. அனேகமா சீஃப் டாக்டர் உங்கள பாக்க வந்தாலும் வரலாம். நீங்க கொடுத்த மருந்தை எல்லாம் சாம்பிள் எடுத்துக்கிட்டு போயிருக்காங்க. அப்பாவும் நல்லா பேசறார்.

அகத்தியர்தான் உங்க வடிவத்துல வந்து காப்பாத்தினதா அப்பா நம்பறார்."

-அவள் சொல்லச் சொல்ல அவருக்குப் படபடத்தது.

'நான் எங்கம்மா உன் அப்பாவைக் காப்பாத்தினேன்?' - என்று கேட்கத் தோன்றி அதைக் கட்டுப்படுத்திக் கொண்டவர் அந்த வைத்திய கூடத்தில் ஒரு படத்தில் தெரிந்த அகத்தியரை முதல் தடவையாக பயத்தோடும்



...டியோடும் பார்த்தார். 'இது எப்பேர்ப்பட்ட அதிசயம்..! என் உருவமெடுத்துப் போய் என்னையும் அவரையும், ஒரே வைத்தியத்துல இரண்டு பேரை குணப்படுத்திட்டீங்களே..!' என்று மனதுக்குள் கூறிக் கொண்டவர், அப்படியே மண்டியிட்டு வெட்கத்தோடும் பரவசத்தோடும் அழ ஆரம்பித்தார்!

# 20. ஸ்வப்னப்ரியா

ஸ்வப்னப்ரியா பார்ப்பதற்கு ஜில்லென்று இருந்தாள். அசலான நாமகரணப் பெயர் 'விஜய கனகம்மா நாகலா தேவி' என்பதுதான். சினிமாவுக்கு தான் இந்த மாதிரி ரயில் நீளப் பெயர்கள் ஆகாதவை ஆயிற்றே?

அதிலும் இது சரியான காரமான ஆந்திரப் பெயர்.

அதை அடித்துத் திருத்தி ஸ்வப்ன ப்ரியா என்று ஆக்கியவன் பலப்பல வருடங்களாக ஹீரோவாகவே ஆட்ட மாடிக் கொண்டிருக்கும் சதா சிவ ராஜாவாக இருந்து பின் சினிமாவுக்காக ஸ்ரீராஜ் ஆன மக்களின் இதயநாயகன் தான்.



இத்தனை வருஷத்தில் எவ்வளவோ ஹீரோயின் களைப் பார்த்து விட்டான். அவனோடு சேர்ந்து நடித் தாலே ஒரு எகிறு எகிறலாம் என்பதுதான் கோலிவுட்டின் ராசி.

இவர்களில் ஸ்வப்னப்ரியா கொஞ்சம் ஆச்சரிய அதிசய ரகம். இவள் பின்புலம் அதிர்வுகள் நிரம்பிய ஒரு பெரும் சோகம்.

ஸ்ரீராஜுக்கு ஒரு பிரத்யேக பங்களா உண்டு.

அய்யா அங்கேதான் ஓய்வெடுப்பார். கதை கேட்பார்...

அந்த பங்களாவுக்கு ஒரு வேலைக்காரி தேவைப் பட்டபோது ஒரு பம்பாய்க்கார சேட்டு தான் விஜய கனகம்மா நாகலா தேவியை அனுப்பி வைத்தார்.

மும்பை சிகப்பு விளக்குப் பகுதியில் சிக்கிச் சின்னா பின்னமாகியிருந்தவளை மூன்று லட்சத்துக்கு வாங்கி தன்வசம் வைத்திருந்தவர் ஐந்து லட்சத்துக்கு ஸ்ரீராஜுக்கு விற்று விட்டார்.

'கொஞ்ச நாள் வெச்சிருந்து அனுபவிச்சிட்டு இஷ்டம் போல செய்யுங்க' என்கிற சேட்டின் மெய்ஞான உப தேசத்தால் ஸ்ரீராஜிடம் வந்து சேர்ந்தாள். விஜய கனகம்மா நாகலா தேவி.

தனக்கு தொடர்ந்து வாய்ப்புத் தரும் இயக்குநர் ஒருவருக்கு அவளையே விருந்தாக்கிட, அவர்தான் இவள் படுக்கைக்கு மட்டுமல்ல சினிமா இண்டஸ்ட்ரியின் ரசனைக்கும் உரியவள் என்பதைக் கண்டறிந்தார்.

விதி சிலர் வாழ்வில் டெண்டுல்கர் போல நூறு செஞ்சுரி எல்லாம் போடும். விஜய கனகம்மா நாகலா தேவி வாழ்விலும் அது தயாராகியது.

ஸ்ரீராஜின் படம் ஒன்றில் ஐ.ஏ.எஸ். எழுதிவிட்டு ரிசல்ட்டுக்கு காத்திருந்த கேப்பில் ஒரு இளம்பெண் நடிக்க

வந்தாள். அவள் மூச்சுக் காற்றில் கூட ஆங்கிலம் கொடி கட்டிப் பறந்தது. ஸ்ரீராஜுக்கோ தமிழே தகராறு. அத்தோடு தொட்டு நடிக்கும்போது அவன் கொஞ்சம் சுதந்திரம் எடுத்துக் கொள்ளவும் செட்டிலேயே அறைந்து விட்டாள் அவள். நல்லவேளை பணத்தைக் கொடுத்து பத்திரிகைகளில் தன் வீரத்தழும்பு தெரியாதபடி பார்த்துக் கொண்ட ஸ்ரீராஜ் அந்த ஐ.ஏ.எஸ். காரி எதிரில் விஜய கனகம்மா நாகலா தேவியை ஹீரோயினாக ஆக்கி அந்தப் படத்தையும் வெள்ளி விழா காணச் செய்தான்.

அதன் பிறகே வி.க.நா. தேவியும் ஸ்வப்னப்ரியா வானாள்! மட்டுமா?

ஒரே படம் அவளை கனவுக்கன்னி ரேஞ்சுக்கு கொண்டு சென்று விட்டது. ஸ்ரீராஜ் வரையில் பணத்தையே பாலாகக் கறக்கும் பசுவாகவும் ஆகிவிட்டாள். அவளை புக் செய்ய யார் வந்தாலும் ஸ்ரீராஜைத்தான் பார்க்க வேண்டும். கேட்டால் 'நான்தான் கார்டியன்' என்றான். ஏற்கெனவே இரண்டு மனைவிகள். அதனால் மூன்றாவது இடம் ஒதுக்குவதிலும் சிக்கல்.

கடந்த சில வருடங்களில் ஸ்வப்னப்ரியாவும் ஒரு பத்துப் பதினைந்து படங்கள் செய்து விட்டாள். அவ்வளவுக்கும் கோடிகளில்தான் சம்பளம்.

எல்லாமே ஸ்ரீராஜின் பெட்டியை நிரப்புவது தான் கொடுமை. ஆனால் அதை எல்லாம் நினைத்து புழுங்கவோ இல்லை கலங்கவோ ஸ்வப்னப்ரியா தயாராக இல்லை.

இந்த விசுவாசத்துக்கு வெடி வைப்பது போல வந்து நின்றவன்தான் அமுதவன் என்கிற ரசிகன். அவள் பெயரை மார்பில் பச்சையாக குத்திக் கொண்டும் அவளுக்கு ரசிகர் மன்றம் வைத்தும், ஒரு படி மேலே போய் கோயில் கட்டவுமே தயாராக இருக்கிறான்.

ஒரு அவுட்டோர் ஷூட்டிங்கின் போது அவள் காரில் வரும்போது வழியெல்லாம் கட்-அவுட் வைத்து பூத்தூவி



அவளை ஒரு தேவதை லெவலுக்கு கொண்டு போய் விட்டான்.

ஸ்வப்னப்ரியாவும் அவனை அழைத்துப் பேசினாள். "அமுதவன் உங்க அன்புக்கு ரொம்ப நன்றி... ஆனா இதெல்லாம் டூமச்..." என்றாள்.

"ஆமாங்க டூ மச் தான்... எனக்கும் தெரியுது. ஆனா என்வரைல நீங்க ஒரு உலக அழகி. உங்க அழகு என்னை தூங்க விடமாட்டேங்குதே!" என்று அவன் மிக வெளிப்படையாக பேசவும் அதைக் கேட்டு சற்று ஆடித்தான் போனாள் ஸ்வப்னப் பிரியா.

நெடுநேரம் அவனையே வெறித்துப் பார்த்தாள். பிறகு கேட்டாள்.

"ஆமா, நீங்க என்ன பண்றீங்க?"

"நான் ஒரு ரியல் எஸ்டேட் ஓனர்ங்க. பணத்துக்கு பஞ்சமே இல்லை. ஒரு கிராமமே எங்களுக்கு சொந்தம்னா பார்த்துங்குங்களேன்."

"கல்யாணமாயிடிச்சா?"

"என்ன கேள்விங்க இது. பண்ணிக்கிட்டா உங்கள பண்ணிக்கணும். அது நடக்காதுன்னும் நல்லா தெரியும். அதனால உங்க நினைப்போட காலம்பூரா பிரம்மச்சாரியாவே இருந்துடற முடிவுல இருக்கேன்."

- அவனது ஒவ்வொரு பதிலுமே முத்துன தேங்காய் சரிபாதியாக உடைபடுவது போல் இருந்தது.

அமுதவன் இப்படி ஜொள்ளு விட்டு துணிச்சலாக பேசுவதும் பழகுவதும் அப்போதே டச் - அப்பாய் ஒருவன் மூலம் ஸ்ரீ ராஜ் காதுக்கும் போனது. அவுட்டோர் ஸ்பாட்டுக்கே வந்து விட்டான் ஸ்ரீராஜ்!

யெல்லோ அம்பரல்லா ஒன்றின் கீழ் அமர்ந்து கொண்டு அமுதவனிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந் தவள், ஸ்ரீராஜ் வரவும் சற்று அரண்டு போனாள்.

அமுதவனும், "சார் நீங்களா..! நான் உங்களுக்கும் ரசிகன் சார்..." என்ற உற்சாகமானான்.

"சந்தோஷம்... கொஞ்சம் அப்படிப் போறியா? நால் கொஞ்சம் தனியா பேசணும்."

"ஐய்யோ தாராளமா சார்..."

-அமுதவன் விலகிட, ஒரு நாற்காலியை அசிஸ்டெண்ட் டைரக்டர் ஒருவன் வேகமாய் கொண்டு வந்து போட்டான்.

அதில் அமர்ந்த வேகத்தில் சிகரெட் உதட்டில் பற்றிக் கொண்டு புகை மூளத் தொடங்கியது.

"நான் எவ்வளவோ சொல்லிட்டேன். ஆனா அவர் தான் கேக்க மாட்டேங்கறாரு. என் மேல வெறியா இருக்காரு." - என்று மென்று விழுங்கியபடி சொன்னாள்.

"சரிவிடு... இனி இவன் இல்லை, எவனும் கிட்ட வராதபடி பண்றேன். நீ வேலையைப் பார். ஒண்ண மட்டும் நல்லா ஞாபகம் வெச்சுக்கோ. உனக்கு எல்லாமே நான் தான் - நீ என் அடிமை." - அவன் அப்படிச் சொன்னதில் ஒரு அழுத்தம் இருந்து அது அவள் அடிவயிற்றில் சற்று அமிலம் பீறிடவும் வைத்தது.

எழுந்து கொண்டாள்.

டைரக்டர் சிரித்தபடி வந்தார்.

"எங்க இவ்வளவு தூரம்? பட்சி பறந்துடும்கற பயம் வந்துட்ட மாதிரி தெரியுதே...?" என்று சினிமா டயலாக் போலவே கேட்டார்.

"பறந்துடுமா?" - அவனும் திருப்பிக் கேட்டான்.

"நிச்சயமா... நானும் பாத்துக்கிட்டுதானே இருக்கேன்."

"என்னை மீறிப் போற துணிச்சல் இவளுக்கு இருக்குன்னா நினைக்கறீங்க?"



"எல்லாம் விசாரிச்சுட்டேன் சார். அம்மணியும் மனசளவுல சரண்டாராயிட்டாங்க. அநியாயத்துக்கு சிறுக்கா இருக்கான். உங்கள எப்படி சமாளிக்கறதுங் றதுதான் இப்ப அம்மணிக்கு கேள்வி. சம்பாதிச்சதை எல்லாம் எடுத்துக்கோ - என்னை விட்டுடு - நான் போய் அவன் கூட குடும்பம் நடத்தறேன்னு சொல்ற நாள் தூரத்துல இல்லை."

- டைரக்டர் புளியைக் கரைத்தார். ஸ்ரீராஜுும் நகம் கடித்தான்.

"என்ன செய்யப் போறீங்க?" - டைரக்டர் இறுதியாக கேட்டார்.

"வேடிக்கைய பாருங்க..."

- அவன் பதிலில் ஒரு மர்மம் ஒளிந்திருந்தது!

❖❖❖

அந்த மர்மம் மறுநாள் காலை பேப்பரில் வெட்ட வெளிச்சமாகி விட்டது. 'பிரபல நடிகை ஸ்வப்னப்ரியாவை கற்பழிக்க முயன்ற வாலிபர் கைது...' என்கிற எட்டுக் கால பத்திரிகைச் செய்கிற ஸ்வப்னப்ரியாவையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

ஸ்ரீராஜ் பொங்கிவிட்டான் என்பதும் புரிந்தது. முதல் தனிமையில் அவளால் அழத்தான் முடிந்தது. முதல் தடவையாக அழகாக அதே சமயம் பெண்ணாகப் பிறந்து விட்டது எவ்வளவு பெரிய தவறு - அது எவ்வளவு பெரிய பாவம் என்று எண்ணியவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

பாவம் அமுதவன்!

பாசாங்காய் ஒரு முறை கூட பேசவில்லை.

தன் மேலான மயக்கத்தைக் கூட கம்பீரமாய் வெளிப் படுத்தினானே...!

நினைத்து நினைத்து அழுதவளுக்கு அடுத்தகட்ட அதிர்ச்சித் தகவலும் வந்து சேர்ந்தது.

அமுதவன் அவமானம் தாங்காமல் தற்கொலையும் செய்து கொண்டு விட்டான் என்கிற அந்தச் செய்தி அவளுக்கு மயக்கத்தையே வரவழைத்து விட்டது!

❖❖❖

சில நாட்களுக்குப் பிறகு...

ஷூட்டிங் ஸ்பாட்!

கதாநாயகன் ஸ்ரீராஜின் காதலியாக ஸ்வப்னப்ரியா... இடம் கொடைக்கானலின் தற்கொலைப் பள்ளத்தாக்கு! இருவரும் காதலில் தோல்வியுற்று பள்ளத்தாக்கில் குதித்து தற்கொலை செய்து கொள்வது போல காட்சி.

இதில் கதாநாயகன் தெய்வாதீனமாக தப்பி விடுவான். புத்தி பேதலித்து விடும். புதிய கதாநாயகி வந்து அவனது பேதலித்த புத்தியை குணப்படுத்தி அவன் காதலின் ரணத்துக்கு அவளே மருந்தாவாள் என்கிற வழக்கமான காதல் கதைதான்...

டைரக்டர் கேமரா கோணம் பார்த்துவிட்டு வந்தார். ஸ்ரீராஜுக்கும் ஸ்வப்னப்ரியாவுக்கும் டூப்புகள் காத்திருந்தனர். ஸ்ரீராஜையும் ஸ்வப்னப்ரியாவையும் விளிம்பில் நிறுத்தி குளோஸ் - அப் எடுத்துக் கொண்டு அவர்களை அனுப்பி விட்டு டூப்பை வைத்து ஷூட்டிங்கை தொடருவதாக பிளான்.

பள்ளத்தாக்கை மேகக்கூட்டம் மூடியிருந்தது.

ஷூட்டிங்கை பார்க்க கூட்டமும் சேர்ந்திருந்தது. ஷாட் போகலாமா? என்று டைரக்டர் கேட்க, ஸ்ரீராஜ் எழுந்து நின்றான். ஸ்வப்னப்ரியாவும் தயாரானாள்.

இருவரும் ஒரு பாறை மேல் ஏறி நின்றனர்.



"சோகமா முகத்தை வெச்சுகிட்டு கண்ணீரோட குதிக்கற மாதிரி பாவ்லா பண்ணா போதும்." - டைரக்டர் மைக்கில் கூறினார். பின் கேமராமேனைப் பார்த்தார்.

"ரெடி ஸ்டார்ட் கேமரா... ஆக்ஷன்..." என்ற அவர் குரலைத் தொடர்ந்து இருவர் முகத்திலும் பாவனை. ஸ்வப்னப்ரியா கண்ணீரோடு அப்படியே ஸ்ரீராஜ்ஜை இழுத்து அணைத்தாள். அவனிடம் அதிர்ச்சி.

"ஏய் என்ன பண்றே... இது ஷாட்ல கிடையாது" - என்று அலறினான் அவன்.

"உனக்கு இனி வாழ்க்கையும் கிடையாது." என்றவள் அப்படியே அவனை கட்டிக்கொண்டு பள்ளத்தாக்கில் குதிக்கத் தொடங்கினாள்.

அவள் வரையில் பள்ளத்தாக்கை நிரப்பிக் கொண்டு நிற்கும் மேகப் பொதிகளுக்கு நடுவே அமுதவன் அவளுக்காக இரு கரங்களை நீட்டிக் கொண்டு காத்திருப்பது போல் தோன்றியது! ஆனால் ஷூட்டிங் யூனிட்டோ உறைந்து போயிருந்தது.



## 21. தந்திரமாய் ஒரு கொலை

எஸ்.எம்.எஸ். வழியாக அந்தச் செய்தி வந்தபோது சண்முக ராஜுக்கு பேரதிர்ச்சியாகத்தான் இருந்தது. 'அய்யா' என்று மரியாதையாக அழைக்கப்படும் பரமேஸ்வர பூபதி ராயர் ஒரு பெரும் தலைக்கட்டு.

இந்த இன்டர்நெட் யுகத்திலும் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியே அவர் பிடிக்குள்தான் உள்ளது. அவர் அனுமதியில்லாமல் அந்த பிராந்தியத்தில் ஒரு காக்கை குருவி பறப்பதுகூட கடினம்.

சண்முகராஜ் தனக்கு வந்த எஸ்.எம்.எஸ்.ஸை ஊர்ஜிதம் செய்து



சொல்வதற்காக தன் சகாக்களுக்கு உடனேயே போன் செய்தான்.

"எலே அய்யா அவுட்டாமில்ல?"

"ஆமலே... எனக்கும் இப்பதான் எஸ்.எம்.எஸ். வந்திச்சு..!"

"எப்புட்றா.. யார்றா...?"

"என்கிட்ட கேட்டா... நானே நம்பமாட்டாம திகைச்சுப் போய் நிக்கேன்..."

சண்முகராஜ் உடனேயே கிளம்பிவிட்டான்.

ஜி.எச்.சுக்குள் நுழையவே முடியவில்லை. ஊரே திரண்டு வந்து நின்று கொண்டிருந்தது.

❖❖❖

மார்ச்சுவரிக்குள்...

டாக்டர் டேனியல் ஜோசப்புக்கு தலையைச் சுற்றாத குறை. அய்யா உடம்பில் அறுபத்து நான்கு கத்திக்குத்து காயங்கள். ஒரு போர்க்களத்து வீரன் உடம்பில்கூட பத்தில் இருந்து பதினைந்து காயங்கள் இருந்தால் அதிகம்.

ஒத்துழைத்துக் கொண்டிருந்த ஸ்வீப்பர் முத்துமாரியும், இருளப்பனும், "சார், இப்படி சிதைஞ்ச ஒரு பிரேதத்தை என் சர்வீஸ்ல நான் பாத்ததில்ல சார்" என்றான் நடுங்கும் குரலில்.

முக்கியமாக இடுப்புக் கீழே உயிர்நிலை வழித்தெடுக்கப்பட்டது போல இருந்தது. அதுவே இதற்குப் பின்னால் ஒரு பெண் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை டாக்டருக்கு உணர்த்திவிட்டது.

"சார், ஏதோ பொம்பள விவகாரத்துலதான் இவரை போட்டுத் தள்ளியிருக்காங்க..."

"ஆமாம். ஆனா நாம அதையெல்லாம் வெளிய தப்பித் தவறிக்கூட பேசிடக் கூடாது."

"நாங்க ஏன் சார் பேசறோம்?"

"சரி சரி.... பக்காவா பேக் பண்ணுங்க. ரிப்போர்ட்ல கூட நான் உண்மையை எழுதப் போறதில்ல. இப்பவே ஊர் கொதிச்சுப் போய் கிடக்குது. அறுபத்தி நாலு குத்துன்னா அறுபத்தி நாலு பொணம் உழுந்துரும். கடைசில இங்க நாமதான் அறுத்து தையல் போட வேண்டியிருக்கும்" என்றபடியே டாக்டர் பாடியை அவர்களிடம் விட்டுவிட்டு விலகிக் கொண்டார்.

வெளியே சண்முகராஜன் வந்திருந்தான்.

கூட்டத்தைப் பார்த்த மலைப்பு ஒருபுறம். யார் செய்திருப்பார்கள் என்கிற மனஅரிப்பு மறுபுறம்...

அவனைப் போலவே தவிப்பும் அரிப்புமாய் கண்ணில் பட்டார் ரைஸ்மில் ஆறுமுகம் என்பவர்.

"அண்ணே என்னண்ணே இப்படி ஆயிடிச்சு?"

"அதான் எனக்கும் ஒரு எழவும் புரியல... போன வாரம்தான் ஒரு இடத்துக்காக இருபது லட்சத்த ஐநூறு ரூபா நோட்டா கொடுத்தேன். அடுத்தவாரம் ஜோலி முடிஞ்சு பத்திரம் கைக்கு வந்துடும்னாரு. அதுக்குள்ளார போய்ச் சேர்ந்துட்டாரே!"

"இப்ப என்ன... பணத்தை அவர் மகன் கிட்ட கேட்டா திருப்பிக் கொடுத்துட்டுப் போறான்..."

"அதுசரி... அவ்வளவும் கறுப்புப் பணம். அய்யாகிட்ட கொடுக்கும்போது ரசீது கொடுங்கன்னு கேக்க முடியுமா. இல்ல இப்படித்தான் ஆகப் போகுதுன்னாவது தெரியுமா - அவர் மவன், நீங்க பணம் கொடுத்ததுக்கு என்ன அத்தாட்சின்னா என்னப்பா பண்ண?"



"இதுல ஒரே வழிதாண்ணே... அய்யாவோட மவன் வீரமணி நல்ல பயண்ணே... நாயத்துக்கு மடங்கறவன். தெரியமா போய் பேசிப் பாருங்க..."

சண்முகராஜ் ஊக்கம் கொடுத்தான். அப்போது அங்கேயே அஞ்சலி செலுத்துவதற்காக அவன் எதிரியான கேசவரங்கனும் வந்திருந்தான். கையில் பெரிய மலர் மாலை!

வந்த கேசவரங்கனிடம் அந்த மார்ச்சுவரியிலும் சண்முகராஜ் குறித்த கிண்டல்.

"என்னப்பு- எதிர்க்கட்சியா இருந்தாலும் அய்யாவை மதிச்சி என்னியப்போலவே மரியாதை பண்ண வந்தியா... ஆமா நீயா வந்தியா - இல்ல நான் கிளம்பிட்டது தெரிஞ்சு வந்தியா?"

சண்முகராஜனுக்குள் அந்த கிண்டல் ஊசியாய் குத்தியது.

குழலை மறந்து சிலர் அதை ரசித்துச் சிரித்தனர்.

"உடு... சங்கடப்படாதே... கவுன்சிலர் எலெக்‌ஷன்ல நான் மேல் மட்டத்துல சொல்லி சீட்டு வாங்கித்தர்றேன். இப்படித்தான் இருக்கணும்" என்றான் கேசவரங்கன்.

எப்படியாவது எம்.பி. ஆக வேண்டும் என்ற கனவில் இருந்த சண்முகராஜனுக்கு இது அடுத்த ஊசி - இடது விலாவிலேயே ஏறிற்று. சிரித்துக் கொண்டே சகித்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் உடம்பை பொட்டலம் கட்டி வெளியே அனுப்பவும், அலறிக்கொண்டு வந்து வளைத்து கட்டிக் கொண்டு நின்றது ஒரு பெரும் கூட்டம்.

சண்முகராஜால் முகத்தைக்கூட சரியாக பார்க்க முடியவில்லை!

இரண்டு நாள் போயிருக்கும்!

ரைஸ்மில் ஆறுமுகம் தேடிக்கொண்டு வந்தார்.

"அடடே அண்ணனா வாங்க வாங்க..."

"சண்முகம் முக்கியமான விசயமப்பா... அதான் உன்னிய பாக்க வந்தேன்..."

"சொல்லுங்கண்ணே, ஆமா, அய்யா மவனைப் பாத்து பேசினீயளா... என்ன சொன்னான்?"

"அத ஏம்ப்பா கேக்கே... அய்யா என்கிட்ட வாங்குன பணத்த மட்டுமில்ல அவரோட கறுப்பு, அப்பால நகை நட்டுன்னு அம்புட்டையும் ரகசியமா பல இடங்கள்ல வெச்சிருக்காராம். அது எங்கன்னு அய்யா சம்சாரத்து கிட்ட கூட சொன்னதில்லையாம். இப்ப நான் என்னத்தப் பண்ணுவேன்னு மூக்கைச் சிந்தறாம்பா அந்த வீரமணி. அவன்தான் அப்படீன்னா அய்யாவோட கீப்பு அந்த புலியூர்க்காரி... ஏதோ கட்ன புருஷன் போனமாதிரி சீன்போடறா..."

- ஆறுமுகம் சொல்லச் சொல்ல சண்முகராஜுக்குள் ஏதேதோ எண்ணங்கள் ஓட ஆரம்பித்தன.

"யப்பா... நான் உன்னயப் பாக்க எதுக்கு வந்தேன்னு சொல்லிட்றேன். உனக்கு இந்த ஆவிங்ககூட பேசற யாரையோ நல்லா தெரியுமாம்ல?" - பாய்ன்ட்டுக்கு வந்தார் ஆறுமுகம்.

"போச்சுடா... அண்ணே அதெல்லாம் எதுக்கு, ஆமா... உங்களுக்கு யாரு சொன்னது?"

"அது எதுக்கு உனக்கு... நீ ஆள் யார்னு சொல்லு."

❖❖❖



நாகப்பட்டினத்தில் ஒரு தென்னந்தோப்பு. தோப்புக்குள் கடல் காற்றின் உசாவல்! மையத்தில் ஒரு ஓட்டு வீடு.

ஆறுமுகமும் சண்முகராஜுும் வரவும் அந்த ஆவி ஜோதிடர் கிருஷ்ணமூர்த்தி கட்டிப்பிடித்து வரவேற்றான். அவனிடம் ஆவி ஜோதிடம் பார்க்க வருகின்றவர்கள் இரண்டு எலுமிச்சம்பழம், இரண்டு வெற்றிலை, இரண்டு கொட்டைப்பாக்கு (பாக்கெட் பாக்குக்கு அனுமதியில்லை) இரண்டு வாழைப்பழம் இரண்டே இரண்டு ஊதுபத்தி, இரண்டு கற்பூரம், இரண்டு தேங்காய் என்று எல்லாவற்றையும் இரண்டாகவே கொண்டு வரவேண்டும்.

கிருஷ்ணமூர்த்தியும் அவைகளை வைத்து பூஜையைத் தொடங்கிவிட்டு கற்பூரத்தையும் முன்னால் ஏற்றுவான். அது அணைவதற்குள் அவன் உடம்பு ரப்பர் போல வளைந்து நெளிய ஆரம்பித்துவிடும். அதாவது அவனுக்குள் ஆவிபுகுந்து விட்டதாக பொருள். அதன்பின் நாம் கேள்விகள் கேட்க அந்த ஆவி கிருஷ்ணமூர்த்தி வாயிலாக பதில் கூறும். மூன்று கேள்வி வரைதான் கேட்கலாம். அப்போதும் ஆறுமுகம் எதிரிலும் சண்முகராஜன் எதிரிலும் அவன் உடம்பு அநியாயத்துக்கு முறுக்கிக் கொண்டது. வாயில் இருந்து எச்சில் தெறிக்க பெரும் காற்றும் வீச்சலாக வெளிப்பட்டது. ஆறுமுகம் பயபக்தியோடு "அய்யா வந்துட்டீங்களா?" என்று கேட்டார்.

"கவலப்படாதே ஆறுமுகம். உன் பணம் பத்ரமா என் வயக்காட்டு பம்பு செட்டு ரூமுக்குள்ள மோட்டார் இருக்கற இடத்துக்கு கீழே உள்ள மரப்பெட்டிக்குள்ள இருக்கு. எடுத்து என் மவன் கிட்ட கொடுத்துடு. உன் பணத்தை அவன் தந்துடுவான்" - என்று கேள்வி கேட்கக் கூட இடமில்லாதபடி பதில் வந்தது.

"அய்யா தங்கம்யா நீங்க... உங்கள யாருய்யா இப்படி சாச்சது...? நெஞ்சு துடிக்குதுய்யா - யாருய்யா அந்த

துரோகி?..." - என்று இரண்டாம் கேள்வி கேட்டார் ஆறுமுகம்.

"எல்லாம் அந்த கேசவரங்கன் வேலை. அவனாண்ட நான் எம்.பி. சீட்டு கேக்கப் போறேன்னு சொல்லியிருந்தேன். ஆனா அந்தத் துரோகி நான் எம்.பி.யாகிடக் கூடாதுன்னு என்னப் போட்டுத் தள்ளிட்டான். நான் ஒத்த ஆளு - ஆனா என் எதிர்ல இருவது பேரு - சிதைச்சிட்டாங்க என் உடம்பை. அறுவத்தி நாலு குத்து..."

"அய்யா இது பெரும் துரோகம்யா - பெரும் துரோகம். அந்த நாய் உங்களுக்கு மாலை போடவும் வந்தான்யா. என்னா தெகிரியம் அவனுக்கு..."

"ஆமா ஆறுமுகம் அவனை உடாதே. அவன் என்னைக் காலி பண்ண மாதிரியே அவனையும் காலி பண்ணிடுங்க..."

"உத்தரவுய்யா... உங்க மேல சத்தியம் - அவனை சாச்சிட்டு மறுவேலை பாக்கறேன்..."

- ஆறுமுகம் சொல்ல கிருஷ்ணமூர்த்தியும் மயங்கி விழச் சரியாக இருந்தது.

ஆறுமுகத்திடம் இப்போது கோபத்துக்கு கோபம் சந்தோஷத்துக்கு சந்தோஷம்!

❖❖❖

வயல்காட்டு பம்புசெட்டு அறைக்குச் சென்று பார்த்தபோது அங்கே மரப்பெட்டி இருந்தது. அதில் இருபது லட்சம் இருந்தது! ஆறுமுகம் நோட்டுக்கட்டுகளை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு பெருமூச்சு விட்டார். கூடவே இருந்தான் சண்முகராஜ்.

"சண்முகராசு.... உன் சினேகிதன் பெரிய ஆளுப்பா... பாரு - அய்யா வாக்கு நெசம்! என் பணம் கிடைச்சிடிச்சு." - என்றார். குரலில் ஒரே சந்தோஷம்.

"அப்ப அடுத்த குறி அந்த கேசவரங்கனாண்ணே?"



"பொறவு - அய்யாக்கு வாக்கு கொடுத்துட்டேனே? அவனுக்கு எவ்வளவு தைரியமிருந்தா அய்யாவை அந்தப் பாடுபடுத்தி கொன்னுருப்பான்."

- துடித்தது ஆறுமுகத்தின் மீசை! அதை வெகுவாக ரசித்தான் சண்முகராஜனும்.

❖❖❖

கேசவரங்கன் காலி!

அய்யாவை விடவே அதிக குத்துக்கள்.

செய்தியிடமும் காட்டுத்தீயின் வேகம்.

சண்முகராஜனை செய்தி வந்து சேர்ந்தபோது அவனுக்கு வானத்தில் மிதப்பது போல இருந்தது. உண்மையில் அய்யாவின் ஆவி எல்லாம் அந்த கிருஷ்ணமூர்த்தியிடம் வந்து எதையும் சொல்லவில்லை. எல்லாமே சண்முகராஜின் வேலை. சண்முகராஜ் சொன்னதைத்தான் அந்த ஆவி கிருஷ்ணமூர்த்தியும் சொல்லியிருந்தான்.

ஆவி பொய்யில்லை என்று ஆறுமுகம் நம்ப வேண்டுமே...? அதற்காக இருபது லட்சத்தை வயல்காட்டு பம்புசெட்டு அறைக்குள் மரப்பெட்டிக்குள் கொண்டுபோய் வைத்ததும் சண்முகராஜன் தான்!

இந்த இருபது லட்சத்தை எம்.பி.யானால் திரும்ப சம்பாதித்து விடலாமே... அதுவும் கோடிகளில்...!

கேசவரங்கன் பாணியில் அவன் உடம்புக்கு மலரஞ்சலி செலுத்த மார்ச்சுவரிக்குப் புறப்பட்டான் சண்முகராஜ்! ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

பத்திரிகையாளர்கள் மட்டும் சுற்றிச் சுற்றி வந்தனர்...

"இது மன்னிக்க முடியாத தவறு... அரசியல்ல போட்டி இருக்கலாம் பொறாமையோ கொலவெறியோ

கூடவே கூடாது. இனி ஒரு கொலை நடக்காதபடி தடுக்க வேண்டியது போலீஸ் கடமை" - என்று அரசியல்வாதி போலவே பேசிய சண்முகராஜன், செயற்கையான சோகத் தோடு வந்து காரில் ஏறிக் கொண்டு கிளம்பினான்.

கார் கிளம்பவும், உற்சாகத்தோடு மாறத் தொடங்கி னான்.

அப்போது... "அரசியல்ல போட்டி இருக்கலாம் பொறாமையோ கொலவெறியோ கூடாதா... எப்படி? எப்படி?" என்று ஒரு குரல் அவன் பின்புறத்தில் இருந்து ஒலிக்கவே திரும்பிப் பார்த்தான். புகை மூட்டமாய் ஒரு உருவம்!

"என்ன பாக்கறே... என்கிட்டயேவா உன் தந்திரம்?" என்று திரும்பவும் குரல். அப்பட்டமான கேசவரங்கனின் குரல்!

சண்முகராஜுக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது.

அந்த காரும் அவன் கட்டுப்பாட்டில் இருந்து விலகி மேலேறியிருந்த ஒரு மேம்பாலத்தின் கைப்பிடிச் சுவற்றை உடைத்துக் கொண்டு தலைகீழாக கீழே விழ ஆரம்பித்தது.



## 22. அந்த நாகலிங்க மரம்

விமான நிலையத்தை விட்டு வெளியில் வந்த ஆத்ரேயனிடம் பெரிதாக லக்கேஜ்கள் எதுவும் இல்லை. பின் தொடர்ந்து வரும் ஒரு வீட்டு நாயைப் போல ரோலர் சூட்கேஸ் மட்டும் அவனோடு வந்தது.

வெளியில் வந்து டாக்சி பிடிக்க வேண்டிய சிரமமே இல்லாதபடி ஆண்டியப்பன் தன் பிஎம்டபிள்யூ காரையே அவனுக்காக அனுப்பியிருந்தார். அதை எடுத்து வந்திருந்ததும் மாதச் சம்பளம் வாங்கும் ஒரு டிரைவர் இல்லை. ஆண்டியப்பனின் ஒரே மாப்பிள்ளையான சண்முகசுந்தரம்! ஆத்ரேயன் வெளியே வரவும் ஓடிச்சென்று அந்த ரோலர் சூட்கேஸை பிடுங்கிக் கொள்ளாத குறையாக

"வெல்கம் மிஸ்டர் ஆத்ரேயா" என்றார் புன்னகை யோடு.

ஆத்ரேயனுக்கு அவரை அடையாளம் தெரிய வில்லை.

"நீங்க?"

"ஆண்டியப்பன் சாரோட மாப்ளை. என்பேர் சண்முகசுந்தரம்."

"ஓ அப்படியா!"

❖❖❖

ஸ்டார் ஹோட்டல் அறை.

கர்ட்டனை விலக்கி வெளியே பார்த்த போது சென்னை நகரின் கான்க்ரீட் குவியல் கண்களைக் குத்தியது. நடுநடுவே மரங்களும் கண்ணில் பட்டு பச்சை தெரிந்தது. வானிலும் மழை வருவதற்கான அறிகுறிகள்!

அப்போது போனில் கனைப்பு. ஆத்ரேயன் அதற்கு காதைக் கொடுத்தான்.

"தம்பி ரூம்ல செட்டில் ஆயிட்டீங்களா?" - மறு பக்கமாய் சளிப்பிடித்த தொண்டை வழியாக வரும் நடுங்கும் வார்த்தைகளில் ஆண்டியப்பன்தான் கேட்டார்.

"யெஸ்... கொயட், ஐ ஆம் செட்டில்டு."

"சரி எப்ப பார்க்கலாம்?"

"என்ன கேள்விங்க இது. உங்கள பாக்கதானே அவசர அவசரமா கிளம்பி வந்திருக்கேன். மை டைம் ஈஸ் ஒன்லி ஃபார் யுவர்ஸ்.... எப்பவேணா பாக்கலாம். நான் தயாரா இருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம். நீங்க ஹோட்டல் எல்லாம் சாப்டாதீங்க. உங்களுக்கு நம்ம வீட்லதான் சாப்பாடு.



விருந்துன்னா ஐயோ அதெல்லாம் எதுக்குன்னுவீங்க. ஆனா என் அப்பாவோட நண்பர் பேரனுக்கு விருந்து கொடுத்தாதான் எனக்கு கொஞ்சமாவது சந்தோஷம் இருக்கும். என்ன சொல்றீங்க?"

"இப்ப விருந்து விஷயமே இல்லை. அவசரமா என்னை நீங்க வரச்சொன்னதுதான் விஷயம். எனக்கும் என் ஆபீஸ்ல லீவு கிடைக்கறது அபூர்வம். உங்களுக்காக மூணு நாள் லீவு போட்டுட்டு புறப்பட்டு வந்திருக்கேன். அந்த வேலை முடியணும்."

"அதெல்லாம் விஷயமே இல்ல தம்பி. அந்த வேலைக்கு அரை மணி நேரம் அதிகம். ஆனா நீங்க நேர்ல வரணும். பாக்க வேண்டிய முக்கியமான இரண்டு பேரை பாக்கணும். அவ்வளவுதான்."

"அதான் வந்துட்டேனே...?"

"அப்ப தயாரா இருங்க. நம்ம மாப்ளையே காரோட வந்துடுவார்."

"எதுக்கு அவரை சிரமப்படுத்தறீங்க. ஒரு கால் டாக்சிக்கு போன் பண்ணா முடிஞ்சிச்சு விஷயம்."

"ஆனா அது மரியாதை இல்லையே... அடுத்து என் மாப்ளையும் ஒரு வெட்டி முண்டம்தானே - இதுக்காவது பயன்படட்டும்."

ஆண்டியப்பனின் பேச்சில் வெளிப்பட்ட சில நிஜங்கள் ஆத்ரேயனை மெல்லிசாய் கீறின!

வடபழனி நோக்கி செல்லும் கோடம்பாக்கம் நெடுஞ்சாலை மேல் வாகனங்கள் எறும்புகளாகி ஊர்ந்துதான் போக வேண்டியிருந்தது. மழை வேறு பெய்து முடித்திருந்தது. அரை மணி நேர மழை. அதற்கே முழங்கால் அளவு தண்ணீர்! காருக்குள் கடந்து கொண்டிருந்த ஆத்ரேயனுக்கு தான் வாழும் அமெரிக்க மண்ணின் பேடன்ரூஜ் நகரமும் அதன் வளப்பமும் நினைவில் தோன்றி பெருமூச்சை உருவாக்கியது.

"சின்னமழைக்கே இவ்வளவு தண்ணியா?" என்று கேட்டும் விட்டான்.

"அதான் சார் சென்னை. இப்பல்லாம் சிமெண்ட் ரோடுதான் இங்க ஃபேஷன். தார் ரோட்டைவிட அதுல நல்ல சில்லரை. சதுர அடி கணக்கு வேற. ஆகையால் சந்து பொந்தெல்லாம் போட்டுத் தள்ளிடறாங்க. ஏற்கெனவே எங்க பார் வீடுங்க. தண்ணி பூமிக்குள்ள நுழைய இடமே கிடையாது. இருக்கற மிச்ச சொச்ச இடத்துலயும் கான்க்ரீட் ரோடுங்க."

மாப்பிள்ளை வழிநெடுக ஏதேதோ பேசிக் கொண்டே வந்தார். ஆத்ரேயனுக்கு நெஞ்சில் ஏதோ உதைத்தது போல் இருந்தது.

❖❖❖

ஆண்டியப்பனுக்கு ஒரே ஒரு மகள். தடபுடலாக திருமணம் செய்து வைத்தார். விருந்தில் பதினெட்டு வகை பொரியல், பதினெட்டு வகை இனிப்பு என்று அவர் காட்டிய பகுமானம் ஆங்கில நாளிதழ்களில் எல்லாம் செய்தியாகியது.

ஆனாலும் அந்த செலவுக்கு மகள் அந்த கணவனுடன் வாழ்ந்தது ஆறு மாதங்கள்தான். ஒரு விமான விபத்தில் மாப்பிள்ளை கரிக்கட்டையாகத்தான் கண்டெடுக்கப் பட்டான்!

ஆண்டியப்பன் ஒரு காண்ட்ராக்டர். அரசாங்க கட்டிடங்கள் இவராலேயே எழுப்ப வேண்டும். எழும்பவும் முடியும். ரியல் எஸ்டேட்டிலும் புலி. எதிரிகளும் நிறைய உண்டு. அதில் ஒருவர், 'இவர் மகளுக்கு காலசர்ப்ப தோஷம், கழுத்தில் தாலி தங்காது' என்று கிளப்பிவிடவும் அது வேகமாக பரவியது. மாப்பிள்ளை சாகவும் ஊர் ஜிதமாகிவிட்டது.



ஆண்டியப்பன் அசரவில்லை. சொந்தத்திலேயே வீட்டோடு கிடக்க தோதாக உறவிலேயே ஒருவனை பிடித்துப் போட்டு விட்டார். அவர்தான் இந்த 'வெட்டி முண்டம்.'

இப்போதைக்கு டிரைவர் உத்யோகம்!

❖❖❖

ஆண்டியப்பனின் பங்களா மிரட்டியது. திரும்பிய பக்கமெல்லாம் லண்டன் ரோஸ்உட்டும் செம்மரக் கதவுகளும் ஆண்டியப்பனா கொக்கா என்றன.

விருந்தும் அசத்தல். பரிமாறியது மகள்தான். ஏனோ அவள் முகத்தில் ஃப்ரீசரில் உறைந்த தயிர் போல் ஒரு தன்மை. ஆண்டியப்பன் மனைவி ஒரு அறைக்குள் படுத்த படுக்கையில் இருந்தாள். கஷ்டப்பட்டு எழுந்து வந்து ஒரு வணக்கம் வைத்துவிட்டு போனாள். அப்போது இருமிய இருமலில் கண்ணாடிகள் உடைந்து சிதறியது போல ஒரு சப்தம்.

"சாப்பாடு நல்லா இருந்திச்சா?" என்று ஆரம்பித்தார் ஆண்டியப்பன்.

"சூப்பர்."

"அப்ப விசயத்துககு வந்துட்றேன். உங்க பூர்வீக இடம் ஒண்ணு இந்த வடபழனில அப்படியே கெடக்கறது உங்களுக்கும் தெரியும். நாப்பத்தி அஞ்சு சென்ட்டு இடம். இன்னிக்கு எவ்வளவுக்கு கேக்கறாங்க தெரியுமா?"

"சொல்லுங்க..."

"ஒரு சென்ட்டுக்கு பதினைஞ்சு லட்சம். கணக்கு போட்டுக்குங்க."

"ஆனா, அதை எக்காரணம் கொண்டும் எப்பவும் விக்கக் கூடாது. அதுதான் தாத்தாவோட விருப்பம்னு அப்பா சொல்வார்."

"அது சரி... அதுக்காக அப்படியே போட்டு வைக்கறது மட்டும் புத்திசாலித்தனமா?"

"இப்ப அந்த இடம் எப்படி இருக்கு. நீங்க பாத்துக்கறீங்க தானே?"

"நிச்சயமா. என்னை நம்பி ஒப்படைச்ச சொத்தாச்சே. பாத்துக்காமே இருப்பேனா? ஆனா தொடர்ந்து பாத்துக்க முடியும்னு தோணலை. எங்கடா இடம் சிக்கும்னு ஒரு குரூப் அலையுது தம்பி. ஃபோர்ஜரியா பத்திரம் ரெடி பண்ணி ஏமாத்தி வித்துட்றாங்க. ஏதோ என் வசம் இருக்கறதாலயும் யார் ஆட்சிக்கு வந்தாலும் நான் சினேகம் பண்ணிக்கறதாலயும் அந்த இடம் தப்பிச்சுகிட்டே இருக்கு. அதுக்கு இப்ப நல்ல விலையும் வந்துருக்கு. நீங்கதான் இப்ப வாரிசு. ஆறே முக்கால் கோடியோட ஒரு பார்ட்டி தயாரா இருக்கு. வித்து பேங்குல டெபாசிட் பண்ணிடுங்க. இல்ல எனக்கே கொடுங்க. நம்ம பேங்குங்க ஒரு வட்டி தரவே அழுவுதுங்க. நான் ரெண்டு வட்டி தரேன். எனக்கும் இப்ப பணத் தேவை.."

"அது இருக்கட்டும்... அந்த இடத்துல ஒரு நாகலிங்க மரம் இருக்குல்ல?"

"ஆமா... நல்ல ஜெகஜாண்டிக்கான மரமாச்சே. நம்ப வீட்டுல தினமும் பூசை உண்டு. அதுக்குன்னே ஒரு அய்யர் வருவாரு. அவர் அங்க போய் கூடை நிறைய நாகலிங்கப் பூவை பறிச்சிக்கிட்டு வருவார். ஆனா, அதை வெட்டமா இப்ப அங்க கட்டடம் கட்ட முடியாது. அதை எல்லாம் வாங்கறவங்க பாத்துப்பாங்க. ஆறே முக்கால் கோடிங்கறது நல்ல விலை. எங்கப்பா எங்க இடத்தை அவசரப்பட்டு இரண்டு கோடிக்கு வித்துட்டாரு."

"இதுக்குத்தான் எனக்கு டிக்கெட்டெல்லாம் போட்டு ரொம்ப அவசரம்னு வரச் சொன்னீங்களா?"

"ஆமாம் தம்பி. இது என்ன போன்ல பேசி முடிவு பண்ற விஷயமா? அப்படியே ரெஜிஸ்தர் ஆபீஸுக்கு வந்து



பவரை எனக்கு எழுதிக்கொடுத்துட்டு நீங்க புறப்படுங்க. மிச்சத்தை நான் பாத்துக்கறேன்."

"லுக்.. இப்ப நான் யு.எஸ்.ல நல்லாதான் இருக்கேன். சொந்த வீடு, சொந்த கார்... குழந்தைங்கன்னு... இதை வித்து பணம் வந்தா அது அடிஷனல்தான்."

"என்ன தம்பி... ஆறே முக்கால் கோடியை ஒரு விஷயமாவே நினைக்காம பேசறீங்க..."

"சரி... நான் இப்ப அந்த இடத்தையும் மரத்தையும் பாக்க விரும்பறேன். லெட் அஸ் மூவ்?"

"தாராளமா - மாப்ளை எதுக்கு இருக்காரு. எலேய் சண்முகம்." அவரும் ஓடிவந்தார்.

"அந்த இடத்துக்கு கூட்டிக்கிட்டு போய் கூட்டிட்டு வந்துடு..."

"சரிங்க மாமா."

அடுத்த நிமிடமே கிளம்பினார்கள்.

❖❖❖

**வ**ழியெங்கும் ஒரே சந்தடி!

ஏரோப்ளேனை தவிர எல்லா வாகனங்களும் கடந்து போயிற்று.

அவன் அந்த காலி இடத்தை அடைந்தபோது சக்கென்று தொற்றி விரியத் தொடங்கியது சிறு வயது நினைவுகள்!

அதிலும் அந்த நாகலிங்க மரம்... அடேங்கப்பா! ஆகாசத்திற்கே ஒட்டடை அடித்தபடி... ஏராளமான கிளைகள் - அதில் அடைக்கலப் பறவைகளின் கும்மாளக் கூக்குரல்கள்... ஆத்ரேயன் தாத்தாவும் ஆண்டியப்பனின் அப்பாவும் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆஸ்ரமத்துக்கு

போய்விட்டு வரும்போது அந்த வருகையின் ஞாபகமாக அங்கிருந்து வாங்கி வந்தது.

தாத்தா தனக்கான இடத்தில் நட்டார் - அவரும் அவருக்கான இடத்தில் நட்டார் - இரண்டும் அருகில் தான். ஆனால், இன்று அவர் நட்ட மரம் இல்லை. அங்கே ராட்சஸமாய் ஒரு அபார்ட்மென்ட்தான் கண்ணில் பட்டது. தாத்தா நட்ட மரமோ ஊட்டமாய் - உயரமாய்...!

அப்போது தாத்தா ஆத்ரேயனிடம் சொன்னதும் ஞாபகம் வந்தது.

"இந்த மரம்தான் நான்... இதை பாக்கறப்பல்லாம் உங்களுக்கு என் ஞாபகம் வரணும். இது வளர வளர நம்ம குடும்பமும் வளரும். இதோட நிழல், இதோட காத்து இந்தச் சூழ்நிலையையே ஆரோக்கியமா வெச்சிருக்கும். இதோட எப்பவும் பூஜிக்க பயன்படும். இதைவிட ஒரு பெரிய பயன்பாட்டை மனசார நம்பணும். அதனால் சொல்றேன் என் காலத்துக்குப் பிறகும் இந்த மரத்துக் காகவே இந்த இடம் விக்கப்படக்கூடாது. இதை விக்கறதும் ஆத்மாவை விக்கறதும் ஒண்ணு.

இதை வித்தா பணம் கிடைக்கலாம். குணம் மட்டும் கிடைக்கவே கிடைக்காது. குணமில்லாத பணமும், குப்பையும் ஒண்ணுதான்!"

தாத்தா அப்போதே அத்தனை தெளிவாக பேசியது இப்போது புரிந்தது. குணம் மட்டும் கிடைக்கவே கிடைக்காது என்பது எத்தனை நிதர்சனம். 'வெட்டிமுண்ட' மாப்பிள்ளை, சீக்காளி மனைவி, கொள்கையே இல்லாத வாழ்க்கைப் போக்கு... அடேயப்பா எத்தனை நிதர்சனம்!

ஊரும், ஊராக இல்லை. அல்ப மழைக்கே வெள்ளக் காடாகி விடுகிறது. வந்ததில் இருந்து ஒரு நல்ல விஷயம் கூட கண்ணில் படவில்லை. காதிலும் விழவில்லை. குறைந்த பட்சம் இதை விற்கவோ வெட்டவோ கூடாது என்கிற நல்ல முடிவையாவது தீர்க்கமாய் எடுப்போமே!



முடிவுக்கு வந்த ஆத்ரேயன் மரத்தின் அடிபாகத்தைப் போய் கட்டிக்கொண்டான்.

"தாத்தா நல்லா இருக்கீங்களா– நாங்களும் சௌக்யம். இங்க இருந்தா நல்லா இருக்க முடியாதுன்னுதான் அமெரிக்காவுக்கு போய்ட்டோமோ?"

அவன் அந்த மரத்தண்டை தாத்தாவின் மார்பாக கருதி கண்ணீர் விட்டான்.

'வெட்டி முண்ட' மாப்பிள்ளைக்கு மட்டும் அது புரியவில்லை. கேலியாக பார்த்துச் சிரித்தார்.

❖❖❖

## 23. ரசவாதம்

'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கூடக் கொடுக்கும்' என்று குமார் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் ஒரு பக்கடா கட்டிக் கொடுத்த பொட்டலம் வழியாக எல்லாம் கூட, அது கொடுக்க முற்படும் என்பது தான் அவனது அனுபவம்!

குற்றாலம் வந்த இடத்தில் தள்ளு வண்டிக்காரன் ஒருவன் பக்கடா போட்டு, எல்லோர் மூக்கையும் உரசிக் கொண்டிருந்தான். குளித்து விட்டு வந்த உற்சாகம், சாரல் போடும் இதமான க்ளைமேட். நடுவில்டீயும், பக்கடாவும் என்பது, இந்திர சிம்மாசனம் கிடைத்து அதில் அமர்ந்து கொண்டு, ரம்பையின் டான்ஸ் பார்க்கிற மாதிரியான ஒரு அனுபவமல்லவா?



குமாரும் அந்த அனுபவத்துக்கு ஆளானபோதுதான், அந்தப் பக்கடா கட்டிக் கொடுத்த காகிதம் 1992-ம் வருடத்து டைரியின் ஒரு நாள் பக்கம் என்பது தெரிந்தது. அதில், ஒருவர் எழுதிய நாள் குறிப்புகளும் கண்ணில் பட்டு, குமாரை இப்போது பொதிகை மலை உச்சிக்குத் தன்னந் தனியாக தள்ளிக் கொண்டு வந்திருக்கிறது.

நடுநடுவே அந்தத் தாளை எடுத்துப் பார்த்துக் கொண்டான்.

'இன்று என் வாழ்வில் ஒரு மறக்க முடியாத நாள்.

பொதிகை மலை மேல் வடக்கும் கிழக்கும் முட்டிக் கொள்ளும் ஈசான்ய பாகத்தில் 'அம்பிருக்கை' என்னும் இடத்தில் நான் சரவண சித்தரைத் தரிசனம் செய்தேன்.

'சரவண சித்தரின் திருமுகம் போற்றி
சரவண சித்தரின் திருவடி போற்றி
சரவண சித்தரின் அருள்நெறி போற்றி
சரவண சித்தரின் சாகா ஒளி போற்றி'

எனும் மந்திரத்தை லட்சத்தி எட்டு முறை ஜெபித்தால், அவர் பிரசன்னமாவார்; கேட்டதைத் தருவார் என்பது என் வரையில் சத்தியமானது. அம்பிருக்கை சுனையருகில் உள்ள பாறை மேல் அமர்ந்து நான் அவரை உபாசனை செய்து லட்சத்தி எட்டு முறை, ஜெபிக்கவும்... அவரும் 'அழைத்தாயா அப்பனே...?' என்று கேட்டபடியே என் முன் பிரசன்னாமானார்! நான் அவரிடம், வாய் பேச முடியாத என் ஊமைத் தங்கையின் எதிர்காலம் பற்றித் தான் கேட்டேன். என் தங்கையைத் திருமணம் செய்து கொள்ள முன்வருபவர்கள் குறைந்தபட்சம் நூறு பவுனாவது போட வேண்டும் என்று கேட்டது எனக்கொன்றும் பெரிய தவறாகப் படவில்லை.

கிளி மாதிரி பெண்ணுக்கே இன்று வரதட்சணை தந்தால்தான் திருமணமாகிறது. சவரண சித்தரும் 'என் குறையைப் போக்கும்விதமாய், அப்போது என் வசம்

இருந்த— நான் வேலை பார்த்த கடையின் சாவிக் கொத்தில் இருந்து, எப்போதாவது எனக்கு வரும் காக்காய் வலிப்பு நோய் நிமித்தம் நான் நிரந்தரமாகக் கையில் போட்டிருந்த இரும்புக் காப்பு வரை.... சகலத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டு, மறுநாள் அதே இடத்தில் என்னைச் சந்திக்கச் சொல்லிவிட்டு, இப்படி என்று திரும்புவதற்குள் மறைந்து விட்டார்.

மறுநாள் நான் அவரைச் சந்திக்கப் போனபோது அந்தப் பாறைமேல் என் கடை சாவிக் கொத்து, என் இரும்புக் காப்பு என எல்லாமே தங்கமான நிலையில் ஒரு சிறு பானைக்குள் கிடந்தது. அவர் வரவில்லை! ஆனால், அவர் என் தங்கை வாழ்க்கைக்கு உதவி செய்து விட்டது மட்டும் புரிந்தது. அப்போதுதான் இரும்பைத் தங்கமாக்கும் ரசவாதம் எவ்வளவு உண்மை என்பதை நான் உணர்ந்து கொண்டேன்!'

என்பது வரை அந்த டைரி தாளில் இருந்தது. எழுதியது யார், அவர் பெயரென்ன என்று எதுவும் தெரியவில்லை. ஆனால், சரவண சித்தர் பற்றியும், அவரை லட்சத்தி எட்டு முறை ஜெபித்தால் தரிசிக்க முடியும் என்பதும் அந்த பக்கடாத் தாள் வழியாகத் தெரிந்து விட்டது.

இரும்பைத் தங்கமாக்க முடிந்த அவர் தான் சாகா வரம் பெற்றவராயிற்றே?

குமாரும் அந்த வடகிழக்கு முனையில் உள்ள அம்பிருக்கைக்கு வந்து சேர்ந்தான். வெளியே ஒருவரிடமும் மூச்சு விடவில்லை. விஷயம் தெரிந்தால், சரவண சித்தர் பற்றிய செய்தியும் மந்திரமும் பரவி போட்டி அதிகமாகி விடும். சில பகுத்தறிவுச் சிங்கங்கள் 'எலே கோட்டிப்பயலே! இந்த பக்கடாப் பேப்பர் கிறுக்கலையா நீ நம்பறே? உன்னை எல்லாம் சக்கரைத் தண்ணில குளிப்பாட்டி எறும்புப் புத்துல உருட்டி விடணுமடா' என்றும் கொக்கரிக்கலாம்...

எதற்கு வம்பு?

❖❖❖



குமாருக்கும் நிறையத் தேவைகள் இருந்தன.

அட யாருக்கு இல்லை..? அம்பானிக்கே தொண்டைக் குழி அளவுக்கு கவலைகளும், விருப்பங்களும் இருக்கும் போது குமார் என்ன குமார்..?

அவனுக்குள் இப்போது ஏராளமாய்த் திட்டங்கள். சரவணசித்தர் வந்தால் அவரிடம் தங்கம் கேட்கக்கூடாது. தங்கம் செய்யும் அந்த ரசவாத ரகசியம்தான் வேண்டும்.

பெட்ரோலை வைத்துக் கொண்டு உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றன வளைகுடா நாடுகள்! வருஷம் முழுக்க அங்கே அக்னி நட்சத்திரம்தான்... இருந்தும் எல்லோரும் ஜில்லென்று வாழ்க்கை நடத்துகிறார்கள்.

அமெரிக்க அதிபருக்கோ, அவர் யாராக இருந்தாலும் தான்தான் பூலோக இந்திரன் என்கிற ஒரு நினைப்பு...

கங்காரு தேசம் ஒரு ஓரமாய் ஒழுங்காய்த்தான் இருந்தது. ஆனால், அங்கேயும் இப்போதெல்லாம் இந்தியன் என்றாலே தர்ம அடி!

உலகத்துக்கே ஞானத் தந்தை என்றால் இந்தியாதான்.

தமிழ் மொழியும் அதன் இலக்கணமும் போதுமே... நமது தொன்மை, வன்மையைத் தன்மையாகக் காட்ட...? ஆனாலும், இங்கேதான் சுத்தமான தண்ணி விட்டர் பன்னிரண்டு ரூபாய்க்கு விற்கிறது.

சரவண சித்தரிடம் சொல்லி, 'சாமி! தங்கம் பண்ணும் அந்த ரகசியத்தை தயவு செய்து சொல்லுங்கள்; அதை வைத்தே உலக நாடுகளை எல்லாம் அடக்கித் திருத்தி, நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் காட்டு கிறேன்' என்பதுதான் குமாரின் திட்டம்!

இவ்வளவு பெரிய வித்தையைக் கையில் வைத்துக் கொண்டு, இப்படியா காட்டுக்குள் எனக்கென்ன என்று இருப்பீர்கள்? ஒரு மூக்குக் கண்ணாடியைக் கண்டு பிடித்தவனுக்கெல்லாம் வரலாற்றில் இடம்கொடுத்து சிலை எல்லாம் வைத்திருக்கிறது உலகம்.

நீங்கள் மட்டும் தங்கம் செய்யும் இந்த ரகசியத்தைச் சொல்லிவிட்டால், அதன் பின், உலகின் எல்லோருக்கு மான சர்வமதத்தவர்களும் கும்பிடும் முதல் சாமியே நீங்கள்தான்! அதன்பின் இந்தியாதான் உலகின் தலை நகரம்.

சாமி இது தெரியாமல், இது புரியாமல் இந்தக் காட்டுக்குள் அப்படி என்னதான் செய்து கொண்டிருக்கி றீர்கள்?

குமார் கொந்தளித்துப் போனான்... பாறை மேல் அமர்ந்து சரவண சித்தருக்கான மந்திரத்தையும் சொல்ல ஆரம்பித்தான்.

'விடமாட்டேன் சாமி... நான் உங்களை உலகத்துக்கே கடவுள் ஆக்கப் போறேன்!" என்று நடுநடுவே கலைந்தும் போனான். அதன் பின் படாதபாடுபட்டு அந்த லட்சத்தி எட்டை எட்டியும் விட்டான். சரவணசித்தரும் 'அழைத் தாயா அப்பனே' என்று முன்னால் வந்தார். ஒரு கோவணம் தான் கட்டியிருந்தார். ஒரு மனிதனின் உடம்பில் அவன் எடைக்கு எடை முடி முளைக்க வாய்ப்பிருப்பதை அவரை வைத்தே தெரிந்து கொண்டான்.

கண்ணிரண்டும் எண்ணெய் பூசித் துடைத்த கருநீல உருண்டைகளாய் ஜொலித்தன.

'சாமி வந்துட்டீங்களா?'

அவர் சிரித்தார்.

'என் நம்பிக்கை வீண் போகல. அந்த சாமி பக்கோடா பேப்பர் ரூபத்துல எனக்கு வழிகாட்டிட்டான்.'

'நல்லதப்பா! எதுக்குக் கூப்பிட்டே?'

'எதுக்கா...? சாமி உங்களுக்கே இது நியாயமாப் படுதா? இந்த உலகமே தங்கம்னா வாயைப் பொளக்குது. பெரிய பெரிய சாமிங்களுக்கே கூட தங்க கோபுரம்தான் பிடிச்சிருக்கு. அதை இந்த மண்ணுல இருந்து தோண்டி எடுக்கறதே பெரும்பாடா இருக்கு."



"அதுக்கு நான் என்னப்பா பண்ணணும்?"

"தங்கம் செய்யத் தெரிஞ்ச நீங்க, அந்த ரகசியத்தை இப்படியா உங்களுக்குள்ள வெச்சுக்குவீங்க..."

"இப்ப என்ன, உனக்கு அந்த ரகசியம் தெரியணுமா?"

"தெரியணுமாவா... சாமி முதல்ல சொல்லுங்க. ஒபாமாவுல இருந்து ராஜபக்ஷே வரை ஒரு ஆட்டு ஆட்டி, பாரத தேசமா கொக்கான்னு உணர்த்திட்டு மறுவேலை பாக்கறேன். பாவம் சாமி நம்ம மக்கள்! எத்த தின்னா பித்தம் தெளியும்னு தெரியாம கிடக்கறாங்க..."

"அப்படின்னா ரசவாதம் முதல்ல உனக்குள்ள நடக் கணுமே?"

"எனக்குள்ளன்னா...?"

"தங்கம் எப்படிப்பட்டது?"

"எதாலும் கறுக்காது. தீக்குள்ள போட்டாலும் ஜொலிக்கும்; மொத்தத்துல எப்பவும் எங்கேயும் தன் விலையைக் கொஞ்சமும் இழக்காது."

"நீயும் அப்படி மாறணும்... யார் என்ன சொன்னா லும், உனக்குள்ள நீ குழந்தையா இருந்தப்ப இருந்த அந்த சந்தோஷம் - அப்படியே இருக்கணும். உன்னைச் சுத்தி எது நடந்தாலும் அது உன்னைப் பாதிக்கக்கூடாது..."

"நீங்க சொல்றதை, கேட்கறதுக்கு நல்லா இருக்கு. ஆனால் இந்த உலகத்துல அந்த மாதிரி இருக்க முடியுமா சாமி?"

"ஏன்... இங்க நான் அப்படித்தானே இருக்கேன்?"

"இங்க இந்தச் செடிகொடி மரம் மட்டைக்கு நடுவுல வாழறது ஒரு வாழ்க்கையா சாமி? இங்க உங்களால எப்படி இருக்க முடியுது?"

"என்னப்பா பண்ண.... இங்கதான் உலகத்தோட பாதிப்புகள் எதுவுமின்றி சந்தோஷமா இருக்க முடியுது..."

இருந்தும் உன்னைப் போல சிலர் எப்படியோ வந்துட்றாங்க!"

"எனக்கும் இந்த மலை ரொம்பப் பிடிச்சிருக்கு... ஆனால், இங்க நான் எவ்வளவு சந்தோஷமா இருந்தாலும், என்ன புண்ணியம்? அதை ஊர் உலகம் பார்க்கறதுலதானே சாமி சந்தோஷமே இருக்கு?"

"அப்ப சரி... அந்த ஊர் உலகத்துலையே நீ இரு முதல்ல, உன்னை நீ தங்கமாக்கிக்கோ. அப்புறம் ரகசியத்தை நீ என்கிட்ட வந்து கேட்டா சொல்றேன்..."

"அப்ப, நீங்களே என்னை ரசவாதத்தால தங்கமாக்கிடுங்க. உங்க கருத்துப்படியே என்னைச் சுத்தி என்ன நடந்தாலும் என்னை எதுவும் பாதிக்கக்கூடாது. நான் எப்பவும் சந்தோஷமா சிரிச்சுக்கிட்டே இருக்கணும்."

"அப்படியே ஆகட்டும் அப்பா. அப்படியே ஆகட்டும்..."

"சரி, நான் எப்ப வந்தா அந்த தங்கம் பண்ற ரகசியத்தை சொல்வீங்க?"

"நீ இப்ப போய் நித்ய சந்தோஷத்துல விழுந்த பிறகு, எப்ப வந்தாலும் உனக்கு நான் சொல்றேன். அது என்ன ஒரு விஷயம்? மண்ணுக்குள்ள கிடக்கற வேறு விதமான உலோக மண்ணுதானே அது!"

"சரி சாமி, என்னை நீங்க ரசவாதத்தால எப்படி தங்கமாக்குவீங்க! முதல்ல அதைப் பண்ணுங்க..."

"அதை நான் பண்ணணும்ங்கற அவசியமே இல்ல. என்னை நீ இங்க பாத்தேன்னு கீழ போய்ச் சொல். அதைக் கேக்கறவங்களே. உன்னை தங்கமாக்கிடுவாங்க..."

"நிஜமாவா?"

"ஆன பிறகு உனக்கே தெரியும். ஆனா நீதான் தெரிஞ்சுக்கவே விரும்ப மாட்டே..."



"அது எப்படி சாமி?"

"நீ முதல்ல கீழ போ... நடக்க நடக்கத் தானா புரியும்..."

"உத்தரவு சாமி... நான் கீழ போய் தங்கமான பிறகு வரேன். அந்த ரகசியத்தை சொல்ல மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதீங்க..."

"சித்தன்வாக்கு சிவ வாக்குப்பா... அது எப்பவும் மாறாது"

"இது போதும் எனக்கு, வரேன்..."

- குமார் துள்ளிக் கொண்டு திரும்பினான்!

சில வாரங்களுக்குப் பிறகு...

திருநெல்வேலி மனநலக் காப்பகத்தில் குமார் அனுமதிக்கப்பட்டான். அவன் அப்பா டாக்டரிடம் நடந்ததை கூறத் தொடங்கினார்.

'என் மகன் குற்றாலத்துக்கு குளிக்கப் போயிருக்கான். போன இடத்துல என்ன நடந்ததுன்னு தெரியலை. குற்றால மலைக்கு மேல யாரோ ஒரு சித்தரை தரிசனம் பண்றதுக்காக போயிருக்கான். அவரை தரிசனம் பண்ணவே முடியாதாம். அதுக்கு ஏதோ மந்திரம் இருக்காம். இவருக்கு அது எப்படித் தெரிஞ்சதுன்னுல்லாம் தெரியலை. ஆனால், இவன் அந்த சித்தரை தரிசனம் பண்ணிட்டான்னு தெரியுது. பாருங்க அவன் சிரிச்சுக்கிட்டே பேசறதை..." அவர் கூற டாக்டரும் கவனித்தார்.

"சாமி, உங்க தரிசனம் பெரிய பாக்கியம் சாமி... நீங்க சொன்ன மாதிரியே நான் இப்ப தங்கமடாயிட்டேன். கண்ணை மூடினாலே நான் ஜொலிக்கறது நல்லாத் தெரியுது. எங்கிட்ட உங்களைப் பத்திச் சிலர் கேட்டாங்க. நான் சொல்லமாட்டேன்னு சொன்னேன். போட்டு அடி

அடின்னு அடிச்சாங்க. நான் கடைசி வரை சொல்லலை சாமி. இனியும் சொல்ல மாட்டேனே...”

- குமார் தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தான். டாக்டரிடம் ஒரு பெருமூச்சு.

“என்ன டாக்டர்...?”

“இல்லை. இவர் இப்ப நமக்கெல்லாம் கிடைக்காத சந்தோஷத்துல இருக்கார். ஆனால், நாம் இவரைப் பைத்தியம்னு சொல்வோம். இவர் இப்படியே இருந்துட்டுப் போகவும் விடமாட்டோம். குணப்படுத்தி நம்மளைப் போலக் கஷ்டம் கவலைன்னு ஆக்கினாத்தானே நமக்கு நிம்மதி? அதை நினைச்சேன் சிரிச்சேன்” என்றார்.

“ஆக்கிடுங்க சாமி...” என்றார் அப்பா. ஒப்புக்கொண்டு சிரித்தார் டாக்டர்.

என்ன மனிதர்கள்?



# 24. அய்யர் வீட்டு ஆலமரம்

1998ம் வருஷத்தில் ஒருநாள்...

வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான் ஜனா. செருப்பை மாட்டிக்கொண்டு வீட்டின் மெயின் கேட் கதவைத் திறக்க முனைந்தபோது “வணக்கம் ஜனா சார்...” என்கிற குரல் கேட்டது. எதிரில் புரோக்கர் வீரபாண்டியன்! முன்புதான் புரோக்கர்கள் நாலுமுழ வேட்டி முழுக்கை சட்டை, சந்தன பொட்டு என்று எல்லா ஊர்களிலும் ஒரேமாதிரி தோற்றத்தோடு இருந்தார்கள்.

இப்போது ஹீரோ ஹோண்டாவில் பேண்ட் சட்டை சகிதம் ஒருவித கார்ப்பரேட் ஸ்டைலுக்கு அவர்கள் மாறிவிட்டார்கள்.

வீரபாண்டியனிடம் கூடுதலாக தோள்பட்டை குறுக்காக லேப்டாப் பேக் ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது. "வாங்க வீரபாண்டியன்..." என்றபடியே ஜனாவும் வீட்டுக்குள் திரும்பத் தொடங்கினான். அவன் திறந்த கதவின் வழியாக வீரபாண்டியனும் பின் தொடர்ந்தார். யார் வீட்டு வாசற்கதவாக இருந்தாலும் அது 'கொய்ங்ங்... என்றோ கிரீச்' என்றோ பாஷைகளில் அகப்படாத தினுசில் சப்தம் போட்டாக வேண்டும் என்பது ஒரு சாபம் போலும். ஜனா வீட்டு வராண்டாவில் பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஒருசில மாத அழுக்கோடு கூடிய சதுரத்தலையணைகள்... அதில் ஒன்றில் வீரபாண்டியன் அமரவும் எதிரில் உள்ள நாற்காலியில் அமர்ந்தான் ஜனா என்கிற ஜனார்த்தனன்.

உள்வாங்கல்கள் ஆரம்பமாயின. "சாரி சார்... முக்கியமா எங்கையாவது கிளம்பிகிட்டு இருக்கும்போது வந்துட்டேனா?"

"பரவால்ல வீரபாண்டியன். நீங்க வந்த விஷயத்த சொல்லுங்க..."

"நம்ம பில்டர் ராமச்சந்திரன் இரண்டு கோடி வரை வந்துட்டார். அதான் ஒரு வார்த்தை சொல்லிட்டு போகவந்தேன்..."

வீரபாண்டியன் இரண்டு கோடி என்று சொன்னது உள்ளே ஜனாவின் மனைவி உஷாவின் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். வேகமாக வராண்டா பக்கம் வந்து எட்டிப்பார்த்தாள். வீரபாண்டியனும் அவளைப் பார்த்து இணக்கமாக சிரித்தான்.

அப்படியே "எங்க உங்கள காணமேன்னு நினைச்சேன்" என்றான். ஜனா முகத்திலோ ஒரு தீர்மானமான தெளிவு.

"சாரி வீரபாண்டியன்... நான் முந்தி உங்களுக்கு சொன்ன அதே பதிலைத்தான் இப்பவும் சொல்ல



விரும்பறேன். இந்த வீட்டோட பின்பாகத்தை மட்டும் விக்கற எண்ணம் இங்க யாருக்கும் இல்லை. அதுக்காக இந்த வீட்டோட சேர்த்து வாங்கிக்க நீங்க முன்வந்தாலும் நான் விற்கத் தயாரில்லை. இரண்டு கோடி இல்ல மூணு கோடி கொடுத்தாலும் வேண்டாம். இனி ஒருமுறை இது சம்பந்தமா பேச வராதீங்க..." என்றான் மிக தெளிவாக. வீரபாண்டியன் வரையில் மிக அருகில் வந்து கன்னத்தை தெளிவாக பார்த்து சுரீர் என்று வலிக்கிற மாதிரி அறைந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. அதன்பின் வீரபாண்டியனால் அந்த நாற்காலியில் அமர்ந்திருக்க முடியவில்லை. ஆனால் உஷா வரையில் இரண்டு கோடி என்கிற தொகை அவளை கவிழ்த்துவிட்டது போலத்தான் இருந்தது. அது அவள் உடனடியாக பேச ஆரம்பித்ததில் தெரிந்தது.

"புரோக்கர் சார் நீங்க வருத்தப்படாதீங்க. இப்ப நீங்க போங்க. நான் உங்களுக்கு போன் பண்றேன்" என்றாள்.

வீரபாண்டியனும் கிளம்பிப் போனான்.

தவறாமல் கேட் சப்தமும் கேட்டு அடங்கியது.

ஜனா தன் மனைவியான உஷாவை வெறித்துப் பார்த்தான்.

"எதுக்கு இந்த பார்வை... ரெண்டு கோடிங்கறது ஒரு நல்ல தொகை. வேணும்னா இன்னொரு கோடி சேர்த்து மூணு கோடின்னு கேக்கறத விட்டுட்டு இந்த இடத்தை விக்கறதா இல்லைன்னா என்ன அர்த்தம்? ஏன் இப்படி வர்ற மகாலட்சுமியை வராதே அப்படியே திரும்பிப் போன்னு சொல்றீங்க..." என்று ஆரம்பித்து விட்டாள்.

"உஷா... நீ பணங்கற பாயின்ட் ஆஃப் வியூவிலேயே பார்க்கறே. இதை நானும் சரி, அப்பாவும் சரி அப்படி பாக்க தயாரா இல்ல. நம்ம வீட்டு தோட்டத்துல இருக்கிற அந்த ஆலமரம் நூத்திஐம்பது வருஷத்து மரம். அதுல இந்த நூத்திஐம்பது வருஷத்துல லட்சக்கணக்கான

பறவைகள் வாழ்ந்துருக்கு. வாழ்ந்துண்டும் இருக்கு! அதுல ஒவ்வொரு விழுது தரை தட்டும்போதும் இந்த குடும்பத்துல ஒரு நல்ல காரியம் நடக்கறதும் குழந்தை பிறக்கறதும் நடந்துருக்கு.

அப்போதைய காஞ்சி மடாதிபதி இந்த மைலாப்பூர் பக்கம் தேசாடனம் பண்ணப்போ அவர் கையில் நட்டமரம் அது. அன்னியில இருந்து இந்த ஏரியாவுக்கே அடையாளமாகவும் இது ஆயாச்சு. ஆலமரத்தய்யர் வீடுன்னா சென்ட்ரல்ல நிக்கற ஆட்டோக்காரனுக்கு கூட தெரியும்.

அப்படிப்பட்ட மரத்தை வெட்டி எரிஞ்சிட்டு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டறேன்னு ஒரு பில்டிங் காண்ட்ராக்டர் ஆசைப்படலாம். ஏன்னா அவங்க வரைல அது தொழில்.

நம் வரைல இது அப்படி இல்ல. அந்த விருட்சமும் நம்ம குடும்பமும் ஒண்ணுன்னு நீ எப்ப உணரப் போறே? இது நம்ம குடும்பத்துக்கு மட்டுமல்ல இந்த ஏரியாவுக்கே குளுமையைத் தந்துகிட்டிருக்கு. இது வளர வளரத்தான் இந்த ஏரியாவும் வளர்ந்ததுன்னு என் தாத்தா சொல்வார்...” ஜனா ஒரு பிடி பிடித்தான். ஆனால் உஷாவுக்கு அதனாலெல்லாம் மனம் நிறையவில்லை.

“போதும்... சென்டிமென்ட்டா இப்படி யோசிக்கறத முதல்ல விடுங்க. காத்துள்ள போதே தூத்திக்கடணும். அப்பா சொல்றார். தாத்தா சொல்றார்னு கேனத்தனமா பேசாம வர்ற மகாலட்சுமியை வரவேற்கிற வழிய பாருங்க. இன்னிக்கெல்லாம் உங்க சம்பளத்துக்கு நீங்க ரிடையர் ஆனா இருபதுல இருந்து இருபத்தி அஞ்சு லட்ச ரூவா வரும். அது நம்ம ரெண்டு பொண்களோட கல்யாணத்துக்கே காணாது. அதுக்கப்புறம் நமக்கு ஒரு வாழ்க்கை இருக்கு. அதுவும் வயசான வாழ்க்கை. மூட்டுவலி, இருமல் அப்புறம் உங்க குடும்பச் சொத்தான சக்கரை, ஆஸ்த்துமான்னு கட்டாயமான வியாதிகளோட பேராடற வாழ்க்கை. அப்ப டாக்டருக்கு கொடுக்காவது கைல பணம் வேணும்கறத மறந்துடாதீங்க...”



உஷாவின் பேச்சிலும் நியாயம் இருப்பது போலத்தான் தோன்றியது. மெல்ல மாடிப்பக்கம் சென்று மொட்டை மாடி கைப்பிடிச்சுவர் அருகே நின்று பின்னால் ஒரு முப்பது சென்ட் நிலப்பரப்புக்கள் பூதாகரமாக கிளை பரப்பி பொசியப் பொசிய வளர்ந்திருக்கும் அந்த ஆல மரத்தைப் பார்த்தான்.

உரம்போட்டுப் பார்த்துப் பார்த்து வளர்த்தாலும் அப்படி வளர்க்க முடியாது. நல்ல தரமான முரட்டு கிளைகள். முடிச்சு முடிச்சாய் கிளைகள் அங்கங்கே கை நிறைய அள்ளி குவித்து கூறு கட்டினதுபோல செந்நிறத்தில் ஆலம்பழங்கள்.. இலைகளுக்கு நடுவில் கீச்சு வீச்சு கீச்சு வீச்சு கீச்சு வீச்சு’ என்று பறவைக்குரல்கள்.

முன்பெல்லாம் நிறைய சிட்டுக்குருவிகள் இருக்கும். ‘கூஊஊஊ... கூஊஊஊ...’ என்று கூவிவரும் குயில்களும் நிறைய இருக்கும். இப்போதெல்லாம் இவைகளில் ஒன்று கூட கண்ணில்படுவதில்லை. இருந்தால்தானே?

காக்கைகள் மட்டும் மனித சமுதாயம் எவ்வளவுதான் படுத்தினாலும் நாங்கள் தப்பிப் பிழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுபோல அங்கும் இங்கும் நிறையவே கண்ணில் பட்டன.

சென்னைக்காற்று சூடாகி பலப்பல வருடங்கள் ஆகிவிட்டது. இருப்பினும் அந்த பாகத்தில் மட்டும் கொஞ்சம் குளிர் பூசிக்கொண்ட காற்று இருந்து அது ஜனார்த்தனின் கழுத்து மற்றும் காதெங்கும் உரசி, ஒரு சன்னமான இன்ப உணர்ச்சியை உருவாக்கிற்று. கூடவே கீழே உஷா பேசிய பேச்சும் உள்ளாடியது... அதோடு நண்பன் ஒருவன் சென்னையின் நடப்புக்காலம் பற்றி பேசியதுதான் உச்சகட்டம்!

“சென்னை நிறையவே மாறிவிட்டது இப்படி சொல்வது கூட பிழைதான். ராட்சஸமாய் மாறிக்கொண்டே போகிறது.

தினம் தினம் பெட்டி படுக்கையோடு வேலை தேடிக்கொண்டு வருவோர்க்கெல்லாம் சென்னைதான் ஜென்ம வாசஸ்தலம்!

எறும்புகூட தன் புற்றுக்குள் ஒரு கணக்கு வைத்துக் கொண்டுதான் கூட்டம் சேர்க்கும். மனித ஜாதியிடம் அப்படியெல்லாம் எதுவும் இல்லை. சாலையோரம் கிடக்கும் வீராணம் குழாய் எல்லாம் மனித ஜாகைகள் இங்கே...

கடலோடு கலக்கும் ஆறும் எப்போதும் தனி அழகு. அதெல்லாம் நூறு வருஷத்துக்கு முந்தி வரை... இன்றைக்கு சென்னை கூவத்தைப் பார்ப்பவர்களுக்கு இந்த மனித இனம்தான் எத்தனை கொடிய இனம் என்றே தோன்றும்!

சென்னை வாசிகளின் ஆறாம் அறிவுக்கு டவுன் பஸ்களில் பயணம் செய்வதும், டிராஃபிக்கில் நடப்பதும் இதனூடே வேலைக்குப்போய் மாசமானால் சம்பளம் வாங்கி வருவதுமே மகா பெரிய விஷயங்கள். இவர்கள் கண்களில் எங்கேயோ மலர்கிற மலர்கள் படுவதே ஒரு பெரிய விசேஷம். 'பரவாயில்லேயே... இந்த மண்ணில் இன்னமும் பூக்கள் பயிரிடப்பட்டு அவைகள் வாங்கவும் பட்டுக் கொண்டிருக்கின்றனவா?" என்று கேட்டுவிடும் எல்லைக்குள்தான் இருக்கிறார்கள் எல்லோரும்...

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு லிட்டர் தண்ணீராவது குடிக்க வேண்டும் என்பது கட்டாயம். இது இங்குள்ள மனிதர்கள் காதில் தவறாக விழுந்து விட்டது போலும். இங்கே எல்லோரும் இரண்டு லிட்டர் பெட்ரோலை கட்டாயமாக, பயன்படுத்தி வெட்ட வெளியை வெப்பப்படுத்துவதை ஒரு கொள்கையாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தெரு முக்கிலுள்ள பெட்டிக்கடை நோக்கி போவதாக இருந்தாலும் மோட்டார் பைக்தான். சென்னை வாசிகள் வரையில் கால்கள் என்பது வீட்டுக்குள் நடமாடவும் மாடிப்படி ஏறி இறங்கவும்தான்... இதனால் உடம்பை வளர்ப்பது என்பது மாறிப்போய் குறைப்பது என்பது ஒரு பெரும் போராட்டமாக ஆகி விட்டது.



எல்லோருக்கும் தண்ணீரானது வீட்டுக்கொல்லையில் கிணற்றில் இருந்து கிடைக்கும். இங்கே இருப்பவர்களுக்கு வீராணம்தான் வீட்டுக்கொல்லை...!?' இப்படியெல்லாம்தான் அந்த நண்பனும் பேசியிருந்தான்... மாற்றங்கள் உண்டாகி அது ஒரு நிற்காத சுழற்சியாக சுழன்று கொண்டிருக்கும் நிலையில் 150 வருட அந்த ஆலமரத்துக்கும் ஒரு அழிவு காண்ட்ராக்ட் வடிவில் வந்துவிட்டது!

தான் ஒருவன் மட்டும் மாறாமல் இருந்து இந்த சென்னையின் சிதைவை மீட்டு விடமுடியுமா என்ன? இறுதியாக ஜனாவுக்குள் அந்த கேள்விதான் தொக்கி நின்றது!

❖❖❖

அந்த இருட்டு அறைக்குள் ஒரு நீண்ட வறட்டு இருமலோடு படுத்திருந்தார் ஜனார்த்தனின் அப்பா ரங்கராஜன். அவருக்குப் பக்கத்தில் ஒரு மேஜை. அதன்மேல் செங்கற்களை அடுக்கி வைத்ததுபோல பழைய புத்தகங்கள்.

அதில்தான் அவருக்கு இளைப்பாறல். முதுமையின் கொடுமைக்கு நடுவில் ஆறுதல் என்பது புத்தகங்களிடம் தான் இருப்பதாக அவர் கருதுகிறார்.

ஏனோ டி.வி.யை அவரால் நேசிக்க முடியவில்லை. உஷாவோ டி.வி.க்கு தன்னை எழுதிக்கொடுத்து விட்டவள். பலமுறை டி.வி. தொடர்களால் அதன் ஈர்ப்பால் அடுப்பில் பால்பொங்கி வழிந்திருக்கிறது. சாதம் அடிப்பிடித்துக் கொண்டுவிட்டிருக்கிறது.

டி.வி.க்கு அடுத்து 'செல்போன்! கண்கள் அதைப் பார்க்காத வேளைகளில் வாயும் காதும் இதன் நிமித்தம் தயாராகிவிடுகிறது. உஷாவின் பிறந்தகத்தில் அன்றைக்கு என்ன சமையல் என்பதிலே இருந்து அவள் மன்னி அவள்

அப்பா அம்மாவுக்கு இரண்டாவது டிகாஷனில் காபி போட்டுத் தந்தது வரை எல்லா தகவல்களும் உடனுக்குடன் உஷாவின் காதுக்கு வந்து பதிலுக்கு இவளாலே மன்னிக்கு எப்படி ஆப்பு வைப்பது என்பதற்கான ஆலோசனைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டு அந்த விஞ்ஞான கருவி இப்படியாக சமூகசேவை ஆற்றிவருகிறது. ரங்கராஜன் இருண்ட அறைக்குள்ளேயே இருந்தபடி இதை எல்லாம் பார்த்து சிரித்துக் கொள்வார்.

'நேத்துவரை லவுட்ஸ்பீக்கரை தெருக்குழாய்ல கட்டி அக்கம்பக்கம் பத்தி கவலையே படாம ரேடியோவைத் தான் இந்த சமூகம் கற்பழிச்சது. இப்ப டிவி, செல்போன் ரெண்டும் இது கைல. மாட்டிண்டு பாடா பட்றது. எடிசன், மார்கோனி, கிரகாம்பெல் இவர்கள் ஒருவேளை உயிரோட இருந்து இந்த மைலாப்பூர் பக்கம் வந்தாள்னா நாம விஞ்ஞானத்துக்கு கொடுக்கற இந்த மரியாதையை பார்த்துட்டு இந்தச் சமுதாயத்துக்கு நாம இவ்வளவு பெரிய கேட்டைச் செய்துட்டாமேன்னு மெரினா பீச்சுல ஊரைக் கூட்டி நிறுத்தி அந்த ஊர் முன்னாலேயே தங்களைத் தாங்களே சுட்டுண்டு தற்கொலை பண்ணிடுவா" என்பது தான் அவர் நகைச்சுவையாக வருந்திக்கொள்ளும் விதம்.

"உங்கப்பாக்கு வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் வித்யாசமே தெரியலை. சரியான கர்நாடகம்..." என்று உஷாவும் அவள் காதுபடவே பதிலுக்கு சலித்துக் கொள்வ துண்டு.

இப்படியாக அந்த வீட்டுக்குள் ஏற்கனவே இரு கூறுகள் இருக்க, இதற்கு நடுவில் வீட்டை விற்பது சம்பந்தமாய் தேடித்தேடி வந்து கோடி ஆசை காட்டும் வீரபாண்டியன் பற்றி ஒருநாள் ஜனா பேசியபோது ரங்கராஜன் நெடுநேரம் மௌனமாகத்தான் இருந்தார்.

"அப்பா..."

"உம்..."



"என்னப்பா எதுவும் பேசாம மௌனமா இருக்கேள்...?"

"எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலைப்பா. உனக்கு ஆபீஸ்ல நல்லபடியா சம்பளம் வரதுதானே?"

"இப்ப எதுக்குப்பா இந்த கேள்வி..."

"இல்ல தெரிஞ்சிக்கிறதுக்காக கேட்கறேன். நீ இப்ப சௌகர்யமாதானே இருக்கே?"

"இன்னிக்கு எந்த குறையும் இல்லப்பா... நாளைக்கு இதேபோல இருக்கமுடியுமோ முடியாதோன்னுதான் உஷா பயப்படறா... தேவி, பிரபான்னு ரெண்டு பெண்கள் இவாளுக்கு கல்யாணம் வேற பண்ணணும்..."

"அப்ப எதிர்காலம் மேல நம்பிக்கையில்ல. அப்படித் தானே?"

"இப்படி கேட்டா என்னத்தப்பா சொல்ல... காத் துள்ள போதே தூத்திக்கணும்னு நினைக்கறதுல தப்பு இல்லையே...?"

"நம்ம பெரியவா சொல்லிவிட்டு போயிருக்கிற பழ மொழிகளை சரியானபடி புரிஞ்சுண்டு சரியானபடி பயன்படுத்திக்கணும். களத்துமேட்டுல நெல்லுக்கு சொன்னதை இப்ப இருக்கற வாழ்க்கையோட தப்பா சம்பந்தப்படுத்தக் கூடாது..."

"இல்லப்பா நான் தெரியாமதான் கேக்கறேன். நம்ம 30 சென்ட் நிலத்தையும், அதுல இருக்கற ஆலமரத்தையும் விக்கறதாலேயோ இல்ல அழிக்கறதாலேயோ எந்த குடிப்பா மூழ்கிப் போயிடும்? மாறா அந்த பில்டர் ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டி அதுல நூறு பேருக்கு வேலைதான் தரப்போறான். எப்படிப் பார்த்தாலும் இது வளர்ச்சிதானேப்பா?"

"ஏம்ப்பா இந்த வளர்ச்சியை வேற ஒரு வெட்ட வெளில இல்ல பொட்டல்காட்டுல அந்த பில்டர் ஏன்

செய்யக்கூடாது. இன்னிக்கெல்லாம் இப்படி ஒரு மரத்தை எத்தனை கோடிய செலவழிச்சாவது யாரால யாவது உருவாக்க முடியுமா?"

"அப்படி பார்த்தா வீடுவாசலுக்கெல்லாம் யாரும் மரத்தையே வாங்க முடியாதுப்பா... இந்த நாட்டுல ஒரு நாளைக்கு ஒண்ணே கால் லட்சம் ஆடுகள் வெட்டப் பட்றதாம். அடுத்து கோழிகள். அதுக்கு அடுத்த இடத்துல மரங்கள் இருக்காம். நான் சொல்லலப்பா புள்ளி விவரக் கணக்கு சொல்றது."

"அதனாலதான் ஜனா அமைதியைத் தேடிப்போற கோயில்ல கூட நம்பகிட்ட குண்டு இருக்கான்னு பரி சோதிக்கற ஒருநிலை வந்துருக்கு. தேமேன்னு நிக்கற ரயில் வண்டியை எல்லாம் கடத்திண்டு போய் மனுஷ சமூகத்தை பயமுறுத்தற நிலை உருவாகியிருக்கு. வெளியே போற ஒருத்தன் உயிரோட திரும்பி வரதுங்கறது ஒரு உத்தரவாத மில்லாத ஒண்ணா போயிடித்து..."

இப்படியாக வாதப்பிரதிவாதங்கள் பதிலுக்குப் பதில் நிகழ்ந்ததில் இறுதியாக ரங்கராஜன் சொன்னதுதான் அஸ்திரம்!

"ஜனா... நான் அந்த மரத்தை ஒரு ஜடமா பாக்கலடா. அது ஒரு விருட்சம். எங்கல்லாம் இப்படி பிரம்மாண்ட விருட்சங்கள் இருக்கோ அங்கல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டம் இருந்திருக்குடா. அந்த விருட்சம் தழைப்பா இருக்கற வரை மனுஷக்கூட்டமும் நல்ல வாழ்க்கை வாழ்ந்தே தீரும். அதுக்கு எதாவது ஆனா சமுதாயமும் அழிஞ்சிடும்னு என் மனசு பயப்பட்றது. குறிப்பா நம்ம குடும்பம் அடையாளமே இல்லாம போயிடு மோன்னு பயப்படறேன் நான்... விருட்சங்களை காப்பாத்த றது நம்ம கடமை. அது நன்னா இருக்கற வரை நாமளும் நிச்சயம் நல்லபடியாதான் இருப்போம். இதை நீ நம்பு. உன் எதிர்காலம் பத்தி எல்லாம் நீ கவலைப்படாதே... இப்ப உனக்கு என்ன குறை... இனி ஒரு குறை வந்துடும்னு பயப்படறதுக்கு? ஊர் உலகத்துல யார் வேணா எப்படி



வேணா மாறிட்டு போகட்டும். நல்லவிதமா இருக்கற நாம மாறவேண்டாம் நம்மளப் பார்த்துதாண்டா இந்த சமுதாயம் மாறணும்" ரங்கராஜன் அழுத்தமாகக் கூறி விட்டு இரும ஆரம்பித்துவிட்டார்... அதற்குமேல் ஜனா வால் அவரிடம் பேசமுடியவில்லை. அதுதான் இப்போது வீரபாண்டியன் வந்தபோது அவரிடம் அவனை அப்படிப் பேசவைத்துவிட்டது.

❖❖❖

**மொ**ட்டை மாடியில் எல்லாவித எண்ணங்களும் அவனுக்குள் ஊர்வலம் போனபடியேயும் இருக்கின்றன. ஊடே கையில் செல்போனுடன் அவனை நோக்கி வந்தபடி இருந்தாள் உஷா!

அவன் எதிரில் நின்றவள் ஒரு முடிவெடுத்து விட்ட வள்போல வீரபாண்டியனுக்கு போன் செய்தாள். மறு முனையில் அகப்பட்ட அவனிடம் "மூணேகால் கோடின்னா முடிச்சுக்கலாம். ஆனா ஒரு மூணுமாசம் டயம் கொடுக் கணும். என் மாமனார் இங்க இருக்கும்வரை ரிஜிஸ்டர் ஆபீசுக்கு நாங்க வரதோ இல்லை நீங்க இந்த ஆலமரத்தை வெட்றதோ சாத்யமே இல்லை. அவர் சத்தம் போட்டு ஊரைக்கூட்டி பெரிய ரசாபாசமாயிடும். அவரை நாங்க எங்க கிராமத்து ஊருக்கு ஒரு திருவிழாவை சாக்கா வெச்சு கூட்டிகிட்டு போயிட்றோம். அங்கையே அவர் ஒரு 6 மாசம் இருக்கற மாதிரி ஏற்பாடும் பண்ணிட்றோம். அப்ப ரிஜிஸ்டர் ஆபீஸ்ல ரெஜிஸ்ட்ரேஷனை முடிச்சுக்கலாம் சரியா?" என்று கேட்டாள்.

வீரபாண்டியனிடம் மறுபேச்சில்லை.

ஜனா மனைவிக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் திரு திருவென விழித்தான்.

"திருதிருன்னு முழிக்கவேண்டாம். ஊரே ஒரு வழில போகும்போது நமக்குமட்டும் எதுக்கு தனி வழி... இந்த மூணேகால் கோடிய பேங்க்ல போட்டா மாசம் வட்டி

மட்டுமே ஒரு கோடிக்கு ஒரு லட்சம்... நம்ம வருமானமும் ஆவரேஜா மூனேகால் லட்சம். அந்த காலத்துல ஜமீன்தார்லாம் வாழ்ந்தாளாமே ஒரு வாழ்க்கை. அப்படி ஒரு வாழ்க்கை வாழலாம். இதுல ஒரு கோடிக்கு பெசன்ட் நகர், திருவான்மியூர் பக்கமா அரண்மனை மாதிரி வீட்டை கட்டிக்க முடியும். அங்க இந்த மாதிரி நூறு ஆலமரத்தை நீங்க வெச்சுக்கோங்க... உங்கப்பாவே தோட்டக்காரரா இருந்து அதுகளுக்கெல்லாம் தண்ணீர் விட்டும்... இது தான் பொழைக்கற வழி!" அவள் அப்படிச் சொன்னபிறகு அவனாலும் எதுவும் செய்ய முடியவில்லை!

❖❖❖

**2009** மே மாதத்தில் ஒருநாள்....

அந்த டிஸ்பென்சரியைவிட்டு வெளியே வந்தாள் பிரபா என்கிற மைத்ரேயி! அவள் கையில் ஒரு ஃபைல்... அதனுள் கடந்த ஆறு வருஷங்களாக அவள் மேற்கொண்ட சிகிச்சைகளுக்கும் அதன் எதிரொலிகளுக்குமான முடிவான குறிப்புகள்.

"ஐ ஆம் வெரி சாரி பிரபா... ஒரு அனாதை இல்லத்துக்குப்போய் ஒரு பிறந்த குழந்தையை தத்து எடுத்துக்கறது தான் உங்களுக்கு இருக்கற ஒரே வழி. இந்த ஜென்மத்துல இயற்கையாவும் சரி, செயற்கையாகவும் சரி நீங்க தாயாக வழி இல்லை" என்கிற விஷயத்தை அவள் சற்று முன் சந்தித்த டாக்டர் நீலாயதாட்சி நல்ல ஆங்கிலத்தில் கூறியிருந்தாள்.

பிரபா என்கிற அந்த மைத்ரேயியின் கண்களில் அழுத்தமாய் ஒரு சோகம். வெளியே படகு கார் அவளுக்காக காத்திருந்தது. யூனிஃபார்மோடு டிரைவர். கூடவே அவளது அன்புத்தோழி ப்ரியா.

"பிரபா... டாக்டர் என்ன நோ சான்ஸ்னு சொல்லிட்டாங்களா?" அமர்நாத் ஈனசுரத்தில் கேட்டான். அவளும் கண்ணீரை சிந்தியபடி ஆமோதித்தாள்.



"ஓ... டாக்டர் நீலாயதாட்சியே கைவிரிச்சுட்டா கடவுளே கைவிட்ட மாதிரிதான்... போகட்டும் என்ன பண்ணப்போறே." தனக்கொரு வாரிசு கட்டாயம் வேணும். அதுக்காகதான் இன்னொருகல்யாணம் பண்ணிக்கறதுல என்ன தப்புன்னு கேக்கற உன் புருஷனுக்கு என்ன பதில் சொல்லப்போறே?"

"நான் டைவர்ஸ் கொடுத்துடறேன். தாராளமா பண்ணிக்குங்குன்னு சொல்லப்போறேன்..."

அவள் அப்படி ஒரு பதில் சொன்ன கையோடு காரில் ஏறி அமர்ந்தவளாக "டிரைவர்" காரை மயிலாப்பூருக்கு விடு..." என்றாள்.

அதிர்விலிருந்த ப்ரியாவும் "இப்ப எதுக்கு பிரபா மைலாப்பூர் போறே? அங்க யார் இருக்கா?" என்று கேட்டாள்.

"வா சொல்றேன்..." என்றபடியே வெளியே பார்த்துக் கொண்டே வந்தாள்.

"பிரபா உன் ஹஸ்பெண்ட் கிட்ட நான் வேணா பேசட்டுமா. டைவர்ஸ்னு நீ சொன்னத என்னால ஜீரணமே பண்ண முடியலப்பா..."

"நான் பண்ணித்தான் ஆகணும் ப்ரியா... இதெல்லாம் ஒருவிதத்துல பிராயச்சித்தம்னு கூட சொல்வேன். காசும் பணமும்தான் பெருசுன்னு நினைச்சதுக்கான தண்டனைன்னும் சொல்லலாம்..." புதிராக இருந்தது அவள் பேச்சு. மைலாப்பூரும் வந்தது. டிரைவர் எங்கே போவது என்று கேட்டான். அவளும் ஒரு குறிப்பிட்ட இடத்தை சொன்னாள். அந்த தெருவுக்குள் நுழையவும் அவளிடம் ஒருவித சிலிர்ப்பு... பரவசம்!

"ப்ரியா இது நான் வாழ்ந்த தெரு. ஹைஸ்கூல் காலேஜ்னு எல்லாமே இந்த தெருவுல இருந்தப்போ படிச்சதுதான்..." என்றாள்.

கார் ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸை கடக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தி கீழே இறங்கி அந்த பில்டிங்கை பார்த்தாள். கண்களில் நீர் பொங்கிவர ஆரம்பித்தது. அப்படியே அது பொங்க பொங்கப் பார்த்தபடியே நின்றாள். "அடடே பிரபாவா.." என்று ஒரு குரல்! வயதான மாமி ஒருத்தி மிகச்சரியாக அவளை அடையாளம் கண்டுகொண்டு அருகில் வந்தாள்.

"மாமி நீங்களா...?"

"நானேதான்... நீ எங்க இந்த பக்கம்? உங்க பழைய வீடு இருந்த இடம் இப்ப எப்படி இருக்குன்னு பாக்க வந்தியா?" அடப்பமான ஆமோதிப்புடன் கூடிய மௌனம் பிரபாவிடம்... "என்னமோடிம்மா.... எந்த வேளைல இந்த வீட்டை நீங்க வித்தீங்களோ எல்லாமே போயிடுத்து... மரத்தை காண்ட்ராக்டர் வெட்ட ஆரம்பிச்ச அன்னிக்கு உன் தாத்தா உயிர் கிராமத்துல தானாவே போச்சு... மரம் இங்க முழுசா அழியவும் காத்திருந்த மாதிரி சுனாமி வந்து இந்த ஏரியாவுல சரிபாதி பேருக்கு மேல யாருமே உயிரோட இல்லை.

கல்யாணமாகி புருஷனோட அமெரிக்கா போனதால நீ தப்பிச்சே... அதுக்கும் உன் தாத்தா ஆசீர்வாதம்தான் காரணம். நீ அழகா ஸ்லோகம் சொல்லும்போதெல்லாம் தீர்காயுசா இரு... தீர்காயுசா இருன்னு அடிமனசுல இருந்து சொல்வார். அது பலிக்காம போகுமா என்ன?

ஆனாலும் நீ உன் அப்பா அம்மா தங்கைன்னு அவ்வளவு பேரையும் பலிகொடுத்தே! நானும் என் புருஷன் பிள்ளைகளை வாரிக்கொடுத்துட்டு உசுர்ப் பொணமா நடமாடிண்டு இருக்கேன்.."

மாமி பேசி முடிக்கும் போது அவள் கண்களிலும் கண்ணீர். ஏனோ இருட்டு அறைக்குள் அடங்காத இருமலுக்கு நடுவில் அன்று தாத்தா பேசியது மட்டும் பிரபாவின் காதுகளில் அசையாமல் திரும்ப ஒலிக்க ஆரம்பித்தது.



'ஜனா... நான் அந்த மரத்தை ஒரு ஜடமா பார்க்கலடா- அது ஒரு விருட்சம். எங்கல்லாம் இப்படி ஒரு பிரம்மாண்ட மரம் இருக்கோ அங்கெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டமும் இருந்திருக்குடா... அந்த விருட்சம் தழைப்பா இருக்கறவரை மனுஷக்கூட்டம் நல்ல வாழ்க்கை வாழ்ந்தேதீரும். அதுக்கு எதாவது ஆனா சமுதாயமும் அழிஞ்சிடும்னு என் மனசு பயப்பட்றது. குறிப்பா நம்ப குடும்பம் அடையாளமே இல்லாம அழிஞ்சுடுமோன்னு பயப்படறேன் நான்...!' பிரபாவால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவே இல்லை.

"தாத்தா உன்னோட வேல்யுவும் சரி, இயற்கையோட வேல்யுவும் சரி அன்னிக்கு யாருக்கும் தெரியாமலே போயிடுத்தே தாத்தா. மரத்தை வெட்டின பாவத்துக்கு நான் கூட இன்னிக்கு சிலுவை சுமக்கறேனே... எப்படி தாத்தா எல்லாரும் முழிச்சுக்க போறா?"

அவளது கேள்வியும் விசும்பலும் ப்ரியா வரையில் நெற்றியை துளைத்த யேசுநாதருக்கு அடிக்கப்பட்ட ஆணியைப் போலத்தான் இருந்தது!

## 25. அமைதியும் சூன்யமும்

வீட்டு வாசலில் கார் வந்து நிற்கும் அரவம் கேட்டது.

எட்டிப் பார்த்தாள் ஜானகி.

சந்திரசேகருடைய சிவப்பு நிற மாருதி கார்தான்!

அப்படியே திரும்பி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நான்கரை!

அவள் நெற்றியில் மடிப்பு விழுந்து, மனதுக்குள் சலனம் ஏற்பட்டுவிட்டதைக் காட்டியது.

மகள் சுஜாதா பாட்டு கிளாஸுக்கு போயிருந்தாள். வந்திருக்க வேண்டும்.



எதனாலோ இன்னமும் வரவில்லை.

சந்திரசேகர் காரை விட்டு இறங்காமல் ஹாரனை ஒலிக்கவிட்டான். அந்த சப்தம் அக்கம்பக்கத்து அபார்ட்மென்ட்காரர்கள் சிலரைகூட வெளியே வந்து பார்க்க வைத்தது. சந்திரசேகரின் காரைப் பார்க்கவும் ஒரு மாதிரி ஆனார்கள்.

ஜானகி உள்ளே கட்டிலில் சோர்வாக படுத்திருந்த அப்பா ராமநாதனைப் பார்த்தாள்.

"என்னம்மா... அவன் டாண்ணு டயத்துக்கு வந்துட்டானா?"

"ஆமாம்ப்பா! ஆனா, சுஜாதா இன்னும் வரலை...!"

"வெள்ளிக்கிழமை மட்டும் பாட்டு கிளாஸுக்கு அனுப்பாதேனு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்!" - அவர் குரலில் கோபம் இழையோடிற்று.

அவளிடம் இரும்பு குண்டை கட்டித் தொங்கவிட்டதுபோல ஒரு கனத்த மௌனம்!

ராமநாதன் சிரமப்பட்டு படுக்கையிலிருந்து எழுந்து நின்றார். பக்கமாய் கொடியில் கிடந்த ஒரு துண்டை எடுத்து தோள் மேல் விரித்துக் கொண்டவர், வாசல் நோக்கி நடந்தார்.

"அவன்கிட்ட சுஜாதா பாட்டு கிளாஸ் போயிருக்கறதை சொல்றேன்."

"உடனே அவர் பாட்டு டீச்சர் வீட்டுக்கே போய் நிற்பாரு. அப்படியே கூட்டிட்டு போயிடுவாரு..."

"அதுக்கு என்ன செய்யறது?" என்று அவர் கேட்கும் போதே, அவன் திரும்ப ஹாரன் அடித்தான். இந்த முறை ஹாரன் சப்தம் நீளத் தொடங்கியது.

"பார்த்தியா... அக்கம்பக்கம் எல்லாமும் எட்டிப் பார்க்கும். அப்புறம் நியாயம் கேட்க ஆரம்பிச்சிடுவான்..." என்று படபடத்தவர், சிரமப்பட்டு வாசல் நோக்கி நடந்தார்.

காரில் அவன் எங்கோ பார்த்தபடி முகத்தில் எரிச்சலுடன் அமர்ந்திருந்தான். அவர் நடந்து வருவது கண்ணாடியில் தெரிந்தது. ஆனால், திரும்பிப் பார்க்கவில்லை. அவரும் இந்தப் பக்கமாய் முன் சீட் கண்ணாடி அருகில் வந்து நின்றவராக, "சுஜாதா பாட்டு கிளாஸுக்கு போயிருக்கா... எதனாலோ இன்னும் வரலை..." என்றார்.

அடுத்த நொடி அவன் காரை ஸ்டார்ட் செய்தான். அப்படியே பின்னுக்கு எடுத்தான். வளைத்துத் திருப்பிக்கொண்டு வந்த வழியிலேயே போக முனைந்த போது, எதிரில் சுஜாதா பட்டுப் பாவாடையில் ஒரு மான்குட்டியாக வந்து கொண்டிருந்தாள். கையில் பாட்டு புத்தகம்.

அவனும் காரை நிறுத்தினான். அவள் அவனை சற்று மருட்சியோடு பார்த்தாள்.

"என்ன பார்க்கறே... ஏறு..." அவன் குரலில் காட்டம்.

"வீட்டுக்குப் போய் நோட்டை வெச்சிட்டு டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேம்பா..."

"பத்து நிமிஷத்துல வரணும்..."

"சரிப்பா..." அவள் ஓட்டத்தைத் தொடர்ந்தாள்.

வீட்டினுள் நுழைந்தவள், மளமளவென்று பாவாடைச் சட்டையை சுழற்றிப் போட்டுவிட்டு, வேறு உடைக்கு மாறத் தொடங்கினாள்.

அதற்குள் ஜானகி ஹார்லிக்ஸ் கலந்து எடுத்து வந்து குடிக்க நீட்டினாள்.

"வேண்டாம்மா... அங்க போனாபாட்டியும் இதையே தருவாங்க. குடிக்கலேன்னா உன்னைத் திட்டுவாங்க.



குடிச்சடலாம்னா வாந்தி வந்துடுதும்மா..." என்ற அவள் குரலில் பரிதாபத்தின் தொனி.

ஜானகிக்கு கலங்கியது.

மளமளவென்று உடை மாற்றிக் கொண்ட சுஜாதா, ஹோம் வொர்க் பாட நோட்டுப் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டாள். ஒரே ஓட்டமாக ஓடினாள்.

அவள் காரில் ஏறிக்கொள்வதில் இருந்து கார் புறப்படுவது அவ்வளவும் சப்தமாக உள் வரை துல்லியமாகக் கேட்டது.

"கருமம்... கருமம்... எல்லாம் என் தலையெழுத்து!" என்று தலையில் அடித்துக்கொண்டார் ராமநாதன்.

ஜானகி போய் ஒரு ஓரமாக உட்கார்ந்துகொண்டாள். திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு அம்மா என்றபடி சுஜாதா வரும்வரை அவள் எழுந்திருக்க மாட்டாள். எழுந்திருக்கவும் முடியாது.

வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியிலிருந்து திங்கள் காலை எட்டு வரை சுஜாதா அவள் அப்பா சந்திரசேகரின் அன்பில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது கோர்ட் உத்தரவு.

சந்திரசேகருக்கும் ஜானகிக்கும் சுஜாதா ஒரே மகள். இருவருக்கும் விவாகரத்து ஆகவும் கோர்ட்தான் இருவருக்கும் பொதுவான மகளை இப்படி பங்கு போட்டு கொடுத்துள்ளது. எதனால் இப்படி ஒரு இரட்டை வாழ்க்கை என்பது சுஜாதாவுக்கு தெரியாது. காலம் அவள் மேல் அப்படியொரு வாழ்க்கையைத் திணித்துவிட்டது.

இருவருக்குமான விவாகரத்துக்குள் நுழைந்தால்... நிறையவே கசமுசாக்கள்! சந்திரசேகரிடம் கொஞ்சம் ஆணாதிக்க உணர்வு. ஜானகியிடம் கொஞ்சம் உணர்ச்சி வசப்படும் தன்மை. கூடவே சந்திரசேகர் வரையில், அவன் யோசிப்பதும் நடப்பதும்தான் சரி என்று ஏத்தி

விடவும், ‘நீ ஆம்பளைடா... சிங்கம்’ என்று உசுப்பேற்றவும் அம்மா, அக்கா, தங்கை என்று ஒரு பெண்கள் கூட்டம்.

இங்கேயே ஜானகிவரையில், அப்பா மட்டும்தான். எடுத்துச் சொல்ல தாயோ, சகோதர சகோதரிகளோ இல்லை. ‘அட்ஜஸ்ட் பண்ணிப் போம்மா...’ என்று சொல்லியே அவர் ஓய்ந்து போனார். இடையில் இளமை இருந்து தொலைந்ததால், அதனால் சுஜாதா பிறக்கும்படி ஆகி விட்டது.

முன்பெல்லாம் விவாகரத்து பெரும் சாபம். இப்போது ஒரு சம்பவம். கோர்ட்டில் இருவருக்கும் டிகிரி கொடுப்பதற்கு முன்பு பெண் நீதிபதிகூட சொன்னார்.

“உங்க ரெண்டு பேர்கிட்டயும் நிறைய நல்ல விஷயங்கள் இருக்கு. ஆனா, வீட்டு பரண் மேல கிடக்கிற பழைய சாமானா அது இருக்கு. இப்ப நீங்க காட்டிக்கிற கோபமும் தாபமும் நிரந்தரமானதே கிடையாது. வாழ்க்கை ரொம்ப நீளமானது. போகப் போக நிறைய பார்க்கப் போறீங்க. அப்ப இதைவிட தாக்கம் ஏற்படுத்தப் போற விஷயங்களை சந்திக்கும்போது இந்த கோபதாபங்கள் அர்த்தமில்லாமப் போய், ‘ஏண்டா அப்படி நடந்துகிட்டோம்’னு உங்களை யோசிக்க வைக்கும். ஆனா, அப்ப பிரிவு உங்களை ரொம்ப தூரம் கொண்டு போயிருக்கும். விட்டுக் கொடுத்தும் பெருந்தன்மையாகவும் நடந்துக்க வேண்டியது கணவன் மனைவிக்குள்ள ரொம்ப ரொம்ப அவசியம். அது ஒருத்தர் கிட்ட இருந்தாகூட போதும். உறவு காப்பாற்றப்பட்டுவிடும். இங்க இரண்டு பேர்கிட்டயும் அது இல்லையே. என்ன செய்யறது?” என்று முடித்திருந்தார்.

எதை யோசித்தும் புண்ணியமில்லை.

கணவனில்லை... மனைவி இல்லை என்றாகிவிட்டது. ஆனால், அம்மா இல்லை என்றாக முடியவில்லையே...



தனியாய் தவித்தாள் ஜானகி. மூன்று வருஷமாக நீடிக்கிறது இந்தத் தவிப்பு!

❖❖❖

திங்கள் காலை எட்டு மணி.

கார் சப்தம் கேட்கவில்லை.

வாசலுக்கு வந்து நின்றுவிட்டாள் ஜானகி. கடிகாரம்தான் ஓடியது. ஆனால், அவன் கார் வரவே இல்லை. அப்பாவும் கவனித்தபடி வெளியே வந்தார்.

“அப்பா, சுஜாதாவை காணோம்பா...”

“வருவாம்மா... வழியில் டிராஃபிக்ல சிக்கியிருப்பாங்க...”

“எட்டு மணிக்கு என்னப்பா டிராஃப்க்?”

“பதட்டப்படாதே... ஒரு ஒன்பது வரையும் பார்ப்போம்...”

“நல்லாருக்கு... அன்னிக்கு அஞ்சு நிமிஷம் அவ பாட்டு கிளாஸ்ல இருந்து வர லேட்டானதுக்கே அவர் பொறுக்கல...”

“இப்படி சரிக்கு சரி யோசிக்கறதை விடமாட்டியா?”

“நான் யோசிக்கறதுல என்ன தப்பு இருக்கு?”

“போதும்மா... எல்லாம் எப்பவும் சரியா இருக்காதும்மா... மேடும் பள்ளமுமா இருக்கறதுதான் வாழ்க்கை... இதை நீ புரிஞ்சுக்கறதுக்குள்ள நான் போய் சேர்ந்துடுவேன்...” அவர் சலித்துக் கொள்ளும்போது அவன் கார் வருவது தெரிந்தது.

“வந்துருச்சு... இனியாவது வாயை மூடுவியா?” அவரும் கேட்டார்.

கார் வந்து நின்றது. ஆனால், சுஜாதா வரவில்லை. அவள் கணவனின் தம்பி ரகு இறங்கி வந்தான்.

ஜானகியும் அப்பாவும் அவனை அதிர்வு குறையாமல் பார்த்தனர். அவன் அந்தக் குடும்பத்தில் கொஞ்சம் பக்குவமானவன். ஜானகிக்கும் அவனிடம் எந்த உராய்வும் கிடையாது. விவாகரத்துக்குப் பிறகும் அவன் பார்க்கும் சமயங்களில் அண்ணி என்றுதான் அழைப்பான். அப் போதும் அப்படியே அழைத்தான்.

"அண்ணி..."

"எங்க ரகு சுஜாதா?"

"அவ... அவ... அவ ஹாஸ்பிடல்ல இருக்கா அண்ணி..."

"என்னது ஹாஸ்பிடல்லயா?" வெடித்தாள் ஜானகி.

"ஆமாம்... வெள்ளிக்கிழமை நைட் வீட்டுக்கு வந்ததுல இருந்தே அவளுக்கு உடம்பு சரியில்லை. சனிக் கிழமை சாயந்திரம் டெம்ப்ரேச்சர் ரொம்ப அதிகமாகவும் டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போய் காட்டினோம். அட்மிட் பண்ணச் சொல்லிட்டாங்க..."

"அட்மிட் பண்ற அளவுக்காப்பா காய்ச்சல்?" ராம நாதனும் வெடித்தார்.

"ஆமாம் அங்கிள். டெங்குவா இருக்கலாம்னு சந்தேகப்படறாங்க..."

"மை காட்! டெங்கு ஃபீவரா?"

வாயைப் பிளந்துவிட்டார் ராமநாதன்.

"எந்த ஹாஸ்பிடல்லப்பா அட்மிட் பண்ணியிருக்கு?"

"வாங்க அண்ணி கூட்டிக்கிட்டு போறேன்..." - ரகு போய் கார்க் கதவைத் திறந்தான். ஆனால், ஜானகிக்கு அதில் ஏற கால் வரவில்லை.



"நீ ஹாஸ்பிடல் பேரைச் சொல்லு... நாங்க ஆட்டோவுல வர்றோம்..." என்று அப்போதும் தன் மானம் காட்டினாள் ஜானகி. அவனும் ஹாஸ்பிடல் பெயரைச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

❖❖❖

**நா**ன்கு நாட்கள் சென்றுவிட்டன.

சுஜாதாவிடம் துளியும் காய்ச்சல் குறைய வில்லை. அபாயநிலை அதிகரித்துக் கொண்டேதான் போனது. ஒரு பக்கம் ஜானகி. மறுபக்கம் சந்திரசேகர்! ஜானகி அந்த நிலையிலும் சந்திரசேகரை சுட்டு விடுவதுபோல்தான் பார்த்தாள்.

"இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா கோர்ட் உத்தரவை தூக்கி கிடப்பில போட்டிருப்பேன்..." என்று அவன் காதில் விழும்படி முணுமுணுத்தாள்.

"அவ என்னடா சொல்றா? உன்னாலதான் டெங்கு ஜுரம் வந்ததாமா?" அவன் அம்மா ஏற்றிவிட ஆரம் பித்தாள்.

"ஆமாம்... உங்களாலதான் வந்தது. நேராவே சொல் றேன்... என் குழந்தைக்கு மட்டும் ஏதாவது ஆகட்டும்... உங்களை நான் சும்மா விடமாட்டேன்..." சீறினாள்.

"இதோ பார், நாங்க நல்ல பாஷ் ஏரியாவுல பங்களாவுல குடியிருக்கோம். உன்ன மாதிரி இல்ல... உன் வீட்டைச் சுத்திதான் சாக்கடை, பன்னி எல்லாம்... காய்ச்சலோட அனுப்பி வெச்சுட்டு என்னைச் சொல் றியா?" என்று சந்திரசேகரும் சீறத் தொடங்கினான்.

ஆஸ்பத்திரிக்குள்ளேயே ஆரம்பித்துவிட்டது யுத்தம்!

சுஜாதா அதை பரிதாபமாக பார்த்தாள். பேசக் கூட திராணியற்று அவள் உதடுகள் துடித்தன. நடுவில் டாக்டரும் நர்ஸும் வந்து இருவரையும் விலக்கி அழைத்துச் சென்றனர்.

ஆஸ்பத்திரி காரிடாரிலும் இருவரும் அடித்துக் கொண்டனர்.

“தயவு செய்து வெளிய போய் உங்கச் சண்டையை போடுங்க...” என்று சீஃப் டாக்டரே வந்து சொல்லும் அளவு போய்விட்டது. ஜானகியின் அப்பா ராமநாதனுக்கு அதை எல்லாம் பார்க்க நெஞ்சு வலித்தது.

“பாழாய்ப் போன இந்த டெங்கு எனக்கு வந்திருக்கக் கூடாதா?” என்று வாய்விட்டு புலம்பியபோது, ரகு ஓட்டமாய் வந்து பிரமை பிடித்த மாதிரி அவ்வளவு பேரையும் பார்த்தான்.

“என்னடா... என்ன ஆச்சு?”

“என்ன ஆகணும்! எல்லாம் முடிஞ்சுப் போச்சு...”

“என்னடா சொல்றே?”

“உங்க சண்டையைப் பார்த்த சுஜாதா, குளுகோஸ்ல இருந்து எல்லாத்தையும் பிடுங்கிப் போட்டா... நான் போய் ஏம்மா இப்படி பண்றே”னு கேட்டேன். ரொம்பக் கஷ்டப்பட்டு என்கிட்ட பேசினா. அவ பேசினதை கேட்டா நீங்க ரெண்டு பேரும் உங்களை செருப்பாலயே அடிச்சுக்கணும். உங்களுக்கெல்லாம் எதுக்கு குழந்தை?” ரகு உச்சமாய் அலறினான்.

“அவ அப்படி என்னடா பேசினா?”

“சித்தப்பா நான் இப்ப போறேன்... அம்மாவும் அப்பாவும் ஒண்ணா சேர்ந்தா, நான் நிச்சயம் வந்து பிறப்பேன். நான் வேணும்னா சண்டை போட்டுக்க வேண்டாம்னு சொல்லுங்கனு சொல்லிட்டு உசுரை



விட்டுட்டாண்ணே...” என்றவன் கேவிக் கேவி அழத் தொடங்கினான்.

அடுத்த நொடி முதல் அங்கே ஒரு அசாத்திய அமைதி.

அது நல்லவிதமான அமைதியா... இல்லை, சூன்யமா என்பது மட்டும் தெரியவில்லை.